
எந்தைபிரான் கம்பன்



கம்பன் அடிப்பொடி
அமரர் சா.கணேசன் அவர்களின்
கம்பராமாயணக் கட்டுரைகள்





தொகுப்பு : கம்பர் பித்தன் வேலூர் S.N. குப்புசாமி முதலியார்

எந்தைபிரான் கம்பன்

கம்பன் அடிப்பொடி

அமரர் சா. கணேசன் அவர்களின்
கம்பராமாயணக் கட்டுரைகள்

தொகுப்பு :

கம்பர் பித்தன்

வேலூர் எஸ்.என். குப்புசாமி முதலியார்

கம்பன் பதிப்பகம்

2-4 வது குறுக்குத் தெரு, கோபாலகிருஷ்ண நகர்,

வேலூர் - 632 006.

தமிழ்நாடு - இந்தியா

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	எந்தைபிரான் கம்பன்
நூலாசிரியர்	:	கம்பன் அடிப்பொடி சா. கணேசன்
பதிப்புரிமை	:	கம்பன் பதிப்பகம், வேலூர்.
முதற்பதிப்பு	:	ஆகஸ்டு 2006
விலை	:	ரூ. 125
அச்சு	:	நவீன் மினி ஆப்செட் பிரிண்டர்ஸ், 17, தாண்டல் கந்தசாமி ராஜா தெரு, இராஜபாளையம் - 626 117. தொலைபேசி : 231592.
நூலின் அளவு	:	1 x 8 டெம்மி
பக்கங்கள்	:	24 + 226
பயன்படுத்திய தாள்	:	18.6 மேப்லித்தோ

நினைவுப் படையல்

பல ஆண்டுகள் என்னுடன் காரைக்குடி கம்பன் திருநாளில் உடன் இருந்து கம்பன் க்வியமுதைப் பருகி - கேட்டு, ரசித்து, மகிழ்ந்து பாராட்டிய புதுவை கம்பன் கழக நிறுவன செயலர்

கம்பவாணர் புதுவை புலவர் அ. அருணகிரி அவர்களுக்கும்

கம்பன் விழாக்களிலே காரைக்குடியில் மட்டுமின்றி - தமிழகத்தின் பிற ஊர்களிலும் நடைபெற்ற கம்பன் விழாக்களில் என்னுடன் இருந்து உடன் தங்கி - கம்பனைப் பற்றி என்னுடன் கருத்துக்கள் பரிமாறி கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்த்த எனது உடன்பிறவா சகோதரனாய் இருந்த

கம்பரசிகமணி சேலம் பி.சி. சீதாபதி அவர்களுக்கும்

கம்பன் விழாக்களிலே பல ஊர்களில் முன் வரிசையில் அமர்ந்து, கதர் தொப்பியுடன் கம்பீரமாக அமர்ந்து சுவைபட உரையாற்றிடும் பேச்சாளர்களை ஊக்குவிக்கும் வகையில் "பேஷ்" "பேஷ்" என அகமலர்ந்து முகமலர்ந்து பாராட்டுக்களை வழங்கிய கம்பரசிகமணி "போஸ்" என அன்புடன் எல்லோராலும் அழைக்கப்பட்ட

சத்தியமங்கலம் S. நடராஜா கவுண்டர் அவர்களுக்கும்

கம்பக் கடலில் மூழ்கி கம்பன் வழங்கிய அரிய முத்துக்களைத் தேர்ந்தெடுத்து மகிழும் வண்ணம் அமரர் கம்பன் அடிப்பொடியார் அவர்களாலேயே கம்பர் பித்தன் என்று என்னை இனங்கண்டு அவர் திருவாயால் என்னை அழைத்திட கம்பரசிகனாக மாற்றிய, உருவாக்கிய காரணகர்த்தாக்களாகிய இம்மூவருக்கும் அவர்கள் தம் நீங்கா நினைவிற்கு அடியேனின் நெஞ்சம் நிறை படையல் இந்தத் தொகுப்பு நூல்.

என்னுரை

எஸ்.என். குப்புசாமி முதலியார், தலைவர், வேலூர் கம்பன் கழகம்.

அமரர் கம்பன் அடிப்பொடியார் - சா. கணேசன் அவர்களைத் தமிழ் கூறும் நல்லுகம் நன்கு அறியும்.

சிறந்த தேசபக்தர் - காந்தியவாதி - காட்சிக்கு எளிமையானவர் - மேல்சட்டை அணியாமலேயே பவனி வந்தவர். அவரது பேச்சிலே அன்பும், கனிவும், ஆழ்ந்த அனுபவத்தின் முதிர்ச்சியும் கண்டிப்பும் காணலாம்.

நேர்மையான - தூய்மையான - நாணயமான - பண்பு நலம் நிறைந்த, தன்னலமற்ற நாட்டுப்பற்றும் மக்கள் நலனும் போற்றிய அப்பழுக்கற்ற அரசியல்வாதி உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவர் அல்லர். தனது மனதில் பட்டதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி, கருத்துக்களை முன் வைப்பவர்; தன் கொள்கை பிடிப்பின் விளைவாக யாரையும் எதிர்க்கும் நிலையும் பெற்றிருந்தார்.

பேச்சிலே கண்டிப்பும், கோபமும் தென்பட்டாலும் அதன் அடித் தளத்திலே பின்புலத்திலே ஒரு நன்மையை உள்ளடக்கியதால் வெளிபட்டதை காலம் கண்டது. உணர்த்தியது தமிழகத்தின் அரசியலிலே - மூதறிஞர் இராஜாஜியின் நம்பிக்கைக்கும் மதிப்பிற்கும் பாத்திரமானவர் என்கிற ஒரு நிதர்சனமான உண்மை அவரைப் பற்றி முழுமையாக புலப்படுத்தும் சான்றாகக் காண்கிறோம்.

நாட்டுப்பற்றோடு மொழிப் பற்றும் மிக்கவர். அவரது சிற்பக்கலை நுண்ணறிவு யாவரும் போற்றிப் பாராட்டிய ஒன்றாகும். உலகத் தமிழ் மாநாட்டின் வெற்றிக்கும் செயல்பாடுக்கும் துணைநின்றவர்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கம்பராமாயணத்திற்கு ஒரு சோதனைக்காலமாக தமிழகத்தில் அதற்கு எதிர்ப்பு மேலிட்டு - அதனை எரிக்கும் அளவுக்கு தடம்

புரண்டு, தடுமாற்றம் ஏற்பட்ட சூழலிலே - அத்தகைய விரும்பத்தகாத பேராபத்து, விபத்திலிருந்து கம்பராமாயணத்தை மீட்டவர் அமரர் கம்பன் அடிப்பொடி அவர்கள் தாம் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

கம்பராமாயணம் உள்ளவரை சடையப்பவள்ளல் பெயர் நின்று நிலைத்து நிற்கும் என்றால் அதனைப் போற்றி - விளக்கி - மாற்றாரையும் அதனை ஏற்க செய்து எரித்தவர்களையும் ஏற்றிடச் செய்து அதனை உணரச் செய்த பெருமைக்குரியவர் கம்பன் அடிப்பொடி அவர்களே என்பதை அவர் பெயர் என்றும் நிலைத்து நின்று பறை சாற்றும்.

கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது - சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேரவாரீர் என இந்திய சுதந்திர போராட்டம் பற்றி நமது நாமக்கல் கவிஞர் சுட்டிய வண்ணம் கம்பராமாயண எதிர்ப்பு இயக்கத்திற்கு - ஒரு கருத்துப் போருக்குச் சாத்வீகமான முறையில், காந்திய சத்தியாக்கிரகப் பணியிலே அதனை எதிர்த்து மறுத்து, சந்தித்து நேரிடையாக விவாதப் பொருளாக்காமல் - கம்பராமாயணத்தை எதிர்த்தவர்களும் கம்பன் காப்பியப் பெருமையை, இலக்கிய மேன்மையை, படைப்பின் அற்புத திறத்தை - கம்பன் கவிநயத்தை கம்பன் பன்முகப் பார்வையினை, கம்பனின் புரட்சிகரமான சிந்தனைகளை, அறிவியல் கூற்றுக்களை, சமயம் கடந்த படைப்பின் உள்ளடக்கத்தை குறள்வழி வந்த் இலக்கியமாகத் திகழ்வதை - வெகுவாக, விளக்கமாக சான்றுகளுடன் தம் நோக்கை முன் வைத்து கம்பன் புகழ்பாடி, கன்னித்தமிழ் வளர்த்திட கம்பனில் தமிழ்ப்பற்றும் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் பலவும் மிளிர்வதை உணரவைத்து - கம்பராமாயணத்தை வெறும் பக்தி இலக்கியம் என்கிற குறுகிய வட்டத்தில் பார்க்கும் நிலையை மாற்றி அதன் மகோன்னதமான, விசுவரூபமான பரிமாணங்களை பல கோணங்களில் அறிஞர் பெருமக்களைக் கொண்டு வெளிப்படுத்தி கம்பராமாயணத்தை நன்குப் புரிந்துக் கொள்ள - நுட்பமாக ஆழமாக அறிந்திட அதனைப்பற்றி தெளிவாக அறிந்துக் கொள்ளச் செய்தவர்

அமரர் கம்பன் அடிப்பொடி அவர்களே - அவர்களே

என அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியும்.

ஒரு சாமானியன் அடியேன் போன்றவன் கணிப்பு இதற்கு மேல் எடுத்துரைக்க இயலவில்லை - என் செய்வேன்!

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கம்பன் விழாக்கள் நடைபெறவும் கம்பன் கழகங்கள் தோன்றிடவும் வித்திட்டவர் அமரர் கம்பன் அடிப்பொடி அவர்களே யாவர்.

காரைக்குடியில் தாய்க்கழகத்தை நிறுவி ஆண்டுதோறும் கடந்த 65 ஆண்டுகளாக கம்பன் விழா நடைபெற பாதை வகுத்தவர். தமிழகத்தில் அனைத்து ஊர்களிலும் நடைபெறும் விழாக்களை கம்பன் விழா என்றே அழைப்பார்கள். கம்பன் அடிப்பொடியார் ஒருவர்தான் கம்பன் விழாவினைக் கம்பன் திருநாள் எனக் குறிப்பிட்டுபோடுவார். கம்பன் சமாதி அமைந்துள்ள நாட்டரசன் கோட்டை பகுதியினைக் கம்பன் அருட்கோவில் என்றும் குறிப்பிட்டவர் அவரேயாம். கம்பன் விழாவினை பெரும் வேள்வியாக மிகுந்த பக்தி சிரத்தையோடு விரதம் இருந்து அதிலேயே தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு நடத்திய பாங்கு அவர் ஒருவருக்கே உரியது.

கம்பன் மேடைகளிலே - பேச்சுக்களிலே - நிகழ்ச்சி அமைப்புக்களிலே புதிய யுக்திகளை, மாற்றங்களை உருவாக்கியவரும் அவரே. பட்டி மண்டபம் அதனையடுத்து மேல்முறையீட்டு மண்டபம், சுழலும் சொல்லரங்கம், விவாதமேடை, வழக்காடு மன்றம், கலை தெரிமுற்றம், செவிநுகர்கவி சோலை என அழகாக பெயரிட்டு ஏற்படுத்தித் தந்தவர் எண்ணற்ற தலைப்புக்கள் - புதிய புதிய தலைப்புக்கள் - வற்றாத ஜீவநதியாய் வந்துக்கொண்டேயிருக்கும் விதவிதமான பார்வையில் அமைந்த தலைப்புக்கள்.

கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பன் மேடைகளிலே அதிகம் பேசுவது கிடையாது. அவரது கைவண்ணத்தில் மிளிர்ந்த கம்பராமாயணக் கட்டுரைகள் அவ்வப்போது வெளியான சில

ஊர்களில் கம்பன் விழா மலர்களில் இடம் பெற்றன. அவைகளையெல்லாம் ஒரு சேரத் தொகுத்து - ஒரு தொகுப்பு நூலாக கொண்டு வர வேண்டும் என உளமாரப் பெரிதும் விரும்பினேன். அதனை கொண்டு வர முடியவில்லை என்றும் பெரிதும் ஏங்கினேன் அதற்கான முயற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தேன்.

எனது உளமார்ந்த ஆதங்கத்தையும் - ஏக்கத்தையும் - தவிப்பையும் துல்லியமாகக் கணித்து எனது முயற்சிக்குத் தேவையான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்து உற்சாக மூட்டி எனது கனவு நனவாக காரணமாய் அமைந்தவர் மதுரை கண்ட அருளாளர் - கம்பர் சீர் பரவுவார் கம்பனுக்கு இன்று அமைந்துள்ள சடையப்ப வள்ளலாய்த் திகழும் சீர்மிகு சங்கரசீத்தாராமன் அவர்கள் ஆவார். அவருக்கு எனது உளமார்ந்த ஆழ்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்த நூலை அழகுபெறச், செம்மையாய் அச்சிட்டு வெளிக் கொண்டு வர மிகவும் பொருத்தமானவர் எனது நீண்ட நாளைய அன்பர் சகோதரர் சீர்மிகு இராஜபாளையம் என்.எஸ். முத்துகிருஷ்ண ராஜா அவர்கள் தாம் என இனங்கண்டு, அந்தப் பொறுப்பினை அவரிடம் வழங்கினேன் அதற்கு காரணமாய் அமைந்தது அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அமரர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் நூலைப் பதிப்பித்து வெளியிட்ட பாங்கேயாகும். அவரும் என் வேண்டுகோளை ஏற்று நான் எதிர்பார்த்ததை காட்டிலும் மிகச் சிறப்பாக இந்நூலை அச்சிட்டு வெளிக்கொண்டு வந்தார். அச்சிட்டதோடு அதன் அனைத்து வேலைகளையும் அவரே முழுமையாக ஏற்றும் திறம்பட செய்து முடித்துள்ளார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் முனைவர் திரு. சோ. சத்தியசீலன் அவர்களும், பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம் அவர்களும் இந்நூற் கோயிலுக்கு அணிந்துரையென்னும் அழகிய தோரணவாயில் புனைந்து கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியை புலப்படுத்திக்கொள்கிறேன்.

இந்தக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் பெரும்பாலும் கம்பன்விழா மலர்களிலே வெளிவந்தவையாம். இரண்டு கட்டுரைகள் வானொலியில் உரையாற்றியவையாகும். இவைகளில் என்னிடம் எனது சேகரிப்பில் கை வசம் இல்லாத மூன்றினைத் தேடி அனுப்பி வைத்த புதுக்கோட்டை, கோவை, புதுச்சேரி கம்பன் கழகச் செயலாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமை பட்டுள்ளேன். பாலகாண்டம் சுருக்கமாக இராஜபாளையம் கம்பன் கழகத்தார் வெளியிடப்பட்ட இராமனைத் தரிசிப்போம் நூலுக்காக எழுதபட்டதாம்.

கம்பன் அடிப்பொடியாரால் அவ்வப்போது மலர்களுக்கு எழுதி வழங்கப்பட்டவைகளில் இந்தக் கட்டுரைகள் சிலவற்றில் சொல்லிய செய்திகளே சில திருப்பி இடம் பெற்றிருக்கலாம். அவைகள் திருப்பி திருப்பி சொல்லும் குற்றமாகவே பாவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்பன் அடிப்பொடியாரின் கட்டுரைகள் மேலும் பல விடுபட்டிருக்கலாம் அவை என் பார்வைக்கு வராத காரணத்தால் சேர்க்கமுடியவில்லை என்பதையும் - அவ்வாறு கம்பரசிகர்கள் யார் வசமாகிலும் அன்னாரின் கட்டுரைகள் இருப்பின் அருள்கூர்ந்து அவைகளை எனக்கு அனுப்பி வைத்தால் எனது இரண்டாவது பதிப்பில் அவைகளை சேர்த்துக் கொள்வேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமாயணத்தில் இராமன் அணைகட்டுவதற்கு ஒரு அணிலும் உதவி புரிந்து உதவிட முன் வந்தது என்று ஒரு வழக்கு உண்டு. அந்த வகையில் **அமரர் கம்பன் அடிப்பொடியாரின் புகழுக்கு -அவர்தம் தொண்டு அனைவரும் புரிந்துக்கொள்ள - அவரது கம்பராமாயணச் சிந்தனைகளையும் கம்பனைப் பற்றிய அவரது மதிப்பீட்டையும் - கம்பனே அவருக்கு சகலமும் என்பதனைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இந்த அணில் எடுத்துக்** காட்டவே வெளிவருகிறது இந்தத் தொகுப்பு நூல் என்பதை மிக்கப் பணிவுடன் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பனை எனக்குக் காட்டியவர் கம்பன் அடிப்பொடி அவர்களேயாவர் கம்பன் கவியமுதை ஊட்டியவர் அவர். கம்பனிடம் பித்துக் கொள்ளச் செய்தவரும் அவரே.

கம்பனை வென்றுவிடுகிறார் கம்பனடிப்பொடி! சொற்சுவை பொருட்சுவையால் நம்மை அடிமை கொண்டு விடுகின்றார்!

கம்பன் எம்மான்!

பாத்திரங்கள் படைப்பதிலும், படைத்தவற்றை இயக்கலிலும்
சாத்திரங்கள் விரிப்பதிலும், தருமம் நீதி உரைப்பதிலும்
தோத்திரங்கள் இசைப்பதிலும், தொன்மை மரபைக் காப்பதிலும்
மூத்த கவிஞர்ப் போற்றலிலும், முன்னே நிற்பான் கவி கம்பன்.

அன்பர்களே! அருள்கூர்ந்து இக்கவிதையை வாய்விட்டுப் படித்துப் பாருங்கள்! நம் உள்ளத்தில் கம்பன் ஆனந்த நடனம் ஆடிடுவான்!

ஏதேனும் ஆகேனோ!

"கம்பா! உன்கரத்தில் நான் பனை ஏடாய் ஆக வேண்டும்!

கவிச்சக்கரவர்த்தி! உன் கை பிடித்து எழுதும் எழுத்தாணியாய் நான் மாற வேண்டும்!

பாவலர் தலைவா! நீ அமரும் பீடமாய் நானிருக்க வேண்டும்!

கவிஞர் ஏறே! நீ உண்ணும் பொன் வட்டிலாய், உன் கையில் பாலுண்ணும் பொற்குவளையாய், உன் ஆடையாய், அங்கம் தழுவும் அணிகலனாய், மழைக்குக் குடையாய், வெற்றிலையாய், பாக்காய், சுண்ணாம்பாய் உனக்குக்கால் தேய்க்கும் கல்லாய், உன் வண்டியிழுக்கும் மாடாய், உன் பாத கமலத்தின் மிதியடியாய், உன் வீட்டு முற்றம் பெருக்கும் திருஅலகாய், சந்தம் நிறை காவியத்தைத் தந்தருளும் கம்பா! எந்தை பிரானே! உன் தமிழ்ச் சன்னிதியில் நான் இந்த அடியேன் ஏதேனும் ஆகேனோ?"

என்று கம்பனடிப்பொடி உள்ளம் உருகிப் பாடுவதைக் காதாலேயே கேட்டுக் கண்ணீர் விடும் உணர்வை நாம் பெற்று விடுகின்றோம்.

"கம்பநாட்டாழ்வாரைப் பாடும் கம்பனடிப்பொடி யாழ்வார் வாழ்க!" என்று நம் உள்ளம் பூரிக்கின்றது! கும்மாளியிடுகின்றது!

கம்பன் யார்?

இந்த வினாவிற்குக் கம்பன் அடிப்பொடி தரும் விளக்கமும் விடையும் ஒன்றல்ல! இரண்டல்ல! உதாரணத்திற்கு ஒன்று!

"உள்ளத்தில் ஒளியைக்கூட்டி, உணர்வினில் தெளிவை ஊட்டி
கள்ளத்தை இல்லாது ஓட்டி, கடமையோடு உரிமைகாட்டி
பள்ளத்தில் கிடப்பார் எல்லாம் பதம்பெற அறத்தோடு அன்பு
வெள்ளத்தைப் பாய்ச்சி நிற்கும் விபுதனே கம்பன் என்பான்!"

கம்பன் கல்வியில் பெரியன்?

கம்பன் வெறும் கற்பனைக் கவிஞன் மட்டுமல்ல! எழுத்து, அசை, சொல், தொடை, யாப்பு, காதல், வீரம், சோகம், மகிழ்ச்சி போன்றவற்றை மட்டுமே அறிந்து அவற்றை ஆளும் அறிஞன் மட்டுமல்லன்!

கம்பன் ஓர் உளவியல் அறிஞன்! பூதபௌதிகத்துறை அறிந்த அறிவியல் ஞானி! அணுவின் நீள அகலம் அறிந்த விஞ்ஞானி!

நிலவியல் அவனுக்குத் தெரியும்! விண்ணியல் விந்தைகளை அவன் அறிவான்!

"ஐம்பூதங்களின் விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கங்களை ஐயந்திரிபற ஆய்ந்த பேரறிஞன்" என்பதையெல்லாம் நமக்குக் கம்பனடிப்பொடி விளக்குகின்றார். நாமும் கம்பனை, "ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாய்க்" காணுகின்றோம்.

உலகில் ஒரு கவி!

"கல்லாத கலையும் வேதக்கடலும்" கம்பன் தான் என்பதைக் கம்பனடிப்பொடி நிறுவுகின்ற ஆழமே நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

எத்தகைய சோதனை வந்தாலும், வேதனை மேகங்கள் வாழ்க்கை வானத்தில் சூழ்ந்து எழுந்தாலும், அண்ணார் திரு S.N.K. அவர்களின் கம்பராமாயண ஆர்வச் சூரியன் ஒளி வீசிக் கொண்டு தான் இருப்பார் என்பதற்கு இந்த நூலே அசைக்க முடியாத சான்று.

நூல் என்பது வெறும் காதிதத் தொகுப்பன்று! அது சிந்தனைகளின் சிறந்த பெட்டகம்! உயர்ந்தோரின் ஒப்பற்ற எண்ணங்களின் கருவூலம்!

நாமே உழைத்து, சிந்தித்துக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்வது மிகவும் கடினம்.

"பிறர் எழுதியுள்ள நூல்களைக் கொண்டு உங்களைத் திருத்திக் கொள்வதில் நேரத்தைச் செலவிடுங்கள்; பிறர் வருந்தி உழைத்ததைக் கொண்டு நீங்கள் சுலபமாகப் பெறக் கூடிய பயன் இது," என்று மாபெரும் சிந்தனையாளர் சாக்ரடீஸ் கூறுகின்றார்.

"நூல்களைப் படிப்பதால் நாம் விரும்பிய அறிஞருடன் புதிய புதிய உலகங்ளுக்குப் போகலாம்," என்று சிட்னி டார்க் என்னும் அறிஞன் கூறுகின்றான்.

கம்பனுடைய உலகம் மிக மிகப் பெரியது. அதில் சிந்தனைச் சுற்றுலா செல்ல வேண்டுமானால் அதற்கு ஒரு நல்ல துணை வேண்டுமல்லவா! அந்த உயர்ந்த துணை தான் அண்ணார் கம்பர் பித்தன் தொகுத்தளிக்கும் இந்த நூல்.

கம்பனடிப்பொடி யாத்த கம்பன் மலர் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது.

கம்பனைப் போற்றுவோம்!

1. தமிழ்தவம் செய்த மாதவமே போற்றி
2. தாயாய் அறத்தைத் தாங்குவாய் போற்றி
3. கருத்துப் புரட்சிக் கவிஞனே போற்றி
4. வள்ளுவன் நெறிசெலும் வள்ளலே போற்றி

5. செவிநுகர் கனியருள் சிற்குணா போற்றி
6. தமிழ்ப்பண்பாட்டின் தாயே போற்றி
8. சமய நோக்கினில் சமரசா போற்றி

என்னும் போற்றி மலர்கள் கவிச்சக்கரவர்த்தியின் காவிய மணத்தை வீசி நம்மை மயக்குகின்றன!

அடியனேன் கண்ட கம்பன்!

இக்கட்டுரையில் கம்பனடிப்பொடி அவர்கள், தாம் கண்ட கம்பனை நாம் காணச் செய்து விடுகிறார்.

"ஐம்பதுக்குக் குறையாத வயது! கட்டுத்தளராத மேனி! மேதைச் சுடர் விரியும் பரந்த வசீகரமுகம்! அகன்ற நெற்றி! சோழன் போர்த்திய கனகாம்பரம்! சடையன் தந்த நவமணிக்கண்டிகை! சேரன் செலுத்திய வயிரக்கடுக்கன்! பாண்டியன் இட்ட மோதிரம்! வாணன் கொடுத்த கலிங்க நுண்ணூல் ஆடை! அவன் திருமுகத்திலே கவிதைத் தேவி குடி கொண்டிருக்கிறாள்!"

இதுதான் கம்பனின் கவின்மிகு தோற்றம். படிக்கவே இனிக்கிறதே! வரைந்து பார்த்தால் எப்படி இருக்கும்! கற்பனைத் தூரிகையால் கம்பனடிப்பொடி எழுதிய கம்பசித்திரம் இது! இதையே ஓவியமாக்கித் தமிழ் உலகத்திற்குத் தந்தவரும் அவர்தான்.

அடியேனை எது அடிமை கொள்ளும்!

செவிநுகர் கனியருள் திறனே யோ?
திருமறை நெறிபயில் உளமே யோ?
உவநிட முழுதுணர் உயர்வே யோ?
உலகொரு குலமெனும் உணர்வே யோ?
புவி முழுதளவிடு புலனே யோ?
புகலருள் அறமுறை நெறியே யோ?
அவிநய முதல்வளர் கலையே யோ
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ?

கம்பனை வென்றுவிடுகிறார் கம்பனடிப்பொடி! சொற்சுவை பொருட்சுவையால் நம்மை அடிமை கொண்டு விடுகின்றார்!

கம்பன் எம்மான்!

பாத்திரங்கள் படைப்பதிலும், படைத்தவற்றை இயக்கலிலும்
சாத்திரங்கள் விரிப்பதிலும், தருமம் நீதி உரைப்பதிலும்
தோத்திரங்கள் இசைப்பதிலும், தொன்மை மரபைக் காப்பதிலும்
மூத்த கவிஞர்ப் போற்றலிலும், முன்னே நிற்பான் கவி கம்பன்.

அன்பர்களே! அருள்கூர்ந்து இக்கவிதையை வாய்விட்டுப் படித்துப் பாருங்கள்! நம் உள்ளத்தில் கம்பன் ஆனந்த நடனம் ஆடிடுவான்!

ஏதேனும் ஆகேனோ!

"கம்பா! உன்கரத்தில் நான் பனை ஏடாய் ஆக வேண்டும்!

கவிச்சக்கரவர்த்தி! உன் கை பிடித்து எழுதும் எழுத்தாணியாய் நான் மாற வேண்டும்!

பாவலர் தலைவா! நீ அமரும் பீடமாய் நானிருக்க வேண்டும்!

கவிஞர் ஏறே! நீ உண்ணும் பொன் வட்டிலாய், உன் கையில் பாலுண்ணும் பொற்குவளையாய், உன் ஆடையாய், அங்கம் தழுவும் அணிகலனாய், மழைக்குக் குடையாய், வெற்றிலையாய், பாக்காய், சுண்ணாம்பாய் உனக்குக்கால் தேய்க்கும் கல்லாய், உன் வண்டியிழுக்கும் மாடாய், உன் பாத கமலத்தின் மிதியடியாய், உன் வீட்டு முற்றம் பெருக்கும் திருஅலகாய், சந்தம் நிறை காவியத்தைத் தந்தருளும் கம்பா! எந்தை பிரானே! உன் தமிழ்ச் சன்னிதியில் நான் இந்த அடியேன் ஏதேனும் ஆகேனோ?"

என்று கம்பனடிப்பொடி உள்ளம் உருகிப் பாடுவதைக் காதாலேயே கேட்டுக் கண்ணீர் விடும் உணர்வை நாம் பெற்று விடுகின்றோம்.

"கம்பநாட்டாழ்வாரைப் பாடும் கம்பனடிப்பொடி யாழ்வார் வாழ்க!" என்று நம் உள்ளம் பூரிக்கின்றது! கும்மாளியிடுகின்றது!

கம்பன் யார்?

இந்த வினாவிற்குக் கம்பன் அடிப்பொடி தரும் விளக்கமும் விடையும் ஒன்றல்ல! இரண்டல்ல! உதாரணத்திற்கு ஒன்று!

**"உள்ளத்தில் ஒளியைக்கூட்டி, உணர்வினில் தெளிவை ஊட்டி
கள்ளத்தை இல்லாது ஓட்டி, கடமையோடு உரிமைகாட்டி
பள்ளத்தில் கிடப்பார் எல்லாம் பதம்பெற அறத்தோடு அன்பு
வெள்ளத்தைப் பாய்ச்சி நிற்கும் விபுதனே கம்பன் என்பான்!"**

கம்பன் கல்வியில் பெரியன்?

கம்பன் வெறும் கற்பனைக் கவிஞன் மட்டுமல்ல! எழுத்து, அசை, சொல், தொடை, யாப்பு, காதல், வீரம், சோகம், மகிழ்ச்சி போன்றவற்றை மட்டுமே அறிந்து அவற்றை ஆளும் அறிஞன் மட்டுமல்லன்!

கம்பன் ஓர் உளவியல் அறிஞன்! பூதபௌதிகத்துறை அறிந்த அறிவியல் ஞானி! அணுவின் நீள அகலம் அறிந்த விஞ்ஞானி!

நிலவியல் அவனுக்குத் தெரியும்! விண்ணியல் விந்தைகளை அவன் அறிவான்!

"ஐம்பூதங்களின் விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கங்களை ஐயந்திரிபற ஆய்ந்த பேரறிஞன்" என்பதையெல்லாம் நமக்குக் கம்பனடிப்பொடி விளக்குகின்றார். நாமும் கம்பனை, "ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாய்க்" காணுகின்றோம்.

உலகில் ஒரு கவி!

"கல்லாத கலையும் வேதக்கடலும்" கம்பன் தான் என்பதைக் கம்பனடிப்பொடி நிறுவுகின்ற ஆழமே நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

எத்தகைய சோதனை வந்தாலும், வேதனை மேகங்கள் வாழ்க்கை வானத்தில் சூழ்ந்து எழுந்தாலும், அண்ணார் திரு S.N.K. அவர்களின் கம்பராமாயண ஆர்வச் சூரியன் ஒளி வீசிக் கொண்டு தான் இருப்பார் என்பதற்கு இந்த நூலே அசைக்க முடியாத சான்று.

நூல் என்பது வெறும் காகிதத் தொகுப்பன்று! அது சிந்தனைகளின் சிறந்த பெட்டகம்! உயர்ந்தோரின் ஒப்பற்ற எண்ணங்களின் கருவூலம்!

நாமே உழைத்து, சிந்தித்துக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்வது மிகவும் கடினம்.

"பிறர் எழுதியுள்ள நூல்களைக் கொண்டு உங்களைத் திருத்திக் கொள்வதில் நேரத்தைச் செலவிடுங்கள்; பிறர் வருந்தி உழைத்ததைக் கொண்டு நீங்கள் சுலபமாகப் பெறக் கூடிய பயன் இது," என்று மாபெரும் சிந்தனையாளர் சாக்ரடீஸ் கூறுகின்றார்.

"நூல்களைப் படிப்பதால் நாம் விரும்பிய அறிஞருடன் புதிய புதிய உலகங்ளுக்குப் போகலாம்," என்று சிட்னி டார்க் என்னும் அறிஞன் கூறுகின்றான்.

கம்பனுடைய உலகம் மிக மிகப் பெரியது. அதில் சிந்தனைச் சுற்றுலா செல்ல வேண்டுமானால் அதற்கு ஒரு நல்ல துணை வேண்டுமல்லவா! அந்த உயர்ந்த துணை தான் அண்ணார் கம்பர் பித்தன் தொகுத்தளிக்கும் இந்த நூல்.

கம்பனடிப்பொடி யாத்த கம்பன் மலர் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது.

கம்பனைப் போற்றுவோம்!

1. தமிழ்தவம் செய்த மாதவமே போற்றி
2. தாயாய் அறத்தைத் தாங்குவாய் போற்றி
3. கருத்துப் புரட்சிக் கவிஞனே போற்றி
4. வள்ளுவன் நெறிசெலும் வள்ளலே போற்றி

5. செவிநுகர் கனியருள் சிற்குணா போற்றி
6. தமிழ்ப்பண்பாட்டின் தாயே போற்றி
8. சமய நோக்கினில் சமரசா போற்றி

என்னும் போற்றி மலர்கள் கவிச்சக்கரவர்த்தியின் காவிய மணத்தை வீசி நம்மை மயக்குகின்றன!

அடியனேன் கண்ட கம்பன்!

இக்கட்டுரையில் கம்பனடிப்பொடி அவர்கள், தாம் கண்ட கம்பனை நாம் காணச் செய்து விடுகிறார்.

"ஐம்பதுக்குக் குறையாத வயது! கட்டுத்தளராத மேனி! மேதைச் சுடர் விரியும் பரந்த வசீகரமுகம்! அகன்ற நெற்றி! சோழன் போர்த்திய கனகாம்பரம்! சடையன் தந்த நவமணிக்கண்டிகை! சேரன் செலுத்திய வயிரக்கடுக்கன்! பாண்டியன் இட்ட மோதிரம்! வாணன் கொடுத்த கலிங்க நுண்ணூல் ஆடை! அவன் திருமுகத்திலே கவிதைத் தேவி குடி கொண்டிருக்கிறாள்!"

இதுதான் கம்பனின் கவின்மிகு தோற்றம். படிக்கவே இனிக்கிறதே! வரைந்து பார்த்தால் எப்படி இருக்கும்! கற்பனைத் தூரிகையால் கம்பனடிப்பொடி எழுதிய கம்பசித்திரம் இது! இதையே ஓவியமாக்கித் தமிழ் உலகத்திற்குத் தந்தவரும் அவர்தான்.

அடியேனை எது அடிமை கொள்ளும்!

செவிநுகர் கனியருள் திறனே யோ?
திருமறை நெறிபயில் உளமே யோ?
உவநிட முழுதுணர் உயர்வே யோ?
உலகொரு குலமெனும் உணர்வே யோ?
புவி முழுதளவிடு புலனே யோ?
புகலருள் அறமுறை நெறியே யோ?
அவிநய முதல்வளர் கலையே யோ
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ?

இந்த இரண்டு பாடல்களின் செய்திகள் ஒரு நாட்டில் அமையுமானால் அது தான் பூலோக சொர்க்கம்.

இந்தக் கட்டுரை ஒரு நாடகமாகவே அமைவது அருமையிலும் அருமை!

காந்தியடிகள், வ.உ.சி, பாரதி, மூதறிஞர் இராஜாஜி முதலிய அறிஞர்களின் உள்ளத்தையும் நம்மால் இக்கட்டுரையில் தரிசிக்க முடிகின்றது.

மகளிர் கல்வி, கம்பனில் தாவரங்கள், சகோதரர்கள், கம்பன் கண்ட கொடியோர், கம்பனின் அற்புதப் படைப்பு, கம்பன் உவமைகள், இராவண வதத்திற்கு உதவிய இரு நிகழ்ச்சிகள், வரலாற்றை மறந்தமையால் வந்த குழப்பம், பால காண்டம், முப்பெரும்புலவர், மலர் வணக்கம், தமிழ்த்தாய் மலர் வணக்கம், தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி, கம்பன் அருளிய இராமாவதாரம், இலக்குவனுக்கு இணை ஆகிய கட்டுரைகளும், கவிதைகளும் அற்புதமாக அமைந்துள்ளன.

கம்பராமாயணப் பாடல்களுக்கு (நாட்டிய நாடகத்திற்கு) பண்களை அமைத்திருப்பது கம்பனடிப்பொடி அவர்களின் இசை ஞானத்தை வெளிப்படுத்துகின்றது.

கம்பன் அருட்கவி ஐந்து, பஞ்சரத்னக் கீர்த்தனைகளாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

“தியாக ராஜரின் பாடல்களில் காணப் பெறும் கவித்துவம் மேதா விலாசம், ஸ்வர விஸ்தாரம், கருத்து வீச்சு, இசைப்புலமை இவற்றோடு ஒப்பும், ஈடும் மிக்க வகையில் கம்பன் பாடல்களும் சாந்நித்தியம் நிரம்பப் பெற்றவை என்பதைக் கேட்டு இன்புறுவோர் நிச்சயம் அநுபவித்து, ஆனந்தித்து உணர்ந்திடுவர்”

என்னும் கம்பனடிப்பொடியின் வாக்கு தமிழிசையின்பாலும், கம்பன் மேலும் அவருக்கிருந்த பற்றினை நமக்குக் காட்டி நம்மையும் அந்த மகோன்னதமான உணர்வுகளைப் பெறச் செய்கின்றது.

கம்பனடிப்பொடி அவர்களின் கட்டுரைகளில் வெறும் இலக்கிய ரசனை மட்டுமின்றிச் சமுதாய உணர்வும் ஆழமாக இருப்பதை உணரலாம்.

கம்பனடிப்பொடி அவர்களின் குரலை அன்று! அன்று! இதயத்தையே இக்கட்டுரைகளில் நம்மால் கேட்க முடிகிறது.

இதைப் போன்ற இன்பம் கனியும் நாட்டை (அயோத்தி) போக பூமியை உண்டாக்க வேண்டுமென்றால், தம்பிமார்களே! நீங்கள் செய்ய வேண்டியது ஒரே ஒரு வேலை! அதுதான் கல்வி! ஆம் கல்வி! கல்வி ஒன்றுதான் அது! கல்வி என்ற ஒரே விதையை நீங்கள் விதைத்துவிட்டால், அது முளைக்கும், வளரும்! வளர்ந்து கேள்வி என்ற கிளைகளை நாலு திசையிலும் பரப்பும் அந்தக் கிளைகளில் "நல்ல முயற்சி" என்னும் தளிர்கள் தளிர்க்கும்.

அன்பு என்னும் மொட்டுகள் அரும்பும். அன்பாய் அரும்பிய மொட்டு அறமாய் மலரும்.

அறமலர் "போகக் கனியை இன்பப் பழத்தைக் கொடுக்கும்"

இப்படிச் சமுதாய உணர்வோடு கூடிய கம்பனடிப்பொடி அவர்களுடைய படைப்புக்களைத் தாங்கி இந்த அருமையான கம்பன் கலைக்களஞ்சியம் உங்கள் கையில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

இது ஒரு நூல் வெளியீடு அன்று! இது ஒரு ஒப்பற்ற தமிழ் வேள்வி!

இந்த வேள்விக் குண்டலத்தில் எரிவது நெருப்பு அன்று! தமிழ்ச்சமுதாயத்தின் மேல் "கம்பர் பித்தர்" அண்ணார் S.N. குப்புசாமி முதலியார் கொண்ட விருப்பு! கம்பன் மேல் கொண்ட ஆர்வம்! கம்பன் அடிப்பொடிமேல் கொண்ட தணியாத காதல்!

கம்பனுக்கும் தமிழ்த்தாய்க்கும் ஆலயம் எடுத்த அமரர் கம்பனடிப்பொடி அவர்களுக்கு இந்த நூலாகிய கோயில் எடுத்துள்ள கம்பன் பித்தருக்குத் தமிழ் நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது!

தமிழகத்தில் கம்பன் தொடர்பாகவும், தமிழ் தொடர்பாகவும் எடுக்கப்பெறும் நற்பணிகளுக்கெல்லாம் ஆதரவு தந்து துணைபுரியும் தெய்வத் தமிழ்க் காவலர் மதுரை விஸ்வாஸ் கலைபண்பாட்டு அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் உயர்திரு. சங்கர சீத்தாராமன் அவர்களுக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. அவர்களுடைய சீரிய தொண்டு மேன்மேலும் தொடர அன்னை மீனாட்சி அருள்புரிய வாழ்த்துகின்றேன்.

இராஜபாளையம் கம்பன் கழகச் செயலாளர் முத்தமிழ்த் தொண்டர் திரு. என்.எஸ். முத்துகிருஷ்ண ராஜா அவர்களுடைய அற்புதத் திருப்பணியால் தமிழன்னை இந்த நூலைப்போல் இன்னும் பல நூல் ஆகிய திருக்கோயில்களைப் பெற இறைவன் துணையை இறைஞ்சுகின்றேன்.

கம்பன் புகழ் வாழ்க!
கன்னித் தமிழ் வாழ்க!

அணிந்துரை

முனைவர் தெ. ஞானசுந்தரம், சென்னை.

காலம்தான் எவ்வளவு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது! 'கன்னித்தமிழ் வாழ்க! கம்பன் புகழ் வாழ்க!' என்று வாய்மணக்க மேடையில் முழங்கிய அப்புனித வாய் மோனநிலை அடைந்து ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன. காகுத்தனைப் போன்ற கரிய மேனி, சட்டை அணியாது துண்டு மட்டும் கிடக்கும் திறந்த மார்பு, அதில் தவழும் உருத்திராக்க மணிமாலை, சந்தனப்பொட்டு இலங்கும் நெற்றி, சொற்களை அழுத்தந் திருத்தமாக ஒலிக்கும் குரல் எல்லாம் கனவுபோல் மறைந்து விட்டன.

ஆனால் அவரோடு பழகியவர்கள் நெஞ்சிலிருந்து மட்டும் அவர் மறையவில்லை. அவர் அன்பர் நெஞ்சில் மட்டுமன்றிக் கம்பராமாயணம் இருக்கும் வரை இருப்பார். அற்ப மனிதர்களைத்தான் காலம் வெல்கிறது. அருஞ்செயல் செய்தவர்களை அன்று அவர்கள் காலத்தை வெல்கிறார்கள். கம்பனடிப்பொடி காலத்தை வென்று இன்றும் நம்மோடு வாழ்கிறார். திருமண்டங்குடி விப்பிரநாராயணர் தம் திருமால் பத்திமையால் தொண்டரடிப்பொடியாக மாறியது போலக் காரைக்குடி சா. கணேசனாரும் தம் கம்பர் ஈடுபாட்டால் கம்பனடிப்பொடியாக மாறினார். கம்பனடிப்பொடி கம்பர் உலகத்திற்கு வாய்ந்த 'விறல்மிண்டர்'. கம்பராமாயண எதிர்ப்பு மேலோங்கி இருந்த காலத்தில் அஞ்சாமல் கம்பரைப் போற்றிக் காக்க இராமாயணப் புகழ்க்கொடியை உயர்த்திப் பிடித்தவர்.

அவரால் காரைக்குடி கம்பர் புகழ் வளர்க்கும் கழனியாக மாறிற்று. அப்பண்ணையில் விளைந்த விதை நெற்கள் தமிழகத்திலும் கடல்கடந்து அயல்மண்ணிலும் பரவின. இன்று கம்பப்பயிர் தழைத்து வளர்ந்து விளைந்து பயன் தந்து நிற்கிறது. அவரால் 'கம்பர் பித்தன்' என்று அடையாளம் காட்டப்பெற்ற வேலூர்க் குப்புசாமி முதலியார் ஒரு வித்தியாசமான மனிதர். சுதந்திரப்போராட்ட வீரர்; அதற்காகச் சிறை சென்றவர். அதனைப் பயன்படுத்தி எந்தச் சலுகையும் பெறாதவர். அதிகமாக இலக்கிய விழாக்களுக்குச் செல்பவர். அதிகமான கம்பர் விழாவுக்குச் சென்றவருக்குக் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் இருக்குமால் அந்த இடத்திற்குப் போட்டியின்றி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு உரியவர் அவர் ஒருவரே. அவர் கம்பனடிப்பொடி அவ்வப்போழுது எழுதிய கவிதைகளையும் கட்டுரைகளையும் தேடி நூலாக்கியுள்ளார். இந்த நவீன வியாசமுனிவருக்கு என் பாராட்டுதல்கள். முதலில் கம்பனடிப்பொடியின் கவிதைகளைக் காணலாம். அவர் கவிதை

நிரம்பப் பாடியவர் அல்லர். ஆனால் கவிதையுள்ளம் கொண்டவர். கம்பர் மீதும் தமிழ் மீதும் தாம் கொண்ட பத்திமையைப் பாடக் கவிதையைக் கருவியாகக் கொண்டவர்.

கம்பனடிப்பொடிக்குக் கம்பரே கடவுள். அவர் கம்பருக்கு உருவம் கொடுத்தவர். கம்பர் எப்படி இருப்பார் என்று கற்பனைக்கண்ணால் கண்டு எஸ்.கே. அய்யாவின் விரல்களைக் கொண்டு ஓவியமாகத் தீட்டுவித்தவர். அவர் கவிதைகளில் கம்பர், திருவள்ளவர், இளங்கோவடிகள் ஆகியோர் பெருமையும் தமிழ்த்தாயின் பெருமையும் பரக்கப் பேசப்படுகின்றன. எனினும் கம்பரின் பெருமையே மேலோங்கி நிற்கிறது. அவர் எதனைப் பாடினாலும் அதில் கம்பர் கவிதையின் சிரித்த முகம் காட்சி தருகிறது!

மூன்று கடவாய் முளைத்தாய் போற்றி!
செவிநுகர் கனிகளாய்த் திகழ்ந்தாய் போற்றி!

என்பவை 'தமிழ்த்தாய் மலர்வணக்கம்' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ள கவிதை அடிகள். கம்பரில் தோய்ந்த நெஞ்சிலிருந்து வரும் சொற்கள் கம்பரின் சொற்களாகவே அமைந்துள்ளன. 'மூன்று கடவாய் முளைத்தெழுந்த மூலமோ?' (3682) என்பது கவந்தன் துதி. காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள் (82) என்பது நாட்டுப்படலத்தில் வரும் கவிதை அடி. தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சியில்

யாண்டும். ஊதைகள் சொரிந்தன உயிருறும் அமுதம்

என்னும் இனிய கவிதைத் தொடர் வருகிறது. இது 'ஊதைகள் சொரிவன உயிருறும் அமுதம்' (82) என்னும் கம்பரின் கவிதையின் முழுத்தாக்கமும் பெற்றதாகும். குலசேகரப் பெருமாள் திருவேங்கடத்தானைக் குறித்துப் பாடியுள்ள 'ஊனேறு' என்னும் திருமொழி புகழ் வாய்ந்தது. அவர் அம்மலையில் தமக்கு ஏதேனும் ஒரு தொடர்பு வேண்டும் என்று ஏங்கிய ஏக்கம் ஒவ்வொரு பாசுரத்திலும் வெள்ளமிட்டு நிற்கிறது. அது போல் தமக்குக் கம்பரொடு ஏதேனும் ஒரு தொடர்பு வேண்டும் என்று ஏங்கும் ஏக்கத்தைப் புலப்படுத்தும் வகையில் அமைந்ததே கம்பனடிப்பொடியின் 'ஏதேனும் ஆகேனோ?' என்னும் கவிதை. இருவரும் வேறுவேறு பொருள்களைப் பற்றிப் பாடியிருந்தாலும் பத்திமையில் இருவர் கவிதைகளும் இணையானவையாகவே எனக்குத் தோன்றுகின்றன.

இசைவாணர்களிடத்தும் கம்பரின் புலமை பரவ வேண்டும் என்னும் ஆர்வத்தில் இசைமேதை யாகவும் திகழும் கம்பரின்

பாக்களில் ஐந்தினைத் தேர்ந்து இசைப்பேரறிஞர் பேராசிரியர் எஸ். இராமநாதன் அவர்களின் துணையோடு அவற்றை ஐந்து கன ராகங்களில் அமைத்துத் தியாகையரின் பஞ்சரத்னக் கீர்த்தனைகள் போல் கம்பர் பஞ்சரத்னம் அமைத்திருப்பது அவர் கம்பர் மேல் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் குன்றின்மேலிட்ட விளக்காகக் காட்டுகிறது. கம்பனடிப்பொடியின் கட்டுரைகள் அவரது புலமையையும் ஆராய்ச்சி வன்மையையும் புலப்படுத்துகின்றன. அவர் ரசிகமணி டி.கே.சியுடன் பழகியவர். ஆகவே அவரைப் போலவே எளிய நடையில் நேரே நின்று பேசுவதுபோல் சில கட்டுரைகளில் அவரது எழுத்து அமைந்துள்ளது.

'கம்பன் கல்வியல் பெரியன்' என்னும் கட்டுரையில் இராமன் சீதையைக் கண்ட அன்று இரவு உறங்காமல் அவளையே நினைந்து சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான். அவன் கங்குல், திங்கள், தனிமை, தான், அத்தையல் ஆகிய துணைகளோடு இரவைக் கழித்தான் என்கிறார் கம்பர். இதில் தான் என்பது எதனைக் குறிக்கிறது? இங்குத் தான் என்பது. 'தன்னை மறவாத்தன்மை'யைக் (Self consciousness) குறிக்கும் என்று விளக்குகிறார் கம்பனடிப்பொடி (ப.21). இந்த விளக்கத்தைப் படித்தவுடன்'ஆகா' என்று உதடுகள் நன்றி கலந்த பாராட்டு மலரைத் தூவி நிற்கிறது. கம்பர் பாயிரத்தில் தாம் இராமாயணத்தை எழுதுவதற்கான காரணத்தைத் தெரிவித்துள்ளார்.

> பொய்இல் கேள்விப் புலமையினோர்புகல்
> தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே

என்கிறார். இதில் தெய்வமாக்கவி என்பதனைப் பொதுவாக வான்மீகி முனிவரைக் குறிப்பதாகத்தான் கொள்வர். ஆனால் திருவள்ளுவரைக் குறிப்பதாகக் கம்பனடிப்பொடி குறிக்கிறார் (ப.29). கம்பர் அறுநூறுக்கும் மேற்பட்ட திருக்குறள் பாக்களைத் தம் காப்பியத்தில் கையாண்டிருப்பதைக் காணும் போது கம்பனடிப்பொடி சொல்வதும் சரியாக இருக்கும் போல் தோன்றுகிறது! வான்மீகியையும் வடமொழியையும் மதிக்கும் ஒருவர் கம்பரைப் பற்றிச் செய்யும் மதிப்பீடு சரியாகத்தான் இருக்க வேண்டும். 'உலகில் ஒரு கவி' என்னும் கட்டுரையில் 'மும்மைசால் உலகுக் கெல்லாம்' என்னும் கம்பரின் அரிய பாடலை ஓர் எழுத்தைக்கூட மாற்றாமல் கீர்த்தனையாக ஆக்கிக் காட்டுவது கம்பனடிப்பொடியின் இசைப்புலமைக்கு தக்க சான்றாகும் (ப.42,43). கம்பனடிப்பொடிக்குப் பாரதியாரிடத்திலும் மிகுந்த ஈடுபாடு. சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்து சிறைபுகுந்த ஒரு தேசபக்தருக்குப் பாரதியிடம் எவ்வாறு ஈடுபாடு இல்லாமல் போகமுடியும்?

பள்ளத்தில் கிடப்பார் எல்லாம் பதம்பெற அறத்தோடு அன்பு
வெள்ளைத்தைப் பாய்ச்சி நிற்கும் விபுதனே கம்பன் என்பான்!

என்னும் கவிதை (ப. 18) அவர் பாரதியின் கவிதைகளில் தோய்ந்தவர் என்பதனைக் கோள்சொல்லி விடுகிறது. அவர் பாரதியாரின் கவிதைகளை முற்றும் கற்று, "கம்பனை வள்ளுவனை இளங்கோவை காளிதாசனை தாயுமானவனைப் பாராட்டிப் பாரதி வியந்து பாடுவதை நாம் அறியோம். ஆனால் அவர்களுள் எல்லாம் கம்பனைப் பாராட்டியதே அளவாலும் முறையாலும் அதிகமாகும். காரணம், கம்பன் அருளிய இராமகாதைக் காப்பியம் அவன் கவிதா சந்தம் பாரதியைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது" என்னும் முடிவினைத் தெரிவித்துள்ளார் (53). இதனைப் படிக்கும் போது எத்துணை நேரிய முடிபு! எவ்வளவு நேர்மையாகத் தரவுகளின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது! என்னும் மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது. கம்பர் கண்ட நாடு காந்தியடிகள் கண்ட சர்வோதய நாடு என்று காட்டுவதும் சிறப்பாக அமைந்துள்ளது (74)

'கம்பனில் தாவரங்கள்' என்னும் கட்டுரை பேராசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் மேற்பார்வையில் செல்வி மோகனகுமாரி எழுதிய நூலுக்குத் தந்த மதிப்புரையாகத் தெரிகிறது. இது மிக அருமையான மதிப்புரை. இதில் நூலின் மதிப்புமட்டுமன்றிக் கம்பனடிப்பொடியின் மதிப்பும் தெரிகிறது. காந்தட்பூவினைத் தங்கள் பகுதியில் 'கார்த்திகைப்பூ' என்று குறிப்பர் என்று குறித்துள்ளார் (83). நெய்தல், பானல், நீர் என்பவை வேறு வேறு மலர்கள். உரையாசிரியர்களும், ஆய்வாளர்களும் கருதுவது போல் ஒரே மலரைக் குறிக்கும் வேறு வேறு பெயர்கள் அல்ல (ப.88) என்கிறார். இஃது அவரது கூர்த்த தாவரவியல் அறிவுக்குச் சான்று பகருகிறது. நூலாசிரியர் நொச்சியும், சிந்து வாரமும் ஒன்று என்று தெரிவித்துள்ள கருத்தை, "சிந்து வாரம் என்பது 'கருநொச்சி' என வழங்குகிறது. நொச்சியினின்றும் இது எல்லா வகையாலும் வேறுபட்டது. தண்டும், காம்பும், இலை, நரம்பும் ஊதா முதிர்ந்த ஒளிர் கருமையுடையவை. இலை முதிர்பசுமை கொண்டு கூர்மையுடையதாய் மேல்நோக்கி நிற்கும். ஆகவே இரண்டையும் வேறுவேறாகக் கொள்வதே சரி" (ப. 91) என்று மறுத்துள்ளார். இப்பகுதியைப் படிக்கும் போது நமக்குத் திகைப்பும் மலைப்பும் உண்டாகின்றன. 'அடேயப்பா! இந்தப் பெரியவர் எவ்வளவு இயற்கையைக் கூர்ந்து கவனித்துள்ளார்! கபில பரணர் மரபின் எச்சம் இவர் போலும்! என்னும் எண்ணம் உண்டாகிறது.

கம்பனடிப்பொடியின் வரலாற்றுப்புலமைக்குச் சான்று பகரும் வகையில் அமைந்துள்ளது 'வரலாற்றை மறந்தமையால் வந்த குழப்பம்' என்னும் கட்டுரை. அதில் 'ஆதித்தன் குலமுதல்வன் முனுவினையார் அறியாதார்' என்னும் அடியில் வரும் ஆதித்தன்

என்பது "கம்பனின் நண்பன் விஜயாலய சோழனின் (கி.பி. 850-871) மைந்தன்; கி.பி. 871-907ல் கோலோச்சியவன். ராமகதையில் கொண்ட ஈடுபாட்டால் தன் பெயரைக் கோதண்டராமன் என்று மாற்றிக்கொண்டவன்'' (126-7) என்று குறிப்பது வரலாற்று ஆய்வாளர்களைப் பிடித்து இழுத்து நிறுத்திச் சிந்திக்க வைக்கிறது.

இலக்கிய நயம் போன்ற அங்கங்கே வரைந்துள்ள விளக்கங்கள் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்வன. சான்றாக ஒன்று கண்டு அமைவோம். அனுமன் சீதை அசோகவனத்தில் கற்பரசியாய் இருப்பதனை இராமனுக்குத் தெரிவிக்கிறான். அப்பொழுது,"கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்" என்று தெரிவிக்கிறான். இதற்கு அனுமன் தன் கண்களால் கண்டதாகப் பொருள்கொள்ளாமல் சீதையின் கண்களால் கண்டதாகப் பொருள்கொள்வதுதான் சிறப்பு என்று பலரும் சொல்வர். ஆனால் அதற்குத் தக்க சான்றுகள் தந்து விளக்கியவர் கம்பனடிப்பொடி அவர்களே ஆவர். காட்சிப்படலத்தில் வரும் "காசிஇல் கண்இணை சான்று எனக் கண்டனன்" என்னும் அகச்சான்றினையும், "பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின்' என்னும் திருக்குறளைப் புறச்சான்றினையும் தந்துள்ளமை அவரது நுண்மான் நுழைபுலத்தினைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்நூல் கம்பரோடு பலகால் உறவாடி, அதனையே போதுபோக்காகக் கொண்டிருந்த ஒருவரின் கட்டுரைத் தொகுப்பு. வண்ண மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை. இதில் புலமை மணத்திற்கும் இலக்கிய நயத்திற்கும் பஞ்சமில்லை. இந்நூல் கற்போர்க்குப் பெருவித்து. கம்பனடிப்பொடி என்னைத் தாம் காரைக்குடியில் எடுக்கும் கம்பன் விழாவில் பங்குபெறச் செய்து வளர்த்தவர். அவரது நூலுக்கு அணிந்துரை எழுதத் கிடைத்தது ஓர் அரிய வாய்ப்பு; யான் பெற்ற பெறாப்பேறு. இதற்காகத் திரு முதலியார் அவர்களுக்கு என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கட்டுரைகளை வரைந்த பெருந்தகை அமரர் கம்பனடிப்பொடியின் புகழ் வாழ்க! அவர் மீது கொண்ட மெய்யன்பால் இதனை நன்றியின் அடையாளமாக வெளியிடும் 'கம்பர் பித்தன்' வேலூர்க் குப்புசாமி முதலியார் அவர்களுக்கு என் உளமார்ந்த பாராட்டுதல்கள். இதனை வெளியிடப் பொருள் உதவி செய்திருக்கும்இலக்கியச்சுவைஞரும் கொடையுள்ளம் கொண்டவருமான திரு சங்கரசீத்தாராமன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அவருக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். அவர் பல்லாண்டு எல்லா நலன்களும் பெற்று மேலும் மேலும் உயரவும், திரு முதலியார் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நலமும் வளமும் பொலிய வாழ்ந்து மேலும் மேலும் இத்தகைய தமிழ்ப்பணி இயற்ற இறைவனை இறைஞ்சுகிறேன்.

கம்பன் மலர் வணக்கம்

“கம்பன் அடிப்பொடி”

காப்பு

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும் நீங்கலா,
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

திருவழுந் தூர்வரு தேவே போற்றி
அருள்வழி உணர்த்துபே ரந்தண போற்றி
தமிழ்தவம் செய்தமா தவமே போற்றி
அமிழ்தினும் இனியசொல் அருளினோய் போற்றி
உலகமா கவிஎன ஒளிர்வாய் போற்றி

கலைகளின் பெருங்கடல் கடந்தாய் போற்றி
பொன்னித் துறைதவழ் புனிதா போற்றி
கன்னித் தமிழ்த்திறம் காட்டினாய் போற்றி
முத்தமிழ்த் துறையின் வித்தகா போற்றி
சித்தம் அழகிய சேவக போற்றி

இதிகா சத்துறை ஏறே போற்றி
விதிவலி உணர்த்தும் மதிவலாய் போற்றி
சாத்திரம் நன்குணர் சதுரா போற்றி
பாத்திரம் சுவைசெயும் பாவலா போற்றி
புவிமுழு தளந்த புலவனே போற்றி

கவிஞருள் ஓங்கிய கலைஞனே போற்றி
மாயாப் புகழொடு வாழ்வாய் போற்றி
தாயாய் அறத்தைத் தாங்குவாய் போற்றி
பெண்மைக் குயர்வு பேணுவாய் போற்றி
உண்மைக் குருவம் உதவினாய் போற்றி

நடையில் நின்றுயர் நாயகா போற்றி
சடையன் புகழ்விரி தலைவா போற்றி
இடைஉயிர் முறைஅறி எம்மான் போற்றி
பொறைசயத் துறைஎனும் புனிதா போற்றி
கற்பனைத் திறம்பல கவித்தாய் போற்றி

அற்புதம் படைக்கும் அரசே போற்றி
காவிய வானக் கதிரவா போற்றி
ஓவியக் கவிதைக் கொருவனே போற்றி
விருத்தக் கவிக்கொரு வேந்தே போற்றி
கருத்துப் புரட்சிக் கவிஞனே போற்றி

என்றுமுள தென்தமிழ் இயம்பினாய் போற்றி
தென்றலைப் புலியாச் செய்வாய் போற்றி
இராமாவ தாரம் ஈந்தாய் போற்றி
பராவருங் கவிவலம் படைத்தாய் போற்றி
வான்மிக மணிக்கொளி வழங்கினாய் போற்றி

கோன்மை நெறிஉணர் கொற்றவா போற்றி
வெண்ணெய் வளர்த்த விளக்கே போற்றி
மண்ணில் வாழ்ந்த வானவா போற்றி
அலகிலா விளையாட் டறிவே போற்றி
உலகெலாம் போற்றும் உத்தமா போற்றி

பெருமையே வடிவாய்ப் பிறங்குவாய் போற்றி
அருமையைச் சொல்லில் அமைத்தாய் போற்றி
பலகலை ஆர்ந்த பனிமதி போற்றி
உலகம் பொதுஎன உரைத்தாய் போற்றி
அனைத்துயர் காப்பியம் ஆக்கினாய் போற்றி

மனத்துவம் நன்குணர் மன்னவா போற்றி
மாயா சனகனை வடித்தாய் போற்றி
தோயாத் துறையிலாத் தோன்றலே போற்றி
தத்துவ நிலைதெரி சத்துவா போற்றி
சித்திரம் எனக்கவி தீட்டினாய் போற்றி

வள்ளுவன் நெறிசெலும் வள்ளலே போற்றி
ஒள்ளிய துணர்ந்தநல் உணர்வேயாம் போற்றி
காவிரி நலமுணர் காதலா போற்றி
பாவிகம் முழுதுணர் பருணிதா போற்றி
மெய்ப்பா டுணர்ந்திடும் விபுதா போற்றி

துய்ப்பார்க் கினித்திடும் சொல்வலாய் போற்றி
பவித்திரப் பெருங்கதை பகர்ந்தாய் போற்றி
செவிக்குறு தேன்பொழி செம்மலர் போற்றி
மக்களுக் குரிமை வரித்தாய் போற்றி
தக்கநற் கவிதைத் தச்சனே போற்றி

நுண்கலை உணர்த்திடும் நூலோய் போற்றி
வண்கவிச் சக்கர வர்த்தியே போற்றி
கல்வியிற் பெரிய கடலே போற்றி
செல்நெறி காட்டும் தேசிகா போற்றி
அமர காவிய அமுதே போற்றி

சமரம் காட்டலில் சமனிலி போற்றி
செந்தமிழ்க் குயர்வருள் செம்மலே போற்றி
அந்தமில் சுவைபொழி அண்ணால் போற்றி
உலகுடன் பிறப்பென உணர்த்தினை போற்றி
விலகலாப் பொருளுரை மேலாய் போற்றி

வேதாந் தப்பொருள் விரித்தாய் போற்றி
நாதாந் தத்துறை நாவலா போற்றி
அழுக்கறு நெறிதரும் அறவோய் போற்றி
ஒழுக்கம் பேணிடும் ஒண்தவா போற்றி
கற்பு நெறிக்கொரு காவலா போற்றி

சொற்பொருள் கணித்த தூயோய் போற்றி
திருக்குறள் விரிவுரை செய்தாய் போற்றி
மருட்கொளா நெறிவளர் மாண்போய் போற்றி
துன்பிலே சுகமெனச் சொன்னாய் போற்றி
அன்பதே ஆக்கம்என் றறைந்தாய் போற்றி

கவியினும் கணி எனும் கண்ணே போற்றி
செவிநுகர் கனியருள் சிற்குணா போற்றி
படைக்கலப் பரிசுணர் பண்பனே போற்றி
அடைக்கலம் காக்குநல் அருளோய் போற்றி
ஆன்றவிந் தடங்கிய ஐயா போற்றி

சான்றவர் இனத்தொரு தக்கோய் போற்றி
அம்பிகா பதிதரும் அத்தா போற்றி
கும்பிட்டு வாழ்கிலாக் குலபதி போற்றி
அந்தியைக் காலன் ஆக்குவாய் போற்றி
சந்தமார் சுவைவளம் தந்தாய் போற்றி

நாடக அணிக்கொரு நாதா போற்றி
வீடுறு நெறியதும் விளைத்தாய் போற்றி
மறைப்பொருள் விளக்கிடும் மாதவா போற்றி
பிறப்பெலாம் சமனெனப் பேசுவாய் போற்றி
தமிழ்ப்பண் பாட்டின் தாயே போற்றி

நிமிர்கடன் உணர்த்தும் நெறிவலா போற்றி
யாரொடும் பகைகொளல் என்றாய் போற்றி
போரொடுங் கிடவழி புகன்றாய் போற்றி
மக்களே உயிர்என வகுத்தாய் போற்றி
மன்னனே உடலென மாற்றினாய் போற்றி

அறிவினுக் கறிவினை அறிவாய் போற்றி
செறிபெருங் கேள்விச் செல்வா போற்றி
சமய நோக்கினில் சமரசா போற்றி
குமரித் தமிழ்க்கொரு கோவே போற்றி
மானிடப் பெருமை வளர்த்தாய் போற்றி

தேனிசைத் தமிழின் தெய்வமே போற்றி
நாட்டரசன் கோட்டை நயந்தாய் போற்றி
போற்றி கம்பனே போற்றி போற்றி!

உன்னை உள்ள படியறியேம்;
உலகை உள்ளத் திறமுள்ளேம்;
பின்னை அறியேம், முன்னறியேம்,
இடையும் அறியேம்; பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை அடியேம் செயற்பால?
இன்பம் துன்பம் இல்லானே!

வாழிதமிழ் நாகரிகம் வாழிதமிழ்ப் பண்பாடு
வாழிதமிழ் வேதமருள் வள்ளுவனார் – வாழியரோ
இன்பம் பெருக இருசெவியும் தேன்பாய்ச்சும்
கம்பனாம் எங்கள் கவி.

அடியனேன் கண்ட கம்பன்

"கம்பன் அடிப்பொடி"

(இது 1940 ஆம் ஆண்டு எழுதப் பெற்றது)

தமிழனுக்குத்தான் என்ன துரதிர்ஷ்டம்!

யார் யார் உருவமெல்லாமோ படமாகி எங்கும் கிடைக்கிறது. கம்பன் படமோ?

எவராவது முன்வந்து ஏதாவது வழி காட்ட மாட்டார்களா?

பிறரைத்தான் எதிர் பார்க்க வேண்டுமா? நாமே ஏன் முயன்று பார்க்கலாகாது?

சரி; எப்படிச் சித்தரிப்பது? ஆதாரம்?

இராமனுக்கும், கண்ணனுக்கும், ஏசுநாதருக்கும், சங்கரர்க்கும், இராமானுஜருக்கும் படங்கள் இருக்கின்றனவே! ஆதாரம் என்ன?

அப்படியானால் கம்பன் எப்படி இருந்திருப்பான்? அவன் காலம் எது? இடம் எது? சைவனா? வைணவனா? அவன் மேற்கொண்ட சமயம் தான் எதுவோ? அவன் சமயக்குறி பூண்டிருந்தானா? யாரோடெல்லாம் உறவு கொண்டிருந்தான்?

இவை என் மனக்கடலில் சென்ற சில ஆண்டுகளாக அலைமோதிக் கொண்டிருந்தன.

திருவழுந்தூர், ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் காணப்பெறும் கம்பன் உருநாட்டாகக் கருதப்பெறும் சிற்பங்களைச் சென்று தோய்ந்து ஆய்ந்து பார்த்தேன். அவை அத்திருப்பணிகளைச் செய்த நாயக்க மன்னர்களின் உருவங்களே என்பது தெளிவாகப் புலப்பட்டது.

எனவே, ஊகித்து ஒரு வழியாய் உருவத்தைச் சமைக்க வேண்டியதுதான்.

ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவன்; நல்ல உடல் வளம்; சோழ வளநாடே அவன் தழைத்துச் 'செவிநுகர் கனிகள்' சொரியத் தவம் புரிந்தது; சோழன், சேரன், பாண்டியன் முதலான முடிமன்னர்கள், வாணன், ஆமூர் முதலி போன்ற பிரபுக்கள், சடையப்ப வள்ளலை ஒத்த பேருபகாரிகள் ஆகியவர்களே அவனோடு உறவாடி மகிழப் பாக்கியம் செய்தவர்கள்.

அவன் பிறப்பாலே சைவனாகலாம்; அல்லது வைணவனாக இருந்திருக்கலாம். ஆனால், சமரச நெறி வழி ஒழுகி நெஞ்சு நேரான அறம் ஒளிரும் அருளாளன். சமயக் குறி ஏதேனும் அணிந்திருக்கவும் கூடும்!

நாம் எழுதுகிற படத்திலே கம்பனுக்கு ஐம்பதுக்குக் குறையாத வயது; கட்டுத் தளராத மேனி; மேதைச் சுடர் விரியும் பரந்த வசீகர முகம்; அகன்ற நெற்றி; சோழன் போர்த்திய கனகாம்பரம்; சடையன் தந்த நவமணிக் கண்டிகை; சேரன் செலுத்திய வயிரக்கடுக்கன்; பாண்டியன் இட்ட மோதிரம்; வாணன் கொடுத்த கலிங்க நுண்ணூல் ஆடை - இவையெல்லாம் விளங்க வேண்டும்.

காவிரிக் கரையிலே, அந்திப் பொழுதிலே, பச்சைப் பசும்புல் மேடையிலே காம்பீர்ய நிலையிலே கம்பனைக் காண வேண்டும். அவன் திருமுகத்திலே கவிதைத் தேவி குதிகொள்வதைக் கண்டு களிக்க வேண்டும். அவன் அருகிலே பணிவே உருக்கொண்டாலன்ன கற்றுச் சொல்லி ஏடும் எழுத்தாணியுமாய் அமர்ந்திருக்க வேண்டும், கவிதை வெள்ளத்தை அள்ளிப் பருகும் தாகத்துடனே.

இன்ன சமயத்தன் என்று துணிய முடியாத நிலையில் எச்சமயக் குறியை அவன் நெற்றிக்கிடுவது? நான் கட்டும் முடிவுக்கு உண்மை மாறுபட்டிருக்குமானால், அஃது அடாத செயலன்றோ?

அவன் எச்சமயத்தில் பிறந்தவனாயினும் எக்குறி தரிப்பவனாயினும் என்ன? அதைக் காட்டுவதா முக்கியம்?

எனவே, எவ்வித அடையாளமும் இடல் வேண்டா.

ஒருவேளை, குறியே அணிந்திராமலும் இருந்திருக்கலாம் அல்லவா?

அன்றி, மாலை வேளையில் கால்முகங் கழுவி அமர்ந்திருப்பதாகவும் கொள்ளலாமல்லவா?

இங்ஙனம் அடியனேன் கற்பனைக் கண்ணால் கண்ட கம்பனுக்கு எங்களூர் எஸ்.கே. அய்யா ஓவியக் கையால் உருவந் தந்துள்ளார்.

கலைக் கண் கொண்டு இதைக் கண்டு மகிழ வேண்டும்.

அடியெனை அடிமைகொள் அது எதுவோ?

"கம்பன் அடிப்பொடி"

நரைசிறி திலைஎன வளர்சிகையோ?
        நவைஇலை எனஒளிர் விரிநுதலோ?
அருள்ஒளி குளிர்தரும் இணைவிழியோ!
        அமுதுகு கனிஇதழ் மலர்வாயோ?
விரைநிறை திரளிரு வளர்புயமோ?
        மிளிர்எழு எனநிமிர் இருகரமோ?
அரதன மணிவடம் தவழ்உரமோ?
        அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 1

சதுரநல் வடிவமை குடங்கையதோ?
        சவிநிறை மணியன உகிரவையோ?
துதிபெறும் அரசிலை பொருவயிறோ?
        துகளுறும் உடைதிகழ் இடையதுவோ?
முதிர்அகில் எனஒளிர் தொடையவையோ?
        முரல்வரு கயல்நிகர் இருகழலோ?
அதிநிற மலர்புரை பதயுகமோ?
        அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 2

செவிநுகர் கனியருள் திறனேயோ?
        திருமறை நெறிபயில் உளமேயோ?
உவநிட முழுதுணர் உயர்வேயோ?
        உலகொரு குலமெனும் உணர்வேயோ?
புவிமுழு தளவிடு புலனேயோ?
        புகலருள் அறமுறை நெறியேயோ?
அவிநய முதல்வளர் கலையேயோ?
        அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 3

மணி – மணி எனஒலி ஒளிர்மொழியோ?
மனிதரை அளவிடு மதிவழியோ?
பணிமுதல் உயிரினம் கணிநெறியோ?
பவுதிக முதல்நிமிர் கலைநிறைவோ?
துணிபொருள் உயிர்நிலை சொலுமுறையோ?
துரிசறு நெறிபல தெரிதரலோ?
அணுவையும் அலகிடும் அறிவதுவோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 4

மறையுடன் கலைகளின் நிலையுறவோ?
மனுமுதல் அறமுணர் திறமதுவோ?
இறையதன் தனிநிலை உணர்தரவோ?
இசையொடு பரதமும் உரைவலமோ?
செறிவுடை நிலவியல் தெளிமதியோ?
செடிகொடி இயல்தெரி தெருளதுவோ?
அறிவினுள் அறிவினை அறிபுலமோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 5

உளவியல் நனியுணர் தனிமதியோ?
உயிரதன் உயிரினை உணர்திறமோ?
களவியல் அறம்புணர் கவினதுவோ?
கதிர்முதல் வெளியின கணிமுறையோ?
மளமள எனஉதிர் கவிவலமோ?
மரபது பிறழ்கிலை எனுமியல்போ?
அளவியல் கவிபல அருள்நிலையோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 6

இருமையும் பெறஅருள் கதைநிறைவோ?
எழில்ரகு பதிமுதல் கலனடைவோ?
பொருகள வருணனை புரிதிறமோ?
பொதுஎன உலகினை உரையறமோ?
வருபுனல் அதுகொடு மறைமுதலை
மனம்நிறை கொளஉரை பதிஉணர்வோ?
அருமையுள் அருமையை அறிபவனே!
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 7

உயர்வற உயர்கவி தருமெழிலோ?
உலகுல பொருளள விடுமதியோ?
உயிருடல் உறவுரை உரனதுவோ?
ஒழுகியல் நெறிபுகல் தகவதுவோ?
செயிரற அருள்நெறி தெளிதரவோ?
திகழ்மத சமரச தரிசனமோ?
அயர்வற அமுதுகு கவிவலவ!
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 8

குறுமுனி அருள்கலை செறிமனமோ?
குலவுபல் சுவடிகள் பயில்வளமோ?
மறுவறு நிலைமதி பெறுவளமோ?
வடகலை யொடுபல மொழியறிவோ?
உறுபகை வரையறை செயும்நலமோ?
உவமைகள் தருமிகு மனுபவமோ?
அறுவகை அரசியல் அறிபுலவ!
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 9

தினைஅள வறிவிலன் எனஅறிந்தும்,
சிறியவன் செயலிலும் எனஉணர்ந்தும்,
பனையினும் மிகஉயர் பருணித!நீ
பரிவது நிறைதரும் எளிமையினால்
எனையுநின் அடியவன் என உடையாய்,
எவையினும் உயர்தமிழ்ப் பெருமைகளே
நினைவினில் நிலைபெற உதவுகம்ப!
நினதிரு வடிமலர் சரணெனக்கே! 10

கம்பன் எம்மான்

"கம்பன் அடிப்பொடி"

முன்னை நூல்கள் கற்றுணர்ந்தான் மூவா முதலை முற்றறிந்தான்
கன்னித் தமிழும் ஆரியமும் காதல் கூரத் தோய்ந்தாய்ந்தான்
பின்னும் மொழிகள் சிற்சிலவும் பிறங்கும் கலைகள் பற்பலவும்
தன்னுள் தேக்கி ஒளிகொண்டான் தமிழ்த்தாய் நோற்ற தனிக்கம்பன்

எண்ணும் எழுத்தும் இலக்கமுடன் எழிலார் சிற்பம் கட்டடங்கள்
பண்ணும் பரத கலைமுதலாப் பண்டை வரலாற்று உண்மைகளும்
நண்ணும் இயற்கை யியலுடனே நவிலும் பூத வேதியியல்
கண்ணும் கருத்தும் கண்டுணரக் கம்பன் அவனே நல்ஆசான்

பாத்தி ரங்கள் படைப்பதிலும் படைத்த வற்றை இயக்கலிலும்
சாத்தி ரங்கள் விரிப்பதிலும் தருமம் நீதி உரைப்பதிலும்
தோத்தி ரங்கள் இசைப்பதிலும் தொன்மை மரபைக் காப்பதிலும்
மூத்த கவிஞர்ப் போற்றலிலும் முன்னே நிற்பான் கவிகம்பன்

பதியை உணர்த்திப் பசுவாம்நம் பாசம் அகல வழிகாட்டி
விதியை விளக்கிப் பின்னும்நாம் வினையை அறுக்கும்
நெறிபுகட்டி
மதியைத் தெளிவு பெறச்செய்து மன்னும் இன்பம் பொருள் அறமாம்
கதியைப் பற்றி வீடுபெறக் கம்பன் நல்ல துணை ஆவான்

எந்த மதத்தும் குறைகாணான் எல்லாம் இறைசேர் நெறிஎன்பான்
சொந்த மொழியைப் போற்றிடுவான் தூற்றான் மொழிகள்
வேறெவையும்
சிந்தை அன்பு செழித்திடுவான் செய்கை அறமாய் மலர்ந்திடுவான்
அந்தக் கவிஞன் நம்கம்பன் அவனே கவிச்சக் கரவர்த்தி

நல்ல பொருளைத் தான்அறிவான் நாடும் முறையை நன்கறிவான்
தொல்லை அறங்கள் நுனித்தறிவான் தூய அன்பைக்
கணித்தறிவான்
வெல்லத் தமிழன் வீறுஅறிவான் விளம்பும் அமைதிமிகஅறிவான்
எல்லை இல்லாப் புலமைநலம் இசைந்த கம்பன் எம்மானே

என்ற உண்மை தனைஅறிந்தே இராமகாதை புலப்படுத்தும்
ஒன்றே ஆன பரம்பொருளே உள்ளத்து இருத்தி எஞ்ஞான்றும்
நன்றே நினைந்து நன்றுரைத்து நன்றே புரிந்து நாளெல்லாம்
பொன்றல் இல்லாக் கம்பன்உரை புனித வழியே
மேற்கொள்வோம்

ஏதேனும் ஆகேனோ?

"கம்பன் அடிப்பொடி"

காப்பு

திடமுடைய கலைகளெனும் செழுநதிகள் புகமண்டும்
கடலெனவே திகழ்வானை, கம்பன்எனும் பெரியானை,
இடமுடைய உலகெல்லாம் ஏத்துபுகழ் உடையானை
உடல்படிய நிலம்பணிந்து உளம்படிய வாழ்த்துவெனே!

காப்பியத்தின் கட்டளையாய், கவித்துவத்தின் முத்திரையாய்,
மாப்பெரிய தத்துவங்கள் மனத்துணர்த்தும் திருவிளக்காய்,
கோக்கவிஞர் குலவேந்தாய்க் குலவுமொரு கம்பன்தன்
பாப்புனையும் கரந்தழுவும் பனையேடாய் ஆகேனோ? 1

வழியறியாக் கடையேற்கும் வழிகாட்டி வாழ்வளித்துப்
பழியறியா நெறிகூட்டிப் பைந்தமிழ்த்தாய் பதமலரில்
வழிதேறல் மாந்தவருள் மாகவிஞன் கம்பன்தன்
எழில்விரல்கள் பிடித்தெழுதும் எழுத்தாணி ஆகேனோ? 2

செம்பதுமத் திருவடியான் தேசுமிகு மலர்முகத்தான்
அம்பெரிய தடக்கையான் அகன்றதிரு மணிமார்பான்
வம்புசுவைத் தேனொழுகும் வாக்குடையான் கம்பனெனும்
எம்பெருமான் இருந்தருளும் எழிற்பீடம் ஆகேனோ? 3

வானகத்தில் கொலுவிருக்க, மண்ணகத்தில் ஆட்சிசெய,
ஞானநிலை பெற்றுய்ய, நான்சிறிதும் விரும்புகிலேன்;
ஆனபெரும் கவியுலகின் அற்புதனாம் கம்பனவன்
போனகத்தை மகிழ்ந்துண்ணும் பொன்வட்டில் ஆகேனோ? 4

மண்ணுலகில் வந்தகவி வாணர்களில் மற்றெவரும்
திண்ணமுற இவனைப்போல் திகழ்ஒருவர் இல்லை எனும்
விண்ணளவு புகழ்தழுவும் வித்தகனாம் கம்பனெனும்
புண்ணியன்தன் பால்பருகும் பொற்குவளை ஆகேனோ? 5

சந்ததமும் தமிழ்த்தாயின் தவமுணர்த்தும் தனிப்புதல்வன்
எந்தைபிரான், என்னாசான், என்தெய்வம், என்னுடையன்
சிந்தைசெவி தேன்பாய்ச்சும் செழுங்கவிஞன் கம்பனவன்
அந்தமிகு அரைதழுவும் ஆடையதாய் ஆகேனோ? 6

சித்தமெலாம் அன்பரும்பச் செய்கையெலாம் அறம்மலரச்
சத்தியமே மணம்பரப்பத் தமிழ்வளமே நெறிசிறக்க
உத்தமநற் காப்பியத்தை உவந்தளித்த கம்பன்தன்
உத்தரியம் ஆகுமொரு உயர்பேறன் ஆகேனோ? 7

எழுத்துலகில் இதற்குநிகர் இல்லைஎன அறிஞரெலாம்
வழுத்துபுகழ் இராமகதை மண்ணவர்க்குத் தானீய்ந்த
விழுத்தமிழின் சுவையோடு வீறுமுணர் என்னப்பன்
கழுத்திலொளிர் மணிமாலைக் கடைமணியாய் ஆகேனோ? 8

செய்களெலாம் பொன்விளையும் செழும்பொன்னி வளநாட்டில்
பொய், கயமை இன்மைஎலாம் போயகல அவதரித்து
மெய், வாய்மை உண்மையவை விளக்கியருள் கம்பனவன்
கையிலொரு குடையாகக் கடையன்யான் ஆகேனோ? 9

தொல்லையறம் கணித்தளந்தான்; சொல்லின்வளம்
எடுத்தளந்தான்;
எல்லையில்நூல் முகந்தளந்தான்; எம்மருங்கும் புகழ்நிறைந்தான்;
புல்லறிவிற் கடையேற்கும் புகலளித்த கம்பனவன்
மெல்லணைவே துயில்கொள்ளும் மெத்தைஎன ஆகேனோ? 10

வேதமுடன் உபநிடதம், விளங்குபெரும் ஆகமங்கள்,
தீதிலற நூல்களுடன் சிறந்தபல காப்பியங்கள்,
காதலுடன் கற்றவற்றின் கரைகண்ட கம்பனவன்
ஆதரித்துப் பயன்படுத்தும் அடைப்பையாய் ஆகேனோ? 11

கோக்கவிஞர் எல்லாரும் கும்பிட்டு நிற்கஉயர்
மாக்கவிதை வார்த்துநமை மகிழ்கடலில் ஆழ்த்துகிற
வாக்குமனம் செய்கைஎலாம் மாண்புநிறை கம்பன்கைப்
பாக்குவெட்டி எனவிளங்கும் பாக்கியனாய் ஆகேனோ? 12

ஆன்பாலும் வரைத்தேனும் அடிக்கரும்பும் முக்கனியும்
வேம்பாக ஆகிடவே வியன்கவிதை வடித்தளிக்கும்
மேம்பாடு மிகவுடைய மெய்ப்புலவன் கம்பனவன்
தான்போடும் வெற்றிலையாம் தவமுடையேன் ஆகேனோ? 13

எட்டுவகை மெய்ப்பாடும் எண்ணாறும் உளப்பாடும்
சொட்டுபெருங் காப்பியத்தைச் சுவைத்தமிழில் உபகரித்த
பட்டறிவுப் பெட்டகமாம் பாரளந்த கம்பனவன்
சுட்டுவிரல் தொட்டருளும் சுண்ணாம்பாய் ஆகேனோ? 14

உள்ளமெலாம் கவிசுரர ஓதும்நா தேனூற
அள்ளஅள்ளக் குறையாத அருஞ்சுவையார் கவிகள்நிறை
பள்ளமெனத் திகழுமொரு பருணிதனாம் கம்பனெனும்
வள்ளலவன் ஏறுபெட்டி வண்டிஎன ஆகேனோ? 15

பண்டிதராய், பாமரராய், பார்த்திபராய், மற்றவராய்
எண்டிசையும் வாழ்வார்கள் எல்லோரும் பாராட்டிக்
கொண்டாடும் கவிகுலத்துக் கோவேந்தாம் கம்பனவன்
வண்டிதனை இழுக்குமொரு மாடாக ஆகேனோ? 16

மால்படிந்த அடிநாயேன் மனத்துயரம் தீர்த்தவனாம்
நூல்தேர்வார் எல்லார்க்கும் நுவல்அரிய முழக்கோலாய்
நால்வகைசொல் நூற்பயனை நனியளக்கும் கம்பனவன்
கால்தேய்க்கும் பேறுபெறும் கருங்கல்லாய் ஆகேனோ? 17

ஒப்பற்ற பாத்திரங்கள், ஒவ்வொன்றும் நனிசிறக்க
எப்போதும் வாடாத எண்ணற்ற நிகழ்ச்சிகளைத்
தப்பேதும் இல்லாமல் தந்தகவி கம்பன்தன்
மெய்ப்போதாம் பதயுகத்தின் மிதியடியாய் ஆகேனோ? 18

வழுவற்ற அன்பறத்தின் வழிமுற்றும் காட்டிநமைப்
பழுதற்ற நெறிசெலுத்தப் பாருலகில் அவதரித்த
முழுதுற்ற பேரறிவின் மொய்ம்புருவாம் கம்பனவன்
செழுமுற்றம் பெருக்குமொரு திருவலகாய் ஆகேனோ? 19

முந்தையர்கள் அருள்நெறியை முழுதுமனு சரித்துவரும்
பிந்தையர்கள் கடைப்பிடிக்கப் பெருநெறியை நன்குணர்த்தும்
சந்தம்நிறை காப்பியத்தைத் தந்தருளும் கம்பனெனும்
எந்தைபிரான் சன்னிதியில் ஏதேனும் ஆகேனோ? 20

கம்பன் யார்?

“கம்பன் அடிப்பொடி”

உள்ளத்தின் ஒளியைக் கூட்டி, உணர்வினில் தெளிவை ஊட்டி,
கள்ளத்தை இல்லாது ஓட்டி, கடமையோ டுரிமை காட்டி,
பள்ளத்தில் கிடப்பார் எல்லாம் பதம்பெற அறத்தோடு அன்பு
வெள்ளத்தைப் பாய்ச்சி நிற்கும் விபுதனே கம்பன் என்பான்! 1

பாரினில் உருவாய், அருவாய், பரந்துபல் நிலையாய் உள்ள
நீரியல் கூறு வான்போல் நிறைபரம் பொருளின் தன்மை
சீரிய முறையில் நந்தம் சிந்தையில் பதியச் செப்பும்
சூரியஞானி யன்றோ கோக்கவி கம்பன் என்பான்? 2

நுண்ணணு நூற்றோர் கூற்றின் நுவல்பெயர் 'கோண்' ஆம் என்றும்,
எண்இரு பத்தி ரண்டே இயம்பு 'முக் கோடி' என்றும்,
நண்ணிடு கணித நுட்பம் நயம்பட உணர்த்தி நிற்கும்
புண்ணியப் புலவ னன்றோ? பொருவிலாக் கம்பன் என்பான்? 3

தாவர வகையை முற்றும் தரம்பிரித் துணர்த்தும் போதும்,
மேவிய உயிரி னத்தின் விரிவெலாம் காட்டும் போதும்,
பூவியல் பொருளை எல்லாம் புரியுமா கூறும் போதும்,
'ஆ!' வென வியக்க வைப்பான் அருங்கவிக் கம்பன் என்பான்! 4

வேதங்கள் ஆக மங்கள் விளங்குப நிடதம் கீதை
ஓதுபல் சாத்தி ரங்கள் உயர்ந்தநற் காப்பி யங்கள்
யாதுள துலகில் அந்நாள் யாவையும் கற்றுத் தேர்ந்த
தீதறு கலைஞன் அன்றோ செம்புலக் கம்பன் என்பான்? 5

அகத்தியம் முதல வான அருந்தமிழ் நூல்க ளோடு
தொகைப்படு பாடல் பாட்டும் துரிசற ஆய்ந்து மற்றும்
மிகப்பெருங் கலைக ளாக விளங்கிசை, பரதம், சிற்பம்,
வகைபல தெளிந்தோன் அன்றோ மாக்கவி கம்பன் என்பான்? 6

வள்ளுவன் அறமாம் நூலில் வகைதெரிந் தெடுத்துக் கோத்த
தெள்ளிய தமிழ்ப்பண் பாடாம் செறிநிற மணிகள் காந்தும்
ஒள்ளிய ஆரம் சூட்டி உயர்பதம் தமிழ்க்குத் தந்த
வள்ளலாய் வாழ்வோன் அன்றோ மதிக்கவி கம்பன் என்பான்?
7

சாந்தொடு தேனும் யாழும் தண்கதிர் மலரும் கூட்டி
ஏய்ந்தஜம் பொறியும் மாந்தி இன்பமே கொண்டு துள்ளத்
தீந்தமிழ்த் தாய்க்கு வாய்த்த திருமுடிக் காப்பி யத்தை
ஈந்தருட் கொடைஞன் அன்றோ எம்பிரான் கம்பன் என்பான்?
8

பாவிகம் முற்றும் தேர்ந்த பருணிதக் கலைஞர் எல்லாம்
காவிய அமைப்புக் கேற்ற கட்டளை இஃதே என்ன
மேவிய இராம காதை வியனுல கேத்தத் தந்த
ஓவியப் புலவன் அன்றோ ஓங்கறக் கம்பன் என்பான்? 9

இத்தகை ஆற்றல் யாவும் எவர்தர வந்த? அந்த,
மொய்த்தநற் புலமை வாய்ந்த முன்னையோர் தம்மை எல்லாம்
சித்தமார் நன்றி யோடு தினந்தினம் போற்று கின்ற
உத்தமப் புலவன் அன்றோ உலகமெலாம் அளந்த கம்பன்? 10

கம்பன் கல்வியில் பெரியன்?

"கம்பன் அடிப்பொடி"

கம்பனின் காப்பியத்தை, கம்ப சித்திரம், கம்ப சூத்திரம் என்றெல்லாம் பலவாறாகப் பண்டு தொட்டே பாராட்டி வருவதற்கு அடிப்படைக் காரணம் அவனுடைய அறிவாற்றலே; அதாவது கல்வி வளமே!

1. **"சொல்லின் செல்வன்"**
2. **"கேள்வி நூல் மறை வலான்"**
3. **"ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை"**
4. **"இங்கு, இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும், வேதக் கடலுமே உலகத்து எங்கும் இல்லாத"**
5. **"செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்"**

என்றெல்லாம் அனுமனைக் கணித்தறிந்து காட்டுகிறானே, அந்த அருமைப்பாடுகள் அனைத்தும் அப்படியே கம்பனுக்குப் பொருந்தும். ஆம், கம்பன் கல்லாத, கற்றறியாத, விஞ்ஞான மெய்ஞ்ஞானக் கலை எதுவுமே இல்லை என்று அவன் காப்பியத்தைத் துணை கொண்டே நிரூபித்துவிடலாம். அதனால் தான், தான் சொல்ல வேண்டியவற்றை எல்லாம் அனுமன் வாய்மொழியாகவே சொல்லித் தீர்க்கிறான் கம்பன். கம்பனுடைய அறிவாற்றல் பளிச்சிடுகிற எண்ணற்றவற்றுள் ஒரு சிலவற்றைப் பார்க்கலாம் இப்பொழுது :

விசுவாமித்திரன் பின்னே, தம்பி இலக்குவனுடன் இராமன், மிதிலை நகரிலே போய்க்கொண்டிருக்கிறான். கன்னிமாடத்திலே சீதை நிற்கிறாள். இருவர் கண்களும் எதிர்படுகின்றன. ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தன. காதல் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது. மிதிலை மன்னனால் உபசரிக்கப்பட்டு ஒரு பெரிய விருந்தினர் இல்லத்திலே மூவரும் தங்குகிறார்கள். முனிவனும் இலக்குவனும் ஒருபுறத்தில் உறங்குகின்றனர்.

இராமனோ தனியாக ஒரு திறந்த மாடத்தில் படுக்கையை விரித்தான். உறக்கம் வரவில்லை. ஆனாலும் படுத்துக்கொண்டு தான் கிடக்கிறான். நம் கண்ணுக்கு இராமன் தனியனாய்க் கிடப்பதாகவே தோணுகிறது. ஆனால் மனத்துவ அறிவாற்றல் படைத்த கம்பனோ இராமனுக்குத் துணை ஐந்து என்கிறான். பாட்டையே பார்க்கலாம்.

> **"முனியும், தம்பியும் போய், முறையால் தமக்கு**
> **இனிய பள்ளிகள் எய்திய பின், இருட்**
> **கனியும் போல்பவன், கங்குலும் திங்களும்**
> **தனியும், தானும், அத் தையலும், ஆயினான்."**

கங்குல், திங்கள், தனி, தான், அத் தையல் ஆகியவைதான் அந்த ஐந்து! கங்குல் என்றால் இரவு; திங்கள் என்றால் முழுமதி; தனி என்றால் துணையின்மை; அத்தையல் என்றால், கன்னி மாடத்திலே கண்ட பெண் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால் 'தான்' என்ற ஒன்றையுமல்லவா சொல்லுகிறான்? தான் என்றால் என்ன? தன்னை மறவாத் தன்மை (செல்ப் கான்ஷியஸ்நெஸ்) என்கிறார்களே அது தான், 'தான்' என்பது என்று விளக்கம் தருகிறான். அந்தத் 'தான்' இருக்கிறதே அதுவே ஒரு நோய் என்பர் மனத்துவ அறிஞர்கள். தன்னை மறந்து உறங்க வேண்டிய நேரத்திலும் மனிதனை உறங்கவிடாமல் தன்னைப் பற்றியே எண்ணி எண்ணி ஏங்கி வெதும்பிக் கொண்டிருக்கச் செய்கிறது விரகதாபம். அது இயல்பு என்றாலும் அதை நமக்கு எடுத்துக்காட்ட கம்பனின் அறிவாற்றல் அன்றோ தேவைப்படுகிறது!

இனி, 'பூத - பௌதிகத் துறையிலே கம்பனின் அறிவாற்றல் எப்படி வெளிப்படுகிறது என்பதைப் பார்ப்போம். இந்த உலகில் காணப்படும் யாவும் ஒரே மூலகத்தையே அடிப்படையாகக் கொண்டவை என்பதையும், ஆனால், அவற்றின் எண்ணளவையும், செறிவளவையும் பொருத்தே பொருள்களின் தன்மையும், குணமும், தரமும், வகையும் வேறுபடுகின்றன என்பதையும் நவீன விஞ்ஞான முடிவுகளால் இன்று நாம்

உணருகிறோம். இந்த உண்மையைக் கம்பன் நன்குணர்ந்துள்ளான். அவனது அந்த அறிவாற்றல்

"பூதம் ஐந்தும், விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்" என்று உரைப்பதிலிருந்து நன்கு புலனாகிறது.

"விலங்குதல்" என்றால், குறுக்கும் நெடுக்கும், கீழும் மேலுமாய், குழம்பிக் கலத்தல்.

"விகாரப்பாடு" என்றால், கலப்பினால் ஏற்படும் தோன்றல், திரிதல், கெடுதல்.

"வேறுபாடு" என்றால் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசப்படுதல். எண்ணிக்கை, செறிவு, கலக்கும் முறை ஆகியவற்றின் காரணமாக ஒரே மூலகம் எண்ணற்ற வகையாக மாறுகின்ற மாயத்தை, அற்புதத்தை கம்பனின் அறிவாற்றல் இப்படி ஒரு சூத்திரம் போலச் சுட்டி நிற்கிறது.

அடுத்து, இன்று பிரமாதமாக அடிபடும் அணுவைப் பற்றிய கம்பனின் அறிவாற்றல் எப்படியிருக்கிறது என்பதையும் பார்க்கலாம். மிகச் சமீப காலம் வரை அணு என்றால், அது தான் சின்னஞ்சிறிய பொருள், அது துண்டிக்கப்பட முடியாத கடைசித் தனிமம் என்று தான் விஞ்ஞான உலகம் நம்பிக்கொண்டிருந்தது. சமீப கால விஞ்ஞான சோதனையானது அணு என்பது கட்டக் கடைசிப் பொருள் அல்ல; அதையும் உடைக்கலாம் என்று நிரூபித்தது. இந்த நிலைமை இந்தத் தலைமுறையில், நமக்குத் தெரிய, ஏற்பட்டதுதான். ஆனால், ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த கம்பனின் அணு அறிவை நாம் பார்க்கும்போது மூக்கின்மேல் விரலை வைத்து, ஒரே வியப்புக் கடலுள் மூழ்கி விடுகிறோம்.

சொல்லடா, அரி எங்கே என்று உறுமுகிற இரணியனுக்கு
சாணினும் உளன்; ஓர் தன்மை அறுவினைச் சத கூறுஇட்ட
கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்."
என்று பிரகலாதன் விடை தருகிறான்.

ஒப்பற்ற அற்பமான, ஒரு அணு இருக்கிறதே, அதை, சம அளவுள்ள நூறு பாகமாகக் கூறு செய்யலாம். அதாவது ஒரு ரூபாயை நூறு பைசாக்களாக மாற்றுதலைப் போல. அப்படிக் கூறு செய்தவை ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரே அளவாகும். அந்த நூற்றில் ஒரு பங்குக்குக் "கோண்" என்று பெயர். அந்தக் கணிதப் புள்ளியை நம் போன்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் பெருங்கருணையால், கம்பன்,

"ஓர் தன்மை அணுவினைச் சத கூறு இட்ட கோண்"

என்று, பொருளோடு சொல்லைக் கூறி விளங்கவைக்கிறான். இல்லாவிட்டால் 'கோண்' என்ற சொல்லை நாம் அறியவோ, அன்றிப் புரிந்து கொள்ளவோ முடியுமா? நம் நாட்டில் அணு அறிவும், அணு ஆராய்ச்சியும் இருந்திருக்கத் தான் வேண்டும் என்பதை, செய்தி அளவாகவேனும் இன்று நாம் ஊகிக்க முடிகிறது என்றால் அதற்குக் காரணம் கம்பனின் அறிவாற்றல்தான், இல்லையா?

இனி நிலவியல், வானியல் பற்றிய அறிவாற்றல் கம்பனிடம் மிளிர்வதைப் பார்த்துவிட்டு, கட்டுரையை முடிப்போம். நாள், மீன், கோள், ஞாயிறு, திங்கள், வால்மீன் முதலியவற்றைப் பற்றியெல்லாம் கம்பன் நன்கறிந்திருக்கிறான். சூரியன் எப்பொழுதும் பூமத்திய ரேகையில் செல்வதில்லை. ஆறு மாதம் தெற்கிலும், ஆறு மாதம் வடக்கிலும் சார்ந்தே சஞ்சரிப்பான். தெற்கைச் சார்ந்து சஞ்சரிக்கும் ஆடி முதல் மார்கழி வரையுள்ள அரை ஆண்டிற்கு தெட்சணாயனம் என்றும், வடக்கைச் சார்ந்து சஞ்சரிக்கும் தை முதல் ஆனி வரையுள்ள அரை ஆண்டிற்கு உத்தராயணம் என்றும் அக்காரணம் பற்றியே பெயர் ஏற்படலாயிற்று. இவற்றை எல்லாம் கம்பன் தேர்ந்து தெளிந்தவன். இந்த அறிவாற்றல் கம்பனின் கற்பனை வளம் சிறக்கக் கைகொடுத்துதவுகிறது.

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் இருக்கிறதே, அது பூமத்திய ரேகையை ஒட்டியிருக்கிறது. ஆகவே அதன் நேர் உச்சியில் சூரியன் சஞ்சரிப்பதில்லை. அது முற்றிலும் நிலவியல்,

வானியல் நியதிக்கு உட்பட்டதுதான். ஆனால், கம்பனோ இராவணனின் பேராற்றலையும், சர்வாதிகாரத்தையும் புலப்படுத்த, இந்த இயற்கை நியதியை பயன்படுத்திக்கொள்ளுகிறான். கம்பனின் அறிவாற்றல் அப்படி அழகு செய்கிறது காப்பியத்தை, இனி அவன் கற்பனையைக் காணலாம்.

இராமனின் சொல் கடவாத தூதனாகிய அங்கதன் இலங்கையை நோக்கிப் புறப்படுகிறான். வீரன் வெஞ்சிலையில் கோத்த அம்பு என விசையில் போன அவன் நேரே சாக்ஷாத் ராவணேச்வரன் திருமுன்னரே வந்து குதிக்கிறான். எத்துணையோ கட்டுக்காவல்; கொத்தள வாயில் திறக்கப்படவில்லை; கோட்டைச்சுவரோ வான முகட்டைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இராவணனுக்கு அஞ்சி, அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் சூரியனும் அந்நகரத்தை நேர் உச்சியில் தாண்டிச் செல்ல மாட்டானாம்! தப்பித் தவறி மறந்தேயும் அவன் நேர் உச்சியில் சஞ்சரித்து விடப்படாது என்பதற்காகத்தான் மதில் அத்துணை உயர்ந்ததாக அமைக்கப்பட்டதாம். எனவே, சூரியன் எப்பொழுதும் இலங்காபுரியின் உச்சியில் செல்லாமல் தெற்கிலும் வடக்கிலும் விலகிச் செல்கிறானாம். அத்தகைய மதிலையும் நேராகக் கடந்து சென்றானாம் அங்கதன், அதைக் கம்பன்,

"....... அயோத்தி வந்தான் சொல் கடவாத தூதன்
வெயில் கடந்திலாத, காவல், மேருவின் மேலும் நீண்ட,
எயில் கடந்து, இலங்கை எய்தி, அரக்கனது இருக்கை புக்கான்"

என்று கூறுகிறான். கம்பனின் அறிவாற்றல் இப்படியே இன்னும் எத்தனையோ துறைகளில் வெளிப்படுகிறது. அவற்றையெல்லாம் ஆர அமர இருந்து படித்துப் பார்த்தால் தமிழ்த்தாயின் தவப்புதல்வன், தன்னே ரில்லான், கவிச்சக்கரவர்த்தி கம்பனின் அருமையையும் பெருமையையும், நன்கறிவதுடன் நாமும் வளம் பெறுவோம். அத்தகைய விழுமிய அறிவாற்றல் மிக்கவன் கம்பன் இல்லாவிட்டால் "கல்வியில் பெரியன் கம்பன்'' என்ற நிறைமொழி தமிழகத்தில் வேரூன்றியிருக்குமா, என்ன?

உலகில் ஒரு கவி

"கம்பன் அடிப்பொடி"

இலக்கியச் சோலையைப் பெற்றிருப்பதில் தமிழ் மொழி எம்மொழிக்கும் குறைந்ததில்லை. இலக்கியத்தை ஆன்ம ஈடுபாட்டுடன் ரசித்து, ருசித்து துய்த்து மகிழ்வதிலும் தமிழர்கள் ஒப்பற்றவர்கள். தாலாட்டு முதல் ஒப்பாரி வரை அனைத்தையும் கவிதையாக - இலக்கியமாக ஆக்கிக் கொண்டவர்கள் அல்லவோ தமிழர்கள்!

தமிழ் இலக்கியச் சோலையில் அறம் அரும்பும்; பொருள் மலரும்; இன்பம் மணக்கும். நீதி, தத்துவம், சமயம், மருத்துவம், சோதிடம், கட்டிடம், சிற்பம் போன்ற எண்ணற்ற இலக்கியம் செடி கொடி மரங்களாகத் திகழும். இலக்கியச் சோலையின் வேலியான இலக்கணம்கூட முள்ளுக்கம்பியாயில்லாமல் கவிதையாக - கம்பன் கூறுமாப்போலே - மாதவி மலர்க்கொடி வேலியாகவே திகழும். அச்சோலையிலுள்ளே நுழைந்து விட்டால் பலப் பல கதைகள், வரலாற்று இலக்கியங்கள், சிறுகாப்பியங்கள், பெருங்காப்பியங்கள் என்றெல்லாம் எத்தனை எத்தனையோ தாவரங்கள்.

குளிர் நிழல் தருவன; நறுமணம் பரப்புவன; அணிநிறம் நிரப்புவன; செவிநுகர் கனிகள் சொரிவன என்று இப்படி இருக்கும் அந்தச் சாவா மூவா இலக்கியச்சோலை. ஆம் காலமும் அழிக்க மாட்டாக் கனகச் கற்பகச் சோலை அது! இத்தகைய பெருமை மிக்க இலக்கியச் சோலையின் மத்தியில் முள்ளைப் பெருமரங்கட்கும், பிள்ளை வளர் செடிகட்கும் நடுவே அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து போகக் கனிகளை உதிர்த்துக் கொண்டேயிருக்கும் பரந்து வளர்ந்து சிறந்து நிற்கும் ஒரு மரந்தான் இராமாவதாரம். அப்பயன் மரத்தே இலக்கியச் சோலையின் நாப்பண் நட்டுப் பயிராக்கி வளர்த்து நம்மிடம் விட்டுச் சென்றிருக்கும் பாட்டாளி ஒரு பெருங்கருணைத் தடங்கடல். அவனைத்தான் ஆயிரம் ஆண்டுகளாகக்

"கவிக்சக்கரவர்த்தி" என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டி வருகிறது.

அவன் அருளிய இராமாவதாரத்தைக் "கம்பராமாயணம்" என்றே பெரும்பாலோர் கூறுவர். பெருங்காப்பியத்திற்குக் கம்பன் வகுத்த வழியே இன்றுவரைக் கட்டளையாக அமைந்து நிற்கிறது. 'தண்டியலங்காரம்' போன்ற இலக்கண நூல்களே சான்று.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே இராமகாதை தமிழ் மக்களின் மனத்தைக் கவர்ந்து தமிழகத்தில் நிலை பெற்று விட்டது. கம்பனுக்கு முன்னே குறைந்தது மூன்று இராமாயணங்களாவது தமிழ் மொழியில் இருந்திருக்க வேண்டும். அவற்றில் ஒருசில செய்யுள்களே, தொகைநூல்களாலும், உரையாசிரியர்களின், மேற்கோள்களாலும் இன்று நமக்குக் கிடைக்கின்றன. தொல்காப்பிய உரையாசிரியர்கள்,யாப்பருங்கல உரையாசிரியர், வீர சோழிய உரையாசிரியர் முதலியோர் தமது உரைகளில் ஆசிரியப்பா வெண்பாக்களில் அமைந்த இராமகாதைச் செய்யுள்களை எடுத்துக்காட்டுவர். ஆசிரிய மாலையிலும் சில பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. "இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்" என்று நச்சினார்க்கினியரும், தொன்மை என்னும் வனப்பிற்கு "பாரதம், இராமாயணம் முதலானவும் கொள்க" என்று யாப்பருங்கல உரையாசிரியரும் கூறியுள்ளனர்; இவை கம்பனுக்கு முந்திய இராமாயணத்தையே குறிப்பனவாகும்.

அன்றியும் அகநானூற்றில்

> **"வெல்போர் இராமன் அருமறைக்கவித்த**
> **பல்வீழ் ஆலம் போல"**

என்றும்,

புறநானூற்றில்

> "கடுந்தெறல் இராமனுடன்
> புணர் சீதையை
> வலித்தகை அரக்கன்
> வெளவிய ஞான்றை
> நிலம்சேர் மதம் அணி
> கண்ட குரங்கின்
> செம்முகப் பெருங்கிளை
> இழைப் பொலிந்தாங்கு"

என்றும் உவமையாகக் கூறலின் இராமகாதை நாட்டில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குச் சான்றாகும்.

மேலும் சிலப்பதிகாரத்தில் இராமகதை பல இடங்களில் உணர்த்தப்படுகிறது. அக்காலத்திலும், ஆழ்வார்கள் காலத்திலும் இராமன் திருமாலவதாரமாகக் கருதப்பட்டு விட்டமை தெளிவாகப் புலப்படுகிறது.

> தாதை ஏவலின் மாதுடன் போகி,
> காதலி நீங்கக் கடும் துயர் உழந்தோன்
> வேத முதல்வற் பயந்தோன் என்பது
> நீ அறிந்திலையோ? [அஃது]
> நெடுமொழியன்றோ!

எனவும்

> மூவுலகும் ஈரடியால்
> முறைநிரம்பா வகை முடியத்
> 'தாவிய சேவடி சேப்ப,
> தம்பியொடும் கான் போந்து
> 'சோ' அரணும் போர்மடியத்
> தொல் இலங்கை கட்டழித்த
> சேவகன் சீர் கேளாத
> செவி என்ன செவியே!
> திருமால் சீர்கேளாத
> செவி என்ன செவியே!

எனவும் இளங்கோ கூறுவதால் இராமன் திருமால் அவதாரமென்பதும், இராமகாதை நீண்ட காலமாகவே தமிழகத்தில் நின்று நிலவுவது என்பதும் தெளிவாகப் புலப்படும்.

சங்க காலத்திற்குப்பின்னே, வள்ளுவனுக்குப் பிறகு இளங்கோ காலத்திற்குப் பின்னர், ஆழ்வார்கட்கும் பிற்பட்டுத் தோன்றியவன் கம்பன். இவன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி.

கி.பி. 9-ம் நூற்றாண்டில் அதாவது 871 முதல் 907 வரை சோழ மண்டலத்தை ஆண்ட கோதண்டராமனான ஆதித்தன் கம்பனிடம் பெருமதிப்பும், அருநட்பும் கொண்டவன். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் கம்பனைக் கண்மணியாய்க் கருதிப் பேணிக் காத்தவர். இவை எல்லாம் நூலுட் காணப்பெறும் குறிப்புகளால் புலப்படுகின்றன.

கம்பன் தனது இராமாவதாரத்தை கி.பி. 886, பெப்ரூவரி 23-ஆந் தெய்திக்குச் சரியான விசுவாவசு - பங்குனி 4-ஆந் தெய்தி புதன்கிழமை அஸ்த நட்சத்திரத்தில் வெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றினான்.

இளங்கோ சேர - சோழ - பாண்டிய மண்டலங்கள் மூன்றையும் தமிழ் நாடென்னும் ஒரு நாடாக்கும் கதையை ஏற்று, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தை அருளினார்.

கம்பன் அகில இந்தியாவையும் ஈழம் உள்பட ஒரு நாடாக-பாரத-தேசமாக - ஆக்கும் கதையை ஏற்று, அற்புதக் காப்பியத்தை வடித்தருளினான்.

வள்ளுவன் அறமே அவன் மனத்தைப் பெரிதும் ஈர்த்து நின்றது. மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதில் வள்ளுவமே சிறந்தது என நம்பியவன் கம்பன். வள்ளுவன் அறத்தை மூர்த்திகளாக்கி அவன் எடுத்த மணிக்கோயிலே இராமாவதாரம் எனலாம்.

இந்த மெய்ம்மையை,

வையம் என்னை இகழவும்,
மாசு எனக்கு
எய்தவும், இது இயம்புவது
யாது? எனின்,
பொய் இல் கேள்விப்
புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி
மாட்சி தெரிக்கவே!

"சாதாரண மக்கள் என்னைப் பழிக்கவும், என்புலமைக்கு இழுக்கு ஏற்படவும் இக்காப்பியத்தை நான் ஆக்கக் காரணம் என்ன என்றால், சிறந்த கேள்வி ஞானம் உள்ள அறிஞர்களெல்லாம் பாராட்டிப் பேசும் தெய்வப்புலவன் - அதாவது - திருவள்ளுவன் மாண்பினை உலகிற்கு உணர்த்தத்தான்" என்று, தெளிவாக வெளிப்படுத்துகிறான்.

இராமன் அறத்தின் மூர்த்தியாகவும், இராவணன் பிறன் மனை கவர்ந்த பாவியாகவும் விளங்குகின்றனர். இராமன் படைபலம், கருவிகள், அரண் முதலிய வாய்ப்புக்கள் உடையவனல்லன். இராவணனோ முக்கோடி வாழ்நாள், முயன்று பெற்ற பெரு வரங்கள்; ஒப்பற்ற அரண்; அளவிலாப் படைபலம், பேரறிவு, பெருஞ்செல்வம், உடல்வளம், அறிவுக்கூர்மை எல்லாம் நிரம்பியவன். பிரமனுக்குக் கொள்ளுப்பேரன்; வேதம் வல்லவன்; நிரம்பிய தெய்வ பக்தி உடையவன். சுருக்கமாகச் சொன்னால் சுவைப் பால் நிரம்பிய பொற்குடம்! எல்லாம் இருந்தும் அறம் மட்டுமில்லை. பிறன்மனை நயந்த பேதமை என்னும் ஒரு சொட்டு விஷம் அத்தனை பாலையும் அழித்துத் தொலைத்து விட்டது!

"அறம் வெல்லும் - பாபம் தோற்கும்" என்ற உண்மையை உணர்த்த இராமகாதை நல்ல சிறந்த - ஒரு கட்டுக்கோப்பு என்று கருதியே கம்பன் வான்மீகி வழங்கிய, தமிழகத்தில் காலூன்றி விட்ட, கதையைத் தன் காப்பியத்திற்கு மூலமாக, வித்தாக எடுத்துக் கொண்டிருக்கிறான்.

அன்றியும் தமிழகத்தில் பிறன் மனைநயத்தலே பெரும் பாபமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. எனவே தான் உச்சபட்சத் தண்டனையான கழுவேற்றல் இக்குற்றவாளிகட்கு அளிக்கப்பட்டும் வந்திருக்கிறது.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் கம்பன் அருளிய காப்பியத்தின் அருமையும், பெருமையும், பயனும் நன்கு புலப்படும்.

எனவே, கம்பன் காப்பியத்தை மட்டும் அல்ல, இராமகாதையையே மாநில - இனக்கண்கொண்டு பார்க்கலாகாது. இந்த நெறி எல்லாக்காப்பியங்களுக்குமே பொருந்தும்.

இராமன் அறப்பாத்திரம்; இராவணன் மறப்பாத்திரம். இராமன் அறத்தைச் சார்ந்திருந்தான். இராவணன் ஆணவச் செருக்கால் அறத்தை மறந்திருந்தான்; அறம் வென்றது; பாபம் எத்துணை ஆற்றலோடு கூடியிருந்தாலும் இறுதியில் தோற்றது. இது தான் கதைக் கூறு.

அதற்கெல்லாம் மேலாக, காப்பியக்கட்டுக்கோப்பு, கதை ஓட்டம், பாத்திர இயக்கம், கவிதைச்சுவை, பொருளமைதி, ஓசை இன்பமாகிய இழுமை ஆகியவை ரசனை உள்ளத்தை மகிழ்விக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அன்புள்ளம் அறத்தாற்றில் செல்ல அறிவூட்டும் ஓர் இலக்கியமாத் திகழ்கிறது.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கிச் செம்மையாக வளர்ந்து வரும் அறநெறியுணர்வின் - தமிழ் நாகரிகத்தின் - மனிதப் பண்பாட்டின் சிறந்த ஓவியமாகவே இக் காப்பியத்தைக் கொள்ள வேண்டும்.

கதை எங்குத் தோன்றியது? யார் தந்தது? எம்மொழியில் மலர்ந்தது என்றெல்லாம் பார்த்தால் இலக்கிய நோக்கிற்கோ, அன்றி அற உணர்வுக்கோ ஒவ்வாதது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பாட்டுத் தத்துவத்திற்கும் முரணானது. நல்ல சிற்பி ஒருவன் சிறந்த மூர்த்தியை உருவாக்குவதற்குக் கல்லையோ

செம்பையோ தேர்ந்தெடுக்கும் போது அது இத்தாலிக் கல் என்றோ, தூரக்கிழக்கு நாட்டில் கிடைத்த செம்பென்றோ, ஒதுக்க மாட்டான். தான் அடித்து அல்லது வடித்து உருவாக்குவதற்கு ஏற்றதா? காலகாலத்திற்கும் தாக்குப் பிடித்து நிற்குமா? என்று தான் கணித்துப் பார்ப்பான்.

அப்படித்தான் சிறந்த கவிஞனும் கதைக் கரு எங்குத் தோன்றியது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் தன்படைப்பிற்கு ஏற்றதா? காலவெள்ளத்திற்கு ஈடு கொடுத்து நிற்குமா? தன் நாட்டு மக்கள் நல்வாழ்வுக்கு உதவுமா? என்று தான் பார்த்துத் தேர்ந்து கொள்வான்.

ஆதிகவி என்று அகிலமெலாம் பாராட்டும் வான்மீகி படைத்தளித்த காப்பியக் கதையை முன்னைத் தமிழ்ப்புலவர்களைப் போலவே கம்பனும் போற்றி மகிழ்ந்தவன். அப்பாத்திரங்களை மனமார நேசித்தவன். தன் திறமையைக் கவிதா சன்னதத்தை முழுதும் காட்டத் தக்கதொரு பெருங்கதை என மனங் கொண்டான். காலம், இடம், மக்கள், பண்பாடு, மரபுகளுக்கேற்பக் கதையை அமைத்துக் கொண்டான். சில நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் நீக்கினான்; சில நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் சேர்த்தான். வேண்டிய மாற்றங்களை மேற்கொண்டான்.

தான் பயின்ற பல கலையறிவும், வேத உபநிடதக் கருத்துக்களும், அகத்தியம் முதலான இலக்கணங்களும், சங்க காலம் தொடங்கி மலர்ந்துள்ள தமிழ் இலக்கியங்களும் கை கொடுத்துதவத் தமிழ்த் தாய்க்கு மணி முடி போன்ற ஒப்பற்ற காப்பியத்தை அருளிச் செய்துள்ளான்.

"கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லாத உலகத்து எங்கும்" என்று பாராட்டத்தக்க பேராற்றலும், பேரறிவும், பெரு நம்பிக்கையும் உடையவனாகத் திகழும் கவிச்சக்கரவர்த்தி 'செவிக்குத் தேன்' என, இராகவன் புகழினைத் திருத்திய கவிக்கு நாயகனாகவும் விளங்குகிறான்.

இவன் படைத்த அற்புதக் காப்பியம் மேலே நாட்டுத் திறனாய்வுக் கருவியால் அளக்கும் போதும் எந்நாட்டுக் காப்பியத்திற்கும் ஈடுகொடுத்து நிற்கும் அருமையை எண்ணித் தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது.

இனி கம்பன் சமைத்த மாமணிக்கோயிலான இராமாவதாரமென்னும் மகோன்னதக் காப்பியத்தின் உள்ளே சென்று பல்வேறு அழகுகளையும் கண்குளிர மனம் களிப்பக் காண்போம்.

கம்பன் ஒரு நல்ல கவிஞன்; மகாகவி; கவிச்சக்கரவர்த்தி. செந்தமிழ் - ஆரியம் இரு மொழிகளிலும் கரைகண்டவன். வேறு சில மொழிகளும் அறிந்திருந்தான் என்று தெரிகிறது. வேதம், உபநிஷதம் முதலாக உள்ள பல சம்ஸ்கிருத நூல்களையும், அகத்தியம் முதலாக உள்ள தமிழ் நூல்களையும் ஐயம் திரிபு அறக் கற்றுத் தெளிந்திருக்கிறான். இசை, பரதம், சிற்பம் முதலிய கலைகளிலும் வல்லவனாக இருந்திருக்கிறான். சுருக்கமாகச் சொன்னால் அவன் காலம் வரைத் தோன்றிய பல நூல்களிலும் தோய்ந்து கற்றுத் தேர்ந்திருக்கிறான்.

இந்த உண்மையெல்லாம் கம்பன் காப்பியத்தில் பரக்க வெளிப்படுகிறது. இத்தகைய பேராற்றலே ஒப்பற்ற காப்பியம் தோன்றத் துணை புரிந்தது. வான்மீகி அருளிய ஆதி காவியத்தைப் பலமுறை ஆய்ந்திருக்கிறான். தனக்கு முன் தமிழில் தோன்றிய ராமகாதை நூல்களையும், திவ்வியப் பிரபந்தம் முதலான பாசுரங்களையும் தோய்ந்து படித்திருக்கிறான். அதன் பிறகே தான் ஆக்கியராமாவதாரத்திற்குச் சட்டகம் வகுத்துக் கொண்டிருக்கிறான்.

எடுத்த எடுப்பிலேயே உத்தரகாண்டம் பாடுவதில்லை என்று முடிவு செய்து கொண்டு விட்டான் என்பதே என் கருத்து. வண்ணான் பேச்சைக் கேட்டு மாமன்னன் மாசற்ற மனைவியின் தூய்மையை மனங்கொள்ள மறுப்பதை, கம்பனின் அறநிறம்பிய அன்புடை, அறிவுள்ளம் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது போலும்!

அப்படித்தான் மாயா ராமப் படலத்தை முற்றிலும் நீக்கியதும், மனத்துவம் உணர்ந்த மகாகவி சீதையின் முன்னே ராமனைக் கொண்டு வந்து நிறுத்துவது என்பது அசம்பாவிதமாகும். ராவணன் ஆட்சியில் 'ராம' என்ற ஒலி இலங்காபுரியில் முற்றிலும் தடை செய்யப் பெற்றுள்ளது. அதைக் கம்பன் சீதை வாய்மொழியால் நமக்கும் புலப்படச் செய்கிறான். "வந்தாராம்" "போனாராம்" "செய்தாராம்" என்று கூட அரக்கர்கள் பேசமாட்டார்களாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் போலி உருவில் கூட ராமனைச் சீதை முன்கொணர்வது பொருந்தாததன்றோ? எனவே தான் மாயாராமப் படலத்தை ஒதுக்கி விட்டான் கம்பன்.

இரணியன் வதைப் படலம் ஓர் அற்புதமான படைப்பு. கதைக்குப் புறம்பானதாகத் தோன்றினும் கதைக்கும் "அறமே வெல்லும்" "புண்ணியம் ஒன்றே நிலைக்கும் பொருள் என்ற தத்துவத்திற்கும் ஊட்டம் தருகிறது. பொருந்தாத மாயா ராமப் படலத்தை நீக்கிய கம்பன் மிகப் பொருத்தமாக மாயாஜனகப் படலத்தைப் படைத்துக் காப்பியத்தின் தரத்தை உயர்த்தியிருக்கிறான்.

இப்படிப் பெரிய மாற்றங்கள் மட்டுமின்றி அங்கங்கே எண்ணற்ற சிறு மாற்றங்களும் செய்து காப்பியச் சிறப்பை வளர்த்திருக்கிறான். பாத்திரங்களின் குண இயல்பிலும் மாற்றம் செய்து பாத்திரங்களின் தன்மையும் தரத்தையும் உயர்த்தியிருக்கிறான். குறிப்பாகச் சீதையின் பண்பை எவ்வளவோ உயரத்திற்கு ஏற்றி வைத்து,

"சோகத்தால் ஆய நங்கை
கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்
வான்சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மௌலி மேலாள்"

என்று பெண்குலமே பெருமையால் ஓங்கச் செய்து விடுகிறான்.

இறைவணக்கம் செய்தே நூலைத் தொடங்குவது நமது மரபு. கம்பனும் முன்னையோரைப் பின் பற்றிக் கடவுள் வணக்கம் செய்கிறான். எந்தச் சமயத்தவரும் மறுக்க மாட்டாத முறையிலன்றோ கடவுள் வாழ்த்தைச் செய்கிறான்!

> உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
> நிலைபெறுத்தலும், நீக்கலும்,
> நீங்கலா – அலகிலா விளையாட்டுடையார் அவர்
> தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே!

எவ்வுருவும், எப்பெயரும் கூறாது, எங்குமாய் யாவுமாய் இலங்கும் ஒரு தனிப்பொருளை, திணை, பால், எண், இடம் ஏதும் சுட்டாது, வாழ்த்தும் அருமைப்பாடே கம்பனின் மேலான மெய்யறிவுக்கு ஓர் எடுத்துக்காட்டன்றோ?

காப்பிய அங்கத்தில் ஆற்றுப் படலத்தை முதலாவதாக ஆக்கிய பெருமகன் அப்படலத்தில் நீரை வைத்துக் கொண்டே கடவுள் தத்துவத்தை அருமையாக - அழகாக உணர்த்தி விடுகிறான்.

மலையில் தோன்றி, வழிநெடுக ஓடிக்கடலில் சங்கமமாகிற ஆற்றை நாம் பலகாலும் கண்டு கொண்டுதானிருக்கிறோம். இந்த ஆறு எங்கிருந்து வருகிறது என்றால், ஓஹோ, இது காவிரி நதியல்லவா? இது சைய மலையிலிருந்து வருகிறது என்று கூறுவோம். இது கங்கையன்றோ? இது இமயமலையில் உற்பத்தியாகிறது என்போம். பூகோள முறைப்படி இவ்விடைகள் முற்றும் சரியே! ஆனால் உண்மை என்ன? எங்கும் பரந்து கிடக்கிறது நீர்; அதைக் கடல் என்போம் நாம்; அது தான் முதல் அல்லது மூலம்; சூரியன் காய்கிறது; கடல் நீர் ஆவியாக எழும்புகிறது; மேகமாகப் பரவுகிறது; மழையாகப் பொழிகிறது; கால்களாகப் பாய்கிறது; அருவியாகக் குதிக்கிறது; ஆறாக ஓடுகிறது இறுதியில் தான் எங்கிருந்து வந்ததோ அங்கு, அந்தக்

கடலுக்கே, சென்று கலந்து ஒன்றி விடுகிறது. இடையில் பெற்ற காவிரி, கங்கை போன்ற பெயர்களும் மறைந்து விடுகிறது. இந்த உண்மையைக் கவிஞன் எவ்வளவு அருமையாக உணர்த்துகிறான் என்பதைக் காண்போம் இனி;

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லைஇல் மறைகளாலும்
இயம்ப அரும்பொருள் ஈதுஎன்ன,
தொல்லையில் ஒன்றே ஆகி
துறைதொறும், பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல், பரந்தது அன்றே!

"கல்லிடை, அதாவது மலையிடத்தே தோன்றி நீளச் சென்று கடலிடத்தே ஒன்றிவிட்ட நீராறு இருக்கிறதே அது வரம்பில்லாத வேதங்களாலும் சொல்ல முடியாத பரம்பொருள்தான் இஃது என்னும்படி ஆதியில் ஒன்றே ஆகி எல்லா இடங்களிலும் விரவிச் சூழ்ந்துள்ள நிலையைப் பார்த்தால் பல பெரிய மதங்களும் கூறும் பரம்பொருளைப் போல அல்லவா பரந்து கிடைக்கிறது" என்று எவ்வளவு எளிதாக அரிய தத்துவப் பொருளையே கூறிவிடுகிறான்! அவனுள் ஊறிக் கிடந்த உபநிஷத ஞானமன்றோ அரிய கவிதையாக மலர்ந்து மணக்கிறதென்று வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

கடவுள் தன்மையை விளக்கும் இடங்கள் பல. அங்கெல்லாம் வேதகால ரிஷியாகவே காட்சி தருவான், கம்பன்.

தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து தன் அகத்திருந்த உலகங்கள் அனைத்தையும் மலரச் செய்கின்றானாம்; அவை தன்னுள்ளே நின்று அப்படித் தன்னாலே தரப்பெற்ற அவ்வுலகங்கள் ஒவ்வொன்றினுள்ளும், தனித்தனியாய் நிற்கின்றானாம்; தான் அவற்றைத் தாங்குவான், தானே அந்த உலகங்கள் அனைத்தையும் சுமந்து கொண்டிருக்கிறனாம்; அவன் யார்? பின் இலன் இவனுக்குப் பின்னே யாரும் இல்லாதபடி

கடையூழியில் தானாகவே இருப்பவன்; முன் இலன் அப்படியானால் அவன் பிற்காலத்தில் தோன்றியவனோ என்றால் இவனுக்கு முன்னே தோன்றியவர் எவரும் இல்லையாம்; இவன் தான் ஆதி முதல்வனாம்; ஒருவன் அவன் தனியனாம்; பேர்கிலன் அழிவு, மாற்றம், அசைவு கூட இல்லாதவனாம்; தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ? அத்தகைய தனிப்பரம்பொருளின் உண்மையான நிலை இதுதான் என்று எந்த ஒரு ஞானியாலும் கூட வரையறை செய்து விட முடியுமா? முடியாது என்று வரையரை செய்து காட்டும் அருமையை அவன் வாக்காகவே கேட்போம்.

தன்னுளே உலகங்கள்
எவையும் தந்து, அவை –
தன்னளே நின்று,
தான் அவற்றைத் தாங்குவான்;
பின் இலன்; முன் இலன்;
ஒருவன்; பேர்கிலன்;
தொல் நிலை ஒருவரால்
துணியற் பாலதோ?

ஒரு நல்ல கவிஞன் முடிந்தவரைத் தான் வெளிப்படாமல், பாத்திரங்களைக் கொண்டே கதையை நடத்திச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் கதை ருசிக்கும்; பாத்திரங்களின் தனித்துவமும் வெளிப்படும். அது கம்பனுக்குக் கை வந்த கலை. ஆகவே தான் "கம்பநாடகம்" என்றும் கம்பன் காப்பியத்தை மேலோர் கூறுவர். அத்தகைய பல நிகழ்ச்சிகளுள் ஒன்றை மட்டும் இப்பொழுது காண்போம்.

இராமன் வனத்துள் இருக்கிறான்; சீதை இராவணனால் தூக்கிச் செல்லப் பெற்று இலங்கையில் சிறையில் இருக்கிறாள்; சுக்கிரீவன் வாக்களித்த வண்ணம் குரங்குப் படைகளுடன் வரவில்லை; இலக்குவனைக் கிஷ்கிந்தைக்குத் தூது அனுப்புகிறான், ராமன். இலக்குவன் கிஷ்கிந்தைக்குச் செல்லுகிறான். அங்கே நிகழ்ந்தவை ஒரு அருமையான நாடகமாக அமைகிறது. அதில் ஒரு பகுதி பல நாட்களாய் நடந்து வருவது. அதைக் கம்பன் முன்னே கூறியிருக்கலாம். ஆனால்

சொல்லவில்லை. காரணம் ஒரு பாத்திரத்தின் மூலமாகவே தெரிவிக்க வேண்டும் என்று கருதியிருக்கிறான். தக்க வாய்ப்புக் கிட்டியது. செயல்படுகிறான்.

சீதை உடனிருந்தவரை கீரை, கிழங்கு, காய், கனி முதலியவற்றை ஆய்ந்து, திருத்தி வெகுபக்குவமாக ராமனுக்குப் பரிமாறியது சீதையே. அவன் பிரிவுக்கு அப்புறம் அப்பணியையும் தம்பி இலக்குவனே ஆற்றி வருகிறான். அப்படிப்பட்ட செய்தி இங்குதான் நெடுநாட்கட்குப் பின்னர் புலப்படுத்தப்படுகிறது.

இலக்குவனை நோக்கி, "தாங்கள் குளித்து முழுகிவிட்டு உணவு, கொள்ள வேண்டும்!" என்று சுக்கிரீவன் வேண்டுகிறான். அதற்கு இலக்குன் கூறும் விடையில் செய்தி புலப்படுகிறது.

கீரை, கிழங்கு, காய் முதலியவற்றில் இராமன் உண்டு மீந்ததைத்தான் நான் உண்பேன்; வேறு ஏதும் விரும்ப மாட்டேன். அப்படி ஏதும் விரும்பினால், அது நாய் தின்ற எச்சிற்பண்டமே!

அல்லாமலும் மற்றொரு காரணமும் உள்ளது. நான் திரும்பிச் சென்று அதன்பின் உணவுப் பண்டங்களைச் சேகரித்துக் கொண்டு வந்து சீவி, நறுக்கிப் பக்குவம் செய்ய வேண்டும். அது தான் ராமனுக்கு உணவு. எனவே இன்று சிறிதும் காலம் தாழ்த்தப்படாதென்று கூறிப் புறப்படுகிறான்.

"பச்சிலை, கிழங்கு,
காய் பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது;
வேறுநான் ஒன்றும்
நச்சிலேன்; நச்சினேன்
ஆயின் நாயுண்ட
எச்சிலே அது;
இதற்கு ஐயம் இல்லையால்!"

"அன்றியும் ஒன்று உளது;
ஐய! யான் இனிச்
சென்றனென் கொணர்ந்து
அடை திருத்தினால் அது
நுன்துணைக் கோமகன்
நுகர்வது; ஆதலான்
இன்று இறை தாழ்த்தலும்
இனிது அன்றாம்"

என்றான்.

இப்படி அருமையாகக் காப்பியத்தை அமைக்கும் திறமையை எண்ணும்பொழுது, கம்பனின் மேதா விலாசம் நமக்கெல்லாம் புலப்படுகின்ற தன்றோ?

கவிச்சக்கரவர்த்தி கம்பன் விருத்தக் கவிச் சிற்பி என்பது உலகறிந்த உண்மை; எனவே தான் பழம் புலவர் ஒருவர்

"விருத்தம் என்னும் ஒண் பாவிற்கு உயர் கம்பன்'' என்று பாராட்டியுள்ளார். கம்பன் அருளிய இராமாவதாரத்தில் பதினாயிரத்திற்கு மேற்பட்ட கவிகள் காணப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கிச் சிறந்த கம்பனன்பர்கள் கூடிப் பாடம் தேர்ந்து, பாடல்கள் தொகுத்துப் பதிப்பித்த மர்ரே ராஜம் பதிப்பில் கொள்ளப்பெற்ற பாடல் தொகை 9,972 ஆகும். அவற்றுள்

இருசீர்க் - குறளடி நான்குள்ள வஞ்சி விருத்தம்	....	....	14
முச்சீர்ச் - சிந்தடி நான்குள்ள வஞ்சி விருத்தம்	....	....	119
நாற்சீர் - அளவடி நான்குள்ள கலி விருத்தம்	....	....	4981
ஐஞ்சீர் - நெடிலடி நான்குள்ள கலித் துறை	....	....	1697
அறுசீர்க் - கழிநெடிலடி நான்குள்ள ஆசிரிய விருத்தம்	....	....	2974
எழுசீர்க் - கழிநெடிலடி நான்குள்ள ஆசிரிய விருத்தம்	....	....	181
எண்சீர்க் - கழிநெடிலடி நான்குள்ள ஆசிரிய விருத்தம்	....	....	6
		ஆகமொத்தம்	9,972

மொத்தம் சீர் அளவால் ஏழு வகையாகக் கொண்டாலும் சந்தம், யாப்பமைதி, அளவியல் முதலான கணிப்பால் நூற்றெட்டு வகையாக விளங்குகின்றன. இவற்றுள் பாதிக்கு மேற்பட்ட கவிகள் அளவியல் சந்த விருத்தமாகும்; அடிதோறும் ஒத்த எண்ணிக்கை எழுத்து அமைவதாகும். ஓரடிக்கு 7 முதல் 22 எழுத்து அமைந்த விருத்தங்கள் அவை. அப்படிச் சற்றேறக்குறைய 5000 விருத்தங்கள். அன்றியும் பல்வேறு சூழ்நிலைகட்கும், மெய்ப்பாடுகட்கும், ஏற்பச் சந்தம் வேறுபடுகிறது. தேவாரம் முதலிய பாசுரப் பாடல்களின் சந்தப் பண்ணிற்கு ஏற்பவும் பல பாடல்கள் அமைந்திருக்கின்றன. அவற்றைக் கருவியால் இசைத்தால் தெய்வப் பாசுரமா? கம்பன் கவியா? என்று இனம் பிரித்துக் காணல் இயலாது. அப்படிப் பலப்பல உள்ளன. அவற்றுள் ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

சம்பந்தர் பாடியது; எழுசீர்;

தேமா - கூவிளம்; தேமா - கூவிளம்;
தேமா - கூவிளம்; கூவிளம்.

மானி நேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெரும் தேவிகேள்!
பானல் வாயுறு பாலன் ஈங்கிவன்
என்று நீ பரி வெய்திடேல்;
ஆனை மாமலை ஆதி ஆயஇ
டங்க விற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யென லேன்திரு
ஆல வாயரன் நிற்கவே.

இது கொல்லிப்பண்ணில் பாடுவது.

இதே போல எழுசீர் அளவியல் சந்த விருத்தம்; அடிதோறும் பதினெட்டு எழுத்துக்கள் அமைய யாப்பது. எல்லாவகையிலும் இதனை ஒத்த பாடல்கள் சில கம்பனில் காணப்படுகிறது. ஒன்றைக் காண்போம்;

சேணு லாவிய நாளெ லாமுயிர்
ஒன்று போல்வன செய்து பின்
ஏணுலாவிய தோளி னானிடர்
எய்த ஒன்றுமி ரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல்
கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னாள்என ஏகி னாள் நளிர்
கங்கு லாகிய நங்கையே!

இங்ஙனமே மற்றொரு வகைப் பாடலையும் ஒப்பு நோக்கி விட்டு மேலே செல்வோம். அதுவும் சம்பந்தர் அருளிய பாசுரமே. அது தேமாங்கனி - புளி மாங்கனி - புளி மாங்கனி - புளிமாவாக அமைவது; அடிதோறும் நான்கு சீர்கள் பதினேழு எழுத்துக்கள் கொண்டது; அளவடி நான்குள்ள கவிமுடுகு விருத்தம். நட்டபாடைப் பண்ணில் பாடப் பெறுவது.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவணம் அறுமே!

இதை அப்படியே ஒத்தொளிரும் கம்பன் கவிதையைக் கண்டு மகிழ்வோம்.

என்னாஅடி விழுவானையும்
இகழாஎரி விழியா
பொன்னார்கலை அணிவானெதிர்
புகுவானிலை உணரா
தன்னாலொரு செயலின்மையை
நினையா உயிர் தளரா
மின்னாலயர் வுறும்வாளர
வெனவெந்துயர் உறுவான்.

இப்படிப் பண்ணடைவு தாளக் கட்டமைய, எத்தனை எத்தனையோ பாடல்களை ஆக்கியுள்ளான். பிற்காலக் கீர்த்தனை வடிவு எளிதிற்கிடைக்குமாறு எண்ணற்ற பாடல்கள் கிடைக்கின்றன. ஒன்றை மட்டும் பார்ப்போம்.

பல்லவி

செம்மைசேர் நாமம் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்

அனுபல்லவி

இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்

(செம்மைசேர்)

சரணம்

மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
(செம்மைசேர்)

ஓர் எழுத்தைக் கூட மாற்றாமல் கீர்த்தனை வடிவம் அழகாக அமையும் பாடல்கள் பலவற்றுள் இஃது ஒன்று. இது சங்கராபரண ராகத்தில் மிச்ர சாப்பு தாளத்தில் பாடப்பெற்று வருகிறது.

இஃதன்றிப் பரதநூல்தனையும் பாங்குறப் பயின்ற அருமை பல இடங்களிற் பளிச்சிடக் காண்போம்.

விசுவாமித்திரனோடு இராம - லட்சுமணர்கள் மிதிலையுட் செல்கின்றனர். பல்வேறு காட்சிகளும் இவர்கள் கண்ணிற் படுகின்றன; அவற்றுள் ஒன்று நாட்டிய அரங்கம்; அதையும் கண்டார்கள். இது வழி நடைக்காட்சி பற்றிய ஒரு சாதாரணச் செய்தி தான். அதைக் கூறும் முறை அருமையாகவுள்ளது. "ஆடக அரங்கு கண்டார்'' அதாவது பொன்போன்று ஒளிரும் மேடையைக் கண்டார்களாம். "ஐயநுண், இடையார் ஆடும் ஆடக அரங்கு'' உண்டோ இல்லையோ என்று சந்தேகப்படும்படி, அவ்வளவு சிறுத்த இடையோர் - இளம்பெண்டிர் - ஆடும் அரங்கு" என்று பரத நடனம் ஆடத்தக்கார் தோற்றத்தையும், உடல் அமைப்பையும் உணர்த்துகிறான். அப்படிப்பட்ட மெல்லியலார் ஆடும் முறையை எத்துணைக் கச்சிதமாகப் புலப்படுத்துகிறான் தெரியுமா? "நெய் திரள் நரம்பில் தந்த மழலையின் இயன்ற பாடல்'' அதாவது தேன் ஒழுக்குப் போன்ற நிறமுடைய விரைப்பான நரம்புக் கருவியால் இசைக்கப்பட்டது போன்ற சன்னமான இனிய குரலில் பாடப் பக்கவாத்யங்களாக வீணையும் தண்ணுமை என்னும் மிருதங்கமும் பாடலோடு ஒன்றிப் பிணைந்து நிற்க, மகளிர் ஆட வேண்டும்; எப்படி ஆட வேண்டுமாம்? கைவழி நயனம் செல்ல - முத்திரை பிடித்த கை எப்படி, எங்கெல்லாம் செல்லுகிறதோ அங்கெல்லாம் சென்று

கண் லயிக்க வேண்டும்; கண்வழி மனமும் செல்ல - கண் சென்ற வழி மனமும் சென்று முத்திரையின் பொருளில் பதிய வேண்டும். அப்படி ஆடுகிற அரங்கினைக் கண்டார்கள் என்கிறான். பரதக் கலையின் அடிப்படையாய் அமைந்த இலக்கணத்தை எவ்வளவு கணக்காகக் கூறுகிறான்!

"யதோ ஹஸ்தஸ் ததோ த்ருஷ்டி:
யதோ த்ருஷ்டிஸ் ததோ மன:"

எனப் பரத சாஸ்திரம் கூறுவதைக் கம்பன்

"கை வழி நயனம் செல்ல
கண்வழி மனமும் செல்ல"

என்று எவ்வளவு எளிதாக, தெளிவாகப் புலப்படுத்தி விடுகிறான்?

பரத சாஸ்திரத்தையும் நன்கு பயின்று, பல அரிய பரத நாட்டியத்தையும் கண்டு மகிழ்ந்திருக்கிறான் கம்பன். எனவே தான் பல இடங்களில் பரதநூல் பற்றியும் பேசுகிறான்.

அனுமனிடமிருந்து, இராமனின் மோதிரத்தைப் பெற்று, இராமன் வந்து கொண்டிருக்கிறான் என்ற செய்தி கேட்ட பரதன் எல்லையில்லாத மகிழ்ச்சியால் ஆடிப் பாடி ஆனந்தத்தாண்டவம் புரியத் தொடங்கி விடுகிறான். அதைச் சித்திரிக்கிறான் கவி கம்பன். சொல்லால் தீட்டிய அந்த ஓவியம் பரதக் கலை வல்லவனுக்குத் தான் சாத்தியமாகும். இருபாதத்தையும் ஒரு சேர வைத்து, கால்கள் இருபக்கமும் விரிய, ஒரு டைமன் சதுர வெளியேற்படுமாறு நின்று உந்திக் குதிக்கும் முறையை நாட்டிய மொழியில்,

"குஞ்சித அடிகள்
மண்டிலத்தில் கூட்டுற
அஞ்சனக் குன்றின் நின்று
ஆடும்; பாடுமால்"

என்று சுருக்கமாக - ஆனால் - தெளிவாக உணர்த்துகிறான் என்றால் கம்பனுக்குப் பரதக்கலையின் அறிவு அப்படிக் கைகொடுத்து உதவுகிறது!

இனி, கம்பனுக்குள்ள உயிர் நூல் அறிவில் ஒரு கூறைப்பார்க்கலாம்! மலர் நிறைந்த கூந்தல் மாதர்கள் பலர் பெண் யானை மீது அமர்ந்து செல்கின்றார்கள். அம்மலரில் தேனுக்காகப் பலவகை ஈயினம் அவர்கள் தலைக்குமேல் மொய்த்துப் பறந்து கொண்டே செல்கின்றன. அவை அம் மகளிர்க்கு ஒரு பந்தர் இட்டது போல இருக்கிறதாம். இது தான் செய்தி. ஆனால் கம்பன் அந்த ஈக்கூட்டத்தை நான்கு பெயரிட்டு அழைக்கிறான்.

“தேனொடு மிஞிறும், வண்டும் தும்பியும்” என்கிறான். தேன் என்பது பெண் தேனீ; மிஞிறு என்பது ஆண் தேனீ; வண்டு என்பது பெண் வண்டு; தும்பி என்பது ஆண் வண்டு; பால காண்டத்தில் கூறும் இந்த வேறுபாட்டை, கிஷ்கிந்தாகாண்டத்தில் “பேடையும் ஞிமிறும்” என்றும், “துணை வண்டு” என்றும் பால் பகுத்துக்கூறல் கம்பனுக்கு உயிரியல் அறிவு சிறந்திருந்தமைக்குச் சான்றாகும்.

இப்படியே பூத பௌதிக அறிவும் நிரம்பியவனாய் விளங்கினான் கம்பன். அதையும் ஓரளவு காணலாம்.

இக்காலத்தை ‘அணுயுகம்’ என்பது மரபாகி விட்டது. இன்று விஞ்ஞான வளர்ச்சியால் அணு அறிவு தழைத்துள்ளது. நாற்பது ஆண்டுகட்கு முன் வரை ‘அணு’ என்பதே கடைசித் தனிமம்; அது பகுக்கப்பட முடியாத ஒன்று என்பதே விஞ்ஞானிகளின் - ஆம், நவீன விஞ்ஞானிகளின் - முடிவு. “atom” என்பதற்கு முற்கால ஆங்கில அகராதிகளில் “last Particle which cannot be cut or devided” என்றே பொருள் விளக்கம் செய்யப்பட்டிருக்கும். இன்று, “The atom may be considered as the smallest particile into which matter can be broken up by chemical means” என்று பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. ஆனால், கம்பன் காலத்தில் அணுவைப் பற்றிய அறிவு எப்படியிருந்திருக்கிறது என்பதைப் பார்க்கலாம். “எங்கடா இருக்கிறான் நீ சொல்லும் இறைவன்?” என்று உறுமும் இரணியனுக்கு விடை தரும் பிரகலாதன்:

"அணுவினைச் சத கூறிட்ட கோணிலும் உளன்'' என்று உணர்த்துகிறான். 'கூறு' என்றால் ஒன்றனுக்கொன்று தரத்திலும், அளவிலும், ஒத்தது. அப்படி அணுவினை நூறு பங்காகக் கூறிடுதலைப் பற்றிச் சொல்வதுடன், அப்படிக் கூறிட்ட அணுவின் நூற்றொரு பாகத்திற்குக் "கோண்'' என்று பெயர் என்பதையும் இந்தக் கவிஞன் அறிந்து வைத்திருக்கிறான். அதை நமக்குக் கற்பிக்கும் நல்லாசானாகவும் விளங்குகிறான்.

ஒரு மகாகவி எத்தனை எத்தனை கலைகளை, துறைகளையெல்லாம் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்குக் கம்பன் தான் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, இல்லையா?

சுமார் 1100 ஆண்டுகட்கு முன்னேயே தமிழர் அணு அறிவினை உடையவர்கள் என்பதற்கு இஃதே ஒரு நல்ல சான்று என்பதில் தமிழர்கள் பெருமிதம் கொள்ளலாம் தானே?

தமிழர்களின் இலக்கிய நோக்கம் மிக்க விழுமியது. 'கலை கலைக்காகத்தான்' என்பது தமிழர்க்கு உடன்பாடானதன்று! எல்லாக் கலையும் இறைவனை அடைவிப்பதற்கே என்பது தமிழர் கொள்கை. உலகில் வாழ்வாங்கு வாழவும், இறுதியில் இறைவன் அருளைப் பெற்றுய்யவும், வழிகாட்டுவதே இலக்கியத்தின் பெருநோக்கம் என்பது தமிழர் கொண்ட முடிவு. எனவே,

> **"அறம்பொருள், இன்பம் வீடு**
> **அடைதல் நூற் பயனே!"**

என விதி செய்தனர் இலக்கண நூலோர்.

அறநூல்களும், நீதி நூல்களும், செய்வன இன்ன, செய்யத்தகாதன இன்ன என்பனவற்றை வரையறை செய்து கூறும். அது பலருக்குக் கசப்பான மருந்து போன்றிருக்கும். எல்லோரும் அவற்றை மனத்திற் பதித்துக் கொள்வதும் கடினம். ஆனால் அந்தக் கருத்துக்கள் கதையோடு கலந்து வருமேயானால் யாவரும் நெஞ்சில் இருத்தி நெடும் பயன் பெறக்கூடும்.

சுவைமிக்க கனிச்சாற்றோடு கலந்த கசப்பு மருந்தும் மகிழ்வுடன் பருகப்பட்டு உள்ளே சென்று நற்பயன் தருவது நாமெல்லாம் அறிந்த ஒன்று தானே?

அதனால் தான் இராமாயணம், பாரதம், பெரிய புராணம் முதலான அரிய நூல்கள் பல நூற்றாண்டுகளாக மக்களிடையில் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. கற்றோரிடையில் மட்டுமின்றிக் கல்வியறிவு இல்லாதவர்களிடையிலும் ராம காதை முதலியன பரம்பரையாக வந்த கேள்வியறிவாலே நிலைத்து நின்று பயன் தந்து வருகின்றன.

தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் கம்பராமாயணம் அறியப் பெற்றுப் போற்றப்பெற்றது. மலேயா, ஜவா, சுமத்ரா, செயாம் போன்ற வெளிநாடுகளிலும் கம்பராமாயணம் செல்வாக்குப் பெற்றது. சிற்பங்களும், மொழி பெயர்ப்பு வழி நூல்களும் அங்கெல்லாம் காணப்பெறுகின்றன.

கதையின் சிறப்பும், பாத்திரங்களின் உயர்வும், அவற்றுள் உணர்த்தப் பெறும் அறத்தின் மாண்பும், எல்லாவற்றிற்கும் மேலாகக் காப்பியத்தை அமைத்து நடத்திச் செல்லும் உத்தியுமே கம்பனுக்கு இத்துணைப் பெருமை ஏற்படக் காரணங்களாகும்.

இத்தகைய பெருங்காப்பியத்தில் நீதியுள்பட்ட அறம் எப்படிப் புகுந்து வேலை செய்கிறது என்பதை இனிப்பார்க்கலாம். பழச்சாறு தன்னுள் கசப்பான மருந்தை அடக்கிக் கொண்டிருந்தாலும் மருந்து நமக்குக் கட்புலனாகாது. ஆனால் உள்ளே சென்றதும் மருந்து தன்பணியைச் செய்யத் தொடங்கிவிடும். அது மருந்தின் இயல்பு அல்லது ஆற்றல் இல்லையா?

அதைப் போலத்தான் காப்பியம் என்னும் கனிச்சாற்றில் அறம் என்னும் மருந்து தன்னை இனம் காட்டாமல் ஒன்றிக்கிடக்கிறது. அது கண் வழியும், காது வழியும் சென்று கருத்தில் சார்ந்து மன, மொழி, மெய்யை ஆட்கொள்ளுகிறது. இந்த வித்தையை எம்மான் கம்பன் அற்புதமாகச் செய்துள்ளான்.

அப்படி மறைந்துள்ள அறக்கூறுகள் சிலவற்றைக் கண்டு மகிழ்வோம். வள்ளுவப் பேராசான் வகுத்த அறம்

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்
உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்"

என்று சட்டம் போல உணர்த்தும்.

இக்கருத்தை, நேரடியாக நமக்கு உணர்த்தாமல் கதையோடு கலந்து பாத்திரத்தின் உரையாடலில் நாடக அலங்காரத்துடன் வெளிப்படுத்தி நம் நெஞ்சில் நிலை பெறச் செய்துவிடுகிறான் கம்பன். கருத்து மட்டுமின்றிச் சந்த அமைதியும் சேர்ந்து விஷயத்தை எவ்வளவு அழுத்தமாக வெளியிடுகிறது என்பதை பார்ப்போம்.

மகாபலிச் சக்கரவர்த்தி வாமனனாக வந்த திருமாலுக்கு மூன்றடி மண் தர இசைந்து தாரை வார்த்துக் கொடுக்கப் போகிறான். அதை முக்காலமும் உணர்ந்த சுக்கிராச்சாரியார் தடுக்கிறார். அப்பொழுது மாவலி சினந்து கூறுகிறான்!

எடுத்து ஒருவருக்கு ஒருவர்
ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கு அழகிதோ?
தகைவில் வெள்ளி!

என விளித்து,

கொடுப்பது விலக்கு கொடியோய்!
உனது சுற்றம்,
உடுப்பதுவும், உண்பதுவும்
இன்றிவிடு கின்றாய்!

என்று பேச வைப்பதன் மூலம் கொடுப்பதைத் தடுப்பது எத்துணைப் பாபம் என்பதை எவ்வளவு உணர்ச்சியோடு வெளிப்படுத்துகிறான்! மாவலி கதையுடன் இந்த அறமும் ஒன்றி நின்று மக்கள் மனத்தைக் கவ்விப் பிடித்துக் கொண்டு விடுகின்றதல்லவா?

கானகத்தில், "சீதை, இலக்குவன் இருவருடன் இராமனையும் விட்டு விட்டு வெறுந்தேரோடு எப்படி அயோத்தி செல்வேன்? தயரதன் முதலியோர்க்கு என்ன பதிலை எப்படி உரைப்பேன்?" என்று தயங்கி மயங்கும் சுமந்திரனை நோக்கி இராமன் கூறும் அறிவுரை அறவுரையாக மட்டுமின்றி அறங்கடைப் பிடிக்கும் ஆண்மைக்கேயன்றோ வரையறை கூறுகிறது!

நிறப் பெருங் படைக்கலம்
நிறத்தின் நேர்உற
மறப் பயன் விளைத்திடல்
வன்மை அன்றரோ!

ஒளிமிக்க கூரிய பெரிய ஆயுதம் நெஞ்சுக்கு நேர் வரும்பொழுது அஞ்சித் தளராமல் வீரச்செயல் புரிவது தான் ஆண்மை என்பது சரியல்ல! ஆனால் எது ஆண்மையாளனுக்கு மிகச் சிறந்தது என்று கூறுகிறான் பின் இரண்டு அடிகளில் இராமன் :

இறப்பினும், திருஎலாம்
இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம் எனல்
சூரர் ஆவதே!

உயிரே போயினும், எல்லாச் செல்வங்களையும் பறி கொடுத்தாலும், அறத்தை - தரும நெறியை - கைவிட மாட்டார் என்பதே "ஆற்றல் உடையோர்" என்பதற்கு மெய்யான இலக்கணம் என்று கூறுவது எவ்வளவு அழகாகவுள்ளது பார்த்தீர்களா! இனி, மற்றொன்று :-

இராமன்பால் உள்ள மெய்யன்பால், பக்திப் பரவசத்தால், கள்ளமில் உள்ளத்தனான குகன், நல்ல மீனையும், நறுந்தேனையும் காணிக்கையாகக் கொண்டு வருகின்றான். இராமனைச் சுற்றியுள்ள முனிவர்கள் எல்லாம் அவன் கொண்டு வந்த பொருளைக் கண்டு அருவருப்புற்று நோக்க,

குகனின் உள்ளத் தன்பின் மேன்மையையும், தன்பால் உள்ள பரிவுப் (Sympathy) பெருக்கத்தையும் பார்த்து,

"உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமிர்தினும் சீர்த்த அன்றே!"

என்று கூறிய இராமன், முனிவர்கள் உள்ளக் கிடக்கையை யறிந்து அவர்க்கு அறிவுறுத்துவான் போல,

"பரிவினில் தழீய என்னில் பவித்திரம்"

பிறர் படும் துன்ப - துயரங்களில் தங்களையும் ஆட்படுத்தி அவர்கள் மாட்டுக் கொள்ளும் பரிவு இருக்கிறதே அந்தப் பரிவினில் சூழப்பட்ட எந்தப் பொருளும் பவித்திரம்; அதாவது புனிதத்தினும் பல மடங்கு மேம்பட்ட தன்மை என்கிறான்.

"பரிவினில் தழீய என்னில் பவித்திரம்"

என்ற அருமைக் கணிப்பு நமக்குக் கண்ணப்ப நாயனாரையும், அவன் செயல்களையும், அதற்கு மகிழ்ந்த காளத்தியப்பனையும் நினைவு கொள்ளச் செய்கிறது, இல்லையா?

இன்று உலகம் முழுவதும் எதை ஒழித்தாலன்றி மக்கட் சமுதாயம் அமைதியாக வாழமுடியாதென்று கருதுகிறதோ அந்தப் போர் அகன்று உலகம் உய்ய அருமையான வழிவகுக்கும் அறம் கூறுகிறானே அதைப் பார்ப்போம், இனி!

தமிழகத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் போர் செய்தலும், வெற்றி கொள்ளலும், வாகை சூடிப் பெருமிதத்தோடு நகர்வலம் வருதலுமே பெரும் பெருமை எனக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

எண்கொண்ட தொண்ணாற்றின்
மேலும் இரு மூன்று
புண் கொண்ட வென்றிப்
புரவலன்

என்றும்,

அடுத்தடுத்துச்

"சீறும் செருவில் திருமார்பில்
தொண்ணூறும்
ஆறும் படுதழும்பின்
ஆகத்தோன்"

என்றும்,

"தொழும்புடைய ஆகத்துத்
தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்ர
சண்டன்"

என்றும்,

பலவாறாக வியந்து பாராட்டப் பட்ட மாமன்னன். விஜயாலயன் என்னும் சோழப் பேரரசன் காலத்தில் வாழ்ந்தவன் கம்பன். அவன் பொருதிவென்ற போர்களால் விளைந்த நாசங்களையெல்லாம் கண்டும், கேட்டும் பெரிதும் உள்ளம் நைந்து புழுங்கியிருக்கிறான். போர் வெறிக்கு மூல காரணம் புகழ் பெறும் ஆர்வமே! என்பதையும் கண்டுள்ளான்.

எனவே, போர் ஒன்று தான் புகழுக்கு வித்து என்பதை மாற்ற வேண்டும்; போரையும் தடுக்க வேண்டும்; இதை ஒரு தக்க வேளையில் தக்க பாத்திரத்தின் மூலம் உலகுக்கு உணர்த்த முயல்கிறான், கம்பன்

இராமனுக்கு முடிசூட்டு விழா; அதற்கு முந்திய தினம், குல குருவான வசிட்டன், மனித அறம் முதலாக மன்னன் கடைபிடிக்க

வேண்டிய உறுதிப் பொருள்களை இராமனுக்கு உணர்த்துகிறான். அவற்றுள் ஒன்றை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறான் வசிட்டன். முதலில் கவியைப் பார்ப்போம்;

"யாரொடும் பகை
கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும்;
புகழ் ஒடுங்காது; தன்
தார் ஒடுங்கல் செல்லாது;
அது தந்தபின்
வேரொடும் கெடல்
வேண்டல் உண்டாகுமோ?"

எவருடனும் பகைமை கொள்ளா விட்டால் போர் அற்றுப்போகும்; அதனால் புகழ் மங்கிப் போகாது! ஒரு மன்னனின் ஆட்சியும் அவன் வாழ்வும் குறைவுபடாது. அந்த நிலை ஏற்பட்டு விட்டால் எந்த ஒரு மன்னர் குலத்தையும் அடியோடு அழிய வேண்டுமென்று எவரும் சபித்துக் கொண்டிருக்கவும் மாட்டார்கள்.

எத்தகைய அறவுரை! அறவுரை! அருளுரை! ஆயிரம் ஆண்டுகட்கு முன்னேயே காந்தியுகம் பிறந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது!

போர் ஒழிந்து உலகெலாம் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவ நாமும் ஆண்டவனை வேண்டி நிற்போமாக! வாழ்க கம்பன்! வாழ்க உலகம் எல்லாம்!

கவிஞனைப் போற்றிய கவிஞன்

"கம்பன் அடிப்பொடி"

தமிழகத்திற் பிறந்த கவிகளுள் மகாகவி பாரதி ஒரு தனிப்பெருமை யுடையவன். தன்னேர் இல்லாத தத்துவப் புலவன். இது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. கம்பன் வாக்கிற்கூறினால், "இவன் கல்லாத கலையும் வேதக் கடலும் உலகத்து எங்கும் இல்லை" என்னலாம்.

நாடு, மொழி, சமுதாயம், சமயம், தத்துவம், அரசியல், காதல், வீரம், அன்பு, அறம், நாட்டு விடுதலை, ஆன்ம விடுதலை, சர்வதேசியம், சமரசம், சமத்வம், ஆன்மநேய ஒருமைப்பாடு முதலான எல்லாத் துறைகளிலும் கருத்தைச் செலுத்திக் கவிதை பொழிந்த கார்மேகம் பாரதியே! நல்லனவற்றை நாவார வாழ்த்துவதைப் போலவே அல்லனவற்றை அகங்கொதித்துச் சாடியுள்ளான். எங்கெல்லாம் மக்கள் வீறுகொண்டெழுந்து விடுதலைக்குப் போராடினும் அவர்களையெல்லாம் வாழ்த்தி மகிழ்ந்திருக்கின்றான்.

கவி, கவிதை, செய்யுள், பாட்டு, காப்பியம், வசன கவிதை, கட்டுரை, கதை முதலியவற்றில் காணும் எளிமையும், தெளிவும் உணர்ச்சியும், சுவையும் எல்லாம் பாரதியின் பெருமைக்குக் கட்டியங் கூறுவனவாம்.

கம்பனைப்போல், வள்ளுவன் போல், உலகெலாம் ஒன்று; உலக மக்கள் யாவரும் ஒருகுலம்; காக்கை குருவி முதல் எல்லாம் நம் ஜாதி என்றெல்லாம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு அத்வைதியாக மிளிர்கிறான், பாரதி.

சாதி பேதம், மத வேற்றுமை, ஆண் - பெண் உயர்வு தாழ்வு, ஆண்டான் அடிமை நிலை முதலிய கேடுகளை எல்லாம் சுட்டுப் பொசுக்கி விட்டு,

"எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓர்இனம்;
எல்லாரும் இந்திய மக்கள்;
எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை;
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

என்று வெற்றி முரசு கொட்டுகிறான்.

இப்படி எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்து அறமுரைத்த அற்புதக் கவிஞன் மகாகவி பாரதியே. அவனையன்றி மற்றொரு கவிஞனைக் காணலும் காட்டலும் அரிதே!

கம்பனை வள்ளுவனை இளங்கோவை காளிதாசனை தாயுமானவனைப் பாராட்டிப் பாரதி வியந்து பாடுவதை நாம் அறிவோம். ஆனால் அவர்களுள் எல்லாம் கம்பனைப் பாராட்டியதே அளவாலும் முறையாலும் அதிகமாகும். காரணம், கம்பன் அருளிய இராமகாதைக் காப்பியம், அவன் கவிதா சந்நதம் பாரதியைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது.

கம்பனுடைய புரட்சிகரமான நோக்கும், கதை நடத்தும் போக்கும், பரந்துபட்ட பேரறிவும், கையாளும் உத்திகளும், ஓசை நயமும், ஒப்பற்ற பாத்திரங்களை அற்புதமாய்ச் செயல்படச் செய்யும் நேர்த்தியும், வேத உபநிடதக் கருத்துகளை வெளிப்படுத்தும் கீர்த்தியும், வள்ளுவத்தைப் பிழிந்து வடித்து வைக்கும் பெற்றியும், கலையெலாம் வல்ல பாரதியின் உள்ளத்தைக் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை.

கம்பன் கையாண்ட உத்தியையும், அவன் பொருளை உணர்த்தும் முறைகளையும் பாரதியின் படைப்புகளில் மணக்கக் காண்கிறோம்;

"சொல்லடா 'ஹரி' என்ற கடவுள் எங்கே
சொல்!" என்று ஹிரணியன்தான் உறுமிக் கேட்க
நல்லதொரு மகன்சொல்வான் – "தூணில் உள்ளான்
நாரா யணன்துரும்பில் உள்ளான்" என்றான்.
வல்லபெரும் கடவுள்இலா அணுஒன் றில்லை;
மகாசக்தி இல்லாத வஸ்து இல்லை!"

என்று மகாகவி பாடும் போது கவிச்சக்கரவர்த்தியின் ஹிரண்யன் வதைப்படல நினைவு தான் அவன் உள்ளத்தில் இருந்திருக்க வேண்டும்.

"காதலிலே இன்பம்எய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர்போர் எண்ணு வாரோ?"

என்று பாடும் போது கவிச்சக்கரவர்த்தியின்,

"யாரொடும் பகைகொள்ளிலன் என்றபின்
போரொடுங்கும்; புகழ்ஒடுங்காது"

என்னும் அடிகளே மகாகவியின் மனத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

இனி, மகாகவி பாரதி கவிச்சக்கரவர்த்தி கம்பனை நேரடியாகவே போற்றி மகிழும் இடங்களைப் பார்ப்போம்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு"

என்று தமிழ்நாட்டின் கல்விச் செழிப்பை எடுத்தோதியதும், உடனே, மகாகவியான நினைவில் நல்ல பல்விதமாயின சாத்திரத்தின் மணத்தை நுகர்ந்து களிக்கும் பருணிதனான கம்பன் தோன்றியது இயல்பேயன்றோ? எனவே அடுத்து,

"புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்னும் சொற்கள் உதிர்கின்றன.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று பெருமிதத்தோடு பாடித் தமிழ்மொழியின் எழில் உணர்த்தும் மகாகவி.

யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன் போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை!வெறும் புகழ்ச்சி இல்லை"

என்று காரணமும் காட்டுகிறான்.

இங்கே ஓர் ஐயம் ஏற்படலாம். மூன்று பேரைக் கூறி இவர்க்கு நிகர் எங்கும் இல்லை என்றால், "இவர்களுள் ஒருவருக்கு மற்றவர் நிகர்தானே?" என்ற வினா எழுதல் இயல்பே. ஆனால், கவிஞனின் மதிப்பீட்டை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

கவிஞன் காட்டிய மூவரும் வெவ்வேறு வகையில் தனிப் பெருமையுடையவர்கள்; கம்பன் பெருங்காப்பியம் படைத்தவன்; வள்ளுவன் நல்லறம் பாடியவன்; இங்கோ வரலாற்றுக் காப்பியம்வடித்தவன். எனவே, மூவரும் மேற்கொண்ட துறைகள் முற்றிலும் வேறு வேறானவை. ஆகவே, அந்த ஒரு சொற்றொடரை மூன்று சொற்றொடர்களாகப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

1. "யாம்அறிந்த புலவரிலே கம்பனைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை"

2. "யாம்அறிந்த புலவரிலே வள்ளுவன் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை"

3. "யாம்அறிந்த புலவரிலே இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை."

இப்படிப் பிரித்துப் பொருள் கொண்டால் சிக்கல் தீர்ந்து தெளிவு கிடைத்துவிடும் இல்லையா?

கம்பன்பால் பாரதி எல்லையில்லாத பெருமதிப்புக் கொண்டிருக்கிறான். ஒரு கவிஞனுக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் கம்பனிடம் ஒளிருவதாக உணர்கிறான். இத்தனை

கலைகளையும் எப்படித்தான் கற்றுத் தேர்ந்து, தெளிந்து, சுவை பிலிற்ற வடித்தளிக்க முடிந்ததோ என்று பாரதி வியந்து மகிழ்ந்திருக்கிறான். ஆம்; பற்பல கலைகளையும் கற்றுத் தேர்ந்த ஒரு மகாகவி தானே மற்றொரு கவிஞனை அளவிட முடியும்? அங்ஙனம் அளவிட்ட போது ஏற்பட்ட வியப்பே,

"கம்பன் என்றொரு மானிடன்"

என்ற கவிதையில் மலர்ந்துள்ளது போலும்!

கம்பனின் கவிதாசந்நதத்தை எத்துணை யளவுக்குப் போற்றி மகிழ்ந்திருக்கிறான் என்பது அவன் வாக்கில் மலர்ந்த,

"கன்னனொடு கொடை போயிற்று; உயம்கம்ப
நாடனுடன் கவிதை போயிற்று"

என்னும் அடிகளால் தெளிவாகப் புலப்படுகிறது.

இறைவன் கூற்றாகச் சில செந்துறைகளைப் பொழிகிறான் மகாகவி. சர்வாண்டங்களும், சர்வகோடி ஜீவன்களும் நானே! அனைத்தும் ஆக்கியவனும் அவற்றை நிலைதடுமாறாமல் இயக்குபவனும் நானே என உணர்த்துகிறான், அவற்றின் மூலமாக அப்படி "எல்லாம் நானே" என்று பேசுகிற பரம்பொருள் மகாகவியின் வாக்கில்,

"கம்பன் இசைத்த கவிஎலாம் நான்"

என்று காட்டுகிறது.

காட்டுதற்கு அருமையான ஒரு தனிப் பொருள் கடவுள் என்பர் ஆன்றோர்.

"இப்படியன் இந்நிறத்தன்; இவ்வண்ணத்தான்;
இவன்இறைவன் என்று எழுதிக் காடொணாதே!"

என்று, பேரருட் பெருஞானியாகிய அப்பர் அடிகளே கூறுவார். அவற்றையெல்லாம் முழுதுணர்ந்தவன் மகாகவி பாரதி. அவன் கம்பனில் ஆழங்காற்பட்டவன். கம்பனுடைய

பேராற்றலில், பெரும்புலமையில் மனம் பறி கொடுத்தவன். மகாகவியின் சீரிய புலமை, கவிச்சக்கரவர்த்தியின் சிறந்த முயற்சியை வாயாரப் பாடுகிறது.

"எல்லைஒன்று இன்மை எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிய முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மைவாய்ந்த ததுஎன்று
உறுதிகொண் டிருந்தேன்!"

என்னும் அடிகளிலே மகாகவியின் வியப்பும் வேட்கையும், ஏன் ஒரு திருப்தியுமே பளிச்சிடுகின்றதன்றோ?

கம்பன் கனவு

"கம்பன் அடிப்பொடி"

மகா கவிகளைப் போலக் கனவு காண்பவர்களை எங்குமே காண முடியாது. நம்முடைய அறிவுக்கெல்லாம் எட்டாத எத்தனையோ அற்புதமான கனவுகளை அவர்கள் கண்டு கொண்டே இருப்பார்கள். உலகிலே எங்கும் காணமுடியாத ஒரு மகோன்னதமான நாட்டை மகாகவிகள் தங்கள் காவியத்திலே உண்டாக்கி விடுவார்கள். கோடானுகோடி செலவில், நூற்றுக்கணக்கான தச்சர்கள் (Engineers) கூடி, பல்லாயிரக்கணக்கான வேலையாட்களைக் கொண்டு நிர்மாணிக்கிற பெரிய பெரிய நகரங்களும், அங்குக் காணப்படும். அழகோவியங்களும் சிதைந்து அழிந்து மறைந்து மண்ணோடு மண்ணாய்ப் போனாலுங் கூட, இந்தக் கவிதைத் தச்சர்கள் கட்டிய மாளிகைகளும், உயிர் ஓவியங்களும் அழியாத அமரத்துவத்தைப் பெற்று விடுகின்றன. ஆகவே தான் அறிஞர்களைப் பாராட்டுகிற உலகம் மேதைகளை வணங்குகிறது; புலவர்களை வாழ்த்துகிற உலகம் கவிகளை ஏத்துகிறது. இல்லையா?

உலகம் கண்ட மகா மேதைகளிலே, சிறந்து விளங்குபவன் கம்பன். அதனாலே தான் மன்னாதி மன்னர்களும் அவனைக் கவிச்சக்கரவர்த்தி என்று மனமார, வாய் மணக்கப் போற்றி நின்றனர். அத்தகைய மகாகவி ஒரு நாட்டைப் பற்றிக் கனவு காணுகின்றான். நாடு எல்லா வகையிலும் குறைவற்றதாய் இருக்க வேண்டும்; எவ்வகைப் பண்பாடுகளும் நிறைந்திருக்க வேண்டும் என்பது கவியின் ஆசை.

நாடு என்றால் எல்லா வளமும் இருக்க வேண்டும். மக்களுக்கு முதற்படியான தேவை உணவு. உணவு முட்டின்றிக் கிடைக்க நிலவளம் சிறந்திருக்க வேண்டும். நீர்வளம் பெருகினாலன்றோ நிலவளம் சிறக்கும்? நீர்வளம் நிறைந்திருக்க வேண்டின் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஜீவ நதி ஓட வேண்டும். ஜீவ நதியைத் தருவதற்கு மரம் அடர்ந்த வானளாவிய

மலைத் தொடர் வேண்டும். அப்பொழுதுதான் மேகம் கடல் நீரை மொண்டு கொண்டு வந்து மலை மீது பொழியும்; மலையில் விழுந்த மழை நீர் ஆறாய்ப் பெருகும். இவற்றை எல்லாம் நன்குணர்ந்த கவி, தான் கனவு காணும் நாட்டை வருணிக்கத் தொடங்குகிறான் முதலில், மேகத்தை நமக்குக் காட்டுகிறான்.

வெள்ளை வெளேரென்று வானம் முழுவதும் பரந்திருக்கிற மேகம் கடலை நோக்கி ஓடுகிறது. கடலில் விழுந்து நீரை மண்டுகிறது. பிறகு கன்னங்கறேல் என்று திரும்பி வருகிறது. நாம் எல்லாம் எத்தனையோ தரம் பார்த்த சங்கதிதான். ஆனால் கம்பன், அழித்தற் கடவுளான சிவனைப் போலச் சென்ற மேகம் காத்தற் கடவுளான திருமாலைப் போலத் திரும்புகிறது என்கிறான். நிறத்தால் மட்டும் அல்லாமல், குணத்தாலும் இந்த உபமானம் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது!

இப்படியாக வரும் மழைமுகில், இடையிலே வழி மறித்தாற்போல ஓங்கி வளர்ந்து, பச்சைப்பசேல் என்ற தோற்றத்துடன் நிற்கும் மலைமீது பொழிகிறது மழை வெள்ளத்தை, கருமுகிற் கூட்டம் மலையைக் கவிந்து கொண்டிருப்பது கவிக்கு. கடலே மலையைச் சூழ்ந்து கொண்டு விட்டதாய்த் தோன்றுகிறது. அதற்கு ஓர் அழகான அற்புதமான காரணமும் கிடைத்து விடுகிறது. கடலுக்கு மலை மாமன் முறை வேண்டுமாம். எப்படி? ஆறு ஒரு பெண். அது கடலை மணந்து கொள்ளுகிறது. இந்தக் கதை நமக்குத் தெரிந்ததுதான். ஆற்றைத் தந்தது மலை. மலையை ஆண் என்று சொல்லுவது நமது சம்பிரதாயம். எனவே, ஆற்றின் தந்தையாகிய மலை, ஆற்றை மணந்து கொண்ட கடலுக்கு, மாமன் முறை ஆக வேண்டும் என்பது சரி தானே?

காதலி மீதுள்ள அன்பின் பெருக்கினால், மாமன் வெயிலால் வாடி வதங்கி விட்டான் என்று எண்ணிக் குளிர்ந்த நீரினால் மலையைக் குளிப்பாட்டுகிறதாம்.

பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பின் ஆட்டுதும் என்[று] அகன் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே.

(பம்பி - நெருங்கி; பானுவால் - சூரியனால் நம்பன் மாதுலன் - நம்பிக்கைக்குரிய மாமனார்; அம்பின் - நீரினால்; ஆட்டுவதும் - முழுக்காட்டுவோம்; இம்பர் வாரி - இவ்வுலகக் கடல்)

மேகங்கள் ஒரு துளி கூடத் தங்களிடம் வைத்துக் கொள்ளாமல், பிரதி உபகாரத்தையும் எதிர்பாராமல், ஒரே அடியாய்க் கொட்டி விடுகிற தன்மை, கவிக்கு எத்தனையோ தாதாக்களையும், அவர்களுடைய வள்ளன்மையையும் நினைப்பூட்டுகிறது. அதனாலேதான்,

உள்ளி, உள்ளஎல்லாம் உவந்[து] ஈயும் அவ
வள்ளி யோரின் வழங்கின மேகமே!

என்று வியப்படைகிறான். 'உள்ளி' என்றால் 'நாம் இப்படிக் கொடுப்பதால் இம்மையில் எவ்வளவு கீர்த்திப் பிரதாபமும், மறுமையில் எவ்வளவுக்கு ஸ்வர்க்கபோகமும் கிடைக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்த்து' என்று அர்த்தம் இல்லை. இப்படித் தருமத்தையே வியாபாரமாகக் கருதிச் செய்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பது வாஸ்தவந்தான். அதனாலே தான் அப்படி எண்ணி விடப் படாது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. 'உள்ளி' என்றால், இன்னும் வழங்குவதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது என்று துருவிப் பார்த்து' என்று தான் பொருள் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கவியின் உபமானம் எவ்வளவு நயம்பட விளங்குகிறது என்பது புலப்படும். இந்தச் சந்தர்ப்பத்திலே,

"இம்மைச் செய்தது மறுமைக்[கு] ஆம்எனும்
அறவிலை வாணிகன் ஆ[அ]ய் அலன்"

என்னும் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரின் வாக்கு நமக்கு நல்ல வழிகாட்டுவதாக அமைந்திருக்கிறது.

மழை ஏராளமாகப் பெய்துவிட்டால் போதுமா? பாலைவனமானால் நிலம் உறிஞ்சக்கூடப் பற்றாது. மலை அல்லவா? சேதமின்றித் தழைக்கிறது; வளருகிறது என்று கூடச் சொல்லலாம். தினந்தினம் அளவாகத் தந்து கொண்டே இருக்கிறது. 'நீதிநெறி கடவாத செங்கோல் மன்னன் கீர்த்தியோ, அல்லது உண்மையை அறியும் அந்தணர்க்குக் கொடுத்த தானந்தானா?' என்று வியக்கிறான், வியப்படையச் செய்கிறான் கவி. அப்படித் தழைக்கிறது தண்ணீர்.

மானம் நேர்ந்[து] அறன் நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழ்என,
ஞானம் உன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே.

(நேர்ந்து - குறிக்கொண்டு; மனுநெறி போன - மனித தருமப்படி நடப்பதிலே பெயர் போன; தண்குடை வேந்தன் அன்போடு காக்கும் மன்னன்; ஞானம் உன்னியஉண்மை அறிவில் கருத்தை ஊன்றிச் செலுத்திய; நீத்தம் - பெருநீர் வெள்ளம்)

விருப்பு வெறுப்பு இல்லாமல் சகல ஜீவன்களுக்கும் உதவுகிறது ஆறு. இப்படி ஓடி வருவது நமக்கெல்லாம் நதிதான். கவியின் கண்ணுக்கு அது எப்படித் தோன்றுகிறது? அது கேவலம் நதியல்ல; அதில் வருவது வெறும் தண்ணீரும் அல்ல. அது சர்வகோடி ஜீவர்களுக்கும் தாய்ப்பால் என்கிறான். பாட்டைப் பார்ப்போம்;

இரவி தன்குலத்[து] எண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்ஒழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்ன[து] இவ்
உரவு நீர்நிலத்[து] ஓங்கும் உயிர்க்கெலாம்.

(இரவி - சூரியன்; பரவு நல் ஒழுக்கின்படி பூண்டது எல்லோரும் புகழ்ந்து பாராட்டும் ஒழுக்கத்தைப் போலவே, தன்னால் துன்பம் நேராமல் துயரம் துடைக்கும் தன்மையை மேற்கொண்டது; உரவு நீர்நிலம்- நீர் சூழ்ந்த நிலம்)

தண்ணீரின் இன்றியமையாத தன்மையை ஆழமாக ஊன்றி நோக்கினால் இது அப்படியே சுத்தமான உண்மை என்பது தெளிவாகப் புலப்படும்.

மலைச் சிகரங்களுக்கு இடையில் தான் உற்பத்தியாகிறது ஆறு. ஆனால் பல கிளைகளாகப் பெருகி ஓடுகிறது; அருவியாய் ஒழுகுகிறது. இறுதியில் கடலில் கலந்து விடுகிறது. இவற்றை எல்லாம் நாம் காண்கிறோம். இந்த நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டே கம்பன் உண்மைத் தத்துவத்தை நமக்கெல்லாம் உணர்த்தி விடுகிறான்.

மலையில் உற்பத்தியாகிக் கடலில் சங்கமமாகும் நதி எப்படி உண்டாயிற்று? எந்தக் கடலில் சங்கமமாகிறதோ, அந்தக் கடலின் நீர் தான் ஆவியாக மேகமாக மாறி, மழையாகப் பெய்து, கால்களாக ஓடி, அருவியாகக் குதித்து, நதியாகப் பெருகி, தான் சேர வேண்டிய இடத்தை நோக்கிப் பிரயாணம் செய்கிறது. முடிவிலே, தான் எங்கிருந்து வந்ததோ அங்கேயே, அந்தக் கடலிலேயே ஒன்றி விடுகிறது.

முதலில் கடல் என்று ஒன்றாயிருந்தது. பிறகு அது எத்தனை நாமத்தையும், ரூபத்தையும் அடைகிறது! அங்கு இங்கு என்று சொல்ல முடியாதபடி எங்கும் நீக்கமற விளங்குகிறதே! இது என்ன பெரிய மாயையாக அல்லவா இருக்கிறது? எவ்வளவோ சமயிகள் எல்லாம் என் தெய்வம், உன் தெய்வம் என்று சொல்லுகிறார்களே; அந்தக் கற்பனையையும் கடந்த முழு முதலான கடவுளைப் போல அல்லவா இருக்கிறது? இவ்வாறு சொல்லிக் கடவுள் தத்துவத்தின் உண்மையை நமக்குப் புலப்படுத்தி விடுகிறான். ஆம்! மிக மிகப் பொருத்தமான உபமானம். அகண்டமாயிருக்கிற பரமான்மாவின் சிறு சிறு பொறிகள் தாம் ஜீவான்மாக்கள்.

ஜீவான்மா பரமான்மாவிலிருந்து தான் வெளிப்படுகிறது. கடலிலிருந்து நீர் ஆவி ரூபமாகக் கிளம்புவது போல. ஆனாலும் நாம் எல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்; உயிர் வர்க்கம்

எல்லாம் தாயின் கருவிலிருந்து தான் உற்பத்தியாகின்றன என்று. மலையிலிருந்து தான் நீர் உற்பத்தியாகிறது என்று சொல்லுகிறோம் அல்லவா? அதைப்போல. எப்படி ஓடி வருகிற ஆற்றில் உள்ள எல்லா நீர்த்திவலைகளும் நேரே ஓடிக் கடலை அடையாமல், வாய்க்கால்களாய் ஓடி, குளங்கள், ஏரிகள், வயல்கள், தோட்டங்களில் சென்று பாய்ந்து மாய்ந்து விடுகின்றனவோ, அப்படியே ஜீவான்மாக்களிலும் எவ்வளவோ, தாங்கள் அடைய வேண்டிய, லட்சியத்தை நோக்கிச் செல்லும் நெறியை விட்டு விலகிச் சென்று, வேறு இடங்களில் மீளமுடியாதபடி சிக்கிக் கொண்டு விடுகின்றன. இந்த ஆழமான கருத்தெல்லாம் பொதிந்து விளங்கும் கவியைப் பார்ப்போம்.

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்ப அரும் பொருள்ஈ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சி,
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரந்த[து] அன்றே.

(கல்லிடை-மலையிடை; நீத்தம் - வெள்ளம்; மறை-வேதம்; தொல்லையில்- பழமையில், முதல் முதலில்)

இந்த நீர் எங்கெல்லாம் எப்படி எப்படிப் பரந்து நிற்கிறது? உயிர் எப்படி உடம்பெல்லாம் விரவி நிற்கிறதோ, அப்படி நீர் இங்கெல்லாம் பரந்து கிடக்கிறது. ஒரே ஆன்மா பல வேறு தோற்றமும், அளவும், அமைப்பும், பெயரும் கொண்ட எண்ணற்ற உடம்புகளில் எப்படி விரவி நிற்க முடியும்? இந்த அற்புதமான உண்மையை ஒரே தண்ணீர் பல்வேறு தோற்றமும் அளவும், அமைப்பு, பெயரும் கொண்ட எண்ணற்ற இடங்களில் விரவி நிற்கிற தன்மையைக் கொண்டே மிகத் தெளிவாக விளக்கி விடுகிறான். முன்னே கண்ட கவிக்கு மேலும் விளக்கம் கூறுவது போல அமைகிறது அடுத்த கவி, அதையும் பார்ப்போம்.

தாதுகு சோலை தோறும்
சண்பகக் காடு தோறும்
போ[து] அவிழ் பொய்கை தோறும்
புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
வனந்தொறும், வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும்
உயிர்என உலாய[து] அன்றே.

(தாது உகு சோலை - கமரந்தப்பொடி உதிரும் மலர் நிறைந்த மரங்கள் மண்டிய சோலை; போது அவிழ் பொய்கை - இதழ் விரியும் மலர் செறிந்த பொய்கை; புதுமணல் தடம் - அவ்வப்பொழுது புதிய மணல் பரப்பப்படும் குளிக்கும் குளம்; பூகவனம் - கமுகந் தோட்டம்; உலாயது - சஞ்சரித்தது.)

நீர்வளம் மிகுந்திருக்க நிலவளம் எப்படிச் செழித்துள்ளது என்பதை வந்து காணுமாறு நம்மை எல்லாம் அழைக்கிறான் கவி. கம்பன் அழைத்துவிட்டால் நம்மால் போகாமல் இருக்க முடியுமா? சென்று பார்க்கலாம். "இதோ பார்" என்று காட்டுகிறான் கம்பன். பார்க்கிறோம். நாம் பார்ப்பது என்ன? வயலா இது? ஏதோ ராஜதர்பார் நடைபெறும் கொலுமண்டபம் போல அல்லவா இருக்கிறது? திகைப்போடு கம்பன் முகத்தைப் பார்க்கிறோம். நம்மையே நோக்கிக் கொண்டிருக்கும் கம்பன், "ஆம்! இது மகாராணி மருதாயி நாச்சியார் கொலுவீற்றிருக்கும் இடந்தான்" என்கிறான்.

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ.

(தண்டலை - சோலை; விளக்கம் - விளக்கு; கொண்டல்கள் - மேகங்கள்; முழவின் - மத்தளம் போல; தெண்திரை - தெளிந்த அலைகள்; எழினி -

நாடகத்திரை; தேம்பிழி மகரயாழின் - மதுரகீதம் பொழியும் மகரயாழ் என்னும் வாத்தியத்தைப் போல; மருதம் வீற்றிருக்கும் - நன்செய் நிலம் கொலுவீற்றிருப்பதைப் போலக் கம்பீரமாக இருக்கிறது).

வயலே இவ்வளவு கம்பீரமாக இருந்தால் இந்நாட்டு மக்கள் எவ்வளவு இறுமாப்போடு இருப்பார்கள்? ஏதோ ஒருவாறாக நம் உள்ளம் ஊகித்துக் கொண்டு விடுகிறது. இருந்தாலும் நேரே சென்று கண்ணாலே காண வேண்டும் என்ற ஆசை தூண்டுகிறது. நமது எண்ணத்தைக் கண்டு கொண்ட கம்பன், "நாட்டிற்குள் சென்று பாருங்கள்" என்று அனுமதி தருகிறான். புறப்பட்டு விடுகிறோம்; நாட்டிற்குள்ளே நுழைந்தும் விட்டோம்.

இது என்ன? எங்கே பார்த்தாலும் ஒரே கொண்டாட்டமாயிருக்கிறது? திருமண விழா ஒரு பக்கம்! மற்றொருபுறம் நடப்பது சங்கீதக் கச்சேரியா? ஆகா; எப்படி இருக்கிறது! பருந்தோடு நிழல் செல்வது மாதிரி அல்லவா பாட்டோடு இசை இயங்கிச் செல்கிறது? அமுதத்திலும் சுவை மிக்க அரிய சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டு, அதிலே திளைத்திருக்கிறார்கள் ஒருபால். இன்னும் ஒரு பக்கத்திலே கோவில் திருவிழா நடைபெறுகிறது. என்ன குதூகலம்! என்ன நாகரிகம்! "வாழ்க்கை என்றால் வாழ்க்கை! இது அல்லவா வாழ்க்கை!" என்று ஆச்சரியப்படுகிறோம்.

பொருந்திய மகளி ரோடு
வதுவையில் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென்[று] அன்ன
இயல் இசைப் பயன் துய்ப் பாரும்
மருந்தினும் இனிய கேள்வி
செவிஉற மாந்து வாரும்
விருந்தினர் முகம் கண்[டு] அன்ன
விழாவணி விரும்பு வாரும்.

(பொருந்திய மகளிர் - உடல், அறிவு, வயசு முதலியவற்றால் தமக்குப் பொருத்தமான பெண்கள்; வதுவை - கல்யாணம்; பருந்தொடு நிழல் சென்று அன்ன - உயரத்தில் பறக்கும் பருந்தின் அசைவுகளுக்கும் கதிக்கும் ஏற்க எப்படிப் பருந்தின் நிழலும் இருக்கிறதோ, அதைப் போல; இயல் - பாட்டு; இசை

பாட்டிற்கு - இசையும் ராக தாளங்கள்; இயலின் பயனையும், இசையின் பயனையும் அநுபவிக்கிறார்கள் என்பதை, "இயலிசைப் பயன் துய்ப்பார்" என்று காட்டுகிறான்; மருந்தினும் - அமுதத்தைப் பார்க்கிலும்; செவி உற - காதில்பட; மாந்துவார் - ஆர்வத்தோடு கிரகித்துக் கொள்வார்.

திருவிழாக் கொண்டாட்டத்தை அந்நாட்டினார் மிகவும் அநுபவிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வந்த கவி, 'விருந்தாளிகளை எவ்வளவு ஆசையுடன் வரவேற்பார்களோ அவ்வளவு ஆசையோடு' என்று கூறி அந்நாட்டாரின் பண்பாட்டை நமக்கு மிக நன்றாக விளக்கி விடுகிறான்.

ஊருக்குள்ளே நுழைந்து பொதுவாகப் பார்த்த நாம் ஒரு வீட்டிற்குள்ளாவது நுழைந்து அவர்களுடைய மனை வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா? இவ்வளவு நேரம் பார்த்தவையெல்லாம் வெறும் வெளி ஆடம்பரங்களா? அல்லது அவர்கள் உண்மையிலேயே மேலான பண்பட்ட வாழ்க்கை வாழுகிறார்களா? இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? வீட்டிற்குள்ளே நுழைந்து உண்டி முதலியவற்றைப் பார்த்தால் இவர்களின் உண்மை நிலை வெளிப்பட்டுப் போய்விடுகிறது சரி; ஒரு வீட்டிற்குள் போகலாம்.

என்ன, எல்லா வீடுகளும் ஒரே மாதிரியாக அல்லவா காணப்படுகின்றன? எளியவர், செல்வர் என்று இங்கே தாரதம்மியம் இல்லையா என்று சந்தேகம் உதிக்கிறது. சரி; எதிரே தெரிகிற அந்த வீட்டிற்குள் போகலாம். வீட்டிற்குள்ளே நுழைகிறோம். உள்ளே சென்றதும் திகைத்துப் போய்விடுகிறோம். "இது என்ன சத்திரமா? வீடு என்று எண்ணித் தெரியாமல் நுழைந்து விட்டோமா?" என்றெல்லாம் மலைக்கிறோம். அவ்வளவு பெயர் பண்டகசாலையில் இருக்கிறார்கள். ஒரு பெரிய மனிதர் வந்து, "எல்லாரும் சாப்பிட வாருங்கள்" என்று அழைக்கிறார். பேஷ்! ரொம்பச் சரியான நேரத்திலே தான் வந்திருக்கிறோம்!" என்று நம்மை நாமே மெச்சிக் கொள்ளுகிறோம்.

எல்லாரும் உள்ளே சென்று வரிசையாகப் போடப்பட்டிருக்கும் ஆசனங்களில் அமருகிறோம்.

ஒவ்வொருவருக்கும் முன்னே பெரிய தலை வாழை இலை போடப்பட்டிருக்கிறது. உணவு பரிமாறப்படுகிறது. சாப்பாட்டைப் பார்த்தால் பெரிய கல்யாண விருந்தோ என்று சொல்லும்படி இருக்கிறது. மாம்பழம் முழுசு முழுசாய்க் கழுவித் துடைத்துப் போடப்பட்டிருக்கிறது. பலாச்சுளைகள் விதை எடுத்துத் தேனில் ஒரு முழுக்கு முழுக்கிவிட்டு ஒன்றோடு ஒன்றாய்த் தழுவிக் கொண்டு கிடக்கின்றன. பொன்னிறமான தங்க வாழைப்பழம் தோலுரிக்கப்பட்டு உண்போரின் வாயைப் பார்த்துக் கொண்டு தவங்கிடக்கின்றன. எத்தனையோ விதமான வர்க்கான்னங்கள் பலவித நிறமும் மணமும் படைத்துப் பந்தி பந்தியாய்க் காணப்படுகின்றன. வர்க்கான்னம் என்றால் நாம் செய்கிறோமே, அதைப் போன்றதா? எவ்வளவோ சோற்றில் கொஞ்சம் தேங்காய்ப் பூவைத் தூவி விட்டு, ஒன்றிரண்டு முந்திரிப் பருப்பையும் காட்டிவிட்டு, சிறிது நெய்யையும் மேலாகத் தடவி விட்டு அதைத் தேங்காயன்னம் என்று சொல்லுகிறோம். ஒரு சட்டிச் சோற்றில் ஆழாக்கு மோரையும் உப்பையும் போட்டுப் பிசைந்து விட்டு, கொஞ்சம் கடுகு மிளகாய் பெருங்காயம் கறிவேப்பிலையைத் தாளித்துக் கொட்டி விட்டுத் ததியோதனம், பகாளபாத் என்றெல்லாம் தடபுடலான பெயர்களால் மயக்கி விட முயல்கிறோமே! அப்படியா இருக்கிறது, இப்போது நாம் பார்க்கும் வர்க்கான்னம்? மூக்கையும் கண்ணையும் திறந்து கொண்டு பாருங்கள். ஏராளமான பருப்பு வகைகளுக்கிடையில் வழிந்தோடும் நெய்யருவிக்கிடையில் ஏதோ சில சோற்றுப் பருக்கைகளும் காணப்படுகின்றன. தயிர்ச்சாதம், எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அதோ மூலையிலே இருக்கிறதே அது தான் தயிர்ச்சாதம். நம்வீட்டுத் தயிர்ச்சாதத்தைப் போல வெள்ளையாக இல்லையே என்று சந்தேகப் படாதீர்கள். இங்கேயெல்லாம் தயிர்ச்சாதம் சிவப்பாகத்தான் இருக்கும். சோற்றையே காணோமே என்று சந்தேகப்படுகிறீர்களா? செந்தயிர்க் கட்டிகளுக்கிடையில் அங்கங்கே முத்துப் பதித்தது போலத் தெரிகிறதே, அது தான் சோறு.

பாலை நன்றாக வற்றக் காய்ச்சிப் பிரை ஊற்றுவதாலேதான் தயிரின் நிறம் சிவப்பாகவும், அல்வாத் துண்டுகள் போல மென்று

தின்னக்கூடியதாகவும் காணப்படுகிறது. இப்படி நாம் பார்க்கும் இந்தச் சாப்பாடு நித்தியப்படி ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறும் சாதாரணச் சாப்பாடு தான் என்று தெரிந்து கொள்கிறோம்.

முந்துமுக் கனியின், நானா
முதிரையின் முழுத்த நெய்யின்
செந்தயிர்க் கண்டம், கண்டம்,
இடைஇடை செறிந்த சோற்றின்
தந்தம்இல், இருந்து, தாமும்
விருந்தொடும், தமரி னோடும்
அந்தணர் அமுதர் உண்டி
அயில்வுறும் அமலைத்து எங்கும்

(முந்து முக்கனி - முதல்தரமான மா, பலா, வாழைப்பழங்கள். நானாமுதிரை-பலவகைப் பருப்புகள்; முழுத்த - கொட்டிய; செந்தயிர்க் கண்டம் - சிவப்பு நிறமான தயிரக்கட்டி; கண்டம் - கற்கண்டு; தமர் - சுற்றத்தார்; அயில்வுறும் - உண்ணும்; அமலை - ஓசை)

சரி; இந்த நாட்டில் பெண்களின் நிலை என்ன? பெண்களைக் கொண்டல்லவா நாட்டின் சிறப்பை அளக்க வேண்டும்? அவர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கிறது? நாகரிகம் முதிர்ந்து விட்டதாய்க் கொக்கரிக்கும் மேல் நாடுகளைப் போல, இந்த நாட்டாரும் மெல்லியரான பெண்களை முரட்டுத்தனமான சுரங்கத்தொழில் போன்றவற்றில் ஈடுபடச் செய்கிறார்களா? அல்லது ஆண்களின் எதேச்சதிகாரத்தால் கல்வியறிவும், செல்வ உரிமையும் இன்றி வெறும் போகப் பொருளாகவே ஆக்கியிருக்கிறார்களா? இதை எல்லாம் கண்டறிய வேண்டும் என்று உள்ளம் கருதுகிறது. இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்காக நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் நுழைந்து சோதனை போடுகிறோம். ஒரே திகைப்பு, மலைப்பு, கண்ட காட்சி அப்படிச் செய்து விடுகிறது.

பெண்கள் எல்லாம் உயிர் ஓவியம் என்று சொல்லும்படி அவ்வளவு அழகு நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். நல்ல, முறையான வழியிலே ஈட்டிய பொருள் அவர்கள் ஆட்சியில் குவிந்து கிடக்கிறது. தகுந்த கல்விச் செல்வத்திலும்

நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த இரு பெரும் செல்வமும் குடத்துள் விளக்காய் ஒளி மழுங்கியா கிடக்கின்றன? இல்லை; மலர்ந்து எங்கும் மணம் பரப்பி யாவருடைய கருத்தையும் கவருகின்றன. எப்படி மலர்ந்து மணக்கின்றன தெரியுமா? வந்தவர்க்கு இல்லை என்று சொல்லது ஈவதன் மூலமும், சிறந்த விருந்துகள் நடத்தி அளவளாவுவதன் மூலமும் பொழுதைப் பயனுறக் கடத்துகிறார்கள்.

பெருந்த டம்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?

(பெருந்தடம் கண் - பெரிய விசாலமான கண்; பிறை நுதல் - பிறைச் சந்திரனோ என்னும்படி வடிவமும் அவ்வளவு ஒளியும் கொண்ட நெற்றி; பொருந்து செல்வம் - தீமையற்ற நல்ல வழியில் ஈட்டிய செல்வம்; வைகலும் - தினப்படியும்)

"நல்ல காட்சிகளையே கண்டுவிட்டு ஒரேயடியாய் வியந்து கொண்டும், புகழ்ந்து கொண்டும் இருக்கலாமா? நாணயத்தின் இருபுறத்தையும் சோதிக்காமல் முடிவுக்கு வர முடியுமா?" என்று தமக்குள் ஓர் அன்பர் தர்க்க சாஸ்திரம் படிக்கிறார். எனவே, மற்றொரு புறத்தையும் காண நமது உள்ளம் அவாவுகிறது "இங்கே அகால மரண விகிதம் என்ன? தண்டனை பெறுவோர் தொகை எவ்வளவு? கோர்ட்டு, வக்கீல் ஐயா வீடு எல்லாம் எங்கே இருக்கின்றன? விபசார விடுதி, கள்ளுக்கடை, சூதாட்டக்கூடம் - இவை எல்லாம் இருக்கும் இடம் எங்கே? இவற்றை எல்லாம் போய்ப் பார்த்தால் அல்லவா அங்கெல்லாம் மக்கள் எப்படிக் கெட்டழிகிறார்கள் என்பதை உணரலாம். அதன் பிறகு தான் இந்த நாட்டின் உண்மையான தரம் எப்படிப்பட்டது என்று முடிவு செய்யலாம்" என்று மற்றோர் அன்பர் விரிவுரை நிகழ்த்துகிறார்.

"ஆம்; அது தான் சரி; இப்படித்தான் செய்ய வேண்டும்" என்று எல்லோரும் ஏகமனதாய்த் தீர்மானித்துக் கொண்டு புறப்படுகிறோம். அழுகுரல் நமது காதிலே படவில்லை; டவாலிச் சேவகன் நிற்கும் எந்த மண்டபமும் நமது கண்ணில்

படவில்லை. வக்கீல் ஐயாவின் பெயர் தொங்கும் பலகையையும் காண முடியவில்லை. ஒருகால் இந்த ஊரில் உள்ள வக்கீல் ஐயாக்கள் எல்லாம் பேர் போன வக்கீல்களாக இருப்பார்களோ என்று சந்தேகங்கூடத் தோன்றுகிறது. சூதாட்டக் கூடம் எதையும் காணமுடியவில்லை. ‘டவுன் கிளப்’ என்ற நாகரிகப் பெயருடன் கூட, ஒரு போர்டும் கண்ணுக்குப் புலப்படவில்லை. ‘நம்பர்’ போட்ட கள்ளுக்கடைகள் தாம் தென்படவில்லை என்றால் ‘பார் ரூம்’ அல்லது அந்த ஹோட்டல் இந்த ஹோட்டல் என்ற பெயருடன் கூடப் போர்டுகளும் காணக் கிடைக்கவில்லை. ‘இது என்ன ஐயா ஆச்சரியம்! இந்த நாட்டில் விளம்பரம் இல்லாமலேயே காரியம் நடக்கிறதோ?’’ என்று எண்ணிக் கொண்டே சந்தியில் நிற்கிறோம்.

எதிரில் ஒரு பெரியவர் வருகிறார். இவரைக் கேட்டாவது தெரிந்து கொள்ளுவோம். என்று எண்ணி அவரை நெருங்கி, “நமஸ்காரம்” என்று சொல்லுகிறோம். அவரும் பதில் வணக்கம் செய்து விட்டு, “என்ன சங்கதி?” என்று கேட்கிறார். நாம் நமது சந்தேகத்தை அவரிடம் கூறிக் கேள்வி மாரியைப் பொழிகிறோம். அவர் சொல்லுகிறார் - இல்லை - பாடுகிறார் :

கூற்றம் இல்லைஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லைதம் சிந்தையின் செம்மையால்;
ஆற்ற நல்லறம் அல்ல[து]இ லாமையால்;
ஏற்றம் அல்லது இழித்தக [வு] இல்லையே?

(கூற்றம் - எமன்; இங்கே, அகால மரணம்; சீற்றம் - கோபம் அல்லது தண்டனை; ஆற்ற - செய்வதற்கு; நல்லறம் அல்லது நல்லறம் அல்லாத தீயவழிகள்; ஏற்றம் - உயர்வு; இழிதகவு - பழிபாவம்)

“அப்படியா? இவ்வளவு சிறப்பான நாட்டில் ஏன் அன்னசத்திரம் போன்ற அற நிலையங்கள் காணப்படவில்லை?”

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்;

"இது மட்டுந்தானா இல்லை? இன்னும் எங்கள் நாட்டில் இல்லாதவற்றையும் கூறுகிறேன் கேளுங்கள்'' என்று மேலும் பாடுகிறார்.

திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரையி லாமையால்

என்று சொல்லிக்கொண்டே வரும்போது, நம்மில் ஒரு கிண்டல்காரப் பேர்வழி, "அப்படியானால் உங்கள் நாட்டில் கம்பனைப் போன்ற மகாமேதைகளுக்கும் இடம் இல்லையோ?'' என்று கேட்கிறார்.

"ஆம்; மிகவும் கணக்காய்க் கேட்டு விட்டீர்கள்; நீங்கள் நினைப்பது முற்றும் சரி; நூற்றுக்கு நூறு உண்மை'' என்று சொல்லி விட்டுக் கடைசி அடியைப் பாடுகிறார்.

ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்

பாட்டை முடித்துவிட்டு மேலும் பேசுகிறார்; "ஓர் இடத்தில் ஒரு வள்ளல் இருக்கிறான் என்றால் அதன் அர்த்தம் என்ன? பல்லாயிரக் கணக்கான தரித்திரர்கள் இருக்கிறார்கள் என்பது தான்; இல்லையா? ஒரு பெரிய பயில்வான் இருக்கிறான் என்றால் எண்ணற்ற நோஞ்சல்கள், பலவீனர்கள் இருக்கிறார்கள் என்பது தானே பொருள்? உண்மைக்கு ஓர் அரிச்சந்திரன் என்றால் மற்றவர்கள் எல்லாம் புரட்டர்கள்தாம் என்பது புலப்படவில்லையா? அறிஞன் ஒருவன் இருக்கிறான் என்று பெருமைப்படுவது, எத்தனையோ அறிவற்ற முண்டங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்று சிறுமைப்படுத்தவில்லையா?'' என்று சொல்லி விட்டுப் பாட்டை மறுபடியும் எக்களிப்போடு பாடுகிறார்.

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரைஇ லாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்.

(வண்மை - தாராள ஈகை; திண்மை - பேராற்றல்; செறுநர் - பகைமையால் சண்டை செய்வோர்; ஒண்மை - அறிவுப் பிரகாசம்; கேள்வி - சர்ச்சை அல்லது கேட்பது.)

"இந்த மாதிரியான சிறப்புக்கள் எல்லாம் வஞ்சனை அறியாத மக்கள் வாழும் கிராமங்களில் மட்டுந்தானா? அல்லது நகரங்களிலும் உண்டா?'' என்று கேட்கிறோம் பெரியவரை, பெரியவர் சொல்லுகிறார்.

கிராமங்களில் மட்டுமல்ல; தம்பிகளே! மேகமும் சமுத்திரமுங் கூட வெட்கப்படும்படி அவ்வளவு பலமாயும் தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டே இருக்கும் முரசுகளை உடைய நகரங்களில் வாழும் மக்களிடையிலும் இப்படித்தான். பெரிய நகரமாயிற்றே, அங்கெல்லாம் தெருக்காவல் உண்டா அல்லது வீட்டுக்கு வீடு தனிக் காவலாவது உண்டா? திருடன் இருந்தால் அல்லவா காவலுக்கு அவசியம்? திருடனும் இல்லை; காவலும் இல்லை. திருட்டுக்கூட ஏன் ஏற்படுகிறது? இல்லாமையினாலே தான். இரப்பதற்கும் இல்லாமைதானே காரணம்? இங்கே இரப்பவர்களே இல்லையாதலால், கொடுப்பவர்களையும் காண முடியாது''

தெள்வார் மழையும், திரை ஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ!

(தெள்வார் - தெளிவாய்ச் சரம்போலத் தொங்கும்; திரை - ஆழி - அலைகடல்; உட்க - அச்சம் அடைய; வள்வார் முரசம் - வளவிய வாரால் கட்டப்பட்ட முரசு; அதிர் சப்திக்கும்; மாக்கள் - மக்கள்; கள்வார் - திருடுபவர்)

"முற்றப் படித்து முடித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் யாரும் எங்கள் நாட்டில் இல்லை; ஆனால் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று யாரையும் சொல்லி விட முடியாது. எல்லாரும் மேலும் மேலும் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். இது தவிர, பொருட் செல்வம், பயிர்ச் செல்வம் முதலிய பல செல்வங்களிலும் எல்லோரும் குறைவற்றவர்களாய்

இருக்கிறார்கள். கல்விச் செல்வம் மட்டுமல்ல, பொருட் செல்வங்கூட எங்கள் நாட்டிலே எல்லாருக்கும் பொது உடைமையாய் இருக்கிறது. ஆதலால் இந்த நாட்டிலே, உடையவர்கள் இல்லாதவர்கள், ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடெல்லாம் காண முடியாது."

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர்அல் லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.

"இவ்வளவு மகோன்னதமான நாட்டை எப்படி ஐயா கம்பன் உண்டாக்கினான்?" என்று நாம் பெருமூச்சு விடுகிறோம். "எந்த நாட்டையும் இப்படிச் செய்து விடலாம்; கம்பன் அதற்கும் வழி எழுதி வைத்திருக்கிறான்" என்று பெரியவர் சொல்லுகிறார். "என்ன வழி ஐயா அது?" என்று ஒரே ஆர்வத்தோடு கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் பெரியவர்.

"இதைப் போன்ற இன்பம் கனியும் நாட்டை, போக பூமியை, உண்டாக்க வேண்டுமென்றால், தம்பிமார்களே! நீங்கள் செய்ய வேண்டியது ஒரே ஒரு வேலை; அது தான் கல்வி. ஆம்! கல்வி! கல்வி ஒன்று தான் அது. கல்வி என்ற ஒரே விதையை நீங்கள் விதைத்துவிட்டால், அது முளைக்கும்; வளரும்; வளர்ந்து 'கேள்வி' என்ற கிளைகளை நாலு திசையிலும் பரப்பும். அந்தக் கிளைகளில், 'நல்ல முயற்சி' என்னும் தளிர்கள் தளிர்க்கும். 'அன்பு என்னும் மொட்டுகள்' அரும்பும். அன்பாய் அரும்பிய மொட்டு அறமாய் மலரும். அற மலர் 'போக'க் கனியை இன்பப் பழத்தை, கொடுக்கும். அந்த இன்பக் கனியின் மணத்தைத்தான் நீங்கள் இவ்வளவு நேரமாக அநுபவித்துக் கொண்டிருந்தீர்கள் தெரிந்ததா? ஒரு நாடு செம்மையடைய, பண்பாட்டை அடைவதற்கு, அடிப்படை கல்வி தான். நாட்டு மக்களுக்கு எல்லாம் கல்வியை, உண்மையான பயனுள்ள கல்வியைப் புகட்டி விட்டால் எல்லா இன்பமும் எளிதாய்க் கிட்டிவிடும்" என்று கம்பன் சொல்லுகிறான்.

(வண்மை - தாராள ஈகை; திண்மை - பேராற்றல்; செறுநர் - பகைமையால் சண்டை செய்வோர்; ஒண்மை - அறிவுப் பிரகாசம்; கேள்வி - சர்ச்சை அல்லது கேட்பது.)

"இந்த மாதிரியான சிறப்புக்கள் எல்லாம் வஞ்சனை அறியாத மக்கள் வாழும் கிராமங்களில் மட்டுந்தானா? அல்லது நகரங்களிலும் உண்டா?" என்று கேட்கிறோம் பெரியவரை, பெரியவர் சொல்லுகிறார்.

கிராமங்களில் மட்டுமல்ல; தம்பிகளே! மேகமும் சமுத்திரமுங் கூட வெட்கப்படும்படி அவ்வளவு பலமாயும் தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டே இருக்கும் முரசுகளை உடைய நகரங்களில் வாழும் மக்களிடையிலும் இப்படித்தான். பெரிய நகரமாயிற்றே, அங்கெல்லாம் தெருக்காவல் உண்டா அல்லது வீட்டுக்கு வீடு தனிக் காவலாவது உண்டா? திருடன் இருந்தால் அல்லவா காவலுக்கு அவசியம்? திருடனும் இல்லை; காவலும் இல்லை. திருட்டுக்கூட ஏன் ஏற்படுகிறது? இல்லாமையினாலே தான். இரப்பதற்கும் இல்லாமைதானே காரணம்? இங்கே இரப்பவர்களே இல்லையாதலால், கொடுப்பவர்களையும் காண முடியாது"

தெள்வார் மழையும், திரை ஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ!

(தெள்வார் - தெளிவாய்ச் சரம்போலத் தொங்கும்; திரை - ஆழி - அலைகடல்; உட்க - அச்சம் அடைய; வள்வார் முரசம் - வளவிய வாரால் கட்டப்பட்ட முரசு; அதிர் சப்திக்கும்; மாக்கள் - மக்கள்; கள்வார் - திருடுபவர்)

"முற்றப் படித்து முடித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் யாரும் எங்கள் நாட்டில் இல்லை; ஆனால் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று யாரையும் சொல்லி விட முடியாது. எல்லாரும் மேலும் மேலும் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். இது தவிர, பொருட் செல்வம், பயிர்ச் செல்வம் முதலிய பல செல்வங்களிலும் எல்லோரும் குறைவற்றவர்களாய்

இருக்கிறார்கள். கல்விச் செல்வம் மட்டுமல்ல, பொருட் செல்வங்கூட எங்கள் நாட்டிலே எல்லாருக்கும் பொது உடைமையாய் இருக்கிறது. ஆதலால் இந்த நாட்டிலே, உடையவர்கள் இல்லாதவர்கள், ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடெல்லாம் காண முடியாது."

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர்அல் லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.

"இவ்வளவு மகோன்னதமான நாட்டை எப்படி ஐயா கம்பன் உண்டாக்கினான்?" என்று நாம் பெருமூச்சு விடுகிறோம். "எந்த நாட்டையும் இப்படிச் செய்து விடலாம்; கம்பன் அதற்கும் வழி எழுதி வைத்திருக்கிறான்" என்று பெரியவர் சொல்லுகிறார். "என்ன வழி ஐயா அது?" என்று ஒரே ஆர்வத்தோடு கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் பெரியவர்.

"இதைப் போன்ற இன்பம் கனியும் நாட்டை, போக பூமியை, உண்டாக்க வேண்டுமென்றால், தம்பிமார்களே! நீங்கள் செய்ய வேண்டியது ஒரே ஒரு வேலை; அது தான் கல்வி. ஆம்! கல்வி! கல்வி ஒன்று தான் அது. கல்வி என்ற ஒரே விதையை நீங்கள் விதைத்துவிட்டால், அது முளைக்கும்; வளரும்; வளர்ந்து 'கேள்வி' என்ற கிளைகளை நாலு திசையிலும் பரப்பும். அந்தக் கிளைகளில், 'நல்ல முயற்சி' என்னும் தளிர்கள் தளிர்க்கும். 'அன்பு என்னும் மொட்டுகள்' அரும்பும். அன்பாய் அரும்பிய மொட்டு அறமாய் மலரும். அற மலர் 'போக'க் கனியை இன்பப் பழத்தை, கொடுக்கும். அந்த இன்பக் கனியின் மணத்தைத்தான் நீங்கள் இவ்வளவு நேரமாக அநுபவித்துக் கொண்டிருந்தீர்கள் தெரிந்ததா? ஒரு நாடு செம்மையடைய, பண்பாட்டை அடைவதற்கு, அடிப்படை கல்வி தான். நாட்டு மக்களுக்கு எல்லாம் கல்வியை, உண்மையான பயனுள்ள கல்வியைப் புகட்டி விட்டால் எல்லா இன்பமும் எளிதாய்க் கிட்டிவிடும்" என்று கம்பன் சொல்லுகிறான்.

ஏகம் முதற்கல்வி முளைத்[து] எழுந்து, எண்இல் கேள்வி
ஆக முதற்றிண் பணைபோக்கி அருந் தவத்தின்
சாகம் தழைத்து அன்[பு] அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே!

(ஏகம் - ஒன்றே ஒன்று; முதல் - வித்து; எண்இல் - ஏராளமான. கேள்வி - சர்ச்சை அல்லது கேட்பது; பணை - கிளை; அருந்தவம் - நல்ல முயற்சி; சாகம் - இலை; போகம் - இன்பம்; போலும் - போல இருக்கிறது.)

பாட்டை முடிக்கிறார் பெரியவர். "இது தான் காந்தியடிகள் கனவு கண்டு கொண்டிருக்கிற சர்வோதய நாடா?" என்று வியக்கிறோம். நன்றியறிதலுடனும் வணக்கத்துடனும் பெரியவரைப் பார்த்து, "மிகவும் நமஸ்காரம்; நீங்கள் செய்த இந்தப் பேருதவியை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம்" என்று சொல்லி விட்டு, 'இனி நாட்டிலே அடிப்படையான கல்வியைப் புகட்டுவதே நமது திருப்பணி என்று மனப்பூர்வமாய்ப் பிரதிக்ஞை செய்து கொண்டு திரும்புகிறோம் நாம். நம்மை அறியாமலே உள்ளம், "சபாஷ் கம்பன்!" என்கிறது. வாயோ, "கம்பன் வாழ்க!" என்று வாழ்த்துகிறது.

மகளிர் கல்வி

"கம்பன் அடிப்பொடி"

மக்களை நோக்க விலங்கு எவ்வளவு இழிந்ததோ, அஃதே போல் கற்றாரை நோக்கக் கல்லாதாரும் இழிந்தோரேயாவர் என்பதைப் பொய்யாமொழியார்,

"விலங்கொடு மக்களனைவர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்ற அருமைத் திருக்குறளால் விளக்கிப் போந்தார். அக்குறளில் பால்வேற்றுமை காணாது **'மக்கள்'** எனப் பொதுப்படக் கூறியதிலிருந்தே கல்வி இருபாலார்க்கு மின்றியமையாத தொன்றென்பது பெறப்படும். எனினும், நாமின்னும் நமது பெண்மணிகளின் கல்வியில் போதிய கவனம் செலுத்தாதிருப்பது நந்தமிழகஞ் செய்த தீவினையே போலும்.

சின்னாட்கட்கு முன்னர்த் தமிழாராய்ச்சியுடையவோர் பத்திரிகாசிரியர் ஓர் பெண்மணியைத் தாக்கி எழுதப்புகுங்கால், பெண் மக்கள் கல்வி கற்றல் கூடாதெனவும்; அஃது நந்தமிழர் கொள்கைக்குப் புறம்பானதெனவும் பொருள்படவெழுதியும் சங்க காலத்தில் - சங்க நூலில் - பெண்மக்கள் கல்வி கற்கலாமென்பதற்குச் சான்று காட்ட முடியுமா? வென்றும், "கம்பன் காலத்தில் - கம்பராமாயணத்தில் - பெண்கள் கல்வி கற்றிருந்தார்கள் என்பதற்கு ஆதாரமுண்டா" வென்றும் வினவியுமிருந்தார். அவர் பல கால் கம்பராமாயணம் முதலிய தமிழ் இலக்கிய நூல்கட்குப் பொருளுரைக்க நேரில் கண்டமையான் அவர் தெரிந்து கூறுகின்றாரா அன்றித் தெரியாதேதான் கூறுகின்றாரா என்பதை அறியக்கூட வில்லை. அவர் எவ்வாறு - எந்நோக்கங் கொண்டு - அவ்வாறெழுதி யிருப்பினும் நமக்கு அக்கறையில்லை. பிறர்பால் குற்றங்காணுவதும் நமது கொள்கையில்லை. ஆகவே, அவர்தம் வினாவிற்குத் தக்க விடை சங்கநூல், கம்பராமாயணம்

முதலியவற்றிற் கிடைக்குமா வென்பதை மட்டும் ஆராயப்புகுவோம்.

ஐம்பெருங்காவியத்து ளொன்றானதும், கடைச்சங்க காலத்தை யடுத்ததும், நச்சினார்க்கினியராற் பொருள் செய்யப்பட்டதும், சீவகன் கதையை வனப்புறக் கூறுவதுமான சீவகசிந்தாமணி என்னும் நூலில் நாமகளிலம்பகத்தில்,

"வண்டுமொய்த் தாற்றும்பிண்டி லாமனால்
வடித்த நுண்ணூல்
உண்டு வைத்தனையுநீயு முணர்விலா
நீரை யாகி
விண்டுகண் ணருவிசோர விம்முயிர்த்
தினையை யாதல்
ஒண்டொடி தகுவதன்றா லொழிகநின்
கவலை யென்றான்"

என்ற செய்யுளால் சச்சந்தன் இல்லாளும் சீவகன் தாயுமாகிய விசயை யென்பாள் கற்றறிந்த பொற்றொடி யென்பது துலக்க மாகின்றது.

அன்றியும் கடைச்சங்கக் காலத்தேயுள்ள புலவர் பெருமக்களாற்றரப்பட்ட எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூறு என்னுள் நூலில் உள்ள செய்யுட்களுக்கிடையில் மாதர் மணிகளின் பாட்டுக்கள் பல மாண்புற்றொளிர்கின்றன. அவையனைத்தனையு மீண்டெழுதப்புகின் மிக விரிந்து விடுமோவென அஞ்சி அவற்றையாக்கிய செந்தமிழ்ச் செல்வியர் பெயர்களையும், முக்கியமான பா இரண்டொன்றையும் கீழே காட்டுவதும், அவர்களின் பெயர்களாவன :-

ஔவையார்,
பொன்முடியார்,
பாரிமகளிர்,
காமக்கண்ணியார் [காமக்ஷி],
பூதப்பாண்டியன் தேவி,

பெருங்கோப்பெண்டு,
மாற்பித்தியார்,
வெண்ணிக்குயத்தியார்,
மாறோக்கத்து நப்பசலையார்.

இவர்களில் ஒளையாரின் கல்வித்திறமையையும், நாவன்மையையும் பற்றி நாமதிகம் எடுத்துரைக்க விரும்பவில்லை. அவர் தம் பெயரும்; புகழும் அறியாப் பள்ளிச்சிறார் கூட இக்காலத்திலிருக்க மாட்டார்கள். ஆனது பற்றியே நாம் அவர் புகழ் பேச கண்டு விரும்பவில்லை.

பொன்முடியார் எனப்பெயரிய நன்மொழிப் புலமைப் பெண்மணியார் கல்வியறிவுடையார் என்பது அவராலாக்கப் பெற்ற

"ஈன்றுபுறந்தருத லென்றலைக்கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக்கடனே
வேல்வடித்துக் கொடுத்தல்கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம முருக்கி
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்னுமொவ்வொருவருக்குமுரிய கடப்பாடுகளைக் கூறும் செய்யுளாலறியக் கிடக்கின்றது. அன்றியும்,

"பருத்தி வேலிச் சீறூர் மன்ன
னுழுத்தத ருண்ட வோயநடைப் புரவி
கடன்மண்டு தோணியிற்படை முகம்போழ
நெய்ம்மிதியருந்திய கொய்சுவ லெருத்திற்
றண்ணடை மன்னர் தாருடைப் புரவி
யணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிர் னிகழ்ந்து நின்றவ்வே"

என்ற செய்யுளில் சிற்றூரரசனுடையதும் உழுத்தஞ் சக்கையையுண்டதும் பகட்டில்லாததுமான குதிரை பகைவருடைய சேனையை கடலினலைகளைப் பிளந்து

செல்லும் தோணியைப் போலக்கடுகி அஞ்சாது சென்றது. பெருஞ் செல்வம் நிரம்பிய வேந்தரின் நெய்விரவிய உண்டியைத் தின்றதும், மிக்க சிறப்பான அலங்காரங்களோடு கூடியதுமான குதிரைகள் முருகன் கோயிற் கலந்தொடா மகளிரைப் போலச் செருமுகத்தே சும்மா நிற்கின்றன" என்று கூறும் இவர் உவமை கற்பதற்குப் பெரிதும் கழிபேருவகை தருவதாகும்.

பறம்பு நகர் கோமானாகிய பாரிவள்ளலின் செல்வப் புதல்வியராகிய பாரிமகளிர் என்னும் சீரியமாது நல்லார் தம்தந்தை இறந்தகாலை அவர் தம் பிரிவாற்றாது வருந்திப் புலம்பிய பாடல்களில் ஒன்றைக் கீழே தருகின்றோம். அஃது படிப்பவர் மனத்தைப் பாபாயுருக்கும் தன்மைத்தாயிருக்கின்றது.

அற்றைத்திங்க ளவ்வெண்ணிலவி
னெந்தையு முடையேமெங்குன்றும் பிறர்கொளா
ரிற்றைத்திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங், கொண்டார்யா மெந்தையு மிலமே

"அந்த மதியின் அவ்வெள்ளிய நிலாவின் கண் எங்கள் தந்தையுமுடைத்தாயிருந்தோம். எம்முடைய மலையையும் பிறர் கொள்ளாதிருந்தார். இந்த மதியின் இவ்வெண்ணிலாவின் போதோ வென்றதை முரசினைக் கொண்ட மன்னர் எங்கள் மலையைக் கொண்டார். யாமெந்தந்தையையுந் தோற்றோம்" என வரற்றி வாடுவது பெரிதும் சோகம் நிறைந்ததாயிருக்கின்றது.

மேற்காட்டிய சான்றுகளான சங்க காலத்திலே மங்கை நல்லார் கற்றறிவு பெற்றிருந்தார்கள் என்பது வெள்ளிடை மலையாம்.

கம்பராமாயணத்திற் பெண் மக்கள் கல்வி கற்றிருந்தார்கள் என்பதற்கு சான்று காட்டுகின்றேன்.

கோசலநாட்டுக் கோதைமடவா ரெல்லாரும் செல்வத்தாலும், கல்வியாலும், நிறைந்திருந்தமையான், நாடொறும் இரப்போர்க்குகீதலும் விருந்தினரோம்புதலுமின்றிப்

பிரிதொரு தொழிலும் அந்நாட்டு மங்கையர்க்கு நேர்வதில்லை என்பது போதர நாட்டுப்படலத்தில்,

"பெருந் தடங்கட் பிறை நுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தி மன்றி விளைவன யாவையே."

எனக் கூறியிருப்பது ஆராய்ந்தறியற் பாலதாம். அன்றியும், நாட்டுப் படலத்திலேயே

"......... வெண்மையில்லை பல் கேள்வி மேவலால்"

என்றும் நகரப் படலத்தில்,

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லையவை வல்லரல்லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
இல்லாருமில்லை யுடையார்களுமில்லை மாதோ"

என்ற விருத்தங்களால கோசல நாட்டிலும், அயோத்தி மாநகரிலுமுள்ள ஆண்பெண் பாலராகிய "எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும்" பெற்று இன்பமுற்றிருந்தார்கள் என்பது பெறப்படுகின்றது. மேலும் நகரப் படலத்திலேயே,

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
யாகம் முதற்றிண் பணைபோக்கி யருந் தவத்தின்
சாகந் தழைத் தன்பரும்பித் தருமம் மலர்ந்து
போகங்கனியொன்று பழுத்தது போலு மன்றே"

எனக் கூறியிருப்பதும், அந்நகர மாந்தர்பால் கல்வி என்னும் வித்தானது முளைத்து எழுந்து, அளவற்ற கேள்வி என்னும் கிளை பல போக்கி அரிய தவம் என்னும் தளிர்கள் தழைத்து, அன்பு என்னும் அரும்பின்று, தருமம் என்னும் மலர்பூத்து இன்பமென்னும் பழமொன்று பழுத்ததென்னும் அரிய கருத்துக்களை விளக்குகின்றதன்றோ?

நாம் முன் காட்டிய பல சான்றுகளானும் கம்பர் காலத்தேயும், அவர்க்கு முற்பட்ட காலத்தேயும், கல்வியறிவு பெற்றவர்களாகவே எல்லாரு மிருந்திருக்கின்றார்களென்பது குன்றின்மேல் விளக்கென நன்றாயறியக் கிடக்கின்றது.

பண்டைப் பெரியார்கள் பெண் கல்வி பற்றி வற்புறுத்திக் கூறாமைக்குக் காரணமென்னையெனச் சிலர் வினவுகின்றார்கள். அக்காலத்தில் பெண்கள் எல்லோரும் கல்வி கற்று வந்திருக்கின்றார்கள். பெண்கள் கற்கலாகாதென்ற கொள்கையுடையாரிருந்ததாயும் யாமறியக்கூடவில்லை. ஆனதாற்றான் கல்வி சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் பால் வேற்றுமை கொள்ளாது எல்லாரும் கூறியிருக்கின்றார்கள். மேலும் பெரும்பாலான நூல்களில் பெண்மக்கள் நடக்க வேண்டிய முறை பற்றியும் வலியுறுத்தியிருக்கின்றார்கள். அவற்றை யெல்லாம் நோக்கும் போது பெண்கள் கல்வி கற்கக்கூடாதென்றால் பள்ளிச் சிறார்க்குக் கற்றுக் கொடுக்கும் வண்ணம் ஆக்கிய எளிய சொற்றொடருள்ள நூல்களிலும் பெண்கள் ஒழுக்கம் கூறப்பட வேண்டிய தேவை என்ன என்பதை யறியக் கூடவில்லை.

"எண்ணெழுத் திகழேல்"
"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்"
"எண்ணென்ப வேனையெழுத் தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத் திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று பலவிடங்களிலும் கூறியிருக்கும் நீதி மொழிகளில் ஓர் பாலிற்கோர் நீதி கற்பிக்கப் படவில்லை.

கல்லாமையுடையார் (எப்பாலாயினும்) கண் பெறாதாரே யாவர். அவர் முகத்திரண்டு புண்ணுடையோரேயாவர். புலவர் பெருமக்கள் கல்லாத பெண்களின் கண்களைத் தாமரை, குவளை, கடல், மீன், வாள், வேல் என எட்டுணையளவு புகழ்ந்து கூறிப் போற்றினும் அக்கண் புண்ணேயாகுமென்பதை மறுக்க

முடியாது. அப்புண்ணை ஆற்றினாற்றான் கண்ணைப் பெறமுடியும், கல்வி என்னும் மூலிகையே தான் அப்புண்ணை ஆற்றும் வன்மை பெற்றது. ஆகவே, புண்ணுடையோர்க்குக் கண்ணைத் தர வேண்டியது கற்றறிந்த மாந்தர் கடன்.

இன்னும் தெளிவாக நாலடியாரில் கூறப்பட்டிருக்கும் ஓர் பாட்டைக் கூறி நமது கட்டுரையை முடிப்போம்.

"குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்ட ழகும்
மஞ்சளழகு மழகல்ல – நெஞ்சத்து
நல்லம் யாமென்று நடுவு நிலைமயாங்
கல்வி யழகே யழகு"

முடியழகும், உடையழகும் மஞ்சளழகும் உண்மையான அழகாகமாட்டாது. கல்வியின் அழகே மெய்யழகாகும் எனக் கூறியிருப்பது பெரிதும் ஒப்பக்கூடிய தொன்றாகும். அதில் குஞ்சி என்பதை மயிர்ப் பொதுவாயும் கொள்ளலாம். சிறப்பாக அச்சொல் ஆண் மயிரைக் குறிப்பதால் அதை வேண்டுமாயின் ஆண்மக்கட்குடைய அழகென எடுத்துக் கொள்ளட்டும். முன்தானை வைத்துச் சேலை கட்டுவதும் மஞ்சளணிவதும் பெண்கட்குரிய அழகானமையான் அது தங்கட்கேயுரிய தெனக் கூறுவரா ஆண்மக்கள்? ஆகையால் பெண் மக்கள் கல்வி கற்கலாகாதெனக் கூறமுடியாதென்பதே பண்டைப் பெரியார்களின் நூல்களினின்றும் பெறப்படும்.

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதவர் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு" - குறள்

கம்பனில் தாவரங்கள்

"கம்பன் அடிப்பொடி"

கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை சிறந்த - பயன்மிக்க - பணியாற்றி வருகிறது. அதன் தலைவர் பேராசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தம்பால் பயிற்சி பெறும் மாணாக்கர்களை எல்லாம் செந்நெறிப்படுத்திப் பொருளாய்வுக் கட்டுரைகள் மலர, மலர்ந்து மணம் பரப்பச் செய்கிறார். அதன் பயனாய் மலர்ந்தவற்றுள் "கம்பனில் தாவரங்கள்" எனப் பெயரிய இது நறுமணம் வீசும் புதுமலர். மொழி வளத்திற்கு மட்டுமின்றி அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிவன இத்தகைய ஆய்வு நூல்கள்.

இப்பொருளாய்வுக் கட்டுரையைப் படைத்தவர், எம்.ஏ. வகுப்பு மாணாக்கியரான செல்வி கி. மோகனகுமாரி ஆவார் - மிக்க ஆர்வத்தோடும், ஈடுபாட்டோடும் நூல் முழுதும் நுழைந்து பலவற்றையும் தேடித் தொகுத்து, துருவி ஆராய்ந்து, தேர்ந்து தெளிந்து வகுத்துக் கோத்திருக்கிறார். நவீன விஞ்ஞான நெறிப்படி பாகுபாடு செய்து விளக்கம் தந்து நூலைச் செம்மையுடையதாக ஆக்கியுள்ளார்.

தாவரங்களை எல்லாம் முதலில் **'பூக்கும் தாவரம்'**, **'பூவாத் தாவரம்'** என இருவகைப்படுத்திக் கொள்கிறார். பூக்கும் தாவரங்களை **'மூடுவிதைத் தாவரம்'**, **'மூடாவிதைத் தாவரம்'** என்று இரு பிரிவினவாய்ப் பகுத்துக் கொள்கிறார். மூடுவிதைத் தாவரங்களை **இரட்டை விதையிலைத் தாவரம் ஒற்றை விதையிலைத் தாவரம்** என்ற உட்பிரிவுகள் இரண்டனுள் அடக்கி வைக்கிறார். அங்ஙனமே, பூவாத் தாவரங்களை **பாசி, காளான்** என்று இரு பிரிவினவாய் வகுத்துக் கொள்கிறார்.

இங்ஙனம் இனம், பிரிவு, உட்பிரிவு முதலியவற்றைச் செவ்விதின் கணித்து வகுத்துக் கொண்ட பின்னர் அவ்வவற்றைப் பற்றி நூலின் துணைக் கொண்டும், பிற ஆசிரியன்மார்கள் உதவி கொண்டும் பொருளாய்வு புரியத் தொடங்கியுள்ளார். ஆய்ந்து

கண்டவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கிறார். படிப்போர்க்கு அலுப்புத் தட்டாத முறையில் சுவைமிக்க கட்டுரையாக அமைந்திருப்பது இதன் சிறப்பாகும். கம்பனை - அவன் காட்டும் பொருள்களை - நாம் காண்பதுடன் துய்க்கவும் ஏற்ற முறையில், சங்கப்புலவர்கள் முதல் பிற்கால அவ்வை உள்படப் பல்லோர் பாடல்களையும் எடுத்துக்காட்டி விளக்கம் தருவது நூலின் சிறப்பையும் பயனையும் மிகுத்து நிற்கிறது.

அனைத்துள்ளும் “காந்தள்” என்னும் தலைப்பில் இவர் எழுதியுள்ள கட்டுரை அருமையாக உள்ளது. தெளிவும், வளமும் பெற்றுப் படிப்போர்க்கு அளவிலா இன்பம் பயப்பதாய் அமைந்திருக்கிறது. அங்ஙனமே “தாமரை” என்னும் கட்டுரையும் செவ்வி நனி பெற்றுத் திகழ்கிறது.

காந்தட்பூவை, தமிழ் இலக்கியங்கள் கூறுமாப்போல, “தோன்றிப்பூ” என்றே மலையாள மக்கள் வழங்குகிறார்கள் என்பதிலே கட்டுரையாளர் பெருமகிழ்வு கொள்ளுகிறார். இது மட்டுமல்ல, இன்னும் ஏராளமான நற்றமிழ்ச் சொற்களும் அங்கு நாளும் பயிலப்படுவதை எண்ணினும் கட்டுரையாளர் நன்கறியக் கூடும்.

எங்கள் பகுதியில் காந்தளை, “கார்த்திகை பூ” என்றே வழங்குவர். கார்த்திகை மாதத்தை ஒட்டி மலர்வதாலோ, விரல்கள் போன்ற அழகிய ஆறு இதழ்கள் உடைமையாலோ அல்லது கார்காலமாகிய பெண் (கார்த்தி)ணின் கைம் மலர் என்ற பொருள் கற்பித்தோ இங்ஙனம் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் போலும்! அன்றியும் வெண்காந்தளைக் காந்துகம், கோடல், கோடை என்றும், செங்காந்தளை இலாங்கலி, தோன்றி, பற்றை என்றும் இனம் பிரித்துக் கூறப்படுவதை, நிகண்டு, அகராதிகளில் காணலாம்.

நூலுள் சென்று அதன் அருமைகளையும் பெருமைகளையும் அறிந்து மகிழ்வது மட்டும் போதுமா? குறைகளையும் கண்டு அவற்றைக் களையும் வழியிலும் பணி புரிவதன்றோ

மெய்யன்பர்க்குரிய கடன்? எனவே அந்தப் பணிக்கு விரையுமுன் ஒரு வரையறையை உரக்கச் சிந்திக்கலாம்.

கம்பன் சொல்லின் செல்வன்; கவி; மகாகவி; கவிச்சக்கரவர்த்தி; கலைஞன்; நாடகக் கலைவலான்; பெருங்காப்பியம் படைத்த பெரும்புலவன். ஆம்! அனைத்தும் மெய்யே! ஆனால் பொருளாய்வு செய்யும் பொழுது மறவாமல் நம் நினைவில் பதித்துக் கொள்ள வேண்டுவது **"கல்வியில் பெரியன் கம்பன்"** என்ற ஒன்றே ஒன்றைத்தான்! கம்பன் பித்தால் நான் பேசவில்லை; அவனருளால் அவனை - அவன் படைப்பை - அவற்றின் மெய்ந்நிலையை அறிய முயன்று கொண்டிருக்கும் ஓர் எளிய மாணாக்கன் என்ற முறையிலேயே இதைச் சொல்லுகிறேன்.

ஆய, ஆய, அவன் பெருமை அளப்பரிதாய்த் தோன்றுகிறது. ஆம்; இஃது உண்மை: வெறும் புகழ்ச்சி இல்லை!

இல்லாத உலகத்து எங்கும் –
இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே! என்னும் காட்சி

யானறிந்தவரை கம்பனிடத்திலே தான் காணக் கிடக்கிறது.

இதை மனத்தில் கொண்டு, எவ்வித விருப்பு - வெறுப்புமின்றிக் கம்பனை ஆயப் புக வேண்டும். அங்ஙனம் ஆயப் புகுங்கால் அவனே அறிவு ஒக்க நின்று கைகாட்டி வழிநடத்திச் செல்கிறான். விஞ்ஞானக் கருத்துகள் வந்து மோதும் போதும் சரி உரையாசிரிகள் கருத்து வந்து முரணும் போதும் சரி, உடனே நாம் ஒரு முடிவுக்கும் வந்து விடப்படாது. அனைத்தையும் அலசிப் பார்க்க வேண்டும். தேவையானால் வேறு வழியின்றேல் பொருளை, இருக்கும் இடம் தேடிச் சென்று, நேரில் கண்டு தெளிய வேண்டும். கம்பன் உள்பட எவரையும், எதையும், அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் பல்லாற்றானும்

சோதித்துத் தெளிவு பெறல் ஆராய்ச்சியாளரின் தவிர்க்க ஒண்ணாக் கடமை. தனிப்பெரும் உரிமையும் கூட.

எதை ஆய்கிறோமோ அதில் காணப்படுகின்றவற்றைத் தவறு, பிழை, வழு என்று எளிதில் முடிவு செய்து விடப் படாது. அதற்காக, குற்றம் குறைகள் இருந்தால் அவற்றை மூடி மறைத்துப் பூசி மெழுகி விட வேண்டுமென்று சொல்லவில்லை. சொல்லவும் மாட்டேன்.

கம்பனைப் போன்ற கல்வியில் பெரிய ஒரு மாமேதையை ஆயும் போது ஏன் இப்படி மொழிகிறான். அதில் உள்ள சிறப்பு என்ன? தவறானால் என்ன காரணம்? என்ற முறையில் ஆராய வேண்டும். அதே காலத்தில் எவரை, எதை ஆராய்கிறோமோ அதில், அவர் மாட்டு அன்பும் பரிவும் கொண்டு செயல்பட வேண்டும். நிச்சயமாகத் தவறு என்று தெளியும் வரை அவரை நாம் கைவிடப்படாது. அறிவும் - நேர்மையும் இரு கரையாய் அமைய ஆராய்ச்சி என்னும் நன்னீர் ஆறு தன் வழி ஒழுக வேண்டும். அப்பொழுது தான் பயன் சிறக்கும் இல்லையா?

இனி நூலுள் நுழையலாம். 'அகில் இருண்ட நிறமுடையது என்பதைக் 'காரகில்' என்று கூறுவதிலிருந்து... உணர முடிகிறது என்கிறார் ஆசிரியர். அகில் இருவகைப்படும். ஒன்று காரகில்... மற்றையது வெள்ளகில். புகைக்க மணம் தருவது காரகில்., அரைக்க மணம் தருவது வெள்ளகில். சந்தனம் போல் வெண்மையாய் இருப்பதால் சந்தனத்தில் கலந்து நிறம் பெறுவதைப் போல அகில் தேய்விலும் குங்குமப்பூ கலக்கப் பெறும் என்று கம்பன் பேசுவான்.

'............... நாணமும், நறும் குங்குமம்
செறி அகில் தேய்வையும்' [பா.கா]

எனவே அகில் கரு நிறமுடையதே என்று ஒரு வழியாய் முடிவு கட்டலகாது.

'காவி, கருங்குவளை, நெய்தல், நீலோற்பலம், பானல் என்பவை ஒரு மலரா அல்லது வெவ்வேறு மலர்களா என்பது பற்றி ஐயம் எழுகிறது.'

> "காவியும் கருங்குவளையும்
> நெய்தலும் காயாம்
> பூவையும் பொருவுவா னவன்
> படர் பூங் குவளை நாண் மலரோ,
> நீலோற்பலமோ, பானலோ"

என்று பகுதிகளை நோக்கும் போது இவை வெவ்வேறு மலர்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இவை எந்த நிலையில் வேறுபடுகின்றன என்பதற்குக் குறிப்புகள் இல்லை.

உரையாசிரியர்கள் இவையனைத்தும் ஒன்றையே குறிக்கின்றன என்ற முறையிலேயே உரையெழுதிச் செல்கிறார்கள் என்று கூறி நச்சினார்க்கினியர், உ.வே.சா., வை.மு.கோ., முதலியவர்களின் உரைப்பகுதியைச் சான்று காட்டுவதுடன் "சங்க இலக்கியங்களில் செடி கொடி விளக்கம்" என்ற ஆய்வு நூல் ஆக்கிய திரு. சாமியின் கருத்தையும் எடுத்துக்காட்டி, முடிவில்,

'எனவே இவை வெவ்வேறு செடிகள் என்று எண்ணும் முறையில் கம்பர் கூறியிருப்பது ஏன் என்று விளங்கவில்லை' என்று தம் முடிவை ஐய நிலையில் ஐயமறக் கூறுகிறார்.

அல்லி வகையில், அல்லி முதல் பானல் வரை கொண்ட பெயர்கள் பதின்மூன்றில் உற்பலம், குமுதம், குவலயம், நீரோற்பலம் ஆகிய நான்கும் சமஸ்கிருதச் சொற்கள். கிழங்கில் தோன்றுவது என்னும் பொருள் தருவது உற்பலம். குமுதம் என்பது ஆம்பல்; குவலயம் என்பது குவளை; நீலோற்பலம் என்பது நீல மலராகும். எனவே எஞ்சிய ஒன்பதையே நாம் ஆய வேண்டும்.

அல்லி என்பது இனத்தின் பொதுப் பெயர். தாமரையையும் குறிக்கும். அரத்தம் என்பது செவ்வல்லி; ஆம்பல் என்பது

வெள்ளல்லி; நீலம் என்பது நீல அல்லி; எனவே தான் சேதாம்பல், அரக்காம்பல், செங்குமுதம் என்றெல்லாம் அடைகூட்டி முன்னையோர் குறிக்கலாயினர்.

கழு நீர் அல்லது செங்கழுநீர் மலரை ஒருவாறு அல்லி இனமாய்க் கருதலாம் போலத் தோன்றினும் அது பல்லாற்றானும் அல்லியினின்றும் வேறுபட்டது. அதன் நாளத்தின் நீளம் மூன்றடிக்கு மேற்படாதது. மணம், நிறம், அளவு, அமைதி, தோற்றம் ஆகிய எல்லா வகையாலும் நீலம் அல்லது நீலோற்பலத்தினின்றும் வேறுபாடுடையது. இன்றும் திருவாரூர் போன்ற சில பெருங்கோயில்களில் நாள்தோறும் வழிபாட்டில் பயன்படுத்தப்பெறுவது. அதன் நிறம் சுத்த நீலமன்று. ஊதா விரவிய நீல நிறம் (Purplish Ble) அல்லி, தாமரைகளைப் போல ஆழமிக்க நீர் நிலைகளில் கழுநீர் உற்பத்தி ஆகமாட்டாது. வளர, வாழ முடியாது. மூன்றடி ஆழத்திற்கு உட்பட்ட சேற்றுப்பாங்கான குட்டைகளில் மட்டுமே இதைக் காண முடியும். இந்தத் தன்மையை எல்லாம் தெள்ளத் தெளிந்தவன் ஆனதாலேயே கம்பன்

"மேதிக் குழி எலாம் கழுநீர்க் கொள்ளை"

என்று செவ்விதின் மொழிந்து செல்கிறான். பொய்கை, தடம், தடாகம், கேணி முதலியவற்றைக் கூறாமல் "மேதிக் குழி" என்று அவன் கூறுவதை நயம் தெரிந்து பொருள் கண்டு மகிழ வேண்டும்.

"காவி" என்பது கருங்குவளை. மணிவாசகர் இதைப் "பைங்குவளைக் கார் மலர்" என்பர். இருண்ட நீல நிறமுடையது. அடி திரண்டும், கழுத்து நெருங்கியும், வாய் அகன்றும் குவளை மலர், செவ்வரி ஓடிய வெளிர் நீல நிறமுடையது. அதன் தோற்றத்தை - அமைதியை - அடிப்படையாகக் கொண்டு அமைத்த காரணத்தாலேயே நீரருந்தும் "டம்ளர்" குவளை எனப் பெயர் பெற்றது.

நெய்தல் என்பது பெரும்பாலும் கடற்கரைப் பகுதியில் காணப்படும் கருநீல மலர். பானல் என்பதைப் பெரும்பாலும் மருத நிலப் பகுதியில் வாய்க்கால்களிலும், குளக்கரைகளிலும் காணலாம். நிறம் நீலமே. ஆயினும் உருவும், அளவும், அமைதியும் முற்றும் தனித்தன்மை கொண்டது.

நம்முடைய வணக்கத்திற்கும் நன்றிக்கும் உரிய பழைய உரையாசிரியர்கள் நூலறிவும் - நுண்ணறிவும் துணையாகக் கொண்டு கூறுவதையும், நவீன விஞ்ஞான நெறியில் தாவர இயலார் பிறநாட்டுத் தாவரங்களையே அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தி வரையறை செய்வதையும் புரிந்து கொண்டு அவர்கட்கெல்லாம் மரியாதையுடன் ஒரு கும்பிடு போட்டுவிட்டு இவையனைத்தும் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவையே என்பதை நாம் கண்மெய்யாக (பிரத்தியட்சமாக) காணலாம். எனவே ஆராய்ச்சியாளர் திரு. சாமி கருதுவது போல் "நெய்தல் செடியையே நீலோற்பலம், நீலம், கருநெய்தல், கருங்குவளை, பானல் என்று பல பெயரால் மயங்கிக் கூறுவர்'' என்பதை நாம் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

காயாம்பூ இராமன் மேனியழகிற்கு அமைந்த சிறந்த உவமையாகும். கொம்பு முழுவதும் அடர்ந்து செறிந்து மலர்ந்து பொலிவும் வளப்பைக் காணும் நமக்குக் கூட மயிற் கழுத்தே நினைவுக்கு வரும். பூவைக் கையில் உதிர்த்துக் காணும் பொழுதுதான் உவமை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். மிளகளவேயுள்ள இப்பூவின் புறத்தோற்றம் ஒள்ளிய முதிர் நீல நிறமுடையது. அகப்பகுதி ஆங்காங்கே இனிய சிவப்பு நிறம் அமைந்து மனத்தை ஈர்த்து நிற்கும். கண்ணும் வாயும், கையும் திருவடியும் சிவந்த கார்முகில் வண்ணனுக்குப் பொருத்தமான உவமை காயா நறும்போதே என்பது நமக்கும் கூட நன்கு புலப்படும்.

1941-ல் ரசிக மணி அவர்கள் காரைக்குடி வந்து ஒரு வாரம் தமிழ் விதைத்தார்கள். ஒரு நாள் "புயல் இவன் மேனி என்பார்;

பூவையே பொருவுமென்பார்" என்ற அடியைக் கூறி அழகை வியந்து கொண்டிருந்தார்கள். "முன்னதற்குப் பின்னது மறுப்பு" என்றேன் நான். எப்படி? என்றார்கள். பக்கத்திலிருந்து காயாஞ் செடியிலிருந்து ஒரு கொம்பை ஒடித்து வந்து காட்டினேன். சிவப்புப் புள்ளிகள் அகத்திருக்கப் புறத்தே நீலம் புத்தொளிரும் அழகைக் கண்டு பேரின்பத்துள் மூழ்கி "என்னே அருமை! என்னே அருமை; புயல் ஒருபுடையுவமைதான். பூவை தான் சரியான உவமை. இன்றுதானே காயா மலரை - பூவையை - நான் காணுகிறேன்; கம்பன் எப்படி எல்லாம் இயற்கையை அனுபவித்திருக்கிறான் என்பது இப்பொழுதல்லவா புரிகிறது; என்று வாயூறி அன்று முழுதும் அதையே எண்ணி எண்ணி இறும்பூ தெய்தினார்கள்.

கொன்றையில் பலகையுண்டு. கடுக்கை, இதழி, பொன்னிதழி - சரக்கொன்றை, பெருங்கொன்றை, பிரணவக்கொன்றை, செங்கொன்றை, புலிநகக் கொன்றை என்று பற்பல பெயர் கொண்டு விளங்குகிறது இது. புலிநகக் கொன்றை ஞாழல் எனப் பெயர் பெறும். இவை இனத்தால் ஒன்றே ஆயினும் தோற்றம் முதலியவற்றால் வேறுபட்டவை என்பதைப் பெயர்களே புலப்படுத்திக் கொண்டிருக்கவில்லையா?

'கிஞ்சுபம்' என்பதை எட்டி அல்லது காஞ்சி மரம் (Strychuos Nux - vomica) என்பதாகக் கொண்டிருப்பது வியப்பாக உள்ளது. பல்வேறு நிகண்டுகளிலும் இப்பெயர் காணப்படவில்லை. அன்றியும் "கிஞ்சுவ மரத்திடை" என்ற பொருந்தாப் பாடத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார். "மரத்தடி" என்றாலும் பொருளுண்டு, "மரத்திடை என்பது வழுவன்றோ? மிகப் பெரும்பாலான சுவடிகளிலும், அச்சுப் பதிப்புகளிலும் "கிஞ்சுப வனத்திடை" என்ற பாடமே காணப்படுகிறது. பொருத்தமான நல்ல பாடமும் இதுவே. கிஞ்சுபம் என்ற சொல் அசோகைத்தான் குறிக்கிறது, என்று கொள்ள வேண்டும். இருந்திருந்து இராவணன் சீதையை எட்டி மரத்தியிலா சிறை வைத்திருப்பான்? சிந்திக்க வேண்டும்.

"சிந்து'' என்பது புளியைக் குறிக்கும் சொல். நிகண்டுகள் சிந்து, சிந்தம், சிந்தகம் என்று சொற்களால் புளியைக் குறிக்கின்றன. "இப்பெயர் 'சிஞ்சா' என்ற வட சொல்லின் திரிபாகும்'' என்று முடிவு கட்டுவது எளிதல்ல. தெலுங்கில் "சிந்தம்'' என்ற சொல்லே புளியைக் குறிக்கிறது. சிந்தம் + பண்டு = சிந்தப்பண்டு என்று அன்றாட வழக்கிலும் பயிலப் பெறுகின்றது.

மேலும், சமஸ்கிருதத்திலிருந்து தான் பல்வேறு சொற்களும் தமிழுக்கு வந்தன எனக் கருதுதல் அறனன்று. நான் சமஸ்கிருதத்தை வெறுப்பவனல்லன், மதிப்பவன், போற்றுபவன். சமஸ்கிருதம் எக்காலத்தும் பேச்சு வழக்கில் இருந்ததில்லை. அது இயல்பான மொழியுமல்ல. எல்லார்க்கும் பொருந்த அமைக்கப்பட்டது என்ற உண்மையைச் 'சமஸ்கிருதம்' என்ற அதன் பெயரே நன்கு புலப்படுத்திக் கொண்டிருக்கிறது. சமஸ்கிருதம் இயல்பாகத் தோன்றி வளரும் ஒரு 'மொழி' அல்ல. ஆனதால் பொதுவான பல சொற்களும் பல்வேறு மொழிகளிலிருந்து - குறிப்பாக தமிழிலிருந்து - கொண்டவை.

எனவே சமஸ்கிருதத்தில் காணப்படும் சொற்கள் யாவும் சமஸ்கிருதச் சொற்கள் என்றும், தமிழிற் காணப்படும் அச்சொற்கள் சமஸ்கிருதத்தினின்றும் தமிழுக்கு திரிந்தோ, திரியாமலோ வந்தவை என்றும் முடிவு கட்டுதல் முறையன்று. பெரும்பாலான கலைச்சொற்கள் அறிஞர்களால் சமஸ்கிருதத்தில் ஆக்கப்பட்டவை. அவை தமிழுக்கு அங்கிருந்து வந்தவை என்று கூறினால் நியாயம். உலக வழக்கில் பன்னெடுங்காலமாகப் பயின்று வரும் ஒரு மொழியில் காணப்படுவதும், அன்றாட வாழ்வுக்கு இன்றியமையாத பொருட்பெயராகவும் உள்ள சொல் வேறெங்கிருந்தோ வந்தது எனக் கொள்ளலும் சொல்லலும் நெறியன்று.

'சிந்து' என்பது இயற்பெயராகவும் 'புளி' என்பது வேர், முதல் பழம் வரையுள்ள எல்லா உறுப்புகளின் சுவை காரணமாகத் தோன்றிய பண்புப் பெயராகவும் கொள்ளப்பட வேண்டுமென்பதே என் கருத்து.

நொச்சி என்பதும் சிந்து வாரம் என்பதும் ஒன்றே என்று கருகிறார் ஆசிரியர். நொச்சி என்பது சிறு மரமாய் வளர்வது. மூவிலைக் கூட்டிணுக்காகவும், ஐந்திலைக் கூட்டிணுக்காகவும் காணப்படும். அஞ்சிலை நொச்சி, மூவிலை நொச்சி என்று அதையும் பிரித்துப் பேசுவர். அவை இரண்டும் முற்றிலும் ஒத்த ஓரினமே! இதன் நிறம் காம்பும், கொம்பும், இலையும் சாம்பல் பூத்த வெளிர் பச்சையாக இருக்கும். சிந்து வாரம் என்பது 'கருநொச்சி' என வழங்குகிறது. நொச்சியினின்றும் இது எல்லா வகையாலும் வேறுபட்டது. தண்டும், காம்பும், இலை நரம்பும் ஊதா முதிர்ந்த ஒளிர் கருமையுடையவை. இலை முதிர் பசுமை கொண்டு கூர்மையுடையதாய் மேல்நோக்கி நிற்கும். ஆகவே இரண்டையும் வேறுவேறாய் கொள்வதே சரி.

புன்னையும், சுரபுன்னையும் வேறுவேறாய் கொண்ட ஆசிரியர் நாகம் என்பது சுரபுன்னையே எனத் துணிகிறார். புன்னையுடன் ஓரளவு ஒத்திருக்கும் சுரபுன்னையை வேறாக்கிய ஆசிரியர் எவ்வாற்றானும் ஒற்றுமை காணப்படாத நாகத்தைச் சுரபுன்னையின் மறுபெயராகக் கொண்டமையாலேயே ஒன்றென ஊகித்திருக்க வேண்டும். சுரபுன்னை கடற்கரையை ஒட்டிய வெம்மை மிகுந்த மணற்பாங்கிலும், பாலை நிலம் போன்ற வறண்ட நிலப்பகுதியிலும் வளர்வது. நாகம் என்பது மாமரம் போல அடிபெருத்து வானுற ஓங்கி வளர்ந்து காணப்படும். தற்பொழுது 'நாகதாளி' 'நாகலிங்கம்' எனச் சொல்லப்படும் அடிமரத்தை ஒட்டி மலர் தோன்றும். சிவப்பும், மஞ்சளும், வெண்மையும் கொண்ட, தடித்த இதழ்களுடன் கூடியவை இதன் மலர்கள். நூற்றுக்கணக்கான சிறு முளைகள் சிவலிங்கம் போல மலரின் அடிப்பாகத்தில் காணப்படும். குடை கவித்தாற்போல நாகபடம் மலரடியிலிருந்து எழும்பி மேலே வளைந்து கவிந்திருக்கும். எனவே இரண்டும் ஒன்றிற்கொன்று முற்றிலும் மாறுபட்ட மரங்களே.

"மானைக்கொடி" என்ற பெயர் தற்பொழுது எந்தத் தாவரத்தைக் குறிக்கிறது என்று தெரியவில்லை என்கிறார் நேர்மையான ஆசிரியர். இதை எங்கள் பகுதியில் காணலாம்.

மாணாகொடி, ஊணாங்கொடி என்பர் இதனை. இன்றும் ஆண்டுதோறும் காரைக்குடித்தேர் இக்கொடி கொண்டே கட்டப்படுகிறது.

'வள்ளிகொடி' பற்றி ஆராயும் போது நிலத்தில் படரும் இக்கொடியைக் கம்பர் மரத்தில் சுற்றி வளர்வதாகக் காட்டுகிறார் என்று எழுதுகிறார்.

'வள்ளிபுடை சுற்றி உயர் மரம்'

என்ற இடத்தில் வள்ளி என்னும் சொல் பொதுவாக கொடி அல்லது பூங்கொடியையே குறிக்கிறது. எனவே வள்ளிக்கொடி என்று பொருள்கோடல் சரியன்று. சேனை, கருணை, சேம்பு முதலிய உண்ணும் கிழங்கு வகையைப் போலச் செடிக்கிழங்காய் இல்லாமல் கொடியின் கிழங்காய் இருப்பதால்தான் இதை வள்ளிக்கிழங்கென்றனர் பண்டையோர். இன்றும் எங்கள் பகுதியில் வள்ளி பயிரிடப்படுகிறது. வெற்றிலை போன்ற இலையையுடையது. உண்ணச் சுவைமிக்கது. நார் இல்லாதது. மார்கழி - தை மாதங்களில் கிழங்கு கல்லி எடுக்கப்படும். மரத்தில் படரக்கூடுமாயினும் படர விடுவதில்லை. காரணம் மரத்திற்கு அப்பால், கல்லி எடுக்க வசதியாக, வேர்கள் ஓடாத நிலத்தில், பயிரிடப்படுவதே. இதில் இருவகையுண்டு. ஒன்று நல்வெள்ளை. மற்றது இளஞ்சிவப்பு. இரண்டின் தோலும் ஒரே மாதிரி கருப்பாய் (பன்றித்தோல் போல்) வேரரும்பிக் காணப்படும்.

சர்க்கரைவள்ளி என்பது இதனின்றும் முற்றிலும் மாறுபட்டது. தோல் சிவப்பாகவும் வெள்ளையாகவும் இருவகை உள்ளதேனும் கிழங்கின் சுவையும் தோற்றமும் ஒன்றே. இரண்டிலும் நார் உண்டு. இது சீனிக்கிழங்கு என்று பெயர் பெறும். இதுதான் ஆங்கிலத்தில் Sweet potatoes எனப்படுவது.

இவையன்றி மூன்றாவது வகை ஒன்றுண்டு. அதை மரவள்ளி, ஏழிலை வள்ளி, குச்சிக்கிழங்கு என்ற பெயர்களால் குறிப்பர். ஆங்கிலத்தில் Topioca என்பர். இவையில்லாமல் சிறுவள்ளி, நீர்வள்ளி போன்ற வகைகளும் உண்டு.

சகோதரர்கள்

"கம்பன் அடிப்பொடி"

17-3-46ல் திருச்சி வானொலியில் ஆற்றிய உரை

ராமராஜ்யம்! அது ஒரு அற்புதம்! கேவலம் தோன்றிய சிறிது காலத்தில் மறைந்து போகும் அல்ப்பாயுஷ் ராஜ்யமா அது? இல்லை; அது கவியின் கனவு ஆம்; மகாகவி கம்பனின் காவிய சிருஷ்ட்டி.

ஒரு ராஜ்யத்தில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் முழுவதையும் ராம ராஜ்யத்திலே காணலாம். எத்தனை எத்தனை காட்சிகள்! வெறும் கண்காட்சிகளா? இல்லை; உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சி ஒளி ஊட்டும் உண்மைக் காட்சிகள்!

அவற்றில் சிலவற்றை முன்னே கண்டோம். இனி அந்த ராஜ்யத்திலே சகோதரர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் கொஞ்சம் பார்க்கலாமா? சரி ராமராஜ்யத்தின் தந்தை தயரதன். மூன்று பட்டமகிஷிகளின் மூலம் அவனுக்கு நான்கு புத்திரர்கள். ராமன் பரதன் லெட்சுமணன் சத்ருக்னன் இவர்கள் தான் அந்த நால்வரும்.

இவர்களுள் ராமனும் லெட்சுமணனும் ஒரு கூட்டாளிகள். அப்படியே பரதனும் சத்ருக்னனும், இந்த இரண்டு ஜோடிகளும் என்றும் எங்கும் இணை பிரியாத ஜோடிகள்! அதனாலே தான் உலகத்தார் எல்லோரும் 'ராம - லெட்சுமணர்' என்றும் பரத சத்ருக்னர் என்றும் பிரித்து இணைத்துப் பேசுகிறார்கள் இல்லையா?

ராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்பது தானே கைகேசியின் கோரிக்கை. லெட்சுமணனும் ஏன் பின் தொடர்ந்தான்? ஒரு பசுவை வெளியே துரத்துகிறோம். அப்பொழுது கன்றுக்குட்டி மட்டும் வைக்கோற்போரைச் சுற்றிக் கொண்டே நிற்குமா என்ன? வெளியே ஓடும் பசுவைக் கன்றும் தொடருவது நமக்கு ஒரு ஆச்சரியமாகப் படுமா? இந்த உண்மை

கம்பன் கருத்தில் ஊறிக்கிடக்கிறது. அதுவே பரதன் வாக்கிலிருந்து

"கன்றும் தாயும் போவன கண்டும் கழியீரே!"

என்று வெளிப்படுகிறது. அப்படி லெட்சுமணனையும் ராமனையும் கன்றையும் பசுவையும் போலப் பிணைத்து வைத்திருப்பது என்ன?

ராமனே தன் ஜீவன் என்று கருதுகிறான் லெட்சுமணன், ராமனின்றித் தானில்லை; ராமனைப் பிரிந்து வாழ்வது என்பதை லெட்சுமணனால் சிந்திக்கக் கூட முடியாது. அப்படி அவன் உள்ளம் ராமனுடன் அவனைப் பிணைத்து வைத்திருக்கிறது. இந்த உண்மையை லெட்சுமணனைக் கொண்டே சொல்லச் செய்கிறான் கம்பன். அதைக் கேளுங்கள்

"நீருள எனின் உள மீனும், நீலமும்
அதைப் போல அண்ணா!
நானும் சீதையும்
யார் உளர் எனில் உளேம்? அருளுவாய்"

கேட்டீர்களா? தான் மீனும், சீதை நீலோற் பல மலராம். ராமனாகிய தண்ணீர் இல்லா விட்டால் மீனும் நீலமலரும் வாழ முடியுமா? என்று எவ்வளவு பக்குவமாகச் சொல்லுகிறான் லெட்சுமணன் பார்த்தீர்களா?

அதனாலேயல்லவா ராமன் வனவாசம் போக வேண்டும் என்ற செய்தி கேட்டுக் கையால் நிலம் தடவிக் கண்ணீரால் மெழுகிக் கதறும் நகர மக்கள் கூட

"ஐயா! இளங்கோவே! ஆற்றுதியோ நீ" என்று பொங்கிப் பொருமுகிறார்கள்.

சரி, ராமன் அக அழகைப் பார்ப்போம் இனி காடு உனக்கு; நாடு பரதனுக்கு" என்றுரைக்கும் கைகேகியின் கடுஞ்சொல் நமக்குக் கூட எவ்வளவோ கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்குகிறது. ஆனால் ராமனுக்கு......? உள்ளத்தில் எவ்வித

துவேஷமும் உண்டாகவில்லை. அகத்தின் அழகு முகத்திலே தெரியாதா? அப்பொழுதலர்ந்த செந்தாமரையினையும் வென்று விட்ட முகப் பொலிவுடன்

"பின்னவன் பெற்ற செல்வம் அடியேனன்
பெற்ற தன்றோ"

என்று மனமாரச் சொல்லும் ராமன் சொல் கேட்கிறதல்லவா?

கைகேகியிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட ராமன் பெற்ற தாயிடம் வந்து நிகழ்ச்சியைக் கூறும் பண்பினைச் சிறிது நோக்குங்கள்;

"..........நின் காதல் திருமகன்,
பங்கமில் குணத்து எம்பி பரதனே,
துங்கமாமுடி சூடு கின்றான்."

நின் ஆசைக்குரிய அருமை மகன்; அப்பழுக்கில்லாத அருங்குணமணி; என் தம்பி; ஆம், பரதன் தான் முடி சூடுகிறான். இப்படி யாரிடம் கூறுகிறான்?

தன் வயிற்றிலே பிறந்து, பட்டத்துக்குரிய வாரிசான ராமன் பட்டம் துறந்து பரதேசியாய் கானகம் செல்ல நேரிட்டதே என்று வருந்திப் புழுங்கிக் கொண்டிருக்கும் கௌசல்யா தேவியிடம் தான் என்பதை எண்ணும் பொழுது ராமனின் கல்யாண குணம் நம்மையே ஆகர்ஷித்துக் கொண்டு விடுகிறதல்லவா?

இனி பரதனின் குணபாவத்தைக் கொஞ்சம் பார்ப்போம்.....

கேகய நாடு சென்றிருந்த பரதன் அயோத்திக்குத் திரும்புகிறான், தாயைக் கண்டான்; தந்தையின் மரணத்தைக் கேட்டான், பெருந்துயர் உற்றான். தந்தையைப் பறி கொடுத்த துயரம் எப்படித் தீரும்? பரதனே சொல்லுகிறான் கேளுங்கள்,

"எந்தையும் யாவும், எம்பிரானும் எம்முளும்
அந்த மில் பெருங்குணத்து ராமன் ஆதலால்
வந்தனை அவன் கழல் வைத்த போதலால்
சிந்தை வெம் கொடுந்துயர் தீர்கலாது......"

அண்ணன் ராமனே என் தந்தை; ஏன், என் தாயும் அவனே; அது மட்டுமா நான் வழிபடும் கடவுளும் கூட ராமன் தான்! ஆகவே அவன் திருவடிகளில் வணங்குவதொன்றே என் துயரினைப் போக்கும் என்றுரைக்கும் பரதனுக்குத் தான் ராமனிடம எவ்வளவு பக்திப் பெருக்கு!

ராமன் கானகம் சென்று விட்டான்; புத்திர சோகமே தயரதன் உயிரை உண்டது என்பதை எல்லாம் அறிந்த பிறகு பரதன் உள்ளம் படும்பாட்டைப் பாருங்கள். அவன் வாயிலிருந்து வெறும் வார்த்தையா வருகிறது. உள்ளக் கொதிப்பல்லவா உதிர்கிறது!.... கேளுங்கள்!

"மாளவும் உளன்ஒரு மன்னன் வன்சொலால்
மீளவும் உளன்ஒரு வீரன்; மேயபார்
ஆளவும் உளன் ஒரு பரதன்! ஆயினால்
கோள் இல அறநெறி குறையுண்டாகுமோ?"

அதனாலேயல்லவா தள்ளரும் பெருநீதித் தனியாறு புகமண்டும் பள்ளமெனும் தகையானாம் பரதனை ராமன் தழுவிக் மொண்ட காட்சியைக் கண்ட கம்பன்,

"தாயா முதல் அறத்தினைத் தழுவிற்று"

என்று வாயாரப் பாடி மகிழ்கிறான், இல்லா விட்டால் ராமன் தான் பரதனை

"சேனுயர் தருமத்தின் தேவு, செம்மையின் ஆணி"

என்றெல்லாம் பாராட்டிப் புகழ்வானா?

இனி சத்ருக்னன் குண சௌந்தர்யம் எப்படிப் பட்டது என்று பார்ப்போம். தயரதன் புதல்வர்களை கம்பன் சதுர் வேதங்கட்கு

ஒப்பிட்டுப் பல இடங்களில் பேசுகிறான், ரொம்பப் பொருத்தம், நாலாவது புதல்வன் சத்ருக்னன்; நாலாவது வேதம் அதர்வணம். உலக வழக்கில் அதர்வணம் எவ்வளவு பிரபல்யத்தை அடைத்திருக்கிறதோ அவ்வளவு தான் ராம ராஜ்யத்திலும் சத்ருக்னன் பிரபல்யம் அடைந்திருக்கிறான். என்றாலும் அவனை நாம் நன்றாக இனம் கண்டு கொள்ள முடிகிறது,

நிறத்தாலும் குணத்தாலும் பரதன் ராமனை ஒப்பவன். அப்படியே சத்ருக்னன் லெட்சுமணனை ஒத்து விளங்குகிறான். அநீதியைக் கண்டால் லெட்சுமணனைப் போலவே அவன் தம்பியும் கோபமும் ஆத்திரமும் கொண்டு கொதித்தெழுகிறான்.

ஆனாலும் அண்ணன்மாரிடம் எவ்வளவு பிரேமை, மரியாதை, அடக்கம் உடையவனாயிருக்கிறான்? அதையும் எவ்வளவு கச்சிதமாய் வெளிப்படுத்தவும் செய்கிறான் என்பதைப் பாருங்கள்.

பதினான்கு ஆண்டு கழிந்த மறுநாளே வந்து விடுகிறேன்; வந்து ராஜ்யப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியபடி அண்ணன் ராமன் வந்து சேரவில்லை. எனவே எனது பிரதிக்கைப்படி என்னுயிரைப் போக்கி எனக்கு ஏற்பட்ட பழியினைத் துடைத்துக் கொள்ளப் போகிறேன். ஆனதால் தம்பி! இந்த ராஜ்யப் பொறுப்பை ஏற்றுக் கொள் என்று சத்ருக்னனைப் பார்த்துப் பரதன் சொல்லுகிறான்.

இச்சொல் விஷமாகக் காதில் விழுகிறது; துயரம் கோபம் ஆத்திரம் என்னவெல்லாமோ சத்ருக்னனைக் கவ்விக் கொண்டு விடுகிறது. உடல் நடுங்குகிறது; உள்ளம் கொதிக்கிறது; புத்தி தடுமாறுகிறது உணர்ச்சியற்றுக் கீழேயும் விழுந்து விடுகிறான். எப்படியோ தள்ளாடிக் கொண்டே எழுகிறான்; எழுந்து இல்லாத கோபத்துடன் அண்ணா நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்? என்று கேட்கிறான். கேட்டுவிட்டுக் கோபத்தின் வேகம் தணியுமட்டும் சிறிது பேசாமல் நிற்கிறான்! பிறகு தொடர்ந்து பேசுகிறான். கேளுங்கள். அவன் உள்ளக் கிடக்கை மின்னிப் பளிச்சிட்டு நம்மையும் ஆட்கொண்டு விடுகிறது.

"கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒரு தம்பி! – போனவன்
தான் வரும் அவதி போயிற்று" என்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி! – அயலே, நாணாது
யானாம் இவ்வரசாள் வென்! என்னே
இவ் அரசாட்சி! இனிதே அம்மா!

கேட்டீர்களா? சரி.

சாதாரணமாக சகோதரர்கள் என்றால் ஒரு குடியில் ஒருவனுக்குப் பிறந்தவர்கள் என்று தானே நாமெல்லாம் எண்ணுவோம்! ஆனால் ராமராஜ்யத்திலே அப்படியா எண்ணுகிறார்கள்?

ராமன் எங்கெங்கோ பிறந்த யார் யாரை எல்லாமோ உடன் பிறப்பாகவல்லவா பாவிக்கிறான்; பழகுகிறான்.

தனது ஒரு மகனைக் காட்டுக்கு அனுப்பியதனால் தயரதனுக்கு என்ன நட்டம்? அதனால் தனது புத்திரச் செல்வத்தை மேலுமல்லவா பெருக்கிக் கொண்டு விட்டான் என்று சொல்வதன் மூலம் தனக்கு சகோதரர்களிடம் இருக்கும் வாஞ்சையை இதோ கேளுங்கள் அவன் வாக்கை :-

குகனோடு ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை!

விபீஷணனை அரக்கர் குலத்தான் என்று சிறிதும் கருதாது உடன் பிறப்பாய்க் கொள்ளுகிறான் ராமன். அதுவும் எவ்வளவு

இதயசுத்தியோடு என்பதை 'உந்தை' என்ற சொல் மிக நன்றாய் விளக்கி விடுகிறது. அவ்வளவு சிறந்த மனம்; தூய பண்பாடு இப்படிப்பட்ட அற்புதமான சகோதரர்களை நாம் எங்கேயாவது காண முடியுமா என்று வியப்புறுகிறோமல்லவா? முடியும்; நிச்சயமாக முடியும்! எங்கே என்றா கேட்கிறீர்கள் வேறு எங்கே? கவிச்சக்கரவர்த்தியின் அற்புத சிருஷ்டியாகிய ராமராஜ்யத்திலே தான்.

கம்பன் கண்ட கொடியோர்

"கம்பன் அடிப்பொடி"

திருச்சி வானொலியில் 17-1-1950ல் ஆற்றிய உரை

சூர்ப்பனகை

அன்புள்ள மாணாக்கர்களே, கவிச்சக்கரவர்த்தி கம்பனையும், அவன் தமிழர்க்குச் செய்த பேருபகாரத்தையும் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். நாம் தமிழரென்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள ஒரு பெரும் காரணமாக இருப்பது, கம்பன் என்ற கவிதைத் தச்சன் கட்டித் தந்த ஒப்பற்ற காவியக் கோவிலே. அது தான் கம்பராமாயணம். அது ஒரு பார காவியம். அங்கே எத்தனை எத்தனையோ பண்புகளுடன் கூடிய பாத்திரங்கள் நூற்றுக் கணக்கானவர்களை நாம் சந்திக்க முடியும்.

அறவோரும் - மறவோரும், நல்லோரும் - தீயோரும், பெரியோரும் - சிறியோரும், வீராதி வீரர்களும் - வெறும் அப்பாவிகளும், இந்தக் காவியக் கோவிலிலே வீற்றிருக்கக் காணலாம். அப்படியே, இனியோர் பலரையும், கொடியோர் பலரையும், அங்கு நாம் சந்திக்கலாம். தாடகை, கூனி, சூர்ப்பனகை, மகோதரன், ராவணன், இரணியன் போன்ற பல கொடியவர்கள் அந்தக் காவியப் பூங்கோவிலிலே காணக் கிடைப்பவர்கள். இப்பொழுது நாம் அவர்களிலே சூர்ப்பனகையை ஒரு அளவு தெரிந்து கொள்ளுவோம்.

சூர்ப்பனகை என்பது யார். அவள் ஒரு பெண். இலங்கேசனான இராவணனின் தங்கை. இவ்வளவு தான் நமக்குத் தெரியும் இல்லையா? கம்பனைக் கேட்போமா இவள் யாரென்று? சரி அவன் சொல்லுவதைக் கேளுங்கள்.

"நீல மா மணி நிருதர் வேந்தனை
மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்"

என்ன, பெரிய கரு - நீல மணியைப் போன்ற நிறத்தோடு விளங்கும் அரக்கர் கோமகனாகிய இராவணனை வேறொடும்

தொலைத்துக் கட்டக் கூடிய பேராற்றல் வாய்ந்தவள் இவள் என்றெல்லவா அறிமுகப் படுத்துகிறான். ஆம். அவன் சொன்னதன் உண்மையை பாத்திரத்தைத் தொடர்ந்து சென்று கண்டறிவோம். நாம்.

கம்ப ராமாயணம் ஆறு காண்டங்களாக, அதாவது ஆறு பெரும் பகுதிகளாக உள்ளது. அதில் மூன்றாவதான ஆரணிய காண்டத்தில் தான், சூர்ப்பனகையைச் சந்திக்கும்படி செய்கிறான் கம்பன். ராமன் தர்ம பத்தினி சீதையுடனும், தம்பி லெட்சுமணனுடனும் பஞ்ச வடியிலே தங்கியிருக்கிறான். அப்பொழுதுதான் வருகிறாள் சூர்ப்பனகை, வந்தவள் அங்கே தனியனாய் ஒரு பேரழகன் அமர்ந்திருப்பதைக் கண்டனள். அப்படிக் கண்டவள் யார் எனக் கம்பன் கூறுவதை கேளுங்கள். **"கண்டனள் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்"** கண்டவள் யார் தெரியுமா அவள் தான் தன்னுடைய சுற்றத்தார்கட்கு முடிவு காலத்தைக் காட்டக் கூடியவள் என்று விளங்கவைக்கிறான் கவிஞர். ரொம்பச் சரி. கண்டவள் மற்றவற்குக் காட்ட வேண்டும் அல்லவா? எப்படி அந்தத் திருப்பணியை இந்த அம்மையார் நிறைவேற்றி வைக்கிறாள் என்பதை கம்பன் எவ்வளவு அழகாக, நாடகலங்காரத்தோடு சித்தரிக்கிறான் என்பதைப் பார்ப்போம்.

கண்டனள் ராமனை. கண்டதும் காதல் கொண்டு விட்டாள். எப்படியும் இந்தப் பேரழகனை எனது கணவனாக அடைந்தே தீருவேன். இவனை அடையாமல் இந்த ஜன்மம் இருந்தென்ன போயென்ன. என உள்ளம் உருகுகின்றாள். உடல் வெதும்புகின்றாள். ஆ ... இந்தப் பேரழகன், புருஷோத்தமன், என் தோற்றத்தைப் பார்த்தால் கோரப் பற்களுடன் கூடிய இந்த ராக்ஷஸி, சகல விதமான மாமிசங்களையும் புசிப்பவள். ஆகவே நமக்கும் இவளுக்கும் கட்டி வராது என்று ஒரு கால் மறுக்கவும் கூடும். ஆதலால், குயில் போன்ற குரலும், சிவந்த வாயும், மயில் போன்ற சாயலும் பெற்று மீண்டும் இவ்விடத்திற்கு வருவது தான் புத்திசாலித்தனம். அது தான் காரியம் கைகூட ஏற்ற உபாயமாகும். என்று எண்ணுகிறாள். அப்படியே செய்வேன் என்று முடிவு கட்டிக் கொண்டு செல்லுகிறாள் ஒரு

மறைவிடத்திற்கு. அங்கே போய் அமர்ந்து தனக்கு மிகவும் பழக்கமான மந்திரத்தைச் செபித்து, லெஷ்மி தேவியை நோக்கிப் பிரார்த்தனை செய்கிறாள். பலன் கிட்டி விடுகிறது. மதிமுகமும், அதற்கேற்ற பேரழகு தங்கிய உடலுறுப்புகளும் பெற்று தேவ மங்கை போல வருகிறாள். அவள் வருகிற ஒய்யாரத்தைப் பாருங்கள்.

பஞ்சிஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி,
அஞ்சொல்இள மஞ்ஞைஎன, அன்னம்என மின்னும்
வஞ்சிஎன, நஞ்சம்என, வஞ்சமகள் வந்தாள்.
கானில் உயர் கற்பக உயிர்த்த கதிர்வல்லி
மேனிநனி பெற்றவிளை காமநிறைவாசத்
தேனின்மொழி உற்றினிய செவ்வி நனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.

என்ன படாடோபம் பார்த்தீர்களா.

தான்கண்டு வெறிகொண்ட ஆடவனை அடைந்து ஆனந்திக்க, இல்லாத சிறப்புக்களை எல்லாம் மந்திரம் என்னும் மேக்கப் பூச்சுகளால் ஆக்கிக் கொண்டு வருகிறாள். பாதசரம், மேகலாபரணம், மணிவடங்க கூந்தலில் உள்ள மலர்களில் மொய்க்கும் வண்டுகள், இவைகள் ஒலிக்கும் மெல்லோசையைக் கேட்ட ராமன், என்ன யாரோ ஒரு பெண் வருவது போலிருக்கிறதே என அத்திசை திரும்பினான். கண்டான் அழகே உருவாய் அமைந்த ஒரு பெண்மகளை. ஆச்சரியம் தாங்க முடியவில்லை. என்ன அழகு. இவள் யார் அழகிற்கு ஒப்பும் உண்டோ என்று எண்ணினான். பேஷ். பறவை வளைக்குள் அகப்பட்டு விட்டது என்ற நம்பிக்கையுடன் ராமன் திருமுன்னர் வந்து அவனடிகளிலே கரம் சேர்த்து வணங்கி, தனது கண்கள் என்னும் அஸ்திரங்களை பிரயோகித்து விட்டு நாணிக்கோணி ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றாள்.

ராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் தமிழர் பண்பாடு என்று ஒன்று இருக்கிறதல்லவா அதற்கேற்ப ராமன்

முகமன் கூறி வரவேற்கிறான். இவ்வளவு பேரழகியாகிய உன் வருகை தீமையற்றதாக அமையட்டும். வெகு தூரத்தில் உள்ளவர்களாகக் காணப்படுகிறீர்கள். உங்களை வரவேற்று உபசரிப்பது எங்கட்கு ஒரு பாக்கியமே. தங்கள் ஊர் எதுவோ பேர் என்னவோ எக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கேட்டான் ராமன். சூர்ப்பனகை அளக்கத் தொடங்கி விட்டாள் தன்னுடைய பெருமைகளை எல்லாம்.

நான் சாக்ஷாத் பிரம்மாவுக்குப் பேரன் மகளாக்கும். சிவபிரானுடைய தோழனான குபேரனுக்கும் எட்டுத்திசையும் நடுங்க திக்- கஜங்களை எல்லாம் தொலைத்து, வெள்ளியங்கிரியை வேறோடு கல்லி, திரிலோகமும் ஏக சக்ராதிபத்தியம் நடத்தும் இராவணேச்வரனுக்கும் தங்கை தான். என் பெயர் காமவல்லி. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்று அளந்து விட்டாள்; கேட்டனன் ராமன்; சந்தேகப்பட்டான். இவள் செயலைப் பார்த்தால் சரியாகப் படவில்லை. இருந்தாலும் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று கருதிய ராமன் அம்மா, தாங்கள் கூறியபடி தாங்கள் ராவணன் தங்கையானால் உருவம் எப்படி இப்படியாயிற்று? காரணம் தெரிவிப்பீர்கள் என்று நம்புகிறேன் என்று நாசுக்காக வாயைக் கிண்டினான். பதில் உடனே வெளிப்படுகிறது கேளுங்கள். மகா சூழ்ச்சிக்காரர்களாக உள்ள இந்த அரக்கர்களுடன் வாழப் பிடிக்கவில்லை. ஆகவே தெய்வத்தை நோக்கிச் செய்த பெருந்தவப் பயனால் என் பாவமெல்லாம் போய் இந்த நல்லுடம்பு பெற்றேனையா என்று எவ்வளவு அழகாகப் புளுகுகிறாள் பார்த்தீர்களா? இப்படியே ராமன் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் மிக சாமர்த்தியமாகப் பதில் கூறுகிறாள். சீதையின் பேரழகு சூர்ப்பனகையைத் திகைக்க வைத்து விட்டது. என்ன பேரழகு; பெண்ணாகப் பிறந்த என்னையே சீதையின் பேரழகு இவ்வளவு கலக்கு கலக்கினால் மற்றவர்கள் பாடு என்னாகும் என்று ஒரே திகைப்புக் கடலுள் மூழ்கியிருந்தவள் ஒருவராய்த் தன் நினைவு பெற்று ராமனைப் பார்த்துப் பேசுவதைக் கேளுங்கள்.

ஐயா இவள் ஒரு மாயா ஜாலம் வல்ல பொல்லாத ராக்ஷஸியாவாள். இவள் தாங்கும் இந்த உருவம் வெறும் வேஷம். இவள் மாமிச பக்ஷினி இவளைக் கண்டால் எனக்கு ஒரே பயமாக இருக்கிறது. ராமன் பதில் என்ன என்பதையும் தொடர்ந்து கேளுங்கள்.

பேஷ், பேஷ். உன் எண்ணம் நன்றாகப் புரிகிறது நப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்லும் உன் வண்டவாளம் நன்றாகத் தெரிகிறது அம்மா, இவள் யாரென்பதை நீ தெரிந்து கொள் என்று சொல்லிச் சிரிக்கும் ராமனின் நகையொலி கேட்கிறதா உங்கட்கு.

இப்படியே வளர்ந்த பேச்சு சூர்ப்பனகை யார்? அவள் இங்கே வந்ததன் நோக்கம் என்ன என்பதையெல்லாம் ராமனுக்கு மிக நன்றாய் புலப்படுத்தி விட்டது. சரி, இனி விளையாட்டு வினையாகிப் போய்விடும் என அஞ்சிய ராமன் சீதையை அழைத்துக் கொண்டு பன்னகசாலைக்குள் போய்விடுகிறான்.

சரி, இன்று நம் ஜம்பம் இவனிடம் சாயாது என்று திரும்பி விடுகிறாள். தன் இருப்பிடம் சேர்ந்து ராமனை எப்படி அடைவது என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டே விரகதாபத்தால் வேகின்றாள். கண்டு விட்டாள் ஒரு வழி. சீதை போன்ற ஒரு அழகி ராமன் கூட இருக்கும் வரை ராமன் நம்மைத் திரும்பியும் பார்க்க மாட்டான். ஆகவே அவளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறாள். பொழுதும் விடிந்து விடுகிறது. மறுநாள் வேக வேகமாக வருகிறாள். ராமன் இருப்பிடத்தை நோக்கி.ஆத்திரக்காரிக்கு புத்தி மட்டுத்தானே. ராமன் ஆற்றங் கரையிலே காலை வழிபாடு செய்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு இது தான் தக்க சமயம் சீதையைக் கபளீகரம் செய்வதற்கு என்று பன்னகசாலையை நோக்கித் திடுதிடு என்று ஓடுகிறாள். பக்கத்திலே மரச்சூழல் மத்தியிலே வீரத் தம்பி லெட்சுமணன் இருப்பதைக் கவனிக்கவே இல்லை. கேட்பானேன், லெட்சுமணன் கோபக் கனல்கக்க நில் நில் என இரைச்சல் போட்டுக் கொண்டே மிக வேகமாகச் சென்று சூர்ப்பனகை கூந்தலைப் பற்றியிழுத்து வந்து மூக்கு முதலியவற்றை

அறுத்தெரிந்து விரட்டி விடுகிறான். சூர்ப்பனகை மூக்கறுபட்ட மூளியாகக் கதறிக் கொண்டே ஓடுகிறாள். கானகத்தே இருந்த கரன் இவள் கஷ்டம் அனைத்தையும் அறிகிறான். பெரும் படை திரட்டிக் கொண்டு வந்து ராமனுடன் பொருதுகிறான். பெரும் போர் நடக்கிறது. முடிவில் கரனும் அவனுடன் வந்த தூடணன் முதலிய அனைவரும் பிணமாகி விடுகின்றனர். விட்டாளா சூர்ப்பனகை எப்படி விடுவாள். நிருதர் வேந்தனை மூல நாசம் பெற முடிக்கும் திருப்பணிக்கென்றே உருப்பெற்று வந்தவளல்லவா. நேரே செல்கிறாள் இலங்கைக்கு. அண்ணனை, ஆம் இராவணனைத்தான் காணுகிறாள், மிகச் சாமர்த்தியமாகக் கயிறு திரிக்கிறாள். நீங்களே கேளுங்கள் அதை.

அண்ணா, காட்டிலே யாரோ இரண்டு மனிசன்கள் வந்திருக்கிறார்கள், அவர்களோடு ஒருத்தி கூட இருக்கிறாள். அவளைப் பற்றி நான் என்னத்தைச் சொல்ல; தாமரை மலரை விட்டு அந்தச் சீதேவிதான் பூமிக்கு வந்திருக்கிறாள் என்று சொல்லலாமா; சேச்சே. அவள் இவளுக்குச் சேடியாக இருக்கவும் தகுதியில்லாதவள்.

மஞ்சொக்கும் அளகஓதி.
மழை ஒக்கும் வடிந்த கூந்தல்.
பஞ்சொக்கும் அடிகள் செய்ய.
பவளத்தின் விரல்கள் ஐய
அம்சொற்கள் அமுதில்
அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும்
கடலினும் பெரிய கண்கள்.

மன்மதனை ஈசன் நெற்றிக் கண்ணால் அழித்து விட்டான் என்கிறார்களே அது முட்டாள் தனமான பேச்சு. இவளைப் பார்த்தான்; காதல் நோய் கரை கடந்து விட்டது. ஆற முடியவில்லை. பேச்சில்லை, மூச்சில்லை. அந்த ஆசையே அவனை அரித்துத் தின்று விட்டது. எந்த உலகத்திற்குத் தான் போய் பார். எந்த ஓவியனும் இவள் உடலுறுப்பை எழுதி

விடுகின்றானா என்று பார்க்கலாம். ஐயோ இவள் அழகிலே மயங்கிய நான்

தோளையே சொல்லுகேனோ,
சுடர் முகத்துலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ,
அல்லவை வழுத்துகேனோ,
மீளவும் திகைப்பதல்லால்
தனித்தனி விளம்பலாற்றேன்.
நாளையே காணடியன்றே
நானுனக்கு உரைப்பதென்னோ.

அவளை உனக்காக நான் தூக்கும் போது தான் அந்தப் பயல், ராமன் தம்பி என்னை இக்கதிக்கு ஆளாக்கி விட்டான் என்றுரைப்பது உங்கள் காதிலே விழுகிறதல்லவா.

இப்படியாக இராவணனுக்கு காமத் தீயை ரொம்ப நன்றாக மூட்டி விட்டாள். பிறகு கேட்பானேன். இராவணனை காமத் தீ மிக நன்றாகப் பற்றிக் கொண்டு விட்டது. அதன் பலன் தான் நமக்கெல்லாம் நன்றாகத் தெரியுமே.

மாய மானாக மாரீசன் உருவெடுக்க, அதைத் துரத்திக் கொண்டு ராமன் போக, மாரீசனின் மாயக் குரல் கேட்டு சீதையைக் காத்து நின்ற லெட்சுமணனும் பிரிந்து விட அந்த சந்தர்ப்பத்தில் இராவணன் கள்ளத்தனமாக அன்னை ஜனாகியை அபகரித்துச் சென்று விடுகிறான். கதை நமக்குத் தெரிந்ததுதான். ராம - ராவண யுத்தம் பயங்கரமாக நடக்கிறது, அரக்கர் சேனை மட்டுமல்ல, அரக்கர் குலமே அற்றுப் போய் விடுகிறது, இறுதியிலே எஞ்சிய மக்களும் கூட நெருப்பிலே விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டு விடுகிறார்கள். அப்படி தீக்குளிக்கும் முன் ராவணன் உடலைக் கட்டிக் கொண்டு பிரலாபிக்கும் மண்டோதரியின் புலம்பலிலே அரக்கர் குலமழியக் காரணம் என்ன என்பதைக் கூறுகிறான் கம்பன். அதைக் கேளுங்கள்.

காந்தையருக்கு அணி அனைய ஜானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்,
ஏந்து புயத்து இராவணனார் காதலும் அச்
சூர்ப்பனகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியதனால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா.

கேட்டீர்களா மண்டோதரியின் பிரலாபத்தை. அந்த மகாபாபி சூர்ப்பனகை காட்டிலே ராமனைக் கண்டு காமவெறி கொள்ளாவிட்டால், அதன் காரணமாக மூக்கறுபடாவிட்டால், இந்தப் படுநாசம் ஏற்பட்டிருக்க மாட்டாதல்லவா? மகா கொடியவர்களின் தன்மை இதுதான். தான் மூக்கறுபட்டால் அதோடு அமைந்துவிட மாட்டார்கள். மற்றவர்களையும் தூபம் போட்டு விட்டு அவர்களுக்கும் கேட்டை விளைவிப்பார்கள் இல்லையா? இந்தப்பாவி பொறாமையாலும் பேராசையாலும் பற்ற வைத்த ஒரு பொறி நெருப்பல்லவா அரக்கர் குல முழுவதையும் அடியோடு சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டது. இல்லையா? இப்படிப்பட்ட கொடியோர் பலரையும் கம்பன் நமக்கு மிக நன்றாகக் காட்டுகிறான். தனது காவிய உலகத்திலே அவர்களையெல்லாம் நாம் ஆர அமர இருந்து கற்றுக் கண்டறிய வேண்டும். சரிதானே? உங்கள் எல்லோருக்கும் வந்தனம்.

கம்பனின் அற்புதப் படைப்பு

"கம்பன் அடிப்பொடி"

சீதையைத் தேடித் தென்திசை சென்ற மாருதி வான் வெளியில் இராமனை நோக்கி வருகிறான். அனுமன், உடல் ஒளி மிகுதியால், தெற்கில் உதித்து வடக்கு நோக்கி வரும் சூரியனைப் போலத் தோன்றுகின்றான். அப்படி வரும் அனுமனை, தெற்குத் திசையையே நோக்கிக் கொண்டு கவலையுடன் வீற்றிருக்கும் இராமன், அன்பு நிரம்பிய மனத்தனாய், கூர்ந்து நோக்கலானான். அப்பொழுது என்ன நிகழ்கிறது? கம்பன் கூறும் கவியை அப்படியே காண்போம்.

"எய்தினன் அனுமனும் எய்தி, ஏந்தல் தன்
மொய்கழல் தொழுகிலன்; முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி வாழ்த்தினான்"

(அங்ஙனம் இராமன் இருந்த இடத்தினை அனுமனும் அடைந்தான்; அப்படி வந்த அனுமன், பெருமைமிக்கவனான இராமன் வீரக்கழலணிந்த வலிய திருவடிகளை வணங்கினானில்லை. ஆனால் தாமரை விட்டு வந்த இலக்குமியான சீதை இருந்த திசையை நோக்கித் தலையை வைத்து, அத்தலையின் மேல் கரங்களைக் குவித்து வைத்து, பூமியில் நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்து நீண்ட நேரம் தொழுது பரவிப்பாடினன்.)

கவிச்சக்கரவர்த்தியின் நாடகாலங்காரப் படைப்புக்கு ஒரு சிறந்த கவி இது. இராமன் முன் வந்து குதித்த அனுமன் வழக்கப்படி உடல் கூனி வாய் புதைத்து வணங்கவில்லை. மாறாக, சீதையை நோக்கித் தலைவைத்து சீதையின் புகழ்பாடி நீண்ட நேரம் கிடக்கிறான் என்றால் நிலைமை எப்படி இருக்கும்?

சீதை தெற்கே இருக்கிறாள். இராமன் வடக்கே இருக்கிறான். சீதையை நோக்கித் தலையை வைத்து நிலத்தில் கிடக்கிறான். அனுமன் என்றால் ராமனுக்குநேரில் காலை நீட்டி கொண்டு தானே கிடக்க வேண்டும்?

இங்ஙனம் அனுமன் செயற்படுவதற்குக் காரணம் என்ன? இலங்கையில் சீதையைப் பல்வேறு வகையில் காணுகிறான். அவளுடைய தோற்றமும், உள்ளமும், உரையும், சீலமும், உறுதியும், பதிபக்தியும், பொறுமையும், அன்பும், பண்பும், கண்டபின் சீதை ராமனினும் பலமடங்கு அனுமன் உள்ளத்திலே உயர்ந்து விடுகிறாள்; அதை, ராமனுக்கு ஒரு மணிநேரச் சொற்பொழிவின் மூலம் உணர்த்தினாலும் இயலாத ஒன்றை, இந்தச் சிறு செயல் பன்மடங்கு தெளிவாக உணர்த்தி விடுகிறது. ஆகவே தான் கம்பன் இந்த உத்தியைக் கையாண்டு காட்சியை மகோன்னதமாகப் படைத்து விடுகிறான்.

முன்பு மற்றோர் இடத்திலும் இந்த உத்தியைக் கையாள்கிறான் கவிச்சக்கரவர்த்தி.

இராமன் வில்லை முறித்துவிடுகிறான். அதைக் கண்ட சீதையின் தோழிக்கு ஆனந்தம் கரை புரண்டோடுகிறது; எல்லையற்ற மகிழ்ச்சி கண்மண் தெரியாத களிப்புடன் ஓடி வருகிறாள்; ஆம் சீதையிடம் அந்த அரிய செய்தியை தெரிவிக்கத்தான் இவ்வளவு ஆர்முடன் ஓடி வருகிறாள். அவள் தான் உயிர்த்தோழி நீலமாலை.

நிகழ்ந்ததைக் கம்பன் வாக்காகவே காணலாம்.

"வந்து அடிவணங்கிலன்; வழங்கும் ஓதையள்;
அந்தம் இல் உவகையள்; ஆடிப் பாடினள்;
"சிந்தையுள் மகிழ்ச்சியும், புகுந்த செய்தியும்,
சுந்தரி சொல் "என தொழுது சொல்லுவாள்"

(வந்து பாதம் பணிந்தாளில்லை; ஒரேயடியாய்ச் சத்தம் போடுகிறாள்; எல்லையற்ற மகிழ்ச்சினள்; துள்ளிக்குதித்துப் பாடுகிறாள். இவற்றை எல்லாம் பார்த்த சீதை, "அழகிய பெண்ணே! உள்ளத்து மகிழ்ச்சியையும், அதற்குக் காரணமான நிழச்சியையும் சொல்லடி" என்று அறிவுறுத்திய பிறகு தான் அவள் தன்னிலைக்கு வந்து, வணங்காத தவறுணர்ந்து சீதையை வணங்கிய பின் செய்தியைக் கூறத் தொடங்குவாள்.)

இப்படி நாடகாலங்காரம் மிளிரும் காப்பியமாகையால் தான் "கம்பநாடகம்" என்றும் முன்னையோர் ராமாவதாரத்தைப் போற்றி மகிழ்வாராயினர். இனி மேலே செல்வோம்.

அனுமனின் இந்த மரபு கெட்ட செயலைக் கண்டு ராமன் சினங் கொள்ளவில்லை, ஆம்; அவன் மெய்யறிவுடைவன்; எதையும் குறிப்பால் உணரும் ஆற்றலன், அனுமனின் செயலை உண்மை நிலை புரியத்தக்க முறையில் கருத்துடன் நோக்கினான்; சீதை உயிருடன் இருக்கிறாள்; இவன் அவளைக் கண்டு மிருக்கிறான்; அவள் கற்புக்கும் பழுதில்லை. என்பனவற்றை எல்லாம் அறிந்து கொண்டான். அனுமனின் செய்கையே உண்மை நிலையை அளந்து காட்டும் கருவியாக அமைய உள்ளம் ஆறுதல் அடைய, துயரம் அகல, அன்பு வளர இராமன், உடல் பூரித்தான்.

> **"கண்டனென் கற்பினுக்கு அணியைக்**
> **கண்களால்."**

கண்டேன்; கற்பின் செல்வியை; என்று கூறுகிறான் "கற்பினுக்கு அணி'' என்று எங்ஙனம் அறிந்தான்? என்று கேட்டால், கண்களால் என்றும் விடை தருகிறான். கண்களால் என்பதற்கு என் கண்ணாலேயே கண்டேன் (I saw with my own Eyes) என்று பொருள் செய்வர் சிலர். அது பொருந்தாது. சீதா பிராட்டி கற்பினுக்கு அணி என்பதை அவள் கண்கள் எனக்குரைத்தன என்பது தோன்ற (அவள்) கண்களால் கண்டேன் என்கிறான். இதற்குத் திறவுகோல் காட்சிப் படலத்தில் உள்ளது.

"கூசி ஆவி" என்ற தொடக்கத்துக் கவியில்

> **"காசு இல் கண் இணை**
> **சான்று எனக் கண்டனன்"**

என்பது தான் அது. அன்றியும் வள்ளுவப் பேராசான்

> **"பகைமையும் கேண்மையும்**
> **கண் உரைக்கும்; கண்ணின்**
> **வகைமை உணர்வார்ப் பெறின்."**

என்றும்,

"நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால்,
கண் அல்லது இல்லை பிற"

என்றும் குறிப்பறிதல் அதிகாரத்தில் உணர்த்தும் இரு குறட்பாக்களையும் காண்க!

இங்ஙனம் கற்பினுக்கு அணியைக் கண்ட செய்தியை உரைக்கும் மாருதி கூறுவனவற்றில் மற்றொரு கவியும் அற்புதப் படைப்பு, அதிலும் பலகாலமாக நாம் முரணிய பொருள் கண்டு வந்துள்ளோம். அதையும் பார்க்கலாம்.

சீதையின் சிறப்பினை எல்லாம் கூறிக் கொண்டுவருபவன் தொடர்ந்து சொல்வதாக அமைந்த கவி தான் அது.

"வில் பெரும் தடம் தோள் வீர!
வீங்கு நீர் இலங்கை வெற்பில்,
நல் பெரும் தவத்தள் ஆய
நங்கையைக் கண்டேன்; அல் லேன்!
இல்பிறப்பு என்பது ஒன்றும்,
இரும்பொறை என்பது ஒன்றும்,
கற்பு எனும் பெயர் அது ஒன்றும்,
களிநடம் புரியக் கண்டேன்"

வில் ஏந்திய பெரிய தாள் தடக்கை வீரனே! மிக்க நீரின் நாப்பண் உள்ள இலங்கையாகிய மலைப்பிரதேசத்தில், உன்னைப் பிரிந்ததால் ஏற்படக் கூடிய துயரால் வருந்தி நல்ல பெரிய (கடுமையான) நோன்பு நோற்கும் நன்மகளாகிய சீதையைக் கண்டேனில்லை என்றே பலரும் பலகாலும் கூறி வந்திருக்கிறோம். அது சிறப்பில்லை என்பதே என் கருத்து "நற்பெரும் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன்" என்று கூறி உடனே "அல்லேன்" என்று மாற்றுவது தான் சிறப்பாகும்.

வெயிலிடை விளக்கு என்ன,
பிரிவு எனும் துயர் உருவுகொண்டாலன,
ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற
இருந்த மா நிலம் செல் அரித்திட இருந்த,

பிராட்டியைக் கண்ட அனுமன்,

"நல் பெரும் தவத்தள் ஆய
நங்கையைக் கண்டேன்!"

என்று கூறியதுமே, "ஐயையோ என்ன தவறு செய்து விட்டேன்" என்று தன்னைத் திருத்திக் கொண்டு, உடனே முன் கூறியதை மறுத்த "அல்லேன்" என்று உரைத்து விட்டு மேலும் விளம்புகிறான். கேவலம் எலும்பும், தோலும் தசையுமான ஓர் உருவத்தையா நான் அங்குக்கண்டேன்? அல்லவே அல்ல, அருவமான பண்பியலான வற்றையன்றோ கண்டேன் என்று கூறுவதை எவ்வளவு புகழினும் தகும்.

குடிப்பிறப்பு என்ற ஒன்றும்,
மிக்க பொறுமை என்ற ஒன்றும்,
ஒழுக்க சீலம் என்ற ஒன்றும்.

கைகோர்த்துக் கொண்டு ஆனந்தக் கூத்து ஆடுவதையல்லவா கண்டேன் என்று கூறுவதில் உள்ள நயம் எண்ணி எண்ணி இன்புறத்தக்க தன்றோ?

இன்பம் பெருக இரு செவியும் தேன் பாய்ச்சும் கம்பன் அருளும் அந்தக் கவியை மீண்டும் பார்க்கலாம்.

"வில் பெரும் தடம் தோள் வீர!
வீங்கு நீர் இலங்கை வெற்பில்,
நல் பெரும் தவத்தள் ஆய
நங்கையைக் கண்டேன்; அல் லேன்!
இல்பிறப்பு என்பது ஒன்றும்,
இரும்பொறை என்பது ஒன்றும்,
கற்பு எனும் பெயர் அது ஒன்றும்,
களிநடம் புரியக் கண்டேன்"

இத்தகு, ஒப்பற்ற, செவிநுகர் கனிகளைச் சொரியும் கம்பன் என்னும் கற்பகத்தருவைப் பெற்றுள்ள நாம், நம்முடைய பெரும் பேற்றை எண்ணிக் களி நடம் புரிந்து கொண்டே இருக்கலாம் இல்லையா?

கம்பன் உவமைகள்

"கம்பன் அடிப்பொடி"

கவிஞனுக்குக் கைகொடுத்து உதவும் அணிகளுள் உவமைக்கு இணை வேறொன்றில்லை எனலாம். அதனால் தான் உவமைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது நமக்கு.

கவிதைத் தச்சன், காப்பியக் கலைஞன் என்றெல்லாம் பலவாறாகப் பாராட்டப் படும் கவிச் சக்கரவர்த்தி கம்பன் பாத்திரங்களைப் படைத்து ஆட்டி வைக்கும் பேராற்றலை எல்லாம் நாம் ஓரளவு அறிவோம்.

முன்னவர் நெறிக்கு முரணின்றியும், பின்னையோர் விரும்பும் புதுமைகளைப் புகுத்தியும் காப்பியம் நடத்தும் அற்புதக் கவிஞன் கம்பன். விருத்தப்பாக்களிலேயே எத்தனை எத்தனையோ வண்ணச் சந்தங்களையும், நாடக உத்திகளையும், எல்லா வகை அணிகளையும் கையாளும் கவி மன்னன் கம்பன். உவமைகளைக் கையாளும் அருமைப்பாடுகளையும் சேர்த்துப் பார்க்கும் போது தான் கம்பன் என்றொரு மானிடன் என்று மகாகவி பாரதி ஒரே வியப்புடன் பாராட்டி நிற்பதன் பொருளை நாமும் உணர்ந்து மகிழ முடியும். இப்பொழுது கம்பனின் உவமைகளில் ஒருசிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

அவையடக்க முதற் கவியிலேயே உவமை நயம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

"ஒலிமிக்க, அலை ஓங்கும் பாற்கடலுக்கு அருகில் ஒரு பூனை வந்து நிற்கிறது. பாற்கடலையே முழுவதும் குடித்து விடலாம் என்று தான் வந்து நிற்கிறது. பாலில் பூனைக்கு எவ்வளவு விருப்பம் என்பது நமக்கு தெரிந்தது தான். எவ்வளவு தான் ஆற்றல் இருந்தாலும் ஒரு பூனை பாற்கடலையே பருகி விட முடியுமா? முடியாது தான். ஆனால் ஆசை என்ற ஒன்றிருக்கிறதே அதற்கு அளவுண்டா, அல்லது வெட்கம்தான் உண்டா? இல்லை என்றாலும், ஒரு பூனை ஒரு கடல் பாலையும் குடித்து விடலாம்

நக்கி நக்கியே என்று தொடங்கினால் எப்படியிருக்கும்? அப்படியிருக்கிறது, எனக்குள்ள ஆர்வத்தால் இராமன் கதையைச் சொல்லி முடித்து விடலாம் என்று துணிந்த என் செய்கை என்று கம்பன் கூறுகிறான். பாட்டைப் பார்க்கலாம்.

ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று, ஒரு
பூசை, முற்றவும் நக்குபு புக்கென,
ஆசை பற்றி அறையலுற்றேன்

முன் மூன்றடிகளிலும் எதுகைச் சொற்களாக முறையே ஓசை, பூசை, ஆசை என்ற சொற்கள் விழுகின்றன. ஓசைக்கும் ஆசைக்கும் இடையில் பூசை அதாவது பூனை அகப்பட்டுக் கொண்டு விழிக்கிற அழகு உவமை நயத்திற்கு மேலும் நயம் புரிகிறதல்லவா?

மேகம் மழை பொழிவதை நாமும்தான் காணுகிறோம். ஆனால் கம்பன் எப்படி நமக்குக் காட்டுக்கிறான்?

கொடுப்பதற்கு நம்மிடம் இன்னும் என்னவெல்லாம் இருக்கின்றன என்று தேடித்துருவி உள்ளவை அனைத்தையும் வாரி வழங்குகிறானே வள்ளல், அவனைப் போலத் தனக்கென்று சிறிதும் வைத்துக் கொள்ளாமல் மேகம் தன்பால் உள்ளவை அனைத்தையும் வழங்குகின்றதாம்.

உள்ளி உள்ள எலாம் உவந்து ஈயும் அவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே.

என்று எதிர் நிலையணியாகக் கூறுவதில் உள்ள உவமை நயம் எத்துணைச் சிறக்கிறது, என்பதைச் சொல்லவா வேண்டும்?

இப்படி வளர்கின்ற தண்ணீர் அருவியாய்க் குதித்து, ஆறாய் ஓடி, கால்களாய்ப் பாய்கின்றது. ஏரியாய்ப், பொய்கையாய் ஊருணியாய், குளமாய், குட்டையாய், சுனையாய், கேணியாய், கிணறாய்த் தங்கி நிற்கிறது. இவற்றை எல்லாம் பார்க்கும் கவிஞனுக்குப் பரம்பொருள் தன்மையே புலப்படுகிறது. அது ஒரு நல்ல கவியாகவும் வெளிப்படுகிறது.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்ப அரும் பொருள் ஈது என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி, துறைதொறும் பரந்தசூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்தது அன்றே.

என்று கடவுள் தத்துவத்தையே நீருக்கு உவமையாகக் கூறுகிறான்.

இங்ஙனம் பரந்த தண்ணீர், சோலைகள், காவுகள், பொய்கைகள், தடாகங்கள், தோப்புகள், வயல்கள் போன்ற இடங்களில் எல்லாம் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் உலவுகிறதைக் காண்கிறான் கம்பன். பல்வேறுபட்ட எத்தனையோ உடம்புகளில் எல்லாம் ஒரே உயிர் எப்படி நிலவுகிறதோ, அப்படியல்லவா இந்தத் தண்ணீர் உலவுகிறது. இதைக்காணும் கவிஞனுக்கு உயிர் உண்மையே புலப்படுகிறது. அதுவும் ஒரு கவியாக உருக்கொள்கிறது. அதையும் பார்ப்போம்.

தாது உகுசோலை தோறும், சண்பகக் காடு தோறும்
போது அவிழ் பொய்கைதோறும், புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனம்தோறும், வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும், உயிர் என, உலாயது அன்றே

என்று ஆன்ம தத்துவத்தையே நீருக்கு உவமையாகக் கூறுகிறான்.

இனி, கம்பன் நாட்டு மக்களைப் பற்றிப் பேசுவதைப் பார்ப்போம்.

மக்கள் நாகரிகத்தாலும், பண்பாட்டாலும் மேம்பட்டவர்கள்; பாடலையும் இசையையும் ஆனந்தமாக அனுபவிப்பவர்கள் அவர்கள்; எத்தனையோ கொண்டாட்டங்களிலும் ஆர்வமுடன் ஈடுபடுகிறார்கள்.

பாவம் இசையும் எப்படிப்பட்டதாம், தெரியுமா? பறக்கும் பருந்தும், அதன் நிழலும் போன்றதாம் பாடலும் - இசையும்

பருந்தொடு நிழல் சென்றன்ன
இயல்இசைப் பயன் துய்ப்பார்

என்று பருந்தைப் பாடலுக்கும், அதன் நிழலை இசைக்கும் உவமிப்பது எவ்வளவு நாகரிகமாக இருக்கிறது. அப்படியே கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதில் அந்நாட்டு மக்களுக்குத்தான் எவ்வளவு ஆர்வம்! அந்த ஆர்வம் எப்படிப்பட்டது என்பதை நாம் அறியும் போது மக்களின் பண்பாடே நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது. விருந்தினர் முகத்தைக் கண்டதும் எவ்வளவு ஆனந்தம் உண்டாகுமோ அவ்வளவு ஆனந்தமல்லவா ஏற்படுகிறது திருவிழாவில் கலந்து கொள்ளும் போது என்று மகிழ்கிறான் கம்பன்.

விருந்தினர் முகம் கண்டன்ன
விழா அணி விரும்புவார்

என்றுரைத்த கம்பன் இதே உவமையை அஃறிணை பொருட்கும் ஏற்றி

விருந்து கண்டு உள்ளம் களிக்கும்
மங்கையர் முகம் எனப் பொலிந்தன கமலம்.

என்றுரைத்த மேலும் சிறப்பாக உவமையை அணி செய்கிறான். கவிஞனின் உள்ளப் பண்பாடே இப்படி உவமை உருக்கொண்டு வெளிப்படுகிறது என்றும் தோன்றுகிறது, இல்லையா?

மக்களைப் பார்த்த நாம் மன்னனையும் பார்க்க வேண்டாமா:

"சென்று, நின்று, வாழ் உயிர் எலாம்
உறைவதோர் உடம்பும் ஆயினான்"

என்று மன்னனை உடம்புக்கு ஒப்பிடுகிறான். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' அதாவது மக்கட்கெல்லாம் மன்னனே உயிராவான் என்றனர் முன்னோர். கம்பனோ மக்கள் மட்டுமல்ல, நிற்பன, நடப்பன ஆகிய எல்லா உயிர்களுமே தங்கி வாழ் உடலாக மன்னன் இருக்கிறான் என்கிறான்.

"வையம் மன் உயிராக, அம் மன் உயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன்"

என்று விளக்கிச் சொல்லுவதன் மூலம் மேலும் தெளிவுபடுத்துகிறான்; தான் கூறும் புதிய முறை உவமையை வற்புறுத்தவும் செய்கிறான்.

இத்தகைய மன்னன் உலகம் முழுவதையும் எப்படி காக்கிறான்?

"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கிறான்"

வேறு கதியின்றி ஒரு சிறு வயலை மட்டும் உடையவன் அந்நிலம் தன் கண்ணையும் கருத்தையும் விட்டகலாமற்படி எப்படிப் பாதுகாத்துப் பாடுபடுவானோ, அப்படி உலகம் முழுவதையும் கண்ணிலும், கருத்திலும் வைத்துக் காத்து வருகிறானாம். "வறிஞன் ஓம்பும் ஓர் செய்" என்னும் உவமை எவ்வளவு பொருளாழம் உள்ளதாயிருக்கிறது.

அந்த மன்னனுக்கு, ஆம் தயரதனுக்குத்தான் ராமன், பரதன், இலக்குவன் சத்ருக்கனன் என நான்கு புத்திரர்கள். இவர்கள் நால்வரையும்...

"தமரமதுடன் வளர் சதுமறை என" என்று வேதங்கட்கு ஒப்பிடுகிறான். ஒலியுருவில் நின்று வளர்கின்ற வேதங்களை யாவரும் மதித்துப் போற்றி வளர்க்கின்றனர். அதைப் போலவே, இவர்கள் நான்கு பெயர்களையும், மக்களெல்லாம் போற்றி வளர்க்கிறார்கள். ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களுள் முன் மூன்றே உலகில் பரக்க வழங்கியுலவுகின்றன. அதர்வணம் அத்துணை அளவு வழக்காற்றில் இல்லை. அங்ஙனமே சத்துருக்கன் என்ற கடைக்குட்டியும் இராமாவதார உலகில் மிகக்குறைந்த அளவுதான் உலவுகிறான். இந்த உண்மையைமனத்துட் கொண்டு பார்க்கும்பொழுது இவ்வுவமை, பண்பு, தொழில், பயன் என்றும் முக்காரணத்தாலும் சிறப்பதை நன்குணரலாம்.

கம்பன் உவமையைக் கையாளும்பொழுது மிக்க கவனம் செலுத்துகிறான். மற்றையோர் கையாண்டு இலைத்துப்போன உவமைகளையும் ஆளுகிறான். ஆனால், காரணம் கூறி, "தற்குறிப்பேற்ற உவமை" யாக வெளிப்படுத்தும் போது தேய்ந்து மங்கிப் போன பழைய இரத்தினமே பட்டை தீர்த்து வேகடம் செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் பிரகாசிக்கின்றது. அவற்றில் ஒன்றைப் பார்ப்போம்.

கன்னிமாடத்தின் உம்பரில் நிற்கும் சீதை வீதிவாய்ச் செல்கிற இராமனைக் காணுகிறாள். இராமனும் சீதையும் ஒருவரையொருவர் நோக்க இருவர் உள்ளமும் இணைந்து விட்டன. இராமன் சென்று கொண்டே இருக்கிறான். அவனை நோக்கிக் கொண்டே நிற்கிறாள்.

அப்படி நிற்கிற சீதையைக் கம்பன்,

"பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்" என்கிறான். ஓவியம், பாவை, ஓவியப் பாவை என்பன எல்லாம் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன உவமைகள் தாம். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன காரணத்தால் இப்படிச் சொல்லுகிறான் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் உவமையின் அருமை புலப்படும்.

சீதை ஏன் நிற்கிறாள்; எப்படி நிற்கிறாள்? ராமனின் பேரழகில் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டு வெறும் கூடாக நிற்கிறாள். வைத்த கண் வாங்கவில்லை. வியப்பாலும், திகைப்பாலும், மெய்ம்மறந்து ஆடாமல், அசையாமல், நிற்கிறாள், நிற்கிறாள், நின்று கொண்டேயிருக்கிறாள், அந்த நிலைமையை நாமும் உணர வேண்டுமென்று காரணம் காட்டி உவமை கூறுகிறான்.

"அந்தம் இல் நோக்கு இமை அணைகிலாமையால்
பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்"

என்ன அருமை; பார்த்தீர்களா? சித்திரத்தின் அருமை, வர்ணத்திலா இருக்கிறது? தீட்டுவோன் கருத்திலும், கரத்திலுமல்லவா இருக்கிறது!

ராம பாணம் தாடகையின் நெஞ்சில் பாய்ந்து ஊடுருவிச் சென்று விடுகிறது. அதைக் கம்பன்,

> "கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன
> பொருள் எனப்போயிற்றன்றே"

என்று உவமை நயம் சிறக்கக் கூறுகிறான்.

இதைப் பார்க்கும் போது ராமனின் வில்லாற்றலையும், கம்பன் சொல்லாற்றல் விஞ்சி நிற்கக் காணுகிறோம்இல்லையா?

ஒரே பண்புடைய இருவேறுபட்டவர்களை உவமிக்கும் போது பண்புடன் பயனும் தோன்ற உவமிப்பது கம்பனுடைய சிறப்பியல்பு. அப்படிப்பட்ட பலவற்றுள் ஒன்றைப் பார்ப்போம். இராமன் நிறமும் கருமை; தாடகையின் நிறமும் கருமை. இருவர் நிறத்திற்கும் உவமை கூறுகிறான். பண்பால் ஒன்றே எனினும், பயனால் வேறுபடுவதாக அமைகிறது, உவமைகள்.

> "மை வண்ணத்து அரக்கி போரில்
> மழை வண்ணத்து அண்ணலே உன்
> கைவண்ணம் அங்குக் கண்டேன்;
> கால்வண்ணம் இங்குக் கண்டேன்

என்கிறான். மையும், மழையும் (மேகம்) நிறத்தால் கருமை தான். பயனைப் பார்க்கும் போது தான் நன்மையும், தீமையும் புலப்படும். குற்றம், இருள், என்றெல்லாம் பொருள் தரும் "மை" துன்பம் தருவதாகும். மேகம் என்ற பொருள் தரும் மழையோ மேனிலையில் சஞ்சரிப்பது. பயன் கருதாமல், விருப்பு வெறுப்பின்றி யாவர்க்கும் இன்றியமையாத நீரை, தூயநீரை தருவதால் இன்பம் தருவதாகும். இப்படி பண்பால் ஒன்றெனினும் பயனால் மாறுபட்ட உவமைகளை

பாத்திரங்களின் தன்மைக்கேற்பக் கையாளுவது கம்பன் போன்ற மாகவிகளுக்கே உரிய சிறப்பாகும்.

ராமன் வனத்தினுள் நுழைகிறான். முழுமதியும் புறப்படுகிறது. கற்பனைச் சிறப்புடன் அதற்குக் கம்பன் காட்டும் உவமை அழகே அழகு! அரக்கர்க்கு உதவும் காரிருள் அவர்களைத் தண்டிக்கச் செல்லும் ராமனுக்கு இடையூறாக அமைகிறதாம். அந்த இடையூற்றுக்கே இடையூறாக வானம் என்னும் அறத்தொண்டன் ஒரு கை விளக்கை ஏந்தி வருகிறானாம்.

"வானம், கைவிளக்கு எடுத்தது என்ன,
வந்தது கடவுள் திங்கள்"

என்று கூறும் கம்பன் அத்திங்கள் எப்படித் திகழ்கிறது என்றும் உணர்த்துகிறான். மறக்கொடும்பாபம் போக்க வில்லேந்திய வீரர்களாய்ச் செல்லும் ராம - இலக்குவரை மகிழ்வுடன் காணவந்த தரும தேவதையின் திருமுகம்போலத் திகழ்கிறது என்று கூறும் உவமை நம் நெஞ்சை அள்ளுகிறது.

"களிப்பொடு காணவந்த
தருமத்தின் வதனம் என்னப்
பொலிந்தது தனிவெண் திங்கள்"

அருமை, அருமை; "தருமத்தின் வதனம் என்னப் பொலிந்தது தனிவெண் திங்கள் என்பதைத் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது. மனம் இனிக்க வாய்மணக்கச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இல்லையா?

இல்லாவிட்டால் அன்றே ஒரு ரசிக சிகாமணி **"கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே"** என்று அறுதியிட்டுப் பாராட்டியிருப்பானா என்ன?

இராவண வதத்திற்கு உதவிய இரு நிகழ்ச்சிகள்

"கம்பன் அடிப்பொடி"

இராமாவதாரத்தின் நோக்கமே இராவண வதம் அல்லவா? இராவண வதம் என்றால் சாமான்யமா? அவன் வரபலம், படைபலம் முதலியன அற்ப சொற்பமா? இலங்காபுரியின் பாதுகாப்பு வருணிக்க முடியாதவை. கடலே அந்நகருக்கு அகழியாய் உள்ளது; மதிலோ வானைமுட்டிக் கொண்டிருப்பவை. சூரியன் கூட மதிலைத் தாண்ட முடியாமையால் வடக்கும் தெற்குமாகச் சுற்றித்தான் செல்கிறானாம். கல்வியறிவிலோ செல்வ வளத்திலோ இலங்கைக்கு நிகர் இலங்கை தான். மதிற் சுவர்கள் கூடப் பொன்னால் அமைந்தவை; நவரத்தினங்கள் பொதிந்தவை. மக்கள் யாவரும் ஒரே மகிழ்ச்சியில் திளைப்பவர்களேயன்றி மனம் கவல்கின்றார் எவருமில்லை. (ஆனால் எல்லா வளங்களும் நிறைந்திருப்பினும் அறம் மட்டும் அங்கில்லை. அஃது ஒன்றே பேரழிவுக்குக் காரணமாயிற்று)

இவ்வளவு வளமும் பலமும் நிறைந்த ஒரு நாட்டை அடியோடு அழிப்பது என்பது எண்ணவும் கூடிய ஒன்றா? அதற்கு எத்துணை முன்னேற்பாடுகள் வேண்டும்? ஒன்றை முதலில் இங்கே பார்க்கலாம்.

ஆயிரம் யானைகள், பதினாயிரம் தேர்கள், ஒரு கோடி குதிரைகள், ஆயிரம் சேனாபதிகள் போரில் இறந்து பட்டார்கள் என்றால் தலையற்ற பேய் (கவந்தம்) ஒன்று தாண்டவம் புரியுமாம். அப்படி ஆயிரம் கவந்தப் பேய்கள் தாண்டவம் செய்தால் இராமனின் கோதண்டத்தின் கடை மணி ஒரு முறை "கணீர்'' என்று ஒலிக்குமாம். மூல பல வதைப் போரில் கோதண்டத்திலுள்ள மணி ஏழரை நாழிகை ஒலித்ததாம். அதாவது மூன்று மணி நேரம் ஒலித்ததாம். இது மூலபலம் (Reserve Army) வந்து மோதிய இறுதி நிலையில் மட்டுமே அதற்கு முன் நிகழ்ந்த

போர்களில் எத்தனை எத்தனை வெள்ளம். சேனைகள் மாண்டொழிந்தன என்பதை ஊகித்துக் கொள்ளத்தான் வேண்டும். (வெள்ளம் என்றால் ஐம்பத்தேழு ஸ்தானங்கள் கொண்டது). இங்கே கம்பன் கூறுவதை அவன் வாய்மொழியிலேயே கேட்போம் :

> **"ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம்,**
> **அடல் பரி ஒரு கோடி,**
> **சேனை காவலர் ஆயிரம் பேர் படின்,**
> **கவந்தம் ஒன்று எழுந்து ஆடும்;**
> **கானம் ஆயிரம் கவந்தம் நின்று ஆடிடின்**
> **கவின் மணி கணில் என்னும்;**
> **ஏனை அம் மணி ஏழரை நாழிகை**
> **ஆடியது இனிது – அன்றே!"**

இத்துணைப் பேராற்றலும், பெரு வளமும் பெற்றுப் பிறங்கும் இலங்கேச்வரனை வேறொடும் அழிப்பதற்கு இராமன் பெற்ற பயிற்சியும் மேற்கொண்ட முறைகளும் பலபல. அவற்றுள் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே காணலாம்.

முதலாவது இராவணன் பாட்டியாகிய தாடகை வதம். அதுதான் இராமனின் கன்னிப்போர். அரக்கர் உயிரைக் குடிக்க அஞ்சி, ஆனால் வேட்கையால் மருகிக் கொண்டிருந்த கூற்றும் இராமன் அருளாலே "ருசி" பார்த்தது. அடுத்து விசுவாமித்திரனின் வேள்வியை அழிக்க வந்த அரக்கர் கூட்டத்தைக் கட்டழித்தபோது சேனைத் தலைவர்களாய் வந்த சுவாகு - மாரீசன் ஆகிய இருவரில் சுவாகுவைக் கொன்று அவனுடலைக் கொண்டு போய்க் கடலில் ஆழ்த்தியது இராமபாணம், மாயம் வல்ல மாரீசனோ தப்பி மறைந்து ஓடி விட்டான்.

தாடகை வதம் முடிந்ததுமே, தேவர்கள் குறித்த வண்ணம் விசுவாமித்திரன் பல்வேறு தெய்வப் படைக்கலங்களை இராமனுக்கு வழங்கி அவன் ஆற்றலைப் பாராட்டி மகிழ்கிறான். இராவண வதத்திற்கு வித்திட்டவன் விசுவாமித்திரனே என்னலாம்.

வேள்வி முற்றிய பின்னர், மிதிலைக்கு, இராம - இலக்குமணரை அழைத்துச் செல்கிறான் முனிவன். அங்கு சிவதனுசை முறித்துச் சீதையை மணக்கிறான் இராமன். திருமண விழா வெல்லாம் முடிந்து அயோத்தி திரும்பும் வழியில் பரசுராமன் எதிர்ப்படுகிறான். அவனைக் கண்டதுமே தயரதன் மெய் நடுங்கி விதிர்ப்புற்று அவன் அடியில் வீழ்ந்து இராமனைக் காக்க வேண்டுமென்று பலவாறாய் வேண்டித் தொழுகிறான் பரசுராமன் மசியவில்லை. இராமனைச் சினத்துடன் நோக்கிக் "காலத்தால் மச்சு மடிந்த அந்தச் சொத்தை வில்லை முறித்தது பெரிதோ? இதோ என் கையில் உள்ள இந்த திருமால் சிலையை வளைத்து நாணேற்று பார்க்கலாம்!'' என்று வீறாப்புப் பேசுகிறான்.

"தருக அந்த வில்லை'' என்று வாங்கிக் கணப் பொழுதில் அதை வளைத்து நாணைப் பூட்டி விட்டுப் பரசுராமனை நோக்கினான். அவனோ பேயறைந்தாற் போல அஞ்சி நட நடுங்கிக் கொண்டு நிற்கிறான். அவனைப் பார்த்து இராமன் பேசுகிறான் :

"உலகத்து மன்னர்களை எல்லாம் இருபத்தொரு தலைமுறை கொன்றழித்த பாவியே! நீ வேதவித்தான அந்தணன் மகனாகத் தோன்றிவிட்டாய்; ஆனதால் உன்னைக் கொல்ல விரும்பவில்லை. ஆனால் யான் தொடுத்த கணை வறிதே திரும்பாது; இதற்கு இலக்கு யாது என உடனே கூறு!'' என்று வினவுகிறான்.

நடுங்கிக் கொண்டிருந்த பரசுராமன்,

"அறத்தின் மூர்த்தியே! அடியெனை மன்னித்தருள்க! இதுவரை யான் ஆற்றிய தவப்பயன்களை யெல்லாம் உன் கணை உண்டு என் உயிரைக் காப்பாற்றட்டும்'' என்று கூறி வேண்ட, இராமன் விடுத்த கணை அவன் தவப்பயன் முழுவதையும் உண்டு மீண்டது. பரசுராமன் வணங்கி விட்டு வந்த வழியே திரும்பிச் சென்றான்.

இஃது இராமனுக்கு ஒரு மகத்தான வெற்றி! இராவண வதத்திற்கு ஆக்கம் ஊட்டுவதாய் அமைந்த ஒன்று! ஏன்? இராவணன் கார்த்த வீரியனுடன் போரிட்டுப் படுதோல்வியுற்றவன். உயிர் பிழைத்தாற் போதும் என்று திண்டாடியவன். பின்னர் கார்த்தவீரியனுக்குப் பணிந்து நடப்பதாய் வாக்களித்து உயிர் பிழைத்தவன். அப்படிப்பட்ட கார்த்தவீரியனைப் பொருதி வென்று கொன்றவன் பரசுராமன். இத்தகைய பரசுராமனை வென்று அவன் பலம் முழுவதையும் அடியோடுதேயச் செய்தது இராவணனை வெல்வதற்கு அடித்தளம் இட்டதுபோல அமைந்து விட்டது.

அடுத்து மற்றொன்றைப் பார்க்கலாம். வாலியைக் கொன்றது தான் அது. வாலியும் சாமானியப்பட்டவன் அல்லன். எல்லா வகையிலும் உயர்ந்தவன். தனியாற்றலில் அவனுக்கு இணை யாரும் இல்லை. வாலியைக் கொன்றாலன்றி இராவணவதம் நிறைவேறாது. அறவழியில் பார்த்தாலும், அரச தந்திர நெறியில் பார்த்தாலும் வாலியைக் கொன்றே ஆக வேண்டும். வாலியைக் கொன்றாலன்றி இராவணவதம் நிறைவேறாது; அரக்கர் குலத்தை வேரறுக்க முடியாது. ஏன்? காரணங்களைப் பார்ப்போம், இனி.

வாலி இராமனைப் பெரிதும் மதிப்பவன் தான். ஆனால் இராவணனுடன் ஏற்கனவே ஓர் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறான். அந்த உண்மை இராவணன் வாய்மொழியாகவே கம்பனால் புலப்படுத்தப் படுகிறது.

"உந்தை என் துணைவன் அன்றே!
ஓங்கு அறச்சான்றும் உண்டால்"

என்று அங்கதனிடம் இராவணன் கூறுவதில் இருந்து அந்த உண்மையை அறியலாம். எனவே போர் என்ற நிலைமை வந்து விட்டால் வாலியும் அவனுடைய எழுபது வெள்ளம் சேனையும் இராவணனுக்குத் துணை போகத்தான் நேரிடும். அப்புறம் அரக்கர் சேனையுடன் குரங்குச் சேனையையும் எதிர்த்துப் பேரிட வேண்டிய நிலை ஏற்பட்டு விடும். அப்படி நேரச் செய்து விட்டால் மாற்றான் படைக்குப் பெரிதும் ஆக்கம் அளித்த அறிவுச்

சூனியனாகவே இராமன் கருதப்படுவான். வாலியைக் கொன்று சுக்கிரீவனைத் தன் தோழனாகக் கொள்வதால் இராமனுக்கு எழுபது வெள்ளம் சேனை கிடைக்கிறது. இதை விடப் பெரும் வாய்ப்பு இராமனுக்குக் கிடைப்பது அரிது. அன்றியும் தவறே செய்யாத தம்பியைப் பகைத்து அவன் மனைவி ருமையை அபகரித்து கொண்டவன். ஆதலால் அறநெறிப்படி அவனைக் கொல்லல் சரியேயாம்.

அன்றி இராமன்பால் உள்ள பெருமதிப்புக் காரணமாகத் தன்பால் தோற்று அடங்கிக் கிடக்கும் இராவணனுக்கு வாலி சொல்லியனுப்பினாலே இராவணன் சீதையை இராமன்பால் திரும்பச் செய்து விடுவான். அங்ஙனம் ஆகி விட்டால் தேவர்கள் எண்ணமும், முனிவர்கட்கு இராமன் கொடுத்த வாக்கும் நிறைவேறாமல் போய்விடும் இல்லையா?

எனவே, இராவணனை வாலிலே பிணைத்து வானும், மலையும், கானும், கடலும் தாவித்திரிந்த பேராற்றல் மிக்க வாலியைக் கொன்றது இராவணனை வதம் செய்வதற்கு ஊக்கம் தரும் செயலாகவும் அமைந்து விட்டது என்னலாம்.

பரசுராமன் அடல் அழியச் செய்ததும், வாலி மாளச் செய்ததும் இராவணவதத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த இருபெரும் செயல்களாகும்!

வரலாற்றை மறந்தமையால் வந்த குழப்பம்

"கம்பன் அடிப்பொடி"

பாலகாண்டத்தில் குலமுறை கிளத்து படலம்; அதில் முதற் பாட்டு :

"ஆதித்தன் குல முதல்வன் மனுவினை யார் அறியாதார்?
பேதித்த உயிர் அனைத்தும் பெரும் பசியால் வருந்தாமல்
சோதித் தன் வரி சிலையால் நிலமடந்தை முலை சுரப்பச்
சாதித்த பெருந்தகையும் இவன் குலத்து ஓர் தராபதி காண்"

இஃதோர் அருமையான பாட்டு; கம்பன் காலத்தை நிர்ணயிப்பதற்கு ஒரு நல்ல சான்றாகும்.

முதலில் வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் என்னும் பெரியாரின் உரையைப் பார்க்கலாம்.

"ஆதித்தன் குலமுதல்வன் சூரிய வமிசத்தில் தோன்றிய முதற்புத்திரனான; மனுவினை மனுச்சக்கரவர்த்தியை" என்று எழுதிப்போந்தார்.

அடுத்து அண்ணாமலை பல்கலைக் கழகப் பதிப்பைப் பார்க்கலாம்;

"விசுவசுவான் என்ற சூரியனது குலத்துக்கு முதற் புதல்வனாகத் தோன்றிய வைவசுதன் என்ற மனுச்சக்கரவர்த்தியை" பொருள் கூறுகின்றது அப்பதிப்பு.

ஆதித்தன் என்றதுமே சூரியன் என்ற முடிவுக்கு வந்து விட்டதால் முதல்வன் என்ற சொல்லுக்கு முதற்புத்திரன் என்று வலிந்து பொருள் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. முதல்வன் என்ற சொல்லுக்கு முதற்புதல்வன் என்று வேறு பிரயோகம் காட்ட முடியாது என்றே அடியேன் கருதுகிறேன்.

இங்கே "ஆதித்தன்" என்பது கம்பனின் நண்பன் விஜயாலய சோழனின் (கி.பி. 850-871) மைந்தன்; கி.பி. 871-907ல் கோலோச்சியவன்; ராமகதையில் கொண்ட ஈடுபாட்டால் தன் பெயரைக் கோதண்டராமன் என்று மாற்றிக் கொண்டவன். காளத்திக்கு அணித்தேயுள்ள தொண்டைமான் நாடு என்ற இடத்தில் இவனுடைய பள்ளி படைக்கோவில் உள்ளது. அதில் உள்ள கல்வெட்டு 'கோதண்டராமேச்சுரம் என்ற ஆதித்தேச்சுரம்' என்று அந்தச் சமாதிக்கோவிலைக் குறிப்பிடுகிறது. அந்தக் கோவிலை எடுத்தவன் இவன் மைந்தனான முதற்பராந்தகன் (கி.பி. 907 - 955) ஆவான்.

இந்தப் பாட்டில் குறிக்கப்படும் ஆதித்தன் என்பது முதலாம் ஆதித்தனே! அவனுடைய குலத்துக்கு முதல்வன் - ஆதியானவன் மனு என்று கூறினால் சிக்கலின்றி இயல்பாக இருக்கிறது. கம்பன் தன் காலத்தவரைக் குறிப்பிடும் பொழுது அவர்களின் முன்னவர்களை ராமன் காலத்திற்கு - ஏன் அதற்கு முன்கூட - கொண்டு சென்று விடுவான்.

ராமனுக்கு மகுடாபிஷேகம் செய்கிற பொழுது ஒப்பற்ற வள்ளல் சடையப்பனைச் சொல்லத் துடிக்கிறது கம்பனின் நன்றி மறவாப் பெருமனம். சடையனை எப்படி அங்கே - பட்டாபிஷேக மண்டபத்திற்கு - இட்டுச் செல்லுவது என்று சிந்திக்கிறான். சடையனின் முன்னோர்கள் அக்காலத்தில் இருந்திருக்க வேண்டுந்தானே! ஆம்! எனவே,

"விரிகடல் உலகம் ஏத்தும்
வெண்ணைமன் சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி"

என்று பாடி மன நிறைவு கொண்டு விடுகிறான்.

அதைப் போலவே ஆதித்தன் என்னும் தன் அன்பிற்குரிய நண்பனையும் ஜனக மன்னனின் மணிமண்டபத்தில் வீற்றிருக்கச் செய்து விடுகிறான். இந்த ஆதித்த சோழனின் மூல புருஷன் என்று

மனுவை அறிமுகப்படுத்துகிறான் கவிச் சக்கரவர்த்தி. இந்த வரலாற்றுண்மையை மனத்தில் கொண்டு பொருள் செய்தால் வலிந்து பொருள் கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்படாது, இல்லையா?

இனி மற்றொரு பாடலையும் கண்டு விட்டு இக்கட்டுரையை முடிக்கலாம்.

பரதன் கேகய நாட்டிலிருந்து அயோத்திக்குத் திரும்புகிறான்; நடந்தவற்றை எல்லாம் உணருகிறான்; கைகேயி வெறுத்து விட்டுக் கோசலையின் அரண்மனைக்குச் செல்கிறான். தன் மனத்தைத் திறந்து நடந்தவற்றிற்குப் பரதன் வருந்திப் புலம்புகிறான். அப்பொழுது பரதனின் உள்ளத் தூய்மையை உணர்ந்த கோசலை

"கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய! நீ அறிந்திலை போலுமால்?"

என்றாள். இச்சொல் செவியிற் படலும் கதறிப் பதறி அழுது பதினெட்டுப் பாடல்களில் சபதமொழி கூறுகிறான். அப்படி அந்த வஞ்சனையை யான் அறிவேனானால் இன்ன இன்ன பாவங்கட்கு ஆளாவேனாக! என்றெல்லாம் சூளுரை கூறுகிறான் பதினெட்டுப் பாடல்களில் அதில் இறுதிப் பாடல் வருமாறு :-

"கரும்பலர் செந்நெல் அம் கழனிக் கானநாடு
அரும்பகை கவர்ந்து உண, ஆவி பேணினென்
இரும்பலர் நெடுந்தலை ஈர்த்த காலொடும்
விரும்பலர் முகத்து எதிர் விழித்து நிற்க யான்!"

இப்பாடலுக்கு, வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

"அவர் கரும்பு செந்நெல் அம் கழனிக்கானம் நாடு = பரந்த கரும்பையும், நெற் பயிரையும் கொண்டுள்ள அழகிய கழனிகளின் கூட்டத்தைக் கொண்ட தேசத்தை" என்று பொருள் செய்கின்றார்.

அண்ணாமலைப் பதிப்போ,

"கரும்பையும், பரவிய செந்நெற் பயிரையுமுடைய அழகிய கழனிக காட்டையுடைய நாட்டை", என்று பொருள் கூறுவதுடன் "கழனிக் கானம் என்றது, வயற்காடு கழனிக் காடு என்றாற் போன்றது" என்று சப்பைக் கட்டுக் கட்டுகிறது.

இங்கும் வரலாற்றுண்மையை அறியாமற் போனதால் தான் இப்படி எல்லாம் இடர்ப்பட நேர்ந்திருக்கிறது.

கரும்பு அலர் = கரும்பைப் போல என்று பொருள் கொள்ள வேண்டும் இங்கே "அலர்" என்ற சொல் உவமன் உருபு ஆகும். எனவே கரும்பைப் போலச் செழிப்பாக வளர்ந்துள்ள செந்நெல் என்று பொருள் கொண்டால் இடையூறு இல்லை. ஞானசம்பந்தப் பெருமான் ஓரிடத்தில் "செந்நெலெலாம் கன்னல் காட்டச் செங்கரும்பு கமுகு காட்டும்" என்று கூறுவது ஒப்பு நோக்கத்தக்கதாகும். இனிப் பாடலில் முழுப் பொருளையும் பார்க்கலாம்.

கரும்பைப் போலச் செந்நெல் வளரும் வளமிக்க நன்செய் நிலங்களைக் கொண்ட "கான" நாட்டைக் கொடும் பகைவர்கள் கைப்பற்றி அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மானங்கெட்டு எப்படியாவது உயிர் பிழைத்தால் போதுமென்று கருதி அவர்கள் இட்ட இரும்பாலான நெடிய விலங்கை இழுத்துக் கொண்டு செல்லும் காலோடு அப்பகைவர் முகத்துக்கு எதிரில் விழித்துக் கொண்டு நிற்கும் நிலையை யான் அடைவேனாக!" என்று சூளுரை கூறுகிறான்.

இங்கே கானநாடு என்பது புதுக்கோட்டைக்குத் தெற்கேயுள்ள ஒரு நாட்டுப் பகுதி அதை கானோடு என்றும், கானநாடு என்றும் கூறுவர். இப்பொழுதுள்ள கானாடுகாத்தான் என்னும் நகரம் அந்த நாட்டைச் சேர்ந்ததே. அதைச் சோழர்களிடமிருந்து கொடும்பாளூர் வேளிர்கள் கைப்பற்றி விட்டனர். அதை விஜயாலயன் காலத்தில் ஆதித்தன் மீட்டான் என்பது வரலாறு. அதை உணர்த்தும் இந்தச் செய்தி உரை செய்த அறிஞர்கட்கெல்லாம் கிட்டாத காரணத்தால் தான் இப்படி வலிந்து பொருள் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச்

செய்தியாலும் இன்னும் சில சான்றுகளாலுமே கம்பன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்று துணிய முடிகிறது. எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல் என்ற சாற்றுக்கவியானும் இஃது உறுதியாகின்றது.

"எண்ணிய சகாத்தம் எண்ணூற்று ஏழின்மேல், சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய்நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய இராமகாதை பங்குனி அத்தநாளில்
கண்ணிய அரங்கர் முன்னே, கவி அரங்கேற்றினானே."

முப்பெரும் புலவர் மலர் வணக்கம்

"கம்பன் அடிப்பொடி"

கம்பன் மலர் வணக்கம்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்!
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா!
அலகிலா விளையாட்டுடை யார்அவர்!
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!

திருவழுந் தூர்வரு தேவே போற்றி!
அருள்வழி உணர்த்துபேர் அந்தண போற்றி!
தமிழ்தவம் செய்தமா தவமே போற்றி!
அமிழ்தினும் இனியசொல் அருளினை போற்றி!
உலகமா கவிஎன ஒளிர்வாய் போற்றி!
கலைகளின் பெருங்கடல் கடந்தாய் போற்றி!
பொன்னித் துறைதவழ் புனித போற்றி!
கன்னித் தமிழ்த்திறம் காட்டினை போற்றி!
முத்தமிழ்த் துறையின் வித்தக போற்றி!
சித்தம் அழகிய சேவக போற்றி.

இதிகா சத்துறை ஏறே போற்றி!
விதிவலி உணர்த்தும் மதிவல போற்றி!
சாத்திரம் நன்குணர் சதுரனே போற்றி!
பாத்திரம் சுவைசெயும் பாவல போற்றி!
புவிமுழு தளந்த புலவனே போற்றி!
கவிஞரில் ஓங்கிய கலைஞனே போற்றி!
மாயாப் புகழொடு வாழ்வாய் போற்றி!
தாயாய் அறத்தைத் தாங்குவாய் போற்றி!
பெண்மைக் குயர்வு பேணுவாய் போற்றி!
உண்மைக் குருவம் உதவினை போற்றி!

நடையில் நின்றுயர் நாயக போற்றி!
சடையன் புகழ்விரி தலைவ போற்றி!
இறைஉயிர் முறைஅறி எம்மான் போற்றி!
பொறை சயத் துறை எனும் புனித போற்றி!
கற்பனைத் திறம் பல கவித்தனை போற்றி!
அற்புதம் படைக்கும் அரசே போற்றி!
காவிய வானக் கதிரவ போற்றி!
ஓவியக் கவிதைக் கொருவனே போற்றி!
விருத்தக் கவிக்கொரு வேந்தே போற்றி!
கருத்துப் புரட்சிக் கவிஞனே போற்றி!

என்றுமுள தென்தமிழ் இயம்பினை போற்றி!
தென்றலைப் பவியாய்ச் செய்வாய் போற்றி!
இராமாவ தாரம் ஈந்தாய் போற்றி!
பராவரும் கவிவலம் படைத்தாய் போற்றி!
வான்மிக மணிக்கொளி வழங்கினை போற்றி!
கோன்மை நெறிஉணர் கொற்றவ போற்றி!
வெண்ணெய் வளர்த்த விளக்கே போற்றி!
மண்ணில் வாழ்ந்த வானவ போற்றி!
அலகிலா விளையாட் டறிவே போற்றி!
உலகெலாம் போற்றும் உத்தம போற்றி!

பெருமையே வடிவாய்ப் பிறங்குவாய் போற்றி!
அருமையைச் சொல்லில் அமைத்தாய் போற்றி!
பலகலை ஆர்ந்த பனிமதி போற்றி!
உலகம் பொதுஎன உரைத்தனை போற்றி!
அனைத்துயர் காப்பியம் ஆக்கினை போற்றி!
மனத்துவம் நன்குணர் மன்னவ போற்றி!
மாயா சனகனை வடித்தனை போற்றி!
தோயாத் துறையிலாத் தோன்றலே போற்றி!
தத்துவ நிலைதெரி சத்துவ போற்றி!
சித்திரம் எனக்கவி தீட்டினை போற்றி!

வள்ளுவன் நெறிசெலும் வள்ளலே போற்றி!
ஒள்ளிய துணர்ந்தநல் உணர்வாய் போற்றி!
காவிரி நலமுணர் காதல போற்றி!
பாவிகம் முழுதுணர் பருணித போற்றி!
மெய்ப்பா டுணர்ந்திடும் விபுதா போற்றி!
துய்ப்பார்க் கினித்திடும் சொல்வல போற்றி!
பவித்திரப் பெருங்கதை பகர்ந்தாய் போற்றி!
செவிக்குறு தேன்பொழி செம்மலர் போற்றி!
மக்களுக் குரிமை வரித்தனை போற்றி!
தக்கநற் கவிதைத் தச்சனே போற்றி!

நுண்கலை உணர்த்திடும் நூலோம் போற்றி!
வண்கவிச் சக்கர வர்த்தியே போற்றி!
கல்வியிற் பெரிய கடலே போற்றி!
செல்நெறி காட்டும் தேசிக போற்றி!
அமர காவிய அமுதே போற்றி!
சமரம் காட்டலில் சமனிலி போற்றி!
செந்தமிழ்க் குயர்வருள் செம்மலே போற்றி!
அந்தமில் சுவைபொழி அண்ணால் போற்றி!
உலகுடன் பிறப்பென உணர்த்தினை போற்றி!
விலகலாப் பொருளுரை மேலவ போற்றி!

வேதாந் தப்பொருள் விரித்தனை போற்றி!
நாதாந் தத்துறை நாவல போற்றி!
அழுக்கறு நெறிதரும் அறவோய் போற்றி!
ஒழுக்கம் பேணிடும் ஒண்தவ போற்றி!
கற்பு நெறிக்கொரு காவல போற்றி!
சொற்பொருள் கணித்த தூயோய் போற்றி!
திருக்குறள் விரிவுரை செய்தவ போற்றி!
மருட்கொளா நெறிவளர் மாண்பினை போற்றி!
துன்பிலே சுகமெனச் சொல்லினை போற்றி!
அன்பதே ஆக்கம்என் றறைந்தனை போற்றி!

கவியினுக் கணிஎனும் கண்ணே போற்றி!
செவிநுகர் கனியருள் சிற்குண போற்றி!
படைக்கலப் பரிசுணர் பண்பனே போற்றி!
அடைக்கலம் காக்குநல் அருளோய் போற்றி!
ஆன்றவிந் தடங்கிய ஐயா போற்றி!
சான்றவர் இனத்தொரு தக்கோய் போற்றி!
அம்பிகா பதிதரும் அத்தா போற்றி!
கும்பிட்டு வாழ்கிலாக் குலபதி போற்றி!
அந்தியைக் காலனாய் ஆக்குவாய் போற்றி!
சந்தமார் சுவைவளம் தந்தனை போற்றி!

நாடக அணிக்கொரு நாதனே போற்றி!
வீடுறு நெறியதும் விளக்கினை போற்றி!
மறைப்பொருள் விளக்கிடும் மாதவ போற்றி!
பிறப்பெலாம் சமனெனப் பேசுவாய் போற்றி!
தமிழ்ப்பண் பாட்டின் தாயே போற்றி!
நிமிர்கடன் உணர்த்தும் நெறிவல போற்றி!
யாரொடும் பகைகொளல் என்றவ போற்றி!
போரொடுங் கிடவழி புகன்றவ போற்றி!
மக்களே உயிர் என வகுத்தனை போற்றி!
மன்னனை உடலென மாற்றினை போற்றி!

அறிவினுக் கறிவினை அறிபவ போற்றி!
செறிபெரும் கேள்விச் செல்வனே போற்றி!
சமய நோக்கினில் சமரச போற்றி!
குமரித் தமிழ்க்கொரு கோவே போற்றி!
மானிடப் பெருமை வளர்த்தனை போற்றி!
தேனிசைத் தமிழின் தெய்வமே போற்றி!
நாட்டரசன் கோட்டை நயந்தாய் போற்றி!
போற்றி கம்பனே போற்றி போற்றி!

உன்னை உள்ள படியறியேம்;
உலகை உள்ள திறமுன்னேம்;
பின்னை அறியேம், முன்னறியேம்,
இடையும் அறியேம்; பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை அடியேம் செயற்பால?
இன்ப துன்பம் இல்லானே!

வாழிதமிழ் நாகரிகம்
வாழிதமிழ்ப் பண்பாடு
வாழிதமிழ் வேதமருள்
வள்ளுவனார் – வாழியரோ
இன்பம் பெருக
இருசெவியும் தேன்பாய்ச்சும்
கம்பனாம் எங்கள்
கவி.

வள்ளுவன் மலர் வணக்கம்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்!
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா!
அலகிலா விளையாட்டுடை யார்அவர்!
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!

திருமயிலை அவதரித்த தேவா போற்றி!
திருக்குறளை உபகரித்த செம்மால் போற்றி!
ஒருபெரிய இறையுண்மை உரைப்பாய் போற்றி!
உலகியலின் நிலைமுழுதும் உணர்ந்தாய் போற்றி!
அருள்மலரும் அறம்வகுக்கும் ஐயா போற்றி!
ஆம்பொருளின் திறம்கணிக்கும் அரசே போற்றி!
பொருவரிய இன்பநலம் புகல்வாய் போற்றி!
புவியுளநாள் வரையுமுள புனிதா போற்றி! 8

பாயிரநான் கவற்றைநனி பகுத்தாய் போற்றி!
படர்கடவுள் வாழ்த்தினைமுன் பகர்ந்தாய் போற்றி!
மாயிருவான் சிறப்படுத்து வைத்தாய் போற்றி!
மற்றதன்பின் நீத்தார்சீர் வகுத்தாய் போற்றி!
ஏயுமறன் வலியுறுத்தல் இசைத்தாய் போற்றி!
இல்வாழ்வின் மாண்புணர்த்தும் எந்தாய் போற்றி!
தூயவாழ்க்கைத் துணைநலம்சொல் தோன்றால் போற்றி!
துகளறுமக் கட்பேற்றைத் தொகுப்பாய் போற்றி! 16

அன்புடைமை விருந்தோம்பல் அமைத்தாய் போற்றி!
அஃதோடின் சொல்லருமை அருள்வாய் போற்றி!
நன்னன்றி மறவாமை நவின்றாய் போற்றி!
நடுவுநிலை வற்புறுத்தும் நல்லோய் போற்றி!
தன்னடக்கம் பேணுகெனும் தக்கோய் போற்றி!
தனிஒழுக்கம் குடிமைஎனும் சான்றோய் போற்றி!
அன்னியனில் விழையாமை அறைந்தாய் போற்றி!
அரும்பொறையை விதந்துரைக்கும் அரசே போற்றி! 24

அழுக்காற்றை வெறுத்தொதுக்கும் அறிவோய் போற்றி!
அஃதொடுவெஃ காமையுரை அறவோய் போற்றி!
இழுக்காகும் புறங்கூறல் என்பாய் போற்றி!
எழில்பயனில் சொல்மறுக்கும் இனியோய் போற்றி!
அழிசெயுந்தீ வினையஞ்ச அறைவோய் போற்றி!
அருமந்த ஒப்புரவை அருள்வோய் போற்றி!
வழுவில்புகழ் ஈகையின்பின் வைத்தாய் போற்றி!
மன்னருளே செல்வமென வகுத்தாய் போற்றி! 32

ஊன்உண்ணல் கொலைபுரிதல் ஒறுத்தாய் போற்றி!
ஓண்தவத்தால் வாய்மையால் உயர்ந்தாய் போற்றி!
தான்வெகுளல் திருடுதலைத் தவிர்ப்பாய் போற்றி!
தவம்துறவு வாய்மைநெறி தந்தாய் போற்றி!
மேன்மைதரு மெய்யுணர்தல் விரித்தாய் போற்றி!
விழைத்தின்னா செய்கயமை வெறுத்தாய் போற்றி!
வான்பெரிய ஊழ்வலியை வகுத்தாய் போற்றி!
வளர்முப்பத் தெட்டிலறம் வடித்தாய் போற்றி! 40

கோன்மைநெறி முறையெல்லாம் குணிப்பாய் போற்றி!
கொற்றவர்தம் தரமெல்லாம் குறிப்பாய் போற்றி!
மேன்மையுயர் கல்விநலம் விரிப்பாய் போற்றி!
மிகுசெல்வம் கேள்விஎனும் விபுதா போற்றி!
தேனெனவே மாண்பெல்லாம் செய்தாய் போற்றி!
செருமுதலா யாவையுமே தெரிப்பாய் போற்றி!
ஊனமிலா நாடெடுதென்று உய்ப்பாய் போற்றி!
உறுப்புகள்தம் கடமையையும் உரைப்பாய் போற்றி! 48

எதுஅமைச்சாம் எனவிளக்கும் ஏந்தால் போற்றி!
இவர்வினைகள் முழுதுணர்த்தும் இனியோய் போற்றி!
பொதுமகள்தம் தொடர்பறுக்கும் புனிதா போற்றி!
பொருள்செய்யும் வகையருளும் பொருளோய் போற்றி!
மதுவிலக்கைக் கொணர்ந்தமுதல் மகாத்ம போற்றி!
வளர்பகையின் திறமெல்லாம் வடிப்பாய் போற்றி!
புதுமுறையிற் பழைமைநலம் புரப்பாய் போற்றி!
புரிசூது கடிகின்ற புலவோய் போற்றி! 56

குடியிலே வகுத்தபெருங் குருவே போற்றி!
கொள்பணிவின் பெருமைசொலும் போற்றி!
படியிதனில் உயர்மானம் பகர்வாய் போற்றி!
பரவுமுயிர் சமமென்னும் பழையோய் போற்றி!
கொடிதெதிரே இனிதுசெயும் குரிசில் போற்றி!
கூறுபண்பாட் டழகைஎலாம் குவிப்பாய் போற்றி!
மடியதனின் தீமையெலாம் வகுப்பாய் போற்றி!
மாண்புடைய ஊக்கமதை வளர்ப்பாய் போற்றி! 64

எழுபதினில் பொருள்விளக்கம் ஈந்தாய் போற்றி!
இருபத்தைந் தினிற்காமம் இசைப்பாய் போற்றி!
பழுதில்தகை அணங்குறுத்தும் பாவோய் போற்றி!
படர்குறிப்பை அறியவுரை பண்போய் போற்றி!
எழில்நலத்தைப் புனைந்துரைக்கும் இனியோய் போற்றி!
இருங்காதற் சிறப்போதும் எழிலோய் போற்றி!
வழுவில்லா நாண்துறக்க வைத்தாய் போற்றி!
வையம்அலர் புரிநன்மை மதித்தாய் போற்றி! 72

கற்புடையார் நிலைஎல்லாம் கணித்தாய் போற்றி!
கண்தேடிக் கலங்கலையும் கவித்தாய் போற்றி!
அற்கனவின் நலம்புகலும் அழகே போற்றி!
அத்தோடு மனம்புலத்தால் அறைந்தாய் போற்றி!
தற்பிரிந்தார் தனியேக்கம் சமைத்தாய் போற்றி!
தனிப்புலவி துனிமுதலாய்த் தந்தாய் போற்றி!
சொற்செட்டில் இணையில்லாத் தோன்றால் போற்றி!
சுவைமலியப் பயன்சுரக்கும் சுடரே போற்றி! 80

ஒப்பாரும் மில்லாத ஒருவ போற்றி!
உலகிலொரு தனிமகனாய் உயர்ந்தாய் போற்றி!
தப்பேதும் புரியாத தலைவ போற்றி!
சலியாத படியறத்தைத் தந்தாய் போற்றி!
செப்பும்உரை பத்துடைய செல்வா போற்றி!
திகழ்மொழிகள் யாவும்புகழ் செம்மால் போற்றி!
அப்பாளம் தமிழறத்தின் அச்சே போற்றி!
அகிலமெலாம் கொள் அறம்செய் அந்தா போற்றி! 88

முப்பாலைத் தமிழ்மறையை முகிழ்த்தாய் போற்றி!
முதுமொழி, பொய்யாமொழியை மொழிந்தாய் போற்றி!
செப்பரிய பொருளுரையைச் செய்தாய் போற்றி!
தெய்வநூல் பொதுமறையைத் தெரித்தாய் போற்றி!
ஒப்பரிய வாயுரை வாழ்த் துரைத்தாய் போற்றி!
உத்தரநல் வேதமருள் உரவோய் போற்றி!
துப்பாரும் வள்ளுவத்தைச் சொரிந்தாய் போற்றி!
தூயதிரு வள்ளுவர்நூல் சொற்றாய் போற்றி! 96

மன்னுபெயர் தேவர்என வாழ்வாய் போற்றி!
மாதானு பங்கிஎனும் வள்ளால் போற்றி!
பன்னுதனிப் புலவர்எனப் படர்வாய் போற்றி!
பகருமுதற் பாவலர்ஆம் பண்பா போற்றி!
செந்நாப்போ தார் என்னச் சிறந்தாய் போற்றி!
திருத்தெய்வப் புலவர்எனத் திகழ்வாய் போற்றி!
உன்னுபெரு நாவலர்ஆய் உயர்ந்தாய் போற்றி!
உலகிலொரு நாயனார் என்[று] உள்ளாய் போற்றி! 104

அறம்படைக்கும் நான் முகனார் ஆனாய் போற்றி!
அரும்பொய்யில் புலவர்எனும் அருளோய் போற்றி!
திறம்படைத்த தமிழ்படைத்த தேவே போற்றி!
செய்யதிரு வள்ளுவனே போற்றி! போற்றி! 108

நிறம்படைத்த கவிகம்பன் நெஞ்சம் ஆர
நிமிர் 'தெய்வ மாக்கவி'யாய் நினைந்து போற்றும்
மறம்கடிந்த தமிழ்அறவோன், மண்டும் கீர்த்தி
வள்ளுவன்தாள் தலைக்கணிந்து மகிழ்ந்து வாழ்வாம்.

இளங்கோ மலர் வணக்கம்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்!
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா!
அலகிலா விளையாட்டுடை யார்அவர்!
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!

சேரர் குலந்தரு செல்வா, போற்றி!
வீர வஞ்சியின் விளக்கே, போற்றி!
குடக்கோச் சேரல் குரிசிலே, போற்றி!
இடங்கொள் பெரும்புகல் இளங்கோ, போற்றி!
மணிமுடி துறந்த வள்ளல், போற்றி!
குணவாய்க் கோட்டக் குடியாய் போற்றி!
துறவுமேற்கொண்ட துணிவே , போற்றி!
அறநெறி ஓம்பும் அந்தண, போற்றி!
முத்தமிழ்த் துறைவல உத்தம, போற்றி!
சித்தம் அழகிய செம்மால், போற்றி! 10

ஆடகச் சிலம்பை அருள்வாய், போற்றி!
நாடவை மூன்றையும் நவின்றாய், போற்றி!
காண்டம் மூன்றாய்க் கணித்தாய், போற்றி!
காதை முப்பதாய்க் கவித்தாய், போற்றி!
பாட்டும் செய்யுளும் பகர்ந்தாய், போற்றி!
நாட்டினை உரைதனை நடுநடு, போற்றி!
விருத்தப் பாவின் வித்தே, போற்றி!
திருத்தமாய் எண்வரி தீட்டினை போற்றி!
சந்தமார் கவிதரு முந்தையே, போற்றி!
செந்தமிழ் வீறெலாம் தெளிந்தாய், போற்றி!

இயலிசை நாடக ஏறே, போற்றி!
பயில்நடம் முழுதுணர் பருணித, போற்றி!
இசைக்கடல் அளவிடும் இபமே, போற்றி!
வசையில் இயல்கணி மாண்பே, போற்றி!
முழவதன் வைகளலாம் மொழிபவ, போற்றி!
குழலதன் இலக்கணம் கூறுவாய், போற்றி!
யாழினத் திறனெலாம் இசைத்தாய், போற்றி!
வாழ்மிடற் றொலிநெறி வகுத்தாய், போற்றி!
ஆடுவார் அமைதி அறைந்தனை, போற்றி!
ஆடரங் கியல்பெலாம் அளந்தாய், போற்றி!

பாட்டியல் நெறியெலாம் பகர்ந்தாய் போற்றி!
நாட்டிய வரம்பெலாம் நவின்றாய், போற்றி!
தொழில்புரி காப்பெயர் தொகுத்தாய், போற்றி!
ஏழிற்கரம் சொல் முதல்ஏந்தலே, போற்றி!
மங்கல வாழ்த்தியல் மலர்ந்தாய், போற்றி!
திங்களைப் போற்றிடு செம்மால், போற்றி!
ஞாயிறு தொழுதிடு நம்பா, போற்றி!
மாமழை வணங்குநல் மணியே, போற்றி!
பூம்புகார் பரவுசீர் புலவ, போற்றி!
தேம்பெறு காதை செய்தவ, போற்றி!

வணிகர் திருமணம் வரைந்தாய், போற்றி!
அணிதிகழ் மனையறம் அமைந்தனை, போற்றி!
மாநாய் கன்மகள் வளர்த்தாய், போற்றி!
மாசாத் துவான்மகன் மதித்தாய், போற்றி!
கற்பிற் கோருரு படைத்தாய், போற்றி!
கண்ணகி எனப்பேர் கொடுத்தாய், போற்றி!
வற்பிற் கோருரு வடித்தாய், போற்றி!
மாகோ வலனென மதித்தாய், போற்றி!
பொற்பிற் கோருரு பொளிந்தாய், போற்றி!
புகழ்மா தவிஎனப் புகன்றாய், போற்றி!

அற்புக் கோருரு அமைந்தாய், போற்றி!
அதுமா தரிஎன் றறைந்தாய், போற்றி!
நிற்புக் கோருரு ஈந்தாய், போற்றி!
நேயக் கவுந்தியாய் நிறைத்தாய், போற்றி!
மாடமதுரை மகிழ்வாய், போற்றி!
பீடார் உறந்தை பேசுவாய், போற்றி!
கலிகெழு வஞ்சியின் காதல, போற்றி!
ஒலிபுனல் புகாரை உகப்பாய், போற்றி!
வேங்கடம் பொதியம் விளம்புவாய், போற்றி!
தீங்கில்செங் குன்றும் செப்புவாய், போற்றி!

காவிரி வையை காட்டுவாய், போற்றி!
மேவுபே ரியாறதும் விளக்குவாய், போற்றி!
பொய்கை ஐந்தும் புகல்வாய், போற்றி!
தெய்வம் பலவும் தெரிக்குவாய், போற்றி!
சமய சமரசத் தவசியே, போற்றி!
அமையருள் அறநிறை அடிகாள், போற்றி!
நாட்டையும் நகரையும் காட்டுவாய், போற்றி!
தேட்டின் சிறப்பெலாம் தீட்டுவாய், போற்றி!
ஏர்த்தொழில் உழவினை ஏத்துவாய், போற்றி!
ஆர்த்தெழு வாணிகம் அளப்பாய், போற்றி!

போர்த்தொழில் கொற்றம் புகழ்வாய், போற்றி!
பார்ப்பனர் சிறப்பெலாம் பகர்வாய், போற்றி!
மாடமும் வீதியும் வகுப்பாய், போற்றி!
ஆடகக் கோயில் அமைப்பாய், போற்றி!
அருகனைப் புத்தனைத் தொழுவாய், போற்றி!
முருகனைச் சிவனைப் புகழ்வாய், போற்றி!
சந்திர சூரியற் சாற்றுவாய், போற்றி!
இந்திரன் ஐயையை ஏத்துவாய், போற்றி!
மால்பல தேவனே வணங்குவாய், போற்றி!
சால்பல கோட்டமும் தருவாய், போற்றி!

பத்தினிக் கடவுளைப் பரசுவாய், போற்றி!
சித்திரக் காப்பியம் செய்தனை, போற்றி!
ஒருமுழுத் தமிழகம் உதவினை, போற்றி!
இருவினைப் பயன்மொழி எந்தாய், போற்றி!
உய்வகை உணர்த்தும் ஒண்தவ, போற்றி!
தெய்வம் தெளியத் தெரிப்பாய், போற்றி!
தெளிந்தோர்ப் பேணச் செப்புவை, போற்றி!
ஊன்ஊண் பொய்யுரை ஒறுப்பாய், போற்றி!
கள்ளும் காமமும் கடிவாய், போற்றி!
வெள்ளைக் கோட்டியை வெறுப்பாய், போற்றி!

அறமனை பேண அருளுவை போற்றி!
பிறமனை அஞ்சப் பேசுவை, போற்றி!
இம்மையில் மயங்கேல் என்பவ, போற்றி!
அம்மையைப் பார்க்க அருள்வாய், போற்றி!
அறவோர் அவையில் அடைப்பாய், போற்றி!
பிறவோர் அவையில் பெயர்ப்பாய், போற்றி!
உய்தவம் தானமும் உரைப்பாய், போற்றி!
செய்நலம் நினைகெனத் தெரிப்பாய், போற்றி!
பொய்க்கரி போகலென் புனிதா, போற்றி!
எய்உயிர் காவெனும் எம்மோய், போற்றி!

பொருள்மொழி பிடிஎனும் போதா, போற்றி!
அருள்நெறி ஒழுகெனும் அத்தா, போற்றி!
உளம்கவர் காப்பியம் உதவினை, போற்றி!
வளங்கெழு பாத்திரம் வகுத்தனை, போற்றி!
துன்பியல் நாடகம் தோற்றினை, போற்றி!
இன்பருள் காதை இயற்றினை, போற்றி!
நலப்பெரும் உத்திகள் நயந்தவ, போற்றி!
தலத்தினில் முதிய தமிழ்க்காப் பியமாம்,
சிலப்பதிகாரச் செழுங்கதை திருத்திய,
துளங்கா நல்மனத் துறவி யான,
இளங்கோ அடிகள் போற்றி, போற்றி! 108

முத்தமிழ்க் காப்பியம் மொய்ம்புடன் ஆக்கி
இத்தரைக் குதவிய இளங்கோ முனிவன்
சித்தம்நேர் அழகிய திருவடித் தாமரை
பத்தியோ டேத்திப் பணிந்து வாழ்வாம்.

தமிழ்த்தாய் மலர் வணக்கம்

"கம்பன் அடிப்பொடி"

காப்பு

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர்ஞாலத்துஇருள் கடியும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனிஆழி வெங்கதிர்ஒன்று; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

அகர மொழிக்கோர் அன்னாய் போற்றி!
பகரும் மொழிகளுள் பழையாய் போற்றி!
மலையம் தந்த மகளே போற்றி!
சங்கம் வளர்த்த தையால் போற்றி!
மூன்று கவடாய் முளைத்தாய் போற்றி!

சான்றோர் நாவில் தவழ்ந்தாய் போற்றி!
பஃறுளிப் பழநதி படிந்தாய் போற்றி!
அஃகிய குமரிநீர் அருந்திணை போற்றி!
கன்னி வையைக் கரும்பே போற்றி!
பொன்னித் துறைதவழ் போதே போற்றி!

தண்ணிய பொருநைத் தவமே போற்றி!
புண்ணிய நதிஎலாம் பொலிவாய் போற்றி!
தென்னவன் கூடலில் செழித்தாய் போற்றி!
சென்னிதன் உறந்தையில் சிறந்தாய் போற்றி!
வில்லவன் வஞ்சியில் மிளிர்ந்தாய் போற்றி!

பல்லவன் காஞ்சியில் படர்ந்தாய் போற்றி!
வில்புலி கயற்குறி மேவினாய் போற்றி!
பல்திணை துறைகளாய்ப் பரவினாய் போற்றி!
எண்ணாய் மொழியாய் இயங்குவாய் போற்றி!
ஒலியாய் வரியாய் ஓங்குவாய் போற்றி!

அசையாய்ச் சீராய் அமைந்தாய் போற்றி!
தளைஅடி தொடையாய்த் தழைத்தாய் போற்றி!
பாவகை ஐந்தாய்ப் பயின்றாய் போற்றி!
பாவினம் மூன்றாய்ப் படைத்தாய் போற்றி!
பாடலும் உரையுமாய்ப் படர்ந்தாய் போற்றி!

நீடுபா சுரமுமாய் நிலைத்தாய் போற்றி!
செய்யுளும் கவியுமாய்ச் செழித்தாய் போற்றி!
துய்யநல் உரைகளாய்ச் சுடர்ந்தாய் போற்றி!
வண்ணமும் சிந்துமாய் வளர்ந்தாய் போற்றி!
நண்ணுபல் சந்தமாய் நடந்தாய் போற்றி!

சித்திரக் கவிநலம் செறிந்தாய் போற்றி!
வித்தகக் கலைபல வேய்ந்தாய் போற்றி!
செவிநுகர் கனிகளாய்த் திகழ்ந்தாய் போற்றி!
புவிமகிழ் அணிவளம் பூண்டாய் போற்றி!
சாத்திரம் பலப்பல தந்தாய் போற்றி!

தோத்திரப் பாடலில் துணையிலி போற்றி!
எண்எழுத் திரண்டு ஈந்தாய் போற்றி!
பண்முறை கண்ட பழையாய் போற்றி!
பல்கலை அகத்தியற் பயந்தாய் போற்றி!
தொல்காப் பியனைத் தோற்றினாய் போற்றி!

யமிபவ ணந்தியை ஈன்றாய் போற்றி!
அமிதசா கரனை அளித்தாய் போற்றி!
பரணனைக் கபிலனைப் படைத்தாய் போற்றி!
மருதனை ஆந்தையை வளர்த்தாய் போற்றி!
சாத்தனைக் கீரனைத் தந்தாய் போற்றி!

கூத்தனைக் கணியனைக் கொடுத்தாய் போற்றி!
அவ்வையைச் செள்ளையை அருளினாய் போற்றி!
செவ்விய பொன்முடி சேர்த்தாய் போற்றி!
வள்ளுவம் மணக்கும் மலரே போற்றி!
ஒள்ளிளங் கோவை உதவினை போற்றி!

ஆழ்வார் நாவில் அமர்ந்தாய் போற்றி!
நால்வர் வாக்கில் நடந்தாய் போற்றி!
மொய்ம்புடை மூலனை முகிழ்த்தாய் போற்றி!
கம்பனைப் படைத்த கடவுளே போற்றி!
சேக்கிழார்க் கருளிய செல்வீ போற்றி!

மாக்கவி பாரதி மகிழ்ந்தாய் போற்றி!
எண்ணிலாப் புலவரை ஈந்தாய் போற்றி!
விண்ணளவு உயர்கலை விரித்தாய் போற்றி!
எட்டுத் தொகைகொளும் எம்மோய் போற்றி!
பத்துப் பாட்டுடைப் பாவாய் போற்றி!

அறவோர் நெஞ்சில் அமர்ந்தாய் போற்றி!
மறவோர் தோளில் வயங்குவாய் போற்றி!
மன்னவர் மாட்சியில் மன்னுவாய் போற்றி!
கன்னியர் கற்பில் களிப்பாய் போற்றி!
இசைப்போர்ச் சுருதியாய் இலங்குவாய் போற்றி!

உழைப்போர்க் கார்வமாய் உள்ளாய் போற்றி!
சிவநெறி யதனுள் சிவமே போற்றி!
பவமறு வைணவப் பணிவே போற்றி!
அருகர் மதத்துநல் அறமே போற்றி!
அருள்சாக் கியத்துள் அன்பே போற்றி!

ஆசில்வே தாந்தத்து அறிவே போற்றி!
ஏசுவின் கருணை ஏத்துவாய் போற்றி!
அல்லா மாண்பினை அறைவாய் போற்றி!
எல்லா நெறிக்கும் இடனே போற்றி!
விண்முதல் ஐந்தின் வீறே போற்றி!

கண்முதல் பொறிகளின் கதியே போற்றி!
முன்னுறு பழைமையில் மூத்தாய் போற்றி!
பின்வரு புதுமையின் பேர்த்தியே போற்றி!
மானிடம் தன்னொடும் வந்தாய் போற்றி!
சீனர்தம் நாட்டிலும் திகழ்வாய் போற்றி!

ஊழிதோ றூழி உலவாய் போற்றி!
ஏழிசை வகுத்த எம்மோய் போற்றி!
இயல்இசை நாடக எழிலாய் போற்றி!
பயிலியம் பற்பல படைத்தாய் போற்றி!
தண்ணுமை குழல்யாழ் தழுவுவாய் போற்றி!

மண்ணுயர் பரதநூல் வழங்கினாய் போற்றி!
எழுவகை அளவைசொல் மொழிநலாய் போற்றி!
வழுவிலாக் கணிதம் வகுத்தாய் போற்றி!
இலக்கியச் செறிவில் இணையிலி போற்றி!
இலக்கணப் பெருவளம் இயைந்தாய் போற்றி!

விலக்கரும் மரபெலாம் விரித்தாய் போற்றி!
இலக்கமார் தனிமொழி எனவுளாய் போற்றி!
காலம் கணிக்கொணாக் கவினே போற்றி!
ஞாலம் புகழ்மொழி நாயகி போற்றி!
மொழியுடு பதிஎனும் முழுமதி போற்றி!

பிழிசுவை நறுமணப் பிரசமே போற்றி!
நாற்பொருள் நூற்பயன் நாட்டுவாய் போற்றி!
ஏற்றமார் அன்பறம் இருகணாய் போற்றி!
நல்லவர் வாழ்கென நவில்வாய் போற்றி!
அல்லவர் நல்லவர் ஆக்குவாய் போற்றி!

யாவதும் நமதூர் என்றாய் போற்றி!
யாவரும் உறவென இசைத்தாய் போற்றி!
சேய்மொழி பலவாற் செழித்தாய் போற்றி!
தாய்மொழி, கன்னித் தமிழே போற்றி!
உலகொரு குலமென உரைத்தாய் போற்றி!

நிலமிசை அமர்ந்தருள் நிமலாய் போற்றி!
செந்தமிழ்த் தாயாம் தெய்வமே நின்றன்
திருவடித் தாமரை போற்றி; போற்றி!

வாழ்த்து

கம்பன் அறநிலையும் கற்பிற் சிறந்தோரும்
நம்பித் தினம்பரவும் நல்ல தமிழ்த்தாயின்
செம்பதுமத் தாள்மலரில் சென்னிதனைச் சேர்த்து
வம்பார் மலர்தூவி வாழ்த்தி வணங்குதுமே!

தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி

"கம்பன் அடிப்பொடி"

இந்திரன் திசையினில் எழுந்தனன் அருணன்;
எழில்மிகு கன்னியர் இரட்டினர் கவரி;
தந்தவை கறைமலர் தனிமணம் பரப்பும்;
தாமரை மலரினம் தளையவிழ் கின்ற;
முந்திய சங்கினம் முழங்கின எங்கும்;
முரசுடன் காகளம் பெரிதொலி கூட்டும்;
சிந்தையும் இனித்திடத் திகழ்தரும் அன்னாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 1

உறங்கிய மரனெலாம் உயிர்த்தன; யாண்டும்
ஊறைகள் சொரிந்தன உயிருறும் அமுதம்;
புறந்தரு பறவைகள் பொம்மென ஆர்த்துப்
பொழிலவை நீத்திரை தேடிடப் பறந்த;
பிறங்கிய இருட்கணம் பிரிவுறல் கண்டு
பெருந்தொழில் உழவர்கள் விரைந்தனர் கழநி;
சிறந்துயர் எண்ணெழுத் திலக்கமும் செறிந்தாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 2

தண்ணுமை யாழ்குழல் தழுவியொ லிக்கத்
தமிழ்மறை ஓதுநர் குழுமிநிற் கின்றார்;
வண்ணநல் மலர்நின்ற வட்டில்கள் தாங்கி
மாதர்கள் பற்பலர் வந்துநிற் கின்றார்;
கண்ணடி முதலிய கைம்மலர் ஏந்திக்
காரிகை யார்பலர் காத்துநிற் கின்றார்;
திண்ணிய இலக்கணச் செறிவுடை அன்னாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 3

அகத்தியன் காப்பியன் அருகுநிற் கின்றார்;
அறந்தரு வள்ளுவன் அருள்நிறை இளங்கோ
மகத்தெனும் காப்பியம் வடித்தருள் கம்பன்
வளருநின் கோவிலின் மருங்கிருக் கின்றார்;

தொகைத்தமிழ்ப் புலவர்கள் துறைதிணை பாடிச்
சூழ்ந்துநின் திருவருள் தோய்ந்துநிற் கின்றார்;
செகத்தொரு நிகரிலை எனத்திகழ் அன்னாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 4

எழுதரும் ஓவியம் எனமிளிர் மாதர்
எட்டெனும் மங்கலம் ஏந்திநிற் கின்றார்;
முழுமதி பொருநிற முதிர்பசு நின்றன்
முன்றிலில் கன்றுடன் நின்றது கண்டாய்;
தொழுதுநின் திருவடி துதிசெய நல்ல
தொண்டர்கள் பற்பலர் சூழ்ந்துநிற் கின்றார்;
செழுமையும் இழுமையும் சேர்ந்தொளிர் அன்னாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 5

கண்ணிணை கைமுகம் கருத்தொடு ஒன்றிக்
கவின்நடம் புரிதர நூபுரக் காலின்
நுண்ணிடை மடந்தையர் நோற்றுநிற் கின்றார்;
நுவலரும் பற்பல நுண்கலை வல்லார்
எண்ணிலர் நின்னருள் எய்தவந் துள்ளார்!
எழில்மிகு கூதிரில் இனிதெழும் அமுதத்
தெண்ணில வெனமுகம் திகழ்தரும் அன்னாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 6

சந்தனம் மான்மதம் புனுகுசவ் வாது
தண்மணம் தருபவை தாங்கினர் ஒருபால்;
சிந்துரம் குங்குமம் அஞ்சனம் மற்றும்
சிறந்தஒ மாலிகை சுமந்தனர் ஒருபால்;
சந்திர சூரியர் தம்மொளி மழுங்கத்
தகத்திடும் அணிகலன் தாங்கினர் ஒருபால்;
சிந்தையொடு உன்பணி செய்திட நின்றார்
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 7

பள்ளிகல் லூரியில் பயின்றிடு வோரும்
பற்பல கைத்தொழில் பழகுகின் றோரும்
எள்ளரு மதிநிறை எழிற்குரு மாரும்
இலக்கிய இலக்கண இரும்புல வோரும்
கள்ளெனக் கவிகதை காப்பியம் தருவோர்
கருதுநல் விமர்சனம் கட்டுரை வரைவோர்
தெள்ளிய நின்னருள் தேடிவந் துள்ளார்
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 8

பற்பல மொழிவலர், பல்கலைச் செல்வர்,
பணிபல புரிகுநர், பரிவுடை நெஞ்சர்,
அற்புத மெனவளர் அன்னைநின் செய்ய
அடிமலர் தொழுதருள் அடையவந் துள்ளார்
முப்பழம் பால்நறும் தேன்இள நீரும்
முதிரைகள் சர்க்கரை முதலிய யாவும்
திப்பிய முறையில்நின் திருமுனம் படைத்தோம்
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 9

பலவகை மதநெறி பரவற வோரும்
பற்றவை முற்றறு பருணிதர் தாமும்
இலைஒரு முழுமுதல் எனுநிலை யோரும்
இறைவிநின் பதயுகம் ஏத்திட வந்தார்;
உலகினில் வளர்தரும் உயர்கலை யாவும்
உனதடி தரவல உரவரும் நின்றார்;
சிலைதவழ் திருநுதல் திலகம துள்ளாய்!
செந்தமிழ்த் தாய்பள்ளி எழுந்தரு ளாயே! 10

இலக்குவனுக்கு இணை..!

"கம்பன் அடிப்பொடி"

பெரும் பாத்திரங்களையும், துணைப் பாத்திரங்களையும், சிறு பாத்திரங்களையும் படைத்து ஆட்டுவிப்பதில் பெரும் வெற்றி பெற்றவன் கம்பன். அவன் காப்பியத்துள் இலக்குவன் ஓர் அற்புத சிருஷ்டி.

இலக்குவன் ஒரு பெரும் பாத்திரமா அல்லது சிறு பாத்திரமா அல்லது இரண்டிலும் அடங்காத துணைப் பாத்திரமா? இதை முடிவு கட்டுமுன் பாத்திரங்களின் இலக்கணத்தைச் சிறிது பார்ப்போம்.

பெரும் பாத்திரங்களின் தன்மை என்ன? ஒரு மண்டபத்திற்குத் தூண்கள் எப்படியோ அப்படித்தான் காப்பியத்திற்குப் பெரும் பாத்திரங்கள். எந்தத் தூண் அகற்றப்பட்டாலும் மண்டபம் நிலை குலைந்துவிடும். இல்லையா? அங்ஙனமே காவியக் கட்டுக் கோப்புக்குப் பெரும் பாத்திரங்கள் இன்றியமையாதவை. எந்த ஒரு பாத்திரத்தை நாம் நீக்கிவிட்டால் காப்பியம் முடமாகிவிடுமோ அந்தப் பாத்திரம் நிச்சயம் ஒரு பெரும் பாத்திரமேயாகும். பெரும் பாத்திரம் பெரும்பாலும் கதையின் பெரும் பகுதியில் தோன்றக்கூடும். ஏகதேசம் சில இடங்களில் மட்டும் தோன்றி விட்டு மறைந்தும் போகலாம்.

சிறு பாத்திரமோ இந்த நிலைக்கு முற்றிலும் மாறுபட்டது. ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளில் தோன்றித் தன் பணியை நிறைவேற்றுவதுடன் அமைந்து விடும். அப்புறம் அந்தக் கதைக்கு அது யாரோ தான் அன்றியும், ஒரு மண்டபத்தில் காணப்படும் சிற்பம், தோரணங்கள், ரஸக்குண்டுகள் போல சிறு பாத்திரங்கள் கதைக்கு ஓரளவு அணி செய்வனவே.

ஆயினும் அவை இல்லாமல் போனால் காவியக் கட்டுக்கோப்பு மூளியாகிவிடாது. கதை பாதிக்கப்பட மாட்டாது

என்றாலும் சிறு பாத்திரங்கள் இன்றியமையாதவை அல்ல என்றும் கூறிவிட முடியாது.

எப்படிப் பார்த்தாலும் இலக்குவன் இந்த இரு வகையிலும் அடங்கான். கதையின் தொடக்க முதல் இறுதி வரை இலக்குவன் நீக்கமற நிறைந்திருக்கிறான். எனவே இலக்குவனைச் சிறுபாத்திரம் என்பது பொருந்தாது. பெரும் பாத்திரம் ஆவானா என்றால் இலக்குவன் எவ்வகையிலும் கதை நடத்தும் ஒரு பாத்திரமாகக் காட்சி கொடுக்கவில்லை. ஆனால் பல பெரும் பாத்திரங்களும் இயங்கிக் கதையை நடத்த இலக்குவன் செய்யும் உதவி அற்ப சொற்பமல்ல. இலக்குவன் துணை இன்றேல் கதை ஊட்டமின்றி மெலிந்து போய்விடும். அந்தக் கணக்கில் பார்த்தால் இலக்குவன் பெரும் பாத்திரங்கட்கெல்லாம் உயிர் என நிற்கிறான். இன்றியமையாப் பாத்திரமாகவும் தோற்றமளிக்கிறான், என்றாலும் கதையின் தொடக்கத்திற்கும் எவ்விதப் போக்கிற்கும் திருப்பத்திற்கும் முடிவுக்கும் அவன் காரணமாக அமையாமையால் அவனைப் பெரும்பாத்திரம் என்பது ஒவ்வாது. எனவே இலக்குவனைத் துணைப் பாத்திரம் என்பதே முறையாகும்.

துணைப் பாத்திரங்களின் நிலையோ ஓர் அதிசயமான நிலையாகும். பெரும் பாத்திரங்களையும், சிறு பாத்திரங்களையும் படைத்து இயக்குவதை விடப் பல மடங்கு சிரமமாகும் துணைப் பாத்திரங்களைப் படைத்து ஆட்டுவிப்பது. அதில் கம்பனின் சாதனை ஓர் அற்புத வெற்றியாகும். பெரும் பாத்திரங்களைப் போலத் துணைப் பாத்திரங்கள் தானே இயங்குவன அல்ல. ஆனால் பெரும் பாத்திரங்கள் எத்துணைதான் தானாகவே இயங்கினும் இலக்குவனைப் போன்ற துணைப் பாத்திரங்கள் இன்றேல் கதை சூம்பி இளைத்துவிடும்; பண்பு குறைந்துவிடும்; விறுவிறுப்பு அற்று இளைத்துப் போய்விடும்.

இலக்குவ்னைத் துணைப் பாத்திரம் என்பதில் பிறிதொரு சிறப்பும் இருக்கிறது. காப்பியத் தலைவனாகிய இராமனுக்குக்

காலமெல்லாம் உற்ற துணையாயிருந்தவன் இலக்குவன். உயிரையும் கொடுக்கும் ஒப்பற்ற துணை அவன். எனவே இலக்குவனைத் துணைப் பாத்திரம் என்பது மிகவும் பொருத்தம் இல்லையா?

இனி இலக்குவன் பண்பினைச் சிறிது பார்ப்போம். கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவனாம் இராமனே,

"இலக்குவ! உலகம் ஓர் ஏழும்–ஏழும் நீ கலக்குவென்
என்பது கருதினால் அது விலக்குவது அரிது."

என்று இலக்குவனைப் பாராட்டுவானாகில், அவன் ஆற்றலைப்பற்றி நாம் என்ன சொல்லக் கிடக்கிறது?

இலக்குவன் என்னும் துணைப் பாத்திரம் எந்தெந்த வகையில் எல்லாம் காப்பியத் தலைவனுக்குத் துணையாக விளங்குகிறான் என்று பார்த்தால் இத்துணைப் பேராற்றல் உள்ள இலக்குவன் கல்வி, அறிவு, ஒழுக்கம், அடக்கம், தியாகம் முதலியவற்றாலும் எத்துணை விழுமியவனாக விளங்குகிறான் என்பது புலப்படும். இத்தகைய ஒரு சிறந்த துணைப் பாத்திரத்தைப் படைத்த கவிதைத் தச்சனாகிய கம்பனின் ஒப்பற்ற திறனை நாமும்கூட நன்குணரலாம்.

தம்பியாய்த் தோன்றிய இலக்குவன் இராமனுக்கு இளமைப் பருவத்தில் இணை பிரியாத் தோழனாகவும் விளங்குகிறான். காலை மாலைக் கடன் கழிக்கும் போதும், உலவும் காலமும், குளிக்கும் பொழுதும், கலை பயில் நேரமும், உண்ணும் காலையும், உறங்கும் சமயமும் கூட ஒருவரை ஒருவர் பிரியாத இணையாய் வாழ்கின்றனர் இராம - இலக்குவர்.

ராமன் காட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது, தனக்கு எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாதிருந்தும், ராமன் எவ்வளவோ தடுத்தும்கூட, உடன் செல்லத் துணிகிறான் இலக்குவன்.

"நீர் உள எனின், உள மீனும் – நீலமும்;
பார்உள எனில், உள யாவும்; பார்ப்புறின்,
நார்உள தனு உளாய்! நானும், சீதையும்,
ஆர் உளர் எனின் உளம்? அருளுவாய்!" என்றான்

என்பது முதலாக இலக்குவன் பேசும் பேச்சு, இராமனைப் பிரிதல் என்பது இலக்குவனுக்கு எண்ணவும் முடியாத ஒன்றென்பதை எவ்வளவு நயம்படக் காட்டுகின்றது பார்த்தீர்களா?

வேறு வழியின்றி இராமனும் இசைய, இலக்குவன் சீதா ராமரைப் பின்பற்றிக் கானகமடைகிறான். அங்கெல்லாம் இலக்குவன், தான் இராமனுடைய தம்பி அல்லது தோழன் என்று ஒரு சிறிதும் எண்ணினானில்லை. தன்னை ஒரு வேலைக்காரனாகவே கருதிப் பணி புரிகிறான். அதைத் தன் வாய்மொழியாலும் நன்கு புலப்படுத்துகிறான் நமக்கும்.

'தன்னுடை உரிமைச் செல்வம் தம்பிக்குத்
தகவின் நல்கி
நல்கெடும் கானம் சேர்ந்தான் நாமமும்
இராமன் என்பான்
இந்நெடும் சிலைவலானுக்கு ஏவல்செய்
அடியேன் யானே!'

என்று அனுமனிடம் ராமனை யாரென உரைக்கும் போது தன்னைப் பற்றிக் கூறுவது இலக்குவன் மனப்பக்குவத்தை எவ்வளவு தெளிவாக உணர்த்துகிறது, பார்த்தீர்களா?

இங்ஙனம் அடியவன் நிலையில் திரியாது ஆண்டு பதினான்கும் அருமையாய்ப் பணி செய்கிறான் இலக்குவன். இவன் இராமனுக்கு ஒப்பற்ற மெய்க்காவலன் ஆக விளங்கியமையைக் குகன் கூறக் கேட்போம்.

“அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லைஊன்றிய கையொடும்
வெய்துயிர்ப்போடும் வீரன்;
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்!
கண்கள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான்;
இமைப்பிலன் நயனம் ” என்றான்.

மேலும் சித்திர கூடத்திற்கு வந்த பிறகு இராமனும் சீதையும் வெய்யில், மழை முதலியவற்றால் துன்புறாமல் வசிப்பதற்கு ஏற்ப இரு பன்னக சாலைகளை அமைக்கிறான் இலக்குவன். மாலை மயங்கி அந்தி கனிகிறது. சாலைக்கு வருகிறான் ராமன். கண்டதும் ஒரே வியப்பு! அப்படி அருமையாக அமைந்திருக்கிறது சாலை. அரச குமாரனான என் தம்பியா இப்படி வனப்புறச் சாலை அமைத்தவன்? என்றெழுந்த ஆச்சரியத்துடன் இலக்குவனைப் பார்த்து,

“என்று கற்றனை நீ இதுபோல் என்றான் துன்று தாமரைக்கண் பனி சோர்கின்றான்.”

இராமன் வனத்துள் வைகிய காலமெலாம் இலக்குவன் உடன் உறைந்து ஏவல் செய் அடியவனாய் இருந்தான் என்றால் அவனைக் கேவலம் ஒரு வேலைக்காரனாகவோ, அன்றி வெறும் மெய்க்காவலனாகவோ நாம் எண்ணிவிடலாமா? அப்படி நம்மை எண்ணும்படி கம்பன்தான் விட்டுவிடுவானா? அப்புறம் கம்பனின் படைப்புத் திறனுக்குத்தான் என்ன பெருமை இருக்கும்?

அமைச்சனாக, தூதுவனாக, பால் நினைந்தூட்டும் பரிவுடைத் தாயாக, போர் வீரனாக, சேனைத் தலைவனாக, இராமன் தன் பிரதிநிதியாக எல்லாம் அரும்பணியாற்றுகிறான் இலக்குவன். வருபொருள் உரைக்கும் மதிமந்திரியாக அவன் காட்சி தரும் இடம் ஒன்றைப் பார்ப்போம்;

"அடுத்தவும் எண்ணிச் செய்த லன்றோ அண்ணலே! அமைதி" என எடுத்துச் சொல்லி மாயமானைத் தானே பிடித்து வருகிறேன் என்றுரைக்கிறான் இலக்குவன். சீதையின் சிணுக்கம் கண்டு ராமன் தானே மானைப் பிடித்து வருகிறேன் என்று புறப்படும் பொழுதும்,

> **"முன்னமும் மகவாய் வந்த மூவரில்**
> **ஒருவன் போனான்**
> **அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனன்**
> **இதனை; ஐய!**
> **இன்னமும் காண்டி! வாழி! ஏகு;**
> **என இருகை கூப்பிப்**
> **பொன்அனாள் புக்க சாலை காத்தனன்**
> **புறத்து நின்றே"**

மாரீசனே இந்த மாயமான் என்பதையும் இதனால் வரப்போகும் துயரத்தையும் செவ்விதின் உணர்த்தியதுடன் அன்பின் பெருக்கால் "வாழி" என்று தேவையற்ற இடத்தில் வாழ்த்துக் கூறுவதால் தன்னுள்ளத்தைக் கவ்விக் கொண்டிருக்கும் அச்சத்தையும் மெள்ள வெளிப்படுத்துகிறான். ராமன் மாயமானைப் பிடிக்கும் பொருட்டு அதன்பின் சென்றதும் சீதை இருக்கும் பன்னக சாலையைக் காவல் செய்யும் பணியில் ஈடுபட்டு விடுகிறான். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல அமைச்சுத் தொழிலுக்கு எவ்வளவு அருகதையுள்ளவன் இலக்குவன் என்பதைப் பார்த்தோம்.

இராமனுக்குப் பிரதிநிதியாக விளங்கும் இடங்கள் பல. இராமனுக்குப் பதிலாக, இராமன் பக்கத்திலிருக்கும் பொழுதே துணைப் பாத்திரமான இலக்குவனைப் பேச வைத்துச் சங்கடமான சூழ்நிலைகளை எல்லாம் சமாளித்து விடுகிறான் கம்பன். இவற்றையெல்லாம் உய்த்து உணரும் பொழுதுதான் கவிதா சன்னதம் பெருகி நிற்கும் கம்பனுடைய மேதா விலாசம் நமக்கும் கூட நன்கு புலப்படுகிறது. அவற்றில் ஒன்றைப் பார்ப்போம்:-

வாலி, மரணத் தறுவாயில் இராமனை நோக்கி, “வீரனே! கொடிய வேடனைப் போல மறைந்திருந்து அம்பு எய்தல் முறையோ” என்று கேட்டபொழுது இலக்குவன் இடைப்புகுந்து “முன்பு நின் தம்பி சரணடைய உன்னைக் கொன்று அவனுக்கு அச்சம் தீர்ப்பேன் என்று வாக்குக் கொடுத்தனன் இராமன். கண்முன் ராமனைக் கண்டால் நீயும் உன் ஆவி மீது வைத்த ஆசையில் அடைக்கலம் என்று அண்ணலடி வீழ்வாய்! அப்புறம் நிலைமை தர்ம சங்கடமாகிவிடும் என்பது கருதியே அண்ணல் மறைந்திருந்து அம்பு எய்தனன்” என்று தருக்கரீதியில் பதில் உரைத்துச் சங்கடமான நிலையிலிருந்து ராமனைத் தப்புவிக்கிறான் இலக்குவன்.

இப்படிப் பிரதிநிதியாக இருந்து, பேசுவதுடனல்லாமல் முடிசூட்டும் பணியையும் செய்கிறான் இலக்குவன்.

ராமனோ “பதினான்காண்டுகள் வனத்திடையே வாழ்வேன்” என உறுதி பூண்டொழுகுபவன். ஆனதால் குரக்கினம் வாழ் இடமே எனினும் கிட்கிந்தை நல்லதொரு நகரந்தான் என்பது கருதி அதனுட் செல்லவும் இராமன் திருமனம் ஒருப்படவில்லை. அதனாலே தான் கிட்கிந்தையில் சுக்கிரீவனுக்கும், இலங்கையில் வீடணனுக்கும் இலக்குவனே ராமனின் பிரதிநிதியாக இருந்து முடிசூட்டு விழாக்களை நடத்துகிறான்.

இராமன் தூதுவர் என்றால் நமக்கெல்லாம் அனுமனையும், அங்கதனையும் பற்றிய நினைப்பே வரும். ஆனால் இலக்குவனே இராமனின் முதல் தூதுவன் என்பதை நம்மில் பலர் மறந்து விடுகிறோம்.

சுக்கிரீவன் தான் கொடுத்த வாக்கையும், பெற்ற உதவியையும் மறந்து, புதிதாக வந்தடைந்த செல்வச் செருக்காலும், அரச மோகத்தாலும், களியாட்டில் மயங்கிக் கிடக்கிறான். அப்படிக் கிடப்பவனுக்கு அறிவுறுத்தி, படைகளுடன் வருகிறானா, மாட்டானா என்பதைத் தெரிந்து வரும்படி இலக்குவனையே தூது அனுப்புகிறான் ராமன்.

காற்றெனக் கூற்றென வருகிறான் இலக்குவன். தாரை அனுமன் முதலியோர் சினப்பொறி பறக்க வரும் இலக்குவன் நிலை கண்டஞ்சி மிக்க சமாதானம் கூறுகின்றனர். சுக்கிரீவனை மன்னிக்கும்படியும் வேண்டுகின்றனர். இலக்குவன் எத்துணைதான் கோபமுடையவனானாலும் வீரியம் பேணிக் காரியத்தைக் கெடுத்து விடுபவனல்லன். சினமடங்கி, சுக்கிரீவனை அன்புடன் தழுவிக் கொண்டு செய்ய வேண்டியதை சிந்தைகொளச் செய்கிறான். சுக்கிரீவன் இலக்குவனைப் பணிந்து அரசர்க்கே உரிய அரியாசனத்தில் அமர வேண்டுகிறான். இலக்குவனோ;

"கல் அணை மனத்தினை
உடைக்கை கேசியால்
எல் அணை மணி முடி
துறந்த எம்பிரான்
புல்லணை வைக யான்
பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகவும் வேண்டுமே!"

என்று விடையிறுக்கிறான். இலக்குவன் அந்தக் கரடுமுரடான தரையிலே அமர்ந்து விடுகிறான். இதில் காணப்படுகிற கிண்டலும், ஆத்திரமும் சுக்கிரீவனுக்கு மட்டுமா, எல்லோருக்குமே மனத்தை உருக்க கண்கள் எல்லாம் அருவி பொழியத் தொடங்கி விடுகின்றன. பரிவு மிக்க சிந்தையுடன் இலக்குவனைப் பார்த்து நீராடி விருந்து கொள்ள வேண்டுகின்றனர். அவன் பதில் அனைவோர் உள்ளத்தையும் ஆட்டி விடுகிறது. பதிலைக் கேளுங்கள்;

"இந்த விருந்தெல்லாம் எமக்கு இப்பொழுது வேண்டாதவை. அன்னை ஜானகி இருக்குமிடத்தைக் காண உதவினால் அது தான் தேவாமிர்தம் தந்ததாகும். அன்றியும் ஒன்றுளது. இராமன் உண்டு மிஞ்சிய இலை காய், கிழங்குகளே எனக்குரிய உணவு. மேலும் நான் உடனே திரும்ப வேண்டும்; நான் சென்று தான் இராமன்

உண்டிக்கு ஆவன செய்துவிட வேண்டும். இனி ஒரு விநாடி தாமதம் செய்தலும் தகாது"

என்றுரைத்து உடனே புறப்பட்டு விடுகிறான். அவன் மட்டுமா திரும்புகிறான். கிட்கிந்தை முழுவதுமே அவனைப் பின் தொடர்கிறது. வெட்டிக் கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டு வரக்கூடியவன் அல்லவா இலக்குவன்.

ராமன் உயிருக்கோ அன்றிப் புகழுக்கோ ஊறு வரும் என்று தெரிந்தால் உடனே தன் உயிரையும் கொடுக்கத் துணிபவன் இலக்குவன். இதைப் பல இடங்களில் காணலாம். கவந்தனால் அண்ணன் உயிருக்கு ஆபத்து வரும் என்று கருதிய அக்கணமே

"செரு வெல்ல மாட்டான். மாண்டான் என்ற பின் மேவும் வசை உண்டோ? என்று மனத்துட் கொண்டு கவந்தனுக்கு இரையாக முந்தும் இலக்குவனுக்கு நிகரு முண்டோ?" என்று நாம் வியப்படைவோம்.

இனி இராமன் புகழுக்கு இழுக்கு என்று உணர்ந்ததும் இலக்குவன் செய்த முடிவொன்றைக் காண்போம்.

வரிசையாகப் பெற்று வரும் தோல்வியால் இராவணன் மனம் உடைந்து, மான உணர்வும் பேராத்திரமும், பெருஞ்சினமும் பொங்கப் போர்க்களம் நோக்கி வருகிறான். இன்று எப்படியும் வீடணனைத் தீர்த்துக் கட்டி விடுவது என்று திட்டமிட்டு வருகிறான். வீடணன் போர்க்களத்தில் எதிர்ப்பட்டும் விடுகிறான். தன்னுடைய பெருந்தவப் பயனால் பெற்ற, விழையாத, வேலொன்றை வீடணன் மேல் குறி வைத்தும் விட்டான். அழிந்தான் வீடணன் என்று அமரர்களும் அகம் குலைந்து அரற்றினர்.

வீடணன் அழிந்தால் ராமனுடைய வீரமே அழிந்தது; அவன் புகழே பொன்றிவிடும்; தீராப் பெரும்பழி வந்து சீராமனைச் சூழ்ந்து கொண்டு விடும். இதை உணர்ந்தவன் இலக்குவன். வேலின் ஆற்றலையும் தெரிந்தவன். எண்ணுகிறான்,

எண்ணத்தின் முன் செயலில் இறங்கியும் விடுகிறான்; "தோற்பன்; எனினும் புகழ் நிற்கும்;

தருமம் தொடரும்;
ஆர்ப்ப நல்லவர்,
அடைக்கலம் புகுந்தவன்
அழியப் பார்ப்பதென்?

நெடும்பழி வந்து தொடர்வதன் முன்னம் ஏற்பென் என் தனி மார்பில் என்று இலக்குவன் எதிர்ந்தான்" அடைக்கலத்தையும் அண்ணன் புகழையும் காத்து வேலுக்குப் பலி ஆகிறான் இலக்குவன்.

இத்தகைய துணைப் பாத்திரந்தான் இலக்குவன். கம்பன் படைத்த இந்த இலக்குவனுக்கு இணையான துணைப் பாத்திரத்தை வேறெங்கே நாம் காண முடியும்? இலக்குவனுக்கு ஈடு இலக்குவன்தான், இல்லையா?

பால காண்டம்

"கம்பன் அடிப்பொடி"

உலகக் காப்பிய நாயகர்களுள், எந்தைபிரான் கம்பன் படைத்துப் பாடிப் பரவும் இராமனே தலைசிறந்த - தன்நேர் இல்லாத - தனிப் பெரும் - பாத்திரமாக விளங்குகிறான். ஆகவே தான், "காசில் கொற்றத்து இராமன்" என்றும் "நடையில் நின்று உயர் நாயகன்" என்றும், பாயிரத்திலேயே நமக்கு அறிமுகம் ஆகிறான். எப்பொருளும் நில நலத்திற்கு ஏற்பத்தானே அமையும்? இராமன் என்னும் நல்லற நாயகன் தோன்றிய பூமி எது? கோசலம் என்னும் நாடே அது! அது எப்படிப்பட்ட நாடு? ஆற்ற நல்லறத்தை அல்லாமல் வேறு இல்லாமையால் ஏற்றத்தை அன்றிக் கீழ்மையே இல்லாத நாடு!

அந்த நாட்டில் - அயோத்திமா நகரில் - அவதரித்தவன் தான் நம் இராமன் - ஆம் கம்பராமன்! அவன் உருவத்தில் எத்துணைப் பேரழகனோ அத்துணைக் குணஅழகும் மிக்கவன்! ஆகவே அவனை யாவரும் விரும்பி மகிழ்ந்தனர்.

இராமன் பல்வேறு கலைகளையெல்லாம் கற்பதற்காகத் தம்பிகளுடன் வசிட்டன் முதலிய நல்லாசிரியர்பால் சென்று வருவான். அப்படிச் சென்று வரும் பொழுதெல்லாம் எதிர்ப்படும் மக்களைக் கண்டு, நின்று அவர்களின் பல நலன்களையும் வினவிக் கனிவோடு எல்லோரையும் மகிழ்விப்பான். மக்களும் இராமனுடைய சௌலப்பியத்தைக் கண்டு உள்ளம் கனிந்து உருகி மகிழ்ந்து, பலவாறாய் வாழ்த்துவார்கள்.

எதிர் வரும் அவர்களை, எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா,
"எது வினை? இடரிலை? இனிது நும் மனையும்?
மதி தரு குமரரும் வலியர் கொல்" எனவே

(எம்மை ஆட்கொண்ட பெருமானான இராமன் எதிர்ப்படும் மக்களையெல்லாம் மிக்க அருளுடன் முகமாகிய தாமரை

பிரகாசிக்கும் படி என்ன வேலையாகப் போகிறீர்கள்? சிரமம் ஒன்றுமில்லையே? வீட்டில் அம்மா நலமா? புத்தி நிரம்பிய உங்கள் மைந்தர்கள் திடமாக இருக்கிறார்களா?)

இப்படியெல்லாம் எல்லோருடனும் மிக்க அன்புடனும், பரிவுடனும் வாத்சல்யத்துடனும் நடந்து கொள்ளும் பண்பாட்டை இராமன் இளமையிலேயே பெற்றுத் திகழ்வதைக் காண்கிறோம். இப்படியாக இராமன் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று வரும் பொழுது ஒருநாள் விசுவாமித்திரன் வருகிறான். தயரதன் அப்பெரு முனிவனை உரிய முறையில் வரவேற்கிறான். சம்பிரதாய உபசாரங்கள் எல்லாம் ஆன பிறகு தன் வேள்வியைக் காப்பதற்காக இராமனைத் தன்னுடன் அனுப்ப வேண்டுமென்று கேட்கிறான். முதலில் தயங்கினாலும் வசிட்டன் கூறிய ஆலோசனையின் மேல் தயரதன் இசைகின்றான். தம்பி இலக்குவனுடன் வந்த இராமனை முனிவனுக்கு அறிமுகப்படுத்தி இவர்கட்கு, "நீ தான் நல்ல தாயும் தந்தையும்! விருப்பப்படி பயன்படுத்திக் கொள்க!'' என்று கூறி அனுப்புகிறான்.

மைந்தரும் முனிவன் பின் செல்கின்றனர். கானகத்தின் கொடிய வெம்மையைத் தாங்கிக் கொள்ளும் பொருட்டாய் "பலை, அதிபலை'' என்ற இரு மந்திரங்களை இவர்கட்கு உபதேசிக்கின்றான். மைந்தரும் அதனால் பயன்பெறுகின்றனர். பிறகு தாடகை என்பவளின் வரலாற்றையும் அவள் செய்கின்ற அக்கிரமங்களையும் முனிவன் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே அக்கினிக் கண்களும், இடிக்கும் குரலும், கோரரூபமும் உடையவளாய் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு வந்துவிடுகிறாள் தாடகை! இவளைச் சம்மாரம் செய்ய வேண்டும் என்று முனிவன் கருதுகிறான். ஆனால் இராமனோ இவள் ஒரு பெண்ணாயிற்றே என்று தயங்கினான். இராமன் உள்ளத்தை உணர்ந்த முனிவன்

"ஈறு இல் நல் அறம் பார்த்து இசைத்தேன்; இவட்
சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்;
ஆறி நின்றது அற்ற அன்று; அரக்கியைக்
கோறி'' , என்று, எதிர் அந்தணன் கூறினான்.

(அழிவில்லாத நல்ல தரும நெறியை ஆய்ந்து தான் சொல்லுகிறேன். இவள் மீது கொண்ட சினத்தால் சொல்லவில்லை. பொறுத்து நிற்பது அருள் ஆகாது; எனவே இந்த ராக்ஷசியைக் கொல்வாயாக!)

இந்தச் சொற்களைக் கேட்ட இராமன் நிலை என்ன? ஒப்பற்ற வீரனாய், வீரன் சிலையில் கோம்பு அம்பு போன்றவனாய், ஆன்ற அறம்புரி அண்ணலாய்க் காட்சி தருகின்ற அவன் மறுமொழியைக் கேட்போம்;

ஐயன் அங்கு அது கேட்டு, "அறன் அல்லவும்
எய்தினால், 'அது செய்க!' என்று ஏவினால்
மெய்ய! நின் உரை வேதம் எனக் கொடு
செய்கை அன்றோ! அறம் செயும் ஆறு" என்றான்.

(முனிவன் உரையைக் கேட்ட இராமன், தருமமல்லாத ஒன்று நேர்ப்படினும், "அதைச் செய்க!" என்று நீ கட்டளையிட்டால் சத்திய சீலனே! உன் சொல்லை வேதமாகக் கொண்டு அதன்படி செய்தல் தானே தரும நெறியாகும்!)

வேதத்தின் முதற்பகுதிக்கே விசுவாமித்திரன் தானே கர்த்தா! எனவே இராமன் கூற்றில் அந்த உண்மை புலப்படுவதுடன் இராமனின் கட்டுப்பாடான ஒழுக்கமும் நன்கு புலப்படுகின்றது.

இப்படி இவர்களின் உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது தாடகை கொடிய, நெருப்பைக் கக்கும் மூவிலைச் சூலப்படையைப் பிரயோகித்து விட்டாள். கண நேரத்தில் இராமன் செயல்பட்டு விட்ட அருமையைக் கம்பன் அற்புதமாகப் புலப்படுத்துகிறான்.

மாலும், அக் கணம் வாளியைத் தொட்டதும்,
கோல வில் கால் குனித்ததும், கண்டிலர்;
காலனைப் பறித்து அக் கடியாள் விட்ட
சூலம் அற்றன துண்டங்கள் கண்டனர்.

ஆகா! என்ன வேகம்! என்ன இலாவகம்! இராமன் அம்பராத் தூணியிலிருந்து கணையை எடுத்ததையும், கோதண்டத்தைக் காலால் மிதித்து வளைத்து நாண் பூட்டியதையும் எவரும் கண்டிலர்; ஆம் அவ்வளவு விரைவில் நிகழ்ந்து விட்டது. ஆனால் தாடகை பிரயோகித்தாளே அந்தக் கொடிய எமனைப்போல வந்த திரிசூலம் துகளாய் ஒடிந்து விழுந்த துண்டுகளைத்தான் கண்டனர். தாடகையும் சளைத்தாளில்லை. கல்மாரி பொழியத் தொடங்கவே இராமன் வில் மாரியால், அனைத்தும் பொடித்து வீழச் செய்தான். இறுதியில் ஒரு கடிய விரைவான அம்பால் தாடகையை வீழ்த்தினான். அந்த அம்பு அவள் மார்பில் தங்காது அப்புறம் சென்றதை,

"கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று" என்று பேசுவான் கவிச்சக்கரவர்த்தி.

இராமனின் "கன்னிப்போர்" இது! இதில் கூற்றுவனும் அரக்கர் உயிரைக் குடித்து முதல் முதலில் ருசி கண்டானாம். பின்னர் இராம இலக்குவர்கள் முனிவனின் வேள்வியைக் காத்து நிற்க முனிவனும் தன் யாகத்தைப் பழுதின்றி முடித்து மகிழ்ந்தான். இந்த வேள்வித் தொடக்கத்தில் இராம இலக்குவர்க்கு மகா வல்லமை மிக்க பல்வேறு படைக்கலங்களையும் அவற்றின் பிரயோக முறைகளையும் அருளினான் முனிவன். அவைகளும் இராமன் ஏவின வண்ணம் செயற்படற்கு அமைந்து விளங்கின.

வேள்விக் கூடத்தைக் காத்து நிற்கின்ற பொழுது அரக்கர் விண்ணில் மண்டி ஆர்த்தனர்; இடித்தனர். பல் படைகளை எய்து, வேள்வி நிறைவேற முடியாமல் செய்ய முயன்றனர். அரக்கர் கூட்டத்தை அழித்தொழித்தனர் இராம - இலக்குவர். அவர்களில் தாடகை மைந்தர்கள் சுவாகு - மாரீசன் என்பவர் இருவர். அவர்களுள் மாரீசனைக் கடலில் மூழ்கடித்தனர். சுவாகுவை எமபுரம் செல்ல வைத்தனர். இடையூறெலாம் நீங்கி வேள்வி நன்கு நிறைவேறிற்று.

முனிவன் இராம லக்குவர்களைப் பார்த்து "பெரிய காரியம் உள; அவை பின்னர் முடிக்கலாம். இப்பொழுது ஜனகன் மிதிலாபுரியில் செய்யும் வேள்வியையும் காணச் செல்வோம்" என்று கூறி அழைத்துச் செல்கிறான். அப்படி வருகின்றவர்கள் மிதிலை நகரின் புறஞ்சேரியில் வருகிறார்கள். அப்பொழுது இராமன் கால் தூசி பட்டு அங்குக் கிடந்த கல் ஒன்று பெண்ணுருக் கொண்டிட அவள் ஒதுங்கி நின்றாள். இதைக் கண்டு வியந்த இராமன் முனிவனை வேண்ட, அவள் அகலிகை என்றும், கோதமன் பத்தினி என்றும், அவள் வரலாறெல்லாம் எடுத்துரைத்த பின்னர், அவளைக் கோதம முனிவன்பால் சேர்த்து

"நெஞ்சினால் பிழைப்பு இலாளை
நீ ஏற்றருள்க"

என்று வேண்டி மிதிலையைச் சென்றடைகின்றார்கள்.

மிதிலையை அடைகின்ற பொழுது அங்குக் கட்டியுள்ள தோரணக் கொடிகள் (கீழ்நோக்கித் தொங்குவன) இவர்களை "வருக வருக!" என்பதைப் போல அசைந்தாடி வரவேற்றன. முன்னே முனிவன் செல்ல, பின்னே தம்பி தொடர இராமன் இடையில் சென்று கொண்டிருக்கிறான். அப்பொழுது கன்னிமாடத்தின் உப்பரிகையின் ஒளி (பால்கனி)யில் சீதை நின்று கொண்டிருக்கிறாள். இராமன் கண்ணுக்குச் சீதை பொன்னின் பேரொளியாய், மலரின் நறு மணமாய், ஈக்கள் அருந்தும் தேன் போன்ற இனிய சுவையாய், செந்தமிழ்க் கவியின்பமாய் விளங்குகின்றாள். ஒருவர் கண்ணை மற்றவர் கண்கள் பற்றி விழுங்க இராமனும் நோக்கினான்; சீதையும் நோக்கினாள். இடுப்பே இல்லையோ என்றும் படியான சிற்றிடைச் செல்வியும், குற்றமேதும் இல்லை என்னும்படி வளர்ந்த நற்குண நம்பியும் இரு உடலுக்கு ஓர் உயிர் ஆயினார். ஆம்; பாற்கடல் பள்ளியில் நின்றும் பிரிந்து வந்த இவர்கள் இன்று ஒன்று சேர்கின்றனர். நோக்கு ஒன்றே போதாதா? பேச்சு வேறும் வேண்டுமா என்ன?

முனியும் தம்பியும் தானும் ஒரு விருந்தினர் விடுதியில் தங்கினர். அப்பொழுது வந்த அலுக்கையால் முனிவனும் இலக்குவனும் நன்றாக அயர்ந்து உறங்கி விடுகின்றனர். ஆனால்

இராமனோ சீதையின் நினைவிலேயே உறக்கம் பிடிக்காமல் கிடக்கிறான். அதைக் கம்பன் நமக்கு அற்புதமாகப் புலப்படுத்துகிறான்.

முனியும் தம்பியும் போய், முறையால் தமக்கு
இனிய பள்ளிகள் எய்தியபின், இருட்
கனியும் போல்பவன் கங்குலும்[1], திங்களும்[2]
தனியும்[3], தானும்[4], அத் தையலும்[5], ஆயினான்.

(விசுவாமித்திரனும், இலக்குவனும் பொருந்திய வகையில் தங்கட்கு ஏற்ற படுக்கைகளை அடைந்த பின்னர், களாப்பழம் போன்ற இராமன் இரவும், மதியும், தனிமையும், தான் என்ற எண்ணமும் (Self - Consciousness) கன்னி மாடத்திலே கண்ட பெண்ணுமாக ஐந்து துணையோடு கிடக்கிறானாம்.)

இப்படியாக இரவெல்லாம் விரக தாபத்தால் நைந்து வருந்தும் இராமன் இறுதியாக எண்ணுவதை நோக்கும்போது அவனுடைய ஒழுக்க சீலம் பளிச்சிடுகிறது.

"என் மனம் நல்ல வழியிலே செல்லும்; அல்லாத நெறிப்படாது; அந்தப் பெண்ணை நோக்கி என் மனம் சென்றதற்குக் காரணம் அவள் கன்னியே! இதற்குச் சந்தேகமே இல்லை'' இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று ஒப்பற்ற சீலத்தைக் கடைப்பிடிப்பவனல்லவா அறத்தின் மூர்த்தி! பொழுது விடிந்ததும் எழுந்து முறைப்படி ஆற்ற வேண்டிய கடன்களை எல்லாம் நிறைவேற்றிவிட்டு முனிவனை வணங்கிப் பின் தம்பியொடும் ஜனக மன்னன் புரியும் வேள்வி காணச் சாலைக்குச் சென்றான். வேள்வி மங்கலமாக முடிந்தது. ஜனகன் அரண்மனை மண்டபத்தில் வந்து அமர்கிறான். விசுவாமித்திரனும் தன் இருபுறமும் இராம லக்குமணர் அமர முன்ஆசனத்தில் வீற்றிருந்தான். ஜனகன் அந்த இரு குமரர்களையும் தன்னுடைய கண்களாகிய மரக்காலாலே மொண்டு மொண்டு அவர்களின் அழகை மாந்தி மகிழ்ந்தவனாய், முனிவனை அடிவணங்கி, 'இவர்கள் யாரோ? தெரியச் செய்யுங்கள்' என்று வேண்டுகிறான். அவனும் சொல்லத்

தொடங்கினான். 'விருந்தினர்கள்; நீ நடத்தும் யாகத்தைக் காண வந்தவர்கள்; சீதையின் பொருட்டாக நீ வைத்திருக்கிறாயே அந்த வில்லையும் காண்பர்' என்று கூறினான் முனிவன். கவியைப் பார்க்கலாம்.

இருந்த குலக் குமரர் தமை, இரு கண்ணின்
முகந்து அழகு பருக நோக்கி,
அருந் தவனை அடி வணங்கி "யாரை இவர்?
உரைத்திடுமின், அடிகள்!" என்ன,
"விருந்தினர்கள்; நின்னுடைய வேள்வி
காணிய வந்தார்; வில்லும் காண்பார்;
பெருந் தகைமைத் தயரதன் தன் புதல்வர்" என,
அவர் தகைமை பேசல் உற்றான்.

இராம லக்குமணரை விருந்தினர்கள் என்று அறிமுகப்படுத்து கிறான் முனிவன். தன் அரண்மனையில் நேற்றே வந்து தங்கியிருப்பவர்களை விருந்தினர் என்று கூறித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமோ? சொல்பவன் எல்லாக்கலையும் வல்லவனான விசுவாமித்திரன்; கேட்பவனோ ராஜ ரிஷியாகிய ஜனகன். இராமனுக்குத் தெரியாமல் இராமனை இனம் காட்ட வேண்டும். ஆகவே தான் "விருந்தினர்" என்று கூடார்த்தமாகக் கூறுகிறான். பொருள் என்ன? 'அப்பா ஜனகனே! இவன் நம்மைப்போல மாறி மாறி வந்து மண்ணில் தோன்றும் மனிதனல்ல! அபூர்வமாக வந்து அவதரித்தவர்கள்! என்பது புலப்பட "விருந்தினர்"(உலகிற்குப் புதியவர்) என்று கூறினார்.

பிறகு வில் வருவதற்கு முன் இராமனையும் இவன் குலத்து முன்னோரையும் பற்றி முனிவன் எடுத்தோதுகிறான், இவர்களைப் பல கலையும் ஓதுவித்து வளர்த்தவன் வசிட்ட மாமுனி என்பதையும் எடுத்துரைக்கிறான். பின்னர் சிவதனுசு கொண்டு வரப் பெறுகிறது. அவ்வில்லின் வரலாறெல்லாம் ஜனக மன்னனின் குல குருவான சதானந்தன் எடுத்துரைக்கின்றான் அவற்றை எல்லாம் செவியுறக் கேட்ட விசுவாமித்திரன் "ஓ ஹோ! அப்படியா" என்று சடாபாரத்துடன் கூடிய தன் சிரத்தை ஓர் ஆட்டு ஆட்டி, போர்ச் சிங்கமாகிய இராமனைப் பார்த்தான். இராமனும்

முனிவனின் உள்ளக்குறிப்பு முழுவதையும் கருத்தில் கொண்டு அப்பெருஞ் சிலையை கண்ணாலே கணித்தான். சிலையின் நிலையை நன்கு கணித்து முடிந்ததும்

பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங் கனல் என்ன எழுந்தான்.

இமயமலை போன்ற அவ்வில்லை பெறற்கரிய பெருமை மிக்க இரத்தினம் போன்ற சீதைக்குச் சூட்டிட ஏந்தும் மலர் மாலை தான் இது என்று சொல்லும்படி எடுத்தான்!

கண்ணை இமைக்காமல் யாவரும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். இராமன் வில்லைக் காலில் உதைத்ததையும் நாண் கயிற்றை வில்லின் கொதையிலே வைத்ததையும் கண்டார் களில்லை. அடுத்த கணத்தில் சிவதனுசு முறிந்ததைக் கேட்டார்கள்.

கேட்பானேன்! எங்கும் ஒரு மகிழ்ச்சி; களிப்பு; எக்களிப்பு. உடனே தயரதனுக்குச் செய்தி போகின்றது. அவனும் உற்றார், உறவினர், ஐம்பெருங்குழு, எண்பேராயம், ஊரார் முதலியவர்களுடன் வந்து சேர்கிறான் மிதிலைக்கு! மாப்பிள்ளை அழைப்பு நடக்கிறது. எத்தனையோ கோலாகலங்கள்! அப்பப்பா! காதற்காட்சிகள் தான் எத்தனை இங்கே வருணிக்கப்படுகின்றன? அவற்றையெல்லாம் ஈண்டு எடுத்துரைப்பின் நேரமும் இடமும் கிட்டாவே! ஒன்றை மட்டும் காணலாம்:

தோள் கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்;
தடக்கை கண்டாரும் அஃதே!

தாடகை வதம் புரிந்த தோள்; அகலிகைக்கு விமோசனம் அளித்த திருவடி; சிவதனுசை முறித்த தடக்கை! அஃதே என்பது மீண்டும் திருவடியையே உணர்த்தலாம் "தாள் தொடு தடக்கை" என்று கம்பனே இராமனின் ஆஜானுபாஹுவை வருணிப்பதால் தடக்கையைக் கண்டவர்களும் கையின் முடிவு காணக் கண்ணை

ஒட்டிய பொழுது தாளையே (அஃதே) கண்டார் என்னலாம். மாப்பிள்ளை அழைப்பின் பின் கோலம் காண்டல் நிகழுகிறது. சீதை வருகிறாள்; அன்னமும், அரம்பையரும், ஆரமிழ்தும் நாண, மன் அவை இருந்த மணி மண்டபம் அடைகின்றாள். நட்டபாடைப் பண் போல காம்பீர்யம் தோன்ற நடந்து வருகிறாள். அதை நைவனம் நவிற்று மொழி நண்ண வருவதாய்க் கம்பன் கழறுவான்.

> அச்சென நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்
> பச்சை மலை ஒத்த படிவத்து, அடல் இராமன்,
> நச்சுடை வடிக் கண் மலர் நங்கை இவள் என்றால்
> இச் சிலை கிடக்க; மலை ஏழையும் இறானோ?

என்று அதிசயமாக்கினாள். காயத்திரி மந்திரத்தை அருளிய காரணத்தால் "அச்சென நினைத்த முதல் அந்தணன்" என்று விசுவாமித்திரனைப் போற்றுகிறான் கம்பன். "கல்விக் கரை உற்ற முனிகௌசிகன்" அவனுடைய பல்வேறு கல்விப் பெருமையைப் பாராட்டவும் செய்தான்.

திருமணத்திற்கு எண்ணற்ற மக்கள் வந்து குவிந்தனர்; தேர்மிசை வந்தார்கள் சிலர்; சிவிகை (பல்லக்கு) மீது வந்தனர் சிலர்; பலவகையான வாகனங்களில் வந்தனர் பலர்; ரத்தினம் இழைக்கப் பட்ட முகபடாமணிந்த ஆண் யானையின் மீது வருவர் சிலர்; பெண் யானை மீது வந்தனர் சிலர். வேறு சில சாதாரண எளிய மக்கள் வருகின்றார்கள். எப்படி? நடந்து வருகின்றனர். அவர்களைக் கம்பன் கேவலமாகக் கைவிட்டு விடுவானா? எல்லோரும் சிறிய - வாகனங்களில் தான் வருகின்றார்கள். ஆனால் நடந்து வருபவர்களை "பார்மிசை வருவாரும்" என்று கூறுகிறான். பூமியின் மீது ஆரோகணித்து வருகின்றார்களாம் அவர்கள். பாட்டைப் பார்க்கலாம் இனி.

> தேர்மிசை வருவாரும், சிவிகையில் வருவாரும்,
> ஊர்தியில் வருவாரும், ஒளி மணி நிரை ஓடைக்
> கார்மிசை வருவாரும், கரிணியில் வருவாரும்,
> பார்மிசை வருவாரும், பண்டியில் வருவாரும்.

இப்படியாக பலப்பல சிறப்புகள் எல்லாம் ஒரு சேரத் திருமணம் கோலாகலமாக நடைபெறுகிறது.

மன்றலின் வந்து மணத்தவிசு ஏறி,
வென்றி நெடுந்தகை வீரனும், ஆர்வத்து
இன்துணை அன்னமும், எய்தி இருந்தார்;
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்.

கோமகன் முன் சனகன், குளிர் நல் நீர்,
"பூமகளும் பொருளும் என, நீ என்
மா மகள் தன்னொடும் மன்னுதி" என்னா
தாமரை அன்ன தடக் கையின் ஈந்தான்.

வெய்ய கனல்தலை, வீரனும், அந் நாள்
மையறு மந்திரம் மும்மை வழங்கா,
நெய் அமை ஆவுதி யாவையும் நேர்ந்தான்
தையல் தளிர்க் கை தடக் கை பிடித்தான்.

ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை; ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல் கலை; ஆர்த்தன பல்லாண்டு!
ஆர்த்தன வண்டினம்; ஆர்த்தன வேலை.

(சக்கரவர்த்தித் திருமகனான இராமன் முன் நின்று கொண்டு, ஜனகன் "மலர்மகளும், திருமாலும் போல் நீ என் மகள் சீதையுடன் நிலை பெற்று வாழ்க!" என்று கூறி இராமன் தன் தாமரை மலர் போன்ற விசாலமான கைகளில் சீதையின் கையை வைத்துத் தாரை வார்த்துக் கொடுத்தான். வேள்வித் தீயில் குறைவற்ற மந்திரங்கள் முழுவதையும் கூறி நெய்யை ஆகுதியாகச் சொரிந்து சீதையின் திருக்கரத்தை தன் விசாலமான கைகளாற் பிடித்தான். முரசுகள் முழங்கின; சங்குகள் முழங்கின; வேதங்கள் முழங்கின; தேவர்கள் முழங்கினர்; பல கலைகளும் முழங்கின; பல்லாண்டுப் பாடல்களும் முழங்கின; வண்டுக் கூட்டமும், கடலும் முழங்கின.)

இங்ஙனம் சீதையை மணங்கொண்டு, சில நாள் மிதிலையில் தங்கியிருந்து, பின்னர் ஒரு நாளில் அயோத்தி நோக்கிப் புறப்படுகின்றனர், தயரதன் முதல் யாவரும்! அப்படி சென்று கொண்டிருக்கும் பொழுது இடைவழியில் பரசுராமன் எதிர்ப்படுகிறான். செஞ்சடை பொன்போல் ஒளிர, கண்கள் கனலைக் கக்க, இடி போன்று கர்ச்சனை மொழிகளை வாய் உதிர்க்க முன் வந்து நிற்கின்றான். பரசுராமனைக் கண்ட தயரதன் அஞ்சி நடுங்குகிறான். பரசுராமனோ இராமன் முன் வந்து நிற்க, தயரதனைப் பார்த்து 'இவன் யார்?' என்று கேட்கிறான் இராமன். அந்த அளவில் பரசுராமன் இராமனைப் பார்த்துப் பேசத் தொடங்குகிறான்.

"அடபயலே! நீ முறித்த அந்த சிவதனுசு மச்சுப்போன ஒன்று; அதன் தன்மையை நான் நன்கறிவேன்; உன் தோளாற்றலைச் சோதிக்க வேண்டுமென்னும் ஆசையும் எனக்குண்டு; என் வருகைக்கு வேறு காரணம் ஏதுமில்லை." இதைக்கேட்ட தயரதன் பதறிப் பலவாறாய் வேண்டிப் பணிகிறான். பரசுராமன் மசியவில்லை. தயரதன் பெருந்துயரால் மூர்ச்சையே அடைந்து விடுகிறான்! பரசுராமன் தன் பால் உள்ள வில்லின் பெருமையைக் கூறி "நீ வல்லவனாயின் இவ்வில்லை வளைத்து நாண் ஏற்று" என்று கூற, திருமால் பயின்ற அவ்வில்லை இராமன் ஏற்றுக் கொண்டு கணநேரத்தில் அதை வளைத்து நாணேற்றிப் பரசுராமன் நடுங்கும்படி பேசுகிறான்; "மண்ணகத்து மன்னர்களை எல்லாம் மாண்டுவித்தாய் என்றாலும் நீ வேதபாரகன் மகன்; ஆதலால் உன்னைக் கொல்ல விரும்பவில்லை; ஆனால் இதில் தொடுத்துள்ள அம்பு வீணாக மாட்டாது. இதற்குக் குறி யாது கூறுவாய் உடனே!" என்றான் இராமன்.

"அறச் செல்வ! அடியேன் மேல் கோபம் கொள்ளற்க! நீ பரம்பொருள் என்பதை உணர்கிறேன்; சிவன் வில் இற்றொழிவதை யன்றி உன் பிடிக்குத் தாங்குமா? நீ பிடித்த இந்த வில்லின் அம்பு பழுதாகாமல் என் தவங்கள் முழுவதையும் அழிப்பாயாக!" என்று கூறிச் சரணாகதியடைகின்றான் பரசுராமன். தன் தவம் முழுவதையும் பறி கொடுத்துவிட்டு,

இராமனை வாழ்த்தி விடைபெற்று வந்த வழியே திரும்பச் சென்று விடுகிறான் பரசுராமன்.

பின்னர் மூர்ச்சை தெளிந்து தயரதன் மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கினான். மலர் மாரி சொரிந்த தேவர்களிடையில் நின்ற வருணனிடம் இந்த வில்லைக் காத்து வைத்திரு என்று கூறிவிட்டு இராமன் அயோத்தியை அடைகின்றான். அங்கு யாவரும் ஆனந்தமாய் வாழ்கின்றனர். இப்படியாகப் பாலகாண்டத்தில் இராமன் புகழ் நிரம்பிய வரலாற்றைக் கண்டு நாம் பயன் பெறுகிறோம்.

கம்பன் அருளிய இராமாவதாரம்

பரதநாட்டியம் விளக்கவுரை

"கம்பன் அடிப்பொடி"

ஒரு கலையின் மாண்பை எடுத்துக்காட்ட மற்றொரு கலை உதவும். இஃது உலகம் ஒப்புக் கொண்ட ஒன்று. ஒவ்வொரு கலையும் தனக்கென உள்ள வரம்பினுள் நின்று கொண்டே அந்த வரம்பை மீற முயல்கிறது. ஏனென்றால் உணர்த்தும் ஆற்றலுக்கும் மிஞ்சிய அளவில் அஃது உணர்வதாலே தான்.

அப்படியே சொற்களையும் தன் ஆற்றலைக் கொண்டு உணர்த்த முயலும் முயற்சியில் தளர்ச்சியடையும் போது அதற்கு நடனக்கலை துணைபுரிய முன் வருகிறது.

கம்பன் கவிச்சக்கரவர்த்தி; அவனுடைய கவிகள் அற்புதமானவை; பாவம் செறிந்தவை. எனினும் அவையும் கூட கவிஞன் உணர்ந்தவற்றை, அவன் உணர்ந்த அளவு - அவன் நமக்கு உணர்த்த நினைக்கும் அளவு - உணர்த்த மாட்டாமல் தவிக்கின்றன. அப்படித் தவிக்கின்ற சொற்களுக்கு நடனக்கலை மிக நாசூக்காகக் கைகொடுத்து உதவுகிறது. அவற்றையெல்லாம் நடனத்தில் கண்டு நீங்கள் அனுபவிக்கக் கூடும். நடனத்தைக் கண்டு இன்புற எண்ணும் அன்பர்கள் இச்சிறு உரையை முற்றிலும் படிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதைப் படித்துப் பொருளையும் சந்தர்ப்பத்தையும் நன்றாக விளங்கிக் கொண்டால் நாட்டியத்தைச் சரியாக ரசித்து மகிழ முடியும்

காப்பு

சகல உலகங்களையும் படைப்பதையும், காப்பதையும், அழிப்பதையும், பிரியாத - எல்லையில்லாத - விளையாட்டாக உடையவர் அவரே தலைவர்; அவருக்கே நாங்கள் அடைக்கலம் ஆவோம்.

பூபாளம்] [ஆதி

உலகம் யாவையும்,
தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும்,
நீக்கலும், நீங்கலா –
அலகிலா – விளை
யாட்டுடை யார் அவர்
தலைவர்; அன்னவர்க்
கேசரண் நாங்களே!

அலாரிப்பு

இரக்கமற்ற பாவியாகிய மன்மதன் விசைமிக்க நீண்டவில்லை எடுத்துக் கொடிய பாணங்களை அடுத்தடுத்து எய்து கொண்டேயிருக்கிறான். அதனால் தீப்பற்றிய பஞ்சைப்போல் உள்ளம் பொசுங்கிக் கருகித் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற பெண்களை நோக்கிப் பயப்பட வேண்டாம். பயப்பட வேண்டாம் என்று ஓர் ஆறுதல் அளிக்காத ஆண்மையும் ஆண்மையா?

நாட்டைக்குறிஞ்சி] [திஸ்ரநடை

பஞ்ச ரங்கு தீயின் ஆவி
பற்ற நீடு கொற்றவில்
வெஞ்ச ரங்கள் நெஞ்ச ரங்க
வெய்ய காமன் எய்யவே
சஞ்ச லங்க லந்த போது
தைய லாரை உய்ய வந்த[து]
அஞ்சல்! அஞ்சல்! என்கி லாத
ஆண்மை என்ன ஆண்மையே!

"தாமரை மலரை விட்டுப் பிரிந்து, நான் செய்த தவப்பயனால் வந்து, மகாலட்சுமி இங்கே வசிக்கிறாள்", என்று, குறுக்கும் நெடுக்குமாகக் கட்டப்பட்டுள்ள அழகுமிக்க

கொடிகளாகிய தன் கைகளை ஆட்டி, அந்த மிதிலை நகரம் செந்தாமரைக் கண்ணனாகிய ராமனை "வருக! விரைந்து வருக!" என்று அழைப்பது போல இருக்கிறது.

(கொடிகளின் முன்பின் ஆட்டம் கவிஞன் கண்ணுக்கு அப்படித் தோன்றுகிறது.)

வசந்தா] **[ரூபகம்**

கை அறு மலரின் நீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று,
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாஎன்று
அழைப்பது போன்ற தம்மா!

ஜனகன் வேள்விக் கூடத்தில் இராமன் இருக்கிறான்; சிவதனுசு கொண்டு வரப்பட்டது. பயங்கரமான பெரிய வில்; இராமனோ இளம் பாலன். இவன் எப்படி இந்த வில்லை நாண் ஏற்றப் போகிறான் என்று எல்லோரும் மலைக்கின்றார்கள்.

"அழகுச் செல்வனான இராமன் சீதையை மணக்கச் சம்மதம் என்று கூறிவிட்டால், "கல்யாணம் செய்து கொள் அப்பா" என்று கொடுப்பதை விடுத்து, கங்கைப் பெருநதியையே ஜடாபாரத்தில் அடக்கிய சிவபெருமானுடைய வில்லைக் கொண்டு வந்து இந்தப் பாலன்முன் வைத்தது எவ்வளவு அறியாமை" என்பார்கள்.

ஹிந்தோளம்] **[ஆதி**

"வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள்என முன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து இப்
பிள்ளைமுன் இட்டது பேதமை" என்பார்.

"மெய்யுணர்வுடைய இந்த விசுவாமித்திரனுக்குச் சிறிதுகூட வெட்கமில்லை" என்று ஒருத்தி கூறுகிறாள். "ஜனக மன்னனை விடக் கொடியவர்கள் வேறு எவருமில்லை" என்று வேறொருத்தி கூறுகிறாள். "மனுகுலத் தோன்றலாகிய இவன் இந்த வில்லைக் காலால் உதைத்து வளைக்காமற்போனால் சீதை என்ற பேர்கூட இனி இல்லாமல் போய்விடும்" என்று மற்றொருத்தி கூறுகிறாள்.

காம்போதி] [ஆதி

"ஞான முனிக்கொரு நாண்இலை என்பார்"
"கோன்இவ னின்கொடி யான்இலை" என்பார்
"மானவன் இச்சிலை கால்வளை யானேல்
பீன தனத்தவள் பேறுஇலள்" என்பார்.

பெண்டுகள் இப்படி எல்லாம் பலவாறாகப் பேசிக் கொண்டிருக்க, நற்குண சீலர்கள் உத்ஸாக மொழி கூறிட, தேவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் புரிய, இராமன் எழுந்து சிங்கத்தைப் போலவும், ரிஷபத்தைப் போலவும், மேருமலையைப் போலவும், மதயானையை போலவும், கம்பீரமாக வில் இருந்த இடத்தை நோக்கி நடந்தான்.

ஷண்முகப்பிரியா] [ஆதி

தோகையர் இன்னன சொல்லிட! நல்லோர்
ஓகை விளம்பிட, உம்பர் உவப்ப,
மாகமடங்கலும் மால்விடை யும், பொன்
நாகமும், நாகமும் நாண நடந்தான்.

மேருமலையைப் போன்ற அந்தச் சிவதனுசை அணுகி, அதை எவ்வளவு அலட்சியமாக, லாவகமாகத் தூக்குகிறான் பாருங்கள்! கிடைத்தற்கரிய, சிறந்த மாணிக்கமான சீதைக்கு அணிவதற்காக ஏதோ ஒரு மணமாலையை எடுப்பதுபோல, அவ்வளவு எளிதாக அல்லவா எடுக்கிறான் இராமன்?

பிலகரி] [ஆதி

ஆடக மால்வரை அன்னது தன்னை
தேடரும் மாமணிச் சீதை எனும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை இதென்ன எடுத்தான்

வைத்தகண் வாங்காமல் இருந்தவர்கள் எல்லாம் இராமன் வில்லின் ஒரு முனையைக் காலால் உதைத்தையும், நாணை மற்றொரு நுனியில் உள்ள குதையில் பொருத்தியதையும் அந்த க்ஷண நேரத்தில் காணவில்லை. ஆனால் கையினால் எடுத்ததைக் கண்டார்கள்; முறிந்த ஒலியைக் கேட்டார்கள். அவ்வளவு விரைவில் காரியம் நடந்துவிட்டது.

மணிரங்கு] [ஆதி

தடுத்திமையாமல் இருந்தவர், தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும், நோக்கார்,
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்

யுத்தம் என்று கேட்ட அளவிலே விம்மிப் பருக்கும் மலை போன்ற, அழகிய வலிய தோளை உடையவன்; மன்மதன் போன்ற உருவினன்; அவன் மலர் பறித்துக் கொண்டிருந்தான். அவனை, கருமேகம் போன்ற கூந்தலையுடைய, குயில் போன்ற குரலையுடைய ஒருத்தி வந்து கண்ணைப் பொத்தினாள். "யார்?" என்று அவ்வழகன் கேட்டான். அவ்வளவுதான், நெருப்பைத் தொட்டவள் போலப் பொருமிப் பொருமி அழத்தொடங்கி விட்டாள். (என்னைத் தவிர உன்னைத் தீண்டக் கூடியவர்களும் உண்டா என்பது கருத்து.)

வாசஸ்பதி] [மிஸ்ர ஜம்பை

போர் என்ன வீங்கும் பொருப்பன்ன
பொலன்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய்[து]
இருந்தானை, வந்தோர்

கார்அன்ன கூந்தல் குயில் அன்னவள்
கண் புதைப்ப,
'யார்?' என்ன லோடும், அனல் என்ன
அயிர்த்து உயிர்த்தாள்.

மிதிலை நகரில் ராமன் பவனி வருகிறான். நகரம் முழுவதும் ஒரே குதூகலமாக விளங்குகிறது. எங்கும் மகிழ்ச்சிப் பெருக்கால் பெண்கள் ஓடி ஆடித் திரிகிறார்கள். அது எப்படியிருக்கிறது என்று கம்பன் சித்தரிக்கிறான்.

மான்கூட்டம் பம்மிப் பதுங்கி மருண்டு துள்ளிக் குதித்து வருவதைப் போலவும், மயில் கூட்டம் தோகை விரித்து அசைந்தாடித் திரிவதைப் போலவும், நட்சத்திரங்கள் ஒளிவிடும் வானத்தில் அடுத்தடுத்து மின்னல்கள் பளிச்சிடுவதைப் போலவும், தேனீக்கள் ரீங்காரம் செய்து ஆர்ப்பரிக்கவும், கால்சிலம்புகள் ஒலிக்கவும், தேனொழுகு புதுமலர்களைச் சூடிய மாதர்கள் கூட்டத்தின் நடுவில் நுழைந்து பரபரப்பாய்த் திரிகிறார்கள்.

கல்யாணி] [ரூபகம்

மான்இனம் வருவ போன்றும்,
மயில்இனம் திரிவ போன்றும்,
மீன்இனம் மிளிரும் வானில்
மின்இனம் மிடைவ போன்றும்
தேன்இனம் சிலம்பி ஆர்ப்ப,
சிலம்பினம் புலம்ப, எங்கும்
பூநனை கூந்தல் மாதர்
பொம் எனப் புகுந்து மொய்த்தார்

மை போன்ற கரிய கூந்தலும், சிவந்த வாயும், ஒளிமிக்க நெற்றியும் உள்ள ஒருத்தி இராமனைக் காண வந்தாள்; கண்டாள், உள்ளம் உடைந்து போனாள்; மனம் உருகுகின்றாள்.

"என் மனத்துள்ளே இந்த மாய்மாலக் கள்ளன் வந்து புகுந்து கொண்டான். அவன் திரும்ப வெளியேறிவிடாதபடி அவன்

நுழைந்த வாயில் இருக்கிறதே. ஆம் கண், எனும் அந்த ஒளிமிக்க வாசலைக் கக்சிதமாக அடைத்து விட்டேன். ஆகவே தோழி! என்னை மஞ்சத்திற்கு இட்டுச் செல்" என்று கூறுகிறாள்.

சாரமதி] [ஆதி

மைக்கரும் கூந்தல், செவ்வாய்,
வாள்நுதல் ஒருத்தி உள்ளம்
நெக்கனள்; உருகு கின்றாள்;
"நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன்; போகா வண்ணம்
'கண்' எனும் புலம்கொள் வாயில்
'சிக்' என அடைத்தேன் தோழி!
சேருதும் அமளி" என்றாள்.

இப்படி ஏன் மாதர்கள் மொய்க்கின்றார்கள்? எல்லாம் இராமனைத் தரிப்பதற்காகத்தான்! இவ்வளவு ஆர்வத்துடன் புகுந்த இவர்கள் இராமனை எவ்வளவு தூரம் கண்டு மகிழ்கிறார்கள் தெரியுமா?

தோளைக் கண்டவர்கள் தோளிலேயே லயித்து விடுகிறார்கள்; வீரக்கழல்பூண்ட, தாமரை போன்ற திருவடியைக் கண்டவர்கள் அதிலேயே லயித்து விடுகிறார்கள். விசாலமான கையைக் கண்டவர்களும் அப்படித்தான். ஒளிமிக்க கண்களையுடையவர்களாயிருந்தும் இராமனை அடி முதல் முடி வரை எவர் தான் தீர்க்கமாய் கண்டறிந்தார்கள்?

ஹம்ஸாநந்தி] [தேசாதி

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கை கண்டாரும் அஃதே!
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?

வண்டுகள் ஒலிக்கின்ற மலர்ச்சுமையைத் தாங்குகின்ற கூந்தலை உடையவள்; சிறந்த ஆபரணங்களை அணிந்தவள்; காற்சிலம்பும் இடைமேகலையும் கலீர் கலீர் என்று ஒலி செய்திட ஓர் அழகிய பூங்கொம்பு போல ஒய்யாரமாக நடந்து வந்தாள். ஆனால் (இராமனைக் கண்டு தன்வயம் இழந்து மயக்கியவளாய்) புலம்பிக் கவலைப்படும் தோழிமார்களால் கைத்தாங்கலாய் தூக்கிச் செல்லப்படுகிறாள்.

மோகனம்] **[ஆதி**

அலம்பு பாரக் குழவிழர் ஆயிழை,
சிலம்பும், மேகலையும், ஒலி செய்திட
நலம்பெய் கொம்பின் நடந்துவந் தெய்தினாள்;
புலம்பு சேடியர் கைமிசைப் போயினாள்

பெண்கள் இவ்வண்ணம் அலுப்படைய, ராமனோ, குற்றமில்லாத மனத்து வசிட்டனும், வேதத்தைக் கரை கண்டவனான விசுவாமித்திரனும் வீற்றிருக்கும் திருமண மண்டபத்தை ஆயுதம் தாங்கிய அரசர் கூட்டத்துடன் சென்றடைந்தான்.

ஸ்ரீராகம்] **[ஆதி**

மாதர் இன்னணம் எய்திட வள்ளல் போய்
கோதில் சிந்தை வசிட்டனும், கோசிக
வேத பாரனும் மேவிய மண்டபம்
ஏதி மன்னர் குழாத்தொடும் எய்தினான்

பூங்கொடி போன்ற சீதையைத் தந்த பூமாதேவி தன் மகளாகிய சீதையின் பாதம் மிக மென்மையானவை; நடக்கும் பொழுது தரை உறுத்தும்; என்று பயந்து நடைபாதை எங்கும் பசுந்தளிர்களையும், பன்னிற மலர்களையும், பரப்பினளோ என்று கருதுமாறு தான் அணிந்துள்ள சிறந்த ஆபரணங்களில் உள்ள ரத்தினங்கள் பூமியில் ஒளி பரப்ப நடந்து வந்தாள்.

சாரங்கா] [ஜம்பை

வல்லியை உயிர்த்தநில மங்கை இவள் பாதம்
மெல்லிய; உறைக்கும் என அஞ்சி, வெளி எங்கும்
பல்லவம் மலர்த்தொகை பரப்பினள் எனத்தன்
நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள்

தங்கத்தின் பிரகாசமும், மலரின் மணமும், சந்தனத்தின் குளுமையும், மின்னலின் அழகும் போலத் தன் திருமேனி விளங்க, அன்னப்பறவையும், தேவமாதரும், நல்லமுதமும் தோற்றுத் தலைகுனிய, அரசர் சபை கூடியிருந்த அழகிய மண்டபத்தை வந்து சேர்ந்தாள், ஜானகி.

கானடா] [ஜம்பை

பொன்னின்ஒளி, பூவின்வெறி, சாந்து பொதி சீதம்,
மின்னின்எழில், அன்னவள்தன் மேனியது மான,
அன்னமும், அரம்பையரும் ஆர்அமிழ்தும் நாண
மன் அவை இருந்தமணி மண்டபம் அடைந்தாள்

நெருங்கிச் சுருண்ட கூந்தலையுடைய சீதையைக் கண்டு, உலக முழுவதையும் சுற்றி வளைத்து ஒருபடித்தாய் ஆளும் ஆக்ஞா சக்கரத்தையுடைய தயரதச் சக்கரவர்த்தி

எக்காலத்தும், ஏழு உலகங்களையும், ஆள்பவனாக இருந்தாலும் இன்றுதான் லட்சுமிதேவி வந்தடைந்தாள்; எத்துணைச் சிறந்த வெற்றி இது!

என்றான்.

பந்துவராளி] [ஜம்பை

துன்றுபுரி கோதைஎழில் கண்டுலகு சூழ்வந்[து]
ஒன்றுபுரி கோலொடு தனித்திகிரி உய்ப்பான்,
"என்றும் உலகு ஏழும் அரசெய்தி உளனேனும்,
இன்றுதிரு எய்தியது தென்னவயம்!" என்றான்.

சீதையைக் கண்டதும், அகில உலகத்திற்கும் கட்டளை இவன்தான் என்று கருதக்கூடிய முதல் அந்தணனாகிய விசுவாமித்திரன் என்ன எண்ணுகிறான் தெரியுமா?

நஞ்சினையுடையதும் மாவடுப் போன்றதுமான கண்களையுடைய இவள் தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் திருமகளே என்றறிந்தால், பசியமலை போன்ற மேனியையும் பேராற்றலையும் உடைய இராமன் இந்த வில் ஒன்றை மட்டுமா, ஏழுமலைகளையுமே முறித்தெறிய மாட்டானா?

என்று எண்ணுகிறான்.

தோடி] [ஜம்பை

அச்சென நினைத்தமுதல் அந்தணன் நினைந்தான்;
பச்சைமலை ஒத்தபடிவத்தடல் இராமன்,
நச்சுடை வடிக்கண்மலர் நங்கை இவள் என்றால்,
இச்சிலை கிடக்கமலை ஏழையும் இறானோ?

திருமணப் பந்தர்க்கு வந்து மணமக்கள் அமர வேண்டிய ஆசனத்தில் வெற்றி நலனும் பெருந்தகுதியுமுள்ள வீரனான இராமனும் வீரச் செயல்களுக்கெல்லாம் இனிய துணையான தூய்மையான சீதையும் அமர்ந்திருந்தனர். அஃது எப்படியிருந்ததென்றால் இணைதற்குரிய போகமும், அதற்கேற்ற நெறியான யோகமும் போன்றிருந்தது.

சங்கராபரணம்] [ஜம்பை

மன்றலின் வந்து மணத்தவிசு ஏறி,
வென்றி நெடுந்தகை வீரனும், ஆர்வத்[து]
இன்துணை அன்னமும், எய்தி இருந்தார்;
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்.

சக்கரவர்த்தித் திருமகனான இராமன் முன் நின்று ஜனக மகாராஜன்

"மலர்மகளும், திருமாலும் போல நீ என் பெருமைக்குரிய மகளான ஜானகியுடன் என்றும் ஒன்றி வாழ்வாயாக!"

என்று கூறி இராமச்சந்திரனின் தாமரை மலர் போன்றதும், விசாலமானதுமான கையில் குளிர்ந்த புனித நீரைத் தாரை வார்த்துச் சீதையைக் கொடுத்தான்.

சாமா] [ஜம்பை

கோமகன் முன்ஜன கன்குளிர் நல்நீர்,
"பூமகளும் பொருளும்என நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி என்னா,
தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான்.

கொழுந்துவிட்டு எரியும் வேள்வித் தீயில் குற்றமற்ற மந்திரங்கள் முழுவதையும் ஓதி நெய்யுடன் ஆகுதிகள் அனைத்தையும் மூன்று முறை அளித்து, சீதையின் தளிர் போன்ற கையைத்தன் விசாலமான கையால் பற்றினான் இராமன்.

சாவேரி] [ஜம்பை

வெய்ய கனல்தலை வீரனும் அந்நாள்
மையறு மந்திரம் மும்மை வழங்கா
நெய்யமை ஆவுதி யாவையும் நேர்ந்தான்,
தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்.

அப்படி, சீதா தேவியின் கரத்தை ஸ்ரீராமன் பற்றியதும், பேரிகைகள் முழங்கின! சங்குகள் ஒலித்தன! நான்கு வேதமும் கோஷித்தன; தேவர்கள் ஆடிப்பாடினர்; பல்கலைகளும் ஆர்த்தன; பல்லாண்டு கோஷம் முழங்கின; வண்டுகள் ரீங்காரம் செய்தன; கடலும் ஆர்ப்பரித்தன.

கமாஸ்] [ஜம்பை

ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை; ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல்கலை; ஆர்த்தன பல்லாண்டு;
ஆர்த்தன வண்டினம்; ஆர்த்தன வேலை.

முடிசூடச் செல்ல வேண்டிய இராமன் அன்னை கைகேசியின் ஆணை மீது அவள் அரண்மனைக்கு வருகிறான். வந்து வணங்கியவனைக் கைகேசி, "உன்னிடம் ஒரு தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது உன் தந்தையின் கட்டளை என்கிறாள்" ராமன் பேசுகிறான் :-

"கட்டளை இட்டவர் என் தந்தையார்; அதை எனக்கு உரைப்பது தாயாராகிய தாங்கள்; இப்படி நேருமானால் நான் புண்ணிசாலியாவேன். என்னைவிட அதிர்ஷ்டசாலி யார்? வணக்கம்; தாயே யான் இங்கு வரநேர்ந்தது என் தவப்பயனே இதைவிட வேறு நன்மை என்ன இருக்கப் போகிறது? என் தந்தையும் தாயும் நீரே! கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன் ஆணையிடுங்கள்."

கரகரப்பிரியா] [ஆதி

"எந்தையே ஏவ, நீரே
உரைசெய, இயைவ[து] உண்டேல்,
உய்ந்தனென் அடியேன்; என்னின்
பிறந்தவர் உளரோ? வாழி!
வந்ததென் தவத்தின் ஆய;
வருபயன் மற்றொன் றுண்டோ?
தந்தையும் தாயும் நீரே!
தலைநின்றேன்; பணியின்" என்றான்.

கைகேசி சொல்லுகிறாள் :-

"கடல் சூழ்ந்த இவ் உலகம் முழுவதையும் பரதனே ஆட்சி புரிய நீ புறப்பட்டுச் சென்று நீண்ட பெருஞ் சடைகள் தாங்கி, அரும்பெரும் தவங்கள் ஆற்றி, வனத்தில் தங்கியிருந்து புண்ணிய நதிகளில் முழுகி,பதினான்கு ஆண்டு கழித்து நகருக்கு வா என்று கூறினான் மன்னன்" என்றாள்.

கரகரப்ரியா] [ஆதி

"ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீபோய்த்
தாழ் இரும் சடைகள் தாங்கித்
தாங்கரும் தவம்மேற் கொண்டு,
பூழி வெம் கானம் நண்ணி,
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ் இரண்டு ஆண்டின் வாஎன்[று]
இயம்பினன் அரசன்" என்றாள்.

இராமன் பேசுகிறான் :

அம்மா! அரசன் கட்டளையாக இல்லாமல் இருந்தால்தான் என்ன? உங்கள் கட்டளையை மறுப்பேனா நான்? என் தம்பிக்குக் கிடைக்கும் செல்வம் எனக்குக் கிடைத்தது போல இல்லையா? இதை விட எனக்கு என்ன நன்மை கிட்டப்போகிறது? இந்தக் கட்டளையைத் தலைமேல் தாங்கிவிட்டேன். மலர் பூத்துக்குலுங்கும் வனத்திற்கும் இப்பொழுதே புறப்பட்டு விட்டேன்; தாயே! அனுமதியும் பெற்றுக் கொள்கிறேன்.

சாருகேசி] [ஆதி திஸ்ர நடை

மன்னவன் பணிஅன் றாகின்
உம்பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
என் இனி உறுதி அப்பால்?
இப்பணி தலைமேல் கொண்டேன்;
மின்ஒளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்.

வனம் சென்ற இராமனைத்திரும்ப அழைத்துச் செல்வதற்காகப் பரதன் சேனையுடன் வருகிறான். பெரும் படையை அக்கரையிலிருந்து கண்ட குகன், ராமனுடன்

பொருதிப்போர் புரியவே பெரும்படையுடன் பரதன் வருவதாக நினைத்து பேசுகிறான்.

"அண்ணன் என்று எண்ணிப்பார்க்கவில்லை; புலி போன்ற தம்பி ஒருவன் உடனிருக்கிறான் என்பதையும் நினைத்துப் பார்க்கவில்லை; அதெல்லாம் போகட்டும், என்னை இவன் உதாசீனம் செய்வது போலல்லவா இருக்கிறது? இந்த எல்லையைக் கடந்து போயன்றோ போர் புரிய வேண்டும்? பரதன் என்னவோ அரசனாக இருக்கலாம்; அந்த அரசனின் மார்பிலே வேடர்களாகிய நாங்கள் எய்கிற அம்பு பாயமாட்டாதா? பார்க்கலாம்!"

மலையமாருதம்] [திஸ்ரநடை

முன்னவன் என்று நினைந்திலன்;
மொய்புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்,
என்இவன் என்னை இகழ்ந்த[து] இவ்
எல்லை கடந்தன்றோ?
மன்னவர் நெஞ்சினில் வேடர்
விடும்சரம் வாயாவோ?

இப்படிப் பேசுகிற குகன் தனது படையினரையெல்லாம் திரட்டிஒரு போர்ப்பிரசங்கமே நிகழ்த்துகிறான்.

"நாட்டையே மனப்பூர்வமாகக் கொடுத்து விட்டு வந்த எப்பெருமான் ஸ்ரீராமனுக்கு நாம் வசிக்கும் காட்டைக்கூட விட மனமின்றி, படை எடுத்ததைப் பார்த்தீர்களா? ஆகவே, தோழர்களே! அதோ பிரமாதமாக ஆடிப்பறக்கும் கொடிகளுடன் வரும் சேனை முழுவதையும் முட்டி மோதி அழித்துவிட்டு தருமச் செல்வர்களே நாட்டை ஆளும் படியாகச் சாசனம் செய்து கொடுக்க வேண்டும். முதன் முதலிலே தங்கள் ஆட்சித்தலைவனைத் தேர்ந்தெடுக்கும் பெருமையை நீங்கள் அடைய வேண்டும்; சரிதானா?"

மலையமாருதம்] [திஸ்ரநடை

நாடு கொடுத்தஎன் நாயக
னுக்குஇவர் நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி
எடுத்தது காணீரோ?
ஆடு கொடிப்படை சாடி
அறத்தவரே ஆள
ஏடு கொடுத்தது பார்எனும்
இப்புகழ் மேவீரோ?

அசோக வனத்திலே வாடி வதங்கி, வருந்திச் சோம்பித் துயரமே வடிவாய்ச் சமைத்து வீற்றிருக்கும் சீதா பிராட்டியின் திருமுன் ராவணன் வருகிறான், வந்து பிதற்றுகிறான்;

எனக்குத் துரோகி நான் தான்; பெண் உருக்கொண்ட விடத்தைப் பூசிய அமுதத்தை உண்ணலாம் என்று ஆசைப்பட்டேன். காலம் கழிந்தே வருகிறது என் உள்ளத்தில் உறைகின்ற உம்மை மறந்து விட்டுச் சாக முடியாமல் அல்லவா பயந்து கொண்டிருக்கிறேன். இந்த அடிமை உங்களைச் சரணாகதி அடைகிறேன் அமுதை ஒத்தவரே!

தன்யாசி] [ஆதி

வஞ்சனேன் எனக்கு நானே!
மாதரார் வடிவு கொண்ட
நஞ்சுதோய் அமுதம் உண்பான்
நச்சினேன்; நாளும் தேய்ந்த;
நெஞ்சு நேரானது உம்மை
நினைப்புவிட்[டு] ஆவி நீக்கி
அஞ்சினேன்; அடியனேன் நும்
அடைக்கலம்; அமுதின் வந்தீர்!

மேலும் பேசுகிறான் இராவணன் :

எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் நீராகவே தான் தோன்றுகிறது; எப்பெயரைக் கேட்டாலும் உமதாகவே ஒலிக்கிறது! எதைப் பார்த்தாலும் கண்ணெதிரில் நீரே இருக்கின்றீர்! மன்மதன் எய்து கொண்டே இருக்கவும், அவனுடைய பஞ்ச பாணங்களால் ஏற்படும் புண்கள் என் ஒருவனுக்கே ஏற்படும் படியும் ஆகிவிட்டது. இதுவரை இல்லாத விபரீதங்களை எல்லாம் உண்டாக்கிவிட்டீர்!

சகானா] **[ஆதி**

பெண்ணெலாம் நீரே ஆக்கி,
பேரெலாம் உமதே ஆக்கி,
கண்ணெலாம் நும்கண் ஆக்கி,
காமவேள் என்னும் நாமத்[து]
அண்ணல்எய் வானும் ஆக்கி
ஐங்கணை அரியத் தக்க
புண்ணெலாம் எனக்கே ஆக்கி
விபரீதம் புணர்த்து விட்டீர்!

ராவணனுடைய பிதற்றல்களுக்கெல்லாம் சுடசுடப் பதில் கொடுக்கிறாள் சீதை :-

“உணர்வற்ற இந்த உடலைப் பாதுகாத்துக் கொண்டு, உயிரை விட்டுப் புகழை அடையாமல், உன்முன் வெட்கம் கெட்டுப் போய் இருக்கவில்லை யான். குற்றமற்ற குணங்களையே ஆபரணங்களாக உடைய அந்த புனிதனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை இனியும்கூடத் தரிசிக்கலாம் என்னும் ஆசையினாலே தான் இருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்!”

பியாகடை] **[ஆதி**

ஊண் இலா ஆக்கை பேணி
உயர்புகழ் சூடா[து] உன்முன்
நாண் இலா[து] இருந்தேன் அல்லேன்;
நவையறு குணங்கள் என்னும்

பூண்எலாம் பொறுத்த மேனிப்
புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன் கண்டாய்.

மேலும் தன் உள்ளக் கிடக்கையை உணர்த்துகிறாள் பிராட்டி:-

"ஏ, பாபி எமனுலகை எட்டி எட்டிப் பார்க்கும் என் உயிர் திருப்பி வந்து விடுகிறது. ஏன் தெரியுமா? போர்க்களத்திலே கேடய மலை போன்ற தம்பி இலக்குவன் பின்புறம் காத்து நிற்க, (ஸ்ரீராமன்) உன் தலைகள் பத்தினையும் தரையில் புரளச் செய்து, அரக்கர் குலம் முழுவதையும் தொலைத்து வாகை மாலை சூடி நிற்கும் அந்த அற்புதக் காட்சியைக் காணவேண்டுமென்று கிடக்கிறது ஓர் ஆழமான ஆசை."

தேவகாந்தாரி] [ஆதி

சென்றுசென்[று] அழியும் ஆவி
திரிக்குமால்; செருவில் சேம்பொன
குன்றுநின் றனைய தம்பி
புறக்கொடை காத்து நிற்ப
கொன்று, நின் தலைகள் சிந்தி,
அரக்கர்தம் குலத்தை முற்றும்
வென்றுநின்றருளும் கோலம்
காணிய கிடந்த வேட்கை

ராம - ராவணயுத்தம். இலங்காபுரியே அல்லோல கல்லோலப்படுகிறது. ராமனுடைய கோதண்டத்திலிருந்து ஓர் அம்பு புறப்பட வேண்டியதுதான். என்ன என்ன விபரீத மாற்றங்கள் ஏற்பட்டுவிடுகின்றன!

மதம் பொழியும் யானைகளும் குதிரைகளும் சாய்கின்றன. மேருமலை போன்ற தேர்கள் சரிகின்றன. அஸ்திரம் பாய்கின்ற திக்கெலாம் காதுகள் செவிடு படுகின்றன; பரந்த கடலின் தெளிந்த நீரும் சேறாகிக் கொப்புளிக்கின்றது. புலிபோலப் போர்

புரியும் அரக்க மகளிரின் மலர் போன்ற கண்கள் எல்லாம் அருவிபோலக் கண்ணீரைக் கொட்டுகின்றன!

இவ்வளவு களபரமும் எப்பொழுது? இரு நுனியிலும் மணிகள் கட்டிய, நீண்ட கோதண்டத்தின் நாண் கணகண கண கண என்று ஒலிக்கும் போதெல்லாம் தான்.

அடானா] [ரூபகம்

படுமத கரிபரி சிந்தின;
பனிவரை இரதம் அவிந்தன!
விடுபடை திசைகள்பி ளந்தன;
விரிகடல் அளற[து]எ ழுந்தன!
அடுபுலி அவுணர்தம் மங்கையர்
அலர்விழி அருவிகள் சிந்தின!
கடுமணி நெடியஎ னும்சிலை
கணகண கணகண எனுந்தொறும்!

ராம - ராவண யுத்தம் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. இறுதியில் ராமனின் தூய அம்பு ராவணனை உயிர் குடித்துப் போரை முற்றுவிக்கிறது.

கோடியே கோடியே கோடி ஆயுளையும் அரிதின் முயன்று கொண்ட பெரிய தவமும், "எந்த பகுதி மக்களாலும் வெல்லப்படாய்'' என்று சிவபெருமானால் கொடுக்கப்பட்ட வரமும், மற்றும் எட்டு திசைகளுடன் உலக முற்றும் வென்று நின்ற தோள் வலியும், அழியும்படி செய்து விட்டு, நெஞ்சில் நுழைந்து உயிரைக் குடித்து விட்டு, முதுகின் புறத்தே சென்றது ஸ்ரீராகவன்தன் தூய அம்பு.

முகாரி] [ஆதி

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும், முதல்வன் முன்நாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும், ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும், தின்று, மார்பில்
புக்கோடி உயிர் பருகிப் புறம்போயிற்[று]
இராகவன் தன் புனிதவாளி!

போரெல்லாம் முடித்து, தந்தை சொல் காத்து, பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ராமன் அயோத்தி வந்தடைகிறான். நாடெல்லாம் ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்திருக்கிறது. ஸ்ரீராமனுக்கு முடிசூட்டும் விழா நடைபெறுகிறது.

சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீராமனின் திருவடியை அனுமன் தாங்கவும், அங்கதன் உடைவாளை ஏந்தி நிற்கவும், பரதன் வெண் கொற்றக் குடையைப் பிடித்து நிற்கவும், லட்சுமண - சத்துருக்கன் இருவரும் வெண்சாமரம் பற்றி நிற்கவும், விரிந்த கடல் சூழ்ந்த உலகெலாம் போற்றி நிற்கும் வெண்ணெய் நல்லூர் வாழும் சடையப்பவள்ளல் குலத்தைச் சேர்ந்த ஒருவன் மணிமுடியை எடுத்துக் கொடுக்க, அதை வாங்கிக் குல குருவான வசிட்டன் ராமனுக்குச் சூட்டினான்.

சௌராஷ்டிரம்] **[ஆதி**

அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த,
பரதன் வெண் குடை கவிக்க
இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலி ஓங்க
வெண்ணைய்பூர்ச் சடையன் தங்கள்
மரபுளோன் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி!

கம்பன் அருளிய இராமாவதாரத்தின்

யாப்பு - சந்த வேறுபாடுகள்

கம்பன் அடிப்பொடி

Divisions.	Bala.	Ayod.	Aran.	Kish.	Sund.	Yudh.	Total
2 Seers	...	...	10	...	4	...	14
3 Seers	...	...	...	...	28	91	119
4 Seers	813	736	693	578	525	1636	4981
5 Seers	88	243	200	156	266	744	1697
6 Seers	301	189	272	280	400	1532	2974
7 Seers	34	18	7	12	35	75	181
8 Seers	...	...	6	...	...	...	6
Total	1236	1186	1188	1026	1258	4078	9972

No.	Div.	Bala.	Ayod.	Aran.	Kish.	Sund.	Yudh.	Total
1.	2/A	...	...	10	...	...	...	10
2.	2/B	...	...	...	...	4	...	4
2 Seers.		...	...	10	...	4	...	14
3.	3/A	...	...	...	...	14	...	14
4.	3/B	...	...	...	...	14	...	14
5.	3/C	...	...	...	...	...	80	80
6.	3/D	...	...	...	...	...	11	11
3 Seers.		...	...	...	...	28	91	119
7.	4/A	182	173	129	121	141	452	1198
8.	4/B	24	...	13	...	...	11	48
9.	4/C	326	401	286	230	235	699	2177
10.	4/D	51	15	79	50	70	27	292
11.	4/E	46	48	...	103	...	9	206
12.	4/F	37	...	...	47	6	11	101
13.	4/G	39	8	46	...	16	11	120
14.	4/H	16	...	77	7	8	104	212
15.	4/I	...	...	...	2	...	...	2
16.	4/J	20	49	...	...	...	...	69
17.	4/K	26	8	14	...	...	165	213
18.	4/L	...	33	20	...	17	23	93
19.	4/M	...	...	...	12	...	...	12
20.	4/N	...	...	...	...	13	...	13
21.	4/O	...	...	...	...	...	14	14
22.	4/P	...	...	...	...	...	21	21
23.	4/Q	...	...	...	...	...	26	26
24.	4/R	...	...	...	...	...	4	4
25.	4/S	...	...	...	...	...	12	12
26.	4/T	...	...	...	...	...	2	2
27.	4/U	...	...	...	...	...	26	26
28.	4/V	...	...	...	6	...	...	6

No.	Div.	Bala.	Ayod.	Aran.	Kish.	Sund.	Yudh.	Total
29.	4/W	46	...	29	...	...	19	94
30.	4/X	...	...	...	...	19	...	19
31.	4/Y	...	1	...	...	...	...	1
4 Seers.		**813**	**736**	**693**	**578**	**525**	**1636**	**4981**
32.	5/A	22	...	...	...	...	...	22
33.	5/B	...	24	...	...	...	...	24
34.	5/C	30	132	88	115	200	658	1223
35.	5/D	24	39	9	2	26	54	154
36.	5/E	12	...	...	...	...	...	12
37.	5/F	...	37	30	...	35	26	128
38.	5/G	...	11	...	...	...	...	11
39.	5/H	...	...	47	...	...	...	47
40.	5/I	...	...	...	22	...	...	22
41.	5/J	...	...	26	17	5	6	54
5 Seers.		**88**	**243**	**200**	**156**	**266**	**744**	**1697**
42.	6/A	259	107	237	259	326	1348	2536
43.	6/B	29	6	23	12	1	61	132
44.	6/C	13	18	12	9	28	30	110
45.	6/D	...	58	...	...	...	...	58
46.	6/E	...	...	...	...	19	48	67
47.	6/F	...	...	...	...	15	...	15
48.	6/G	...	...	...	...	11	...	11
49.	6/H	...	...	...	...	...	10	10
50.	6/I	...	...	...	...	...	17	17
51.	6/J	...	...	...	...	...	1	1
52.	6/K	...	...	...	...	...	17	17
6 Seers.		**301**	**189**	**272**	**280**	**400**	**1532**	**2974**

No.	Div.	Bala.	Ayod.	Aran.	Kish.	Sund.	Yudh.	Total
53.	7/A	13	...	...	...	21	...	34
54.	7/B	21	...	...	12	...	24	57
55.	7/C	...	18	...	...	...	...	18
56.	7/D	...	...	7	...	...	...	7
57.	7/E	...	...	...	...	14	...	14
58.	7/F	...	...	...	...	...	27	27
59.	7/G	...	...	...	...	...	24	24
7 Seers.		**34**	**18**	**7**	**12**	**35**	**75**	**181**
60.	8/A	...	...	6	...	...	...	6
8 Seers.		...	...	**6**	...	...	...	**6**

சீர் 2-a பாடல்கள் 10

இற்றெலாம் இயம்பினான்
நிற்றலோடும் நீஇவ்வா(று)
உற்றவா றுணர்த்தெனா
வெற்றியான் விளம்பினான்.

நேர் 7 நிரை 8

குறளடி நான்குடை வஞ்சித் தாழிசை
(சிந்தடியாகவும் அலகிடலாம்)
ஏழு எழுத்து - எட்டெழுத்து அளவியற் சந்தம்.

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
3	ஆரணிய காண்டம் விராதன் வதை	61	70	10
			மொத்தம்	10

சீர் 2-b பாடல்கள் 4

உண்ட நெருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டணை கென்றான்
அண்டரை வென்றான்

நேர் 5 நிரை 6

குறளடி நான்கு கொண்ட வஞ்சித்துறை
ஐந்து - ஆறு எழுத்து அளவியற் சந்தம்

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
5	சுந்தர காண்டம் இலங்கை எரி	41	44	4
			மொத்தம்	4

சீர் 3-a பாடல்கள் 14

வீவாய் நீஇவண் மெய்அ∴தே
ஒய்வான் இன்னுயிர் உய்வானாம்
போய்வான் அந்நகர் புக்கன்றோ
வேய்வான் மௌலியும் மெய்யன்றோ?

நேர் 8 நிரை 9

சிந்தடி நான்கும் கொண்ட வஞ்சி விருத்தம்
மா, விளம், காய்
எட்டு - ஒன்பது எழுத்து அளவியற் சந்தம்

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
5	சுந்தர காண்டம் சூடாமணிப்	40	53	14
			மொத்தம்	14

சீர் 3-b பாடல்கள் 14

நீர்கெழு வேலை நிமிர்ந்தார்
தார்கெழு தானை சமைந்தார்
போர்கெழு மாலை புனைந்தார்
ஓர்எழு வீரர் உயர்ந்தார்

நேர் 8

ஈரசைச்சீர மூன்று, வெண்டளை தட்டாமல்
சிந்தடியாய் வந்த வஞ்சி விருத்தம்.
எட்டெழுத்து அளவியற் சந்தம்

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
5	சுந்தர காண்டம் இலங்கை எரி	45	58	14
			மொத்தம்	14

சீர் 3-c பாடல்கள் 80

நதிகாய்நெடு மானமும் நாணுமுறா
மதிகாய்குடை மன்னனை வைதுரையா
விதிகாயினும் வீரம்வெ லற்கரியான்
அதிகாயனெ னும்பெய ரானறைவான்

நேர் 11 நிரை 12

கனி விளம் கா

சிந்தடி நான்கு கொண்ட வஞ்சி விருத்தம்

(அளவடி நான்குடைக் கலி விருத்தமாகவும் அலகிடலாம்)
பதினொன்று - பன்னிரண்டெழுத்து அளவியற் சந்தம்.

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
3	யுத்த காண்டம்	7	86	80
	அதிகாயன்		மொத்தம்	80

சீர் 3-d பாடல்கள் 11

ஆழி யாயிவன் ஆகுவான்
ஏழை வாழ்வுடை எம்முனோன்
தாழ்வி லாஒரு தம்பியோன்
ஊழி நாளுமு றங்குவான்

நேர் 8 நிரை 9

மா விளம் விளம்

சிந்தடி நான்குடை வஞ்சி விருத்தம்

எட்டு - ஒன்பது எழுத்து அளவியற் சந்தம்

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
6	யுத்த காண்டம்	111	121	11
	கும்பகருண		மொத்தம்	11

சீர் 4-a பாடல்கள் 1198

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே

நேர் 11 நிரை 12

மா, விளம், விளம், விளம்

அளவடி நான்குடைக் கட்டளைக் கலிப்பா

2 அல்லது 3-ம் சீர் மா ஆயின் அடுத்த சீர் நிரை வரும்.
பதினொன்று-பன்னிரண்டு எழுத்து அளவியற் சந்தம்

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
1	பால காண்டம்			
	பாயிரம்	1	11	11
	ஆற்றுப்	1	12	12
	நாட்டுப்	23	41	19
	நகரப்	26	68	43
	தாடகைவ	36	48	13
	மிதிலைக்	77	82	6
	கைக்கிளை	1	12	12
	வரைக்கா	25	35	11
	பூக்கொய்	35	36	5
	நீர்விளை	18	33	16
	உலாவியற்	20	33	34
			மொத்தம்	182
2	அயோத்தியா காண்டம்			
	மந்தரைசூ	1	9	9
	மந்தரைசூ	13	31	19
	நகர்நீங்கு	3	29	27
	நகர்நீங்கு	215	232	18
	கங்கைப்	9	27	16
	குகப்	1	10	10

சீர் 4-a (தொடர்ச்சி)

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
	சித்திர கூடப்	49	56	8
	பள்ளிபடை	1	41	41
	கங்கைகாண்	70	72	3
	திருவடிசூட்டு	1	19	19
			மொத்தம்	**173**
3	ஆரணிய காண்டம்			
	அகத்தியப்	17	35	19
	சடாயுகாண்	28	42	15
	சூர்ப்பணகை	65	81	17
	திரிசிராவதை	1	29	29
	கரன்வதைப்	14	31	18
	மாரீசன்வதைப்	74	81	8
	இரா-சூழ்ச்சிப்	1	4	4
	அயோமுகிப்	9	27	19
			மொத்தம்	**129**
4	கிட்கிந்தா காண்டம்			
	பம்பைவாவி	32	36	5
	வாலிவதை	90	121	32
	கிட்கிந்தை	1	45	45
	நாடவிட்ட	1	20	20
	ஆறுசெல்	35	53	19
			மொத்தம்	**121**
5	சுந்தர காண்டம்			
	ஊர்தேடு	147	155	9
	ஷை	165	177	13
	காட்சிப்	19	29	11
	ஷை	95	110	16
	சூடாமணிப்	11	37	27
	ஷை	23	39	17

சீர் 4-a (தொடர்ச்சி)

காண்டம்	படலம்	முதல்	வரை	பாடல் தொகை
	பிணிவீட்டு	30	36	7
	ஷை	85	106	22
	இலங்கைஎரியூ	1	19	19
			மொத்தம்	**141**
6	யுத்த காண்டம்			
	சேதுபந்தனப்	26	71	46
	ஒற்றுக்கேள்	39	65	27
	அங்கதன்	39	43	5
	முதற்போர்	1	100	100
	கும்பகர்ண	54	73	20
	நாகபாசப்	122	162	41
	இராவ-சோக	1	34	34
	மூலபலவதை	119	136	18
	வானரர்களம்	26	34	9
	இராவ-களம்	1	8	8
	இராவ-வதை	19	45	27
	ஷை	160	196	37
	மண்டோ-புல	29	34	6
	வீடண-முடி	1	13	13
	பிராட்டிதிரு	1	25	25
	மீட்சிப்	45	63	19
	ஷை	70	86	17
			மொத்தம்	**452**

